

# கோவிந்தனின் வாக்கும் கோவிந்த தாமோதர ஸ்வாமிகளின் வாழ்வும்








**கோ3விந்த3 கோ3விந்த3 ஹரே முராரே**
**கோ3விந்த3 கோ3விந்த3 முகுந்த3 க்ரு'ஷ்ண |**
**கோ3விந்த3 கோ3விந்த3 ரதா2ங்க3பாணே**
**கோ3விந்த3 தா3மோத3ர மாத4வேதி ||**




गोविन्द गोविन्द हरे मुरारे
गोविन्द गोविन्द मुकुन्द कृष्ण ।
गोविन्द गोविन्द रथाङ्गपाणे
गोविन्द दामोदर माधवेति ॥













Soumya











ஸ்ரீ கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் அதிஷ்டானம் பழூர் அக்ரஹாரம்




APRIL 1999

உ

# ஸ்ரீ கோவிந்த தாமோதர ஸ்வாமிகள்



நம்மிடையே நூறு வருடங்கள் உண்மையான துறவியாக வாழ்ந்து, நமக்கு வழிகாட்டிய காஞ்சி மஹா பெரியவாளை நாம் தெய்வமாகப் போற்றி வணங்குகிறோம். அவர் காட்டிய வழியில், நம் தெய்வமத புராணங்களை கற்று, தெளிந்து, கற்பித்து, அந்த ராமாயண பாகவத தர்மங்களையே தம் வாழ்க்கையாக வாழ்ந்து காட்டிய ஒரு மஹான், ஸ்ரீ கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் ஆவார்.

பூர்வாச்ரமத்தில், ஆங்கரை கல்யாணராம பாகவதர் என்ற பெயரால் அறியப்பட்ட அவர், கல்வியிலும், ஆசாரத்திலும் சிறந்த ப்ராஹ்மண குடும்பத்தில், ஸ்ரீவேங்கடராம சாஸ்த்ரிகள், ஸ்ரீமதி பாலாம்பாள் என்ற தம்பதிகளுக்கு குமாரராய், 1930 ஆம் ஆண்டு அவதரித்தார். போலகம் ராமா சாஸ்த்ரிகள் போன்ற பெரியோர்களிடத்தில் நமது வேத சாஸ்த்ர புராணங்களின் உண்மைப் பொருளை கேட்டுத் தெளிந்த அவர்,

சென்னை வந்து சிறிது காலம் தபால் துறையில் வேலை செய்தார். முப்பத்தாறு வயதில் ஶ்ரீ காஞ்சி பெரியவரிடம் உத்தரவு பெற்று, வேலையை விடுத்து, பின்னர் வாழ்நாளில் ஒவ்வொரு நாளும், பகல் முழுவதும் ராமாயண பாகவத மூல பாராயணம் செய்து வந்தார். மாலையில் அந்த புராணக் கதைகளை, அவற்றில் ஒன்றி, உலகையும் தன்னையும் மறந்து, பக்தியோடு தம் தேன் அனைய வாக்கால் ப்ரவசனம் செய்து வந்தார்.

ராமாயண பாகவதக் கதைகளை படிப்பதும், கேட்கச் செய்வதும், தம் கடமையாக, பெரும் பேறாக எண்ணிய அவர், அதற்கு எந்த கட்டணமும் குறிப்பிட மாட்டார். மேடையில் வெறும் மனிதர்களை புகழ்ந்து பேச மாட்டார். 'பார்த்தஸாரதி பெருமாளின் திருவடி வாரத்திலேயே இருக்க விரும்புகிறேன்' என்று சொல்லி திருவல்லிக்கேணியிலேயே ஏழைகளுக்கு எளியவராய் வாழ்ந்து, அவர்கள் அன்போடு அளித்ததை ஏற்று, குடும்பம் நடத்தி வந்தார்.

ஒரு முறை ஹிந்து உயர்நிலைப் பள்ளியில் ஸ்வாமிகள் உபன்யாஸம் முடியும் நேரத்தில், ஒரு அன்பர் முன் வந்து 'இப்போ நாமெல்லாம் ஆனந்தப் படும்படி ஆயிரக்கணக்கான ஶ்லோகங்களைச் சொல்லி உபன்யாஸம் செய்த கல்யாணராம பாகவதருக்கு மிகுந்த கடன் தொல்லை இருக்கிறது. நீங்கள் எல்லாம் தாராளமாக தட்டில் பணம் போட வேண்டும்' என்று சொல்கிறார். ஸ்வாமிகள் அவரைத் தடுத்து

धनेन न रमामहे खल जनान् न सेवामहे न चापलं अयामहे भवभयान्न दूयामहे ।
स्थिरां तनुमहेतरां मनसि किंच काञ्चीरत-स्मरान्तक-कुटुम्बिनी चरण पल्लवोपासनाम् ॥

த⁴னேன ந ரமாமஹே க²ல ஜனான் ந ஸேவாமஹே
ந சாபலம்' அயாமஹே ப⁴வப⁴யான்ன தூ³யாமஹே |
ஸ்தி²ராம்' தனுமஹேதராம்' மனஸி கிஞ்ச காஞ்சீரத-
ஸ்மராந்தக-குடும்பி³னீ சரண பல்லவோபாஸனாம் ||

(பணத்தில் ரமிக்க மாட்டோம். துஷ்டர்களுக்கு சேவை செய்ய மாட்டோம். உலக விஷயங்களில் நப்பாசை பட மாட்டோம். பவ பயத்தினால் துவள மாட்டோம். ஏனெனில் காஞ்சிபுரத்தில் குடி கொண்டுள்ள ஏகாம்ரநாதரின் மனைவியாம் காமாக்ஷி தேவியின் திருவடிகளை இடையறாது

தொழுவதை எங்கள் மனத்தில் உறுதியாக பற்றிக் கொண்டு இருக்கிறோம்.)

என்ற மூக பஞ்சஶதீ ஶ்லோகத்தை சொல்லி ‘ராமாயண பாகவதம் சொல்லுவதும், கேட்பதும் ஜன்ம லாபத்திற்காகத் தானே தவிர பணம் சம்பாதிக்க இல்லை. நான் கூடாது என்று சொல்லி இருந்தும் இவர் சிலது பேசி விட்டார். அதை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம்.’ என்று கூறினார். பின்னர் அன்று இரவில் அந்த அன்பரும் மற்ற நண்பர்களும் ஸ்வாமிகளைப் பார்த்து ‘நீ என்ன த்யாகராஜ ஸ்வாமிகள் என்ற எண்ணமோ?’ என்று கேட்க ஸ்வாமிகள் ‘நான் த்யாகராஜ ஸ்வாமிகள் இல்லை. ஆனா அவரைப் போல ஆக வேண்டும் என்று ஆசைப் படுகிறேன்.’ என்று பணிவாக கூறினார்.

அப்போது ஒரு புது மனிதர் அங்கு வந்து ஸ்வாமிகளை வணங்கி, ‘நான் காஞ்சீபுரத்து ஆசாமி. இன்று காமாக்ஷி அம்பாள் மீது மூக பஞ்சஶதீ ஶ்லோகம் சொல்லி என் மனத்தை குளிர வைத்து விட்டீர்கள்’ என்று சொல்லி விட்டுச் செல்ல, ஸ்வாமிகளின் நண்பர்களும் அவரை வணங்கி, ‘காமாக்ஷி தேவியின் அனுக்ரஹம் உங்களுக்கு இருக்கிறது. நீங்களும் த்யாகராஜ ஸ்வாமிகளைப் போல விளங்குவீர்கள்’ என்று வாழ்த்தி விட்டுச் சென்றார்கள்.

அது போலவே ஸ்வாமிகள் ராமாயணத்தின் ஸாரமாகவே வாழ்ந்தார். ஶ்ரீமத்பாகவத பக்தியினால் ஞான வைராக்யத்தோடு விளங்கினார். உடல் சுகத்தையும், குடும்ப நலத்தையும், பணத்தையும், புகழையும் துச்சமாக மதித்து, பகவானின் புகழ் பாடுவதையே தம் புனிதப் பணியாக வாழ்நாள் முழுவதும் மேற்கொண்டார்.

இத்தகைய ஸ்வாமிகளின் தர்மப் பற்றைக் கண்டு காஞ்சி பெரியவர் மிக மகிழ்ந்து, 19 வருடங்கள் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும், கோகுலாஷ்டமியை முன்னிட்டு ஸ்வாமிகளை தாம் இருந்த இடத்திற்கு அழைத்து வரச் செய்து, ஏழு நாட்கள் ஶ்ரீமத்பாகவதத்தை பகலில் படிக்கச் செய்து, இரவில் ப்ரவசனம் செய்யச் சொல்லி, தானே அருகில் அமர்ந்து கேட்டு ரசித்தார். ஶ்ரீராமர் தன் கதையை தானே கேட்டது போல, க்ருஷ்ண பகவான், தானே தன் கதையை கேட்க விரும்பினார் போலும்! ‘பாகவத ஸப்தாஹம் மலை போன்ற கார்யம். பாகவதருக்கு தான் ச்ரமம்.

நமக்கெல்லாம் ஆனந்தம். படனம் மதுரம். ப்ரவசனம் மதுரதரம்’ என்று மஹா பெரியவா ஸ்வாமிகளை வாயார வாழ்த்தியுள்ளார்.

‘எத்தனை கஷ்டம் இருந்தாலும் பொருட்படுத்தாமல், என் பேச்சைக் கேட்டு நடப்பவர்’ ‘ராமாயண பாகவதத்தை விலை பேசாத ஒரு மஹான்’ ‘தம் வாழ்க்கையை பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டவர். அவருக்கு மீண்டும் பிறவி கிடையாது’ என்று இப்படி பல முறை பல விதங்களில் மஹா பெரியவா, நம் ஸ்வாமிகளைப் போற்றியுள்ளார். மஹா பெரியவாளுடைய பூர்வாச்ரம தம்பியாக சதாசிவம் என்ற பெயரோடு அவதரித்து, முற்றும் துறந்த துறவியாக விளங்கிய ஸ்ரீ சிவன் சார் ‘திருவல்லிக்கேணி ஸ்வாமிகள் ஒரு உண்மையான (genuine) ஸந்நியாஸி. அவரை தியானம் பண்ணிக் கொண்டிருந்தாலே தெய்வீகத்தில் மேலே போகலாம்.’ என்று அனுக்ரஹித்துள்ளார்.

இத்தகைய தூய்மையான தவ வாழ்க்கையாலும், மஹனீயர்களின் ஆசியாலும், கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் பல ஸித்திகளை அடைந்து, நிக்ரஹானுக்ரஹ மஹானாய் விளங்கினார். அவர் சொன்ன வார்த்தைகள், ஈஶ்வர வாக்காய் பலித்தது. ஆனால், அந்த ஸித்திகளை மறைத்துக் கொண்டு, அதனால் கூட்டம், பணம் எதுவும் வந்து விடாமல் இருக்க, மஹா பெரியவாளிடம் ஒவ்வொரு நாளும் ‘க்யாதி லாப பூஜையை (பணம், புகழ், பெருமை) என் மனம் ஒரு நாளும் நாடக் கூடாது. உங்கள் பாத பக்தி ஒன்றையே தர வேண்டும்.’ என்று வேண்டி வந்தார். அப்படி உத்தம பக்தியால் ஞான வைராக்யத்தை பெற்று ஜீவன் முக்தராய் ப்ரகாசித்த அந்த மஹான், முடிவில் ஸந்நியாஸ ஆச்ரமத்தை ஏற்றார். படித்தவர், பாமரர், ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு இன்றி தம்மிடம் வந்த அனைவருக்கும் இறைவன் பேரால் ஆறுதல் அளித்தார்.

‘சரவணபவ, சிவ, ராம, கோவிந்த, நாராயண, மஹாதேவ’ போன்ற பகவானின் நாமங்களை தனிமையில் மனமுருகி ஜபித்து வந்தாலே, பகவத் பக்தி ஏற்பட்டு, இடையறாத பஜனத்தினாலேயே பக்தியின் வளர்ச்சியும், உலக விஷயங்களில் இருந்து விரக்தியும், பகவானுடைய ஞானத்தையும் அடையலாம்’ என்று தன் உன்னதமான வாழ்க்கையினால் வாழ்ந்து காட்டி உபதேசித்த, நம் ஸத்குரு, ஸ்ரீ கோவிந்த தாமோதர ஸ்வாமிகளின் நினைவைப் போற்றுவோம்.

<u>உ</u>

# கோவிந்தனின் வாக்கும் கோவிந்த தாமோதர ஸ்வாமிகளின் வாழ்வும்

## நூல் அறிமுகம்

ஸ்ரீ மஹா பெரியவா நம்முடைய கோவிந்த தாமோதர ஸ்வாமிகளை, ஒவ்வொரு வருடமும் கோகுலாஷ்டமி அன்று பூர்த்தியாகும் வண்ணம், தன் சந்நிதியில் ஏழு நாட்கள் ஸ்ரீமத் பாகவதத்தை பகலில் மூல பாராயணமும், சாயங்காலம் உபன்யாசமும் செய்யச் சொல்லி, தாமே உட்கார்ந்து கேட்பார். அதில் உத்தவ கீதை இடம் பெறும் பதினோராவது ஸ்கந்தம் ஆரம்பிக்கும் போது, மடத்தில் இருக்கிற மற்ற ஸந்நியாசிகளையும் வந்து கேட்கும்படி பெரியவா சொல்லி அனுப்புவாராம். அதே போல, பெரியவா வெளியிட்ட 'வியாஸ பூர்ணிமா' என்கிற புத்தகத்தின் அட்டையிலேயே, உத்தவ கீதையின் கடைசி ஶ்லோகமான, “பவபயம் அபஹந்தும் ஞான விஞ்ஞான ஸாரம்” (भवभयं अपहन्तुं ज्ञान-विज्ञान-सारं) என்கிற ஶ்லோகத்தைப் போட்டிருக்கிறார். அந்த அளவிற்குப் பெரியவாளுக்கு உத்தவ கீதை மேல் ஈடுபாடு இருந்தது.

ஸ்ரீக்ருஷ்ண பகவான் தன்னுடைய அவதார பூர்த்திக்கு முன்னால், தன்னுடைய ப்ரிய சகாவும், பரம பக்தருமான உத்தவருக்குச் சொன்ன உபதேசங்கள் தான் ‘உத்தவ கீதை’ என்று கொண்டாடப்படுகிறது. உலக வாழ்க்கையில் இருந்து கொண்டே எப்படி ஆன்மிகப் பாதையில் முன்னேறிச் செல்வது, துக்கம், பயம், பற்று ஆகியவற்றை எப்படிப் போக்கிக் கொள்வது, உண்மையான சரணாகதி என்றால் என்ன, உத்தம பக்தனின் அடையாளங்கள் எவை... இப்படிப் பல கேள்விகளுக்கு இதில் மிகத் தெளிவான பதில்கள் இருக்கின்றன.

என்னுடைய இந்த புத்தகம், ஸ்ரீமந்நாராயணீயத்தின் 91 முதல் 97 வரையிலான தசகங்களில் ஸ்ரீ நாராயண பட்டத்ரி சுருக்கமாகக் கொடுத்துள்ள உத்தவ கீதையின் ஸாரத்தையும், அதை நம் ஸ்வாமிகள் வாழ்ந்து காண்பித்த விதத்தையும் உங்களோடு பகிர்ந்து கொள்வதற்கான ஒரு பணிவான முயற்சியே ஆகும். ஸ்வாமிகளுடைய நிஷ்காம பக்தி, இடையறாத பகவத் பஜனம், வைராக்யம், எளிமை,

கருணை, அன்றாட நடத்தை, பேச்சு என எல்லாமே உத்தவ கீதையின் உபதேசங்களுக்கு ஒரு நேரடி விளக்கவுரை போலவே அமைந்திருந்தன.

"மகான்களுடைய தரிசனம் ஒரு புதையல் மாதிரி; அரை க்ஷணம் அந்த தரிசனம் கிடைத்தாலும் வாழ்நாள் முழுக்க அதை நினைத்து நினைத்து சந்தோஷப் படலாம்" என்று ஜனக மஹாராஜா நவயோகிகளிடம் சொல்கிறார். எனக்கு அப்படிப்பட்ட ஒரு உன்னதமான புதையல் கிடைத்தது. அதை உங்கள் எல்லோரோடும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று எனக்கு ஆசை. வாழ்க்கையின் பல கட்டங்களில் ஸ்வாமிகள் எனக்குக் கொடுத்த வழிகாட்டுதல்களும், ஆறுதல்களும், அவர் என்னிடம் பகிர்ந்து கொண்ட தன் வாழ்க்கை அனுபவங்களும், உபதேசங்களும் இந்த புத்தகத்தில் முழுமையாக நிரம்பி இருக்கின்றன.

இந்த நூலை நான் ஒரு ஆசிரியராக எழுதவில்லை; ஸ்வாமிகளின் ஒரு எளிய பக்தனாகவே எழுதி இருக்கிறேன். இதைப் படிக்கிறவர்கள் மனத்தில் இது தெய்வ பக்தியையும், நிறைய பகவத் பஜனம் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தையும், நம் வாழ்வின் நோக்கத்தைப் பற்றிய ஒரு தெளிவையும் ஏற்படுத்தும் என்று நம்புகிறேன். அது மட்டுமில்லாமல், ஸ்வாமிகளின் தெய்வீகக் குணங்களில் சிலவற்றையாவது நாமும் நம் வாழ்வில் அடைய வேண்டும் என்ற ஆசையையும், ஆன்மீகப் பாதையில் தொடர்ந்து பயணம் செய்வதற்கான ஒரு உற்சாகத்தையும் இந்த நூல் உங்களுக்கு அளிக்கும் என்று நம்புகிறேன்.

இந்த நூல் புத்தக வடிவில் வெளி வர உதவியாக இருந்த அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள். ஸ்ரீக்ருஷ்ணரின் கருணையும் ஸ்வாமிகளின் அனுக்ரஹமும், நம் எல்லோரையும் எப்போதும் காக்கட்டும்.

ஜானகீ ஜீவன ஸ்மரணம் ஜய ஜய ராம ராம !
கோபிகா ஜீவன ஸ்மரணம் கோவிந்தா ! கோவிந்தா !
ஸத்குரு ஸ்வாமிந: ஜய் !
ஆஞ்சநேய ஸ்வாமிந: ஜய் !

அன்புடன்,
கணபதி ஸுப்ரமண்யன்
திருவல்லிக்கேணி, சென்னை
( 📱 91-98407-57994)

# அட்டவணை

1. ध्यान श्लोका: ....... 9
2. த்யான ஶ்லோகங்கள் ....... 9
3. ஶ்ரீமத் பாகவதத்தில் 11வது ஸ்கந்தத்தின் சிறப்பு ....... 11
4. உத்தவ கீதையைப் பற்றி நான் ஏன் பேச முற்படுகிறேன்? ....... 13
5. நவையறு காட்சி நல்கி, என்னையும் அடியன் ஆக்கி ....... 15
6. யாதவ குலத்திற்கு ஏற்பட்ட ப்ராஹ்மண சாபம் ....... 17
7. நவயோகி உபாக்யானம் ஆரம்பம் ....... 19
8. 91வது தசகம்: பாகவத தர்மம் கடையனையும் கடைத்தேற்றும் ....... 21
9. பக்திக்கு முதல் படியான கர்ம யோகம் ....... 25
10. தூய்மை பிறப்பால் வருவதல்ல ....... 29
11. பயம் ஏற்பட காரணம் என்ன? ....... 30
12. ஸத்ஸங்கம், ஸத்கதா ச்ரவணம் ....... 33
13. பகவானை அடைய பக்தியே சிறந்த வழி ....... 37
14. பக்தியின் அடையாளங்கள் ....... 39
15. பகவந்நாம மஹிமை ....... 41
16. தனிமையில் பகவத் பஜனம் செய்வதே க்ஷேமம் ....... 45
17. எது உண்மையான ஸத்ஸங்கம் ....... 46
18. உத்தம, மத்யம, ப்ராக்ருத பக்தி ....... 48
19. எங்கும் எதிலும் தெய்வ தரிசனம் ....... 48
20. பக்தி ஒன்றினாலேயே வைராக்யம், ஞானம் அடையலாம் ....... 51
21. பஞ்ச க்ருத்ய பராயணா ....... 56
22. ஸத்குரு சரணாரவிந்தாப்யாம் நம: ....... 58
23. 92வது  தசகம்: கர்மமும் பக்தியும் ....... 60
24. உருவ வழிபாடு பக்தியை வளர்க்கும் ....... 60
25. ஸ்தோத்திர பாராயணங்கள் பூஜைக்கும் மேல் ....... 62
26. நேரத்தை வீணாக்காமல் பக்தி பண்ணுங்கள் ....... 63
27. பக்தர்களை பழிக்கக் கூடாது ....... 64
28. நாலு யுகங்களில் தெய்வ வழிபாடு ....... 67
29. பகவானுடைய கதைகளை உள்ளபடி படித்தாலே போதும் ....... 69
30. கலியுகத்தின் பெருமை ....... 72
31. ஸ்வாமிகள் உபதேசித்த நாம மந்த்ரம் ....... 73

32. தமிழ் தேசத்தின் பெருமை ........................................................................ 75
33. கலியுகத்தின் ஆபத்து ................................................................................ 79
34. கங்கா கீதா ச காயத்ரீ .................................................................................. 81
35. பூர்ண சரணாகதி செய்தவன் கடன்களிலிருந்து விடுபடுவான் ........ 83
36. நவயோகி உபாக்யானம் பூர்த்தி ................................................................ 87
37. ஆதிசங்கரரின் விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம் ............................... 88
38. 93வது தசகம்: பற்றுகள் விலக ப்ரார்த்தனைகளும், பாடங்களும் .... 90
39. உத்தவர் செய்த சரணாகதி .......................................................................... 90
40. அவதார புருஷர்களின் திருமேனி தரிசனம் ........................................ 92
41. மனிதப் பிறவியின் மேன்மை ..................................................................... 96
42. பணியுமாம் என்றும் பெருமை .................................................................. 98
43. தத்தாத்ரேய யோகியின் இருபத்து நான்கு குருமார்கள் .................... 101
44. ஆறிடும் மேடும் மடுவும் போலவாம் செல்வம் ................................... 105
45. தேஹ மோஹம் போக பட்டத்ரியின் உருக்கமான ப்ரார்த்தனை ... 122
46. பக்தியினாலேயே ஸத்கதி ........................................................................ 125
47. 94வது தசகம்: தத்துவ ஞானமும் பக்தியும் .......................................... 129
48. வள்ளிமலை ஸச்சிதானந்த ஸ்வாமிகளின் சரித்ரம் ......................... 131
49. நம் ஸ்வாமிகளின் பாகவத நிஷ்டை .................................................... 134
50. துக்க கலப்பில்லாத ஆனந்தம் ஞானத்தினால் மட்டுமே .................. 134
51. ஜீவன் முக்தி வெறும் பாடம் அல்ல ........................................................ 138
52. லாடு மஹராஜின் கதையும் குருவருளும் ........................................... 140
53. க்ருஹஸ்தர்கள் வேதாந்தம் படித்தால் பயன் உண்டா? ................... 142
54. வேதமோதுவதோடு பக்தியும் பண்ண வேண்டும் ............................ 143
55. வெறும் மூட பக்தி என்று நினைக்கக் கூடாது .................................... 145
56. சாது ஸங்கமும் ஆன்மீக அனுபவங்களும் ......................................... 148
57. ஸ்தோத்திரங்களை மனம் வைத்து படித்தல் ...................................... 149
58. கபடம் இல்லாமல் பக்தி பண்ண வேண்டும் ....................................... 152
59. கோபிகைகளின் உத்தமோத்தம பக்தி .................................................. 155
60. 95வது தசகம்: சித்த ஶுத்தியும் ஈஶ்வர ஸ்வரூப த்யானமும் .......... 157
61. ஹம்ஸோபாக்யானம்: குணங்களின் பிடியிலிருந்து விடுதலை ..... 159
62. ஸ்வாமிகளின் வழிகாட்டுதலும் பஜனத்தின் உயர்வும் ..................... 162
63. பக்தியின் நிகரற்ற ஆனந்தம் ..................................................................... 163
64. பக்தனின் நிறைவான நிலை ....................................................................... 164

65. தூய பக்தியின் லக்ஷணம்.......................................................................... 166
66. திருப்புகழ் மேற்கோள்: பணிந்து உருகும் நேசம்.................................167
67. பகவானின் ரூப த்யானம்....................................................................... 168
68. நாராயணீயத்தின் உன்னத ரூப த்யானம்..........................................170
69. ரூப த்யானத்தின் மூலமே அத்வைத லயம்........................................ 172
70. சித்திகளைத் துறந்து பகவானை அடைதல்........................................173
71. பகவானுடைய திருநாமங்கள், பகவானுடைய திவ்ய ரூபம், அவனுடைய திவ்ய சரித்ரம்.................................................................... 174
72. 96வது தசகம்: விபூதி யோகம்................................................................175
73. ஜப யக்ஞத்தின் பெருமை....................................................................... 177
74. வர்ணாஶ்ரம தர்மமும் படிப்படியான பக்தியும்................................. 179
75. இல்லற வாழ்க்கை உத்தம பக்தி ஏற்படுவதற்கு தடையல்ல........... 180
76. என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கி ஆண்ட வள்ளல்.......... 184
77. அவரவருக்கு உகந்த வழியை தேர்ந்து கொள்ளலாம்........................186
78. படகு, மாலுமி, அனுக்ரஹக் காற்று - மூன்றும் வேண்டும்................189
79. வேதாந்தம் படித்தது போதும்; திருவாசகம் படியுங்கள்.....................191
80. பக்தி செய்தால் முக்தி கிடைக்கும் என்பதற்கு எது ஆதாரம்?......... 193
81. பற்றுகளை விட முடியவில்லையே! என்ன செய்வது?.......................196
82. பிக்ஷு கீதை.............................................................................................. 196
83. ஸ்வாமிகளும், நாள் பார்க்கும் தத்துவமும்........................................200
84. ஜல கீதம்.................................................................................................. 202
85. 97வது தசகம் - நிர்க்குண நிஷ்டையும் மார்க்கண்டேய சரித்ரமும்205
86. எங்கும் பகவானைக் காணும் நிலை....................................................206
87. ஆரோக்கியமும், ஆயுளும் தரும் பஜனம்........................................... 209
88. உத்தவரின் விடைபெறலும், வைகுண்ட ஆரோஹணமும்............... 211
89. மார்க்கண்டேயரின் தவமும், இந்திரனின் சோதனையும்................ 213
90. மாயைக் காட்சியும், ஆலிலைக் கண்ணனும்.....................................214
91. சிவ-விஷ்ணு அபேதமும், மார்க்கண்டேய புராணமும்......................216
92. பரமபதமும், சரணாகதியும்.................................................................. 218
93. நிறைவுரை............................................................................................... 221
94. मङ्गल श्लोकाः............................................................................................. 222
95. மங்கள ஶ்லோகங்கள்..............................................................................222

**உ**

## ध्यान श्लोकाः

सुमुखश्च एकदन्तश्च कपिलो गजकर्णकः । लम्बोदरश्च विकटः विघ्नराजो विनायकः ॥
धूम्रकेतुर्गणाध्यक्षः फालचन्द्रो गजाननः । वक्रतुण्डः शूर्पकर्णः हेरम्बः स्कन्दपूर्वजः ॥

इन्दुकुन्दतुषाराभा भक्तचित्तानुवर्तिनी । वाणी मे रसनारङ्गे करोतु नटनं सदा ॥

मनीषां माहेन्द्रीं ककुभमिव ते कामपि दशां प्रधत्ते कामाक्ष्याः चरणतरुणादित्यकिरणः ।
यदीये सम्पर्के धृतरसमरन्दा कवयतां परीपाकं धत्ते परिमलवती सूक्तिनलिनी ॥

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां सञ्जीवयति अखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण-श्रवणत्वगादीन् प्राणान् नमो भगवते पुरुषाय तुभ्यम् ॥

कृष्णाय वासुदेवाय हरये परमात्मने । प्रणतक्लेशनाशाय गोविन्दाय नमो नमः ॥

ध्येयं सदा परिभवघ्नमभीष्टदोहं तीर्थास्पदं शिवविरिञ्चिनुतं शरण्यम् ।
भृत्यार्तिहं प्रणतपाल भवाब्धिपोतं वन्दे महापुरुष ते चरणारविन्दम् ॥

त्यक्त्वा सुदुस्त्यजसुरेप्सितराज्यलक्ष्मीं धर्मिष्ठ आर्यवचसा यदगादरण्यम् ।
मायामृगं दयितयेप्सितमन्वधावद् वन्दे महापुरुष ते चरणारविन्दम् ॥

भवे भवे यथा भक्तिः पादयोस्तव जायते । तथा कुरुष्व देवेश नाथस्त्वं नो यतः प्रभो ॥

नामसङ्कीर्तनं यस्य सर्वपापप्रणाशनम् । प्रणामो दुःखशमनः तं नमामि हरिं परम् ॥

### த்⁴யான ஶ்லோகங்கள்

ஸுமுக²ஶ்ச ஏகத³ந்தஶ்ச கபிலோ க³ஜகர்ணக: |
லம்போ³த³ரஶ்ச விகட: விக்⁴னராஜோ விநாயக: ||

தூ⁴ம்ரகேதுர்க³ணாத்⁴யக்ஷ: பா²லசந்த்³ரோ க³ஜானனː |
வக்ரதுண்ட³ː ஶூர்பகர்ண: ஹேரம்ப³ː ஸ்கந்த³பூர்வஜː ||

இந்து³குந்த³துஷாராபா⁴ ப⁴க்தசித்தானுவர்தினீ |
வாணீ மே ரஸனாரங்கே³ கரோது நடனம் ஸதா³ ||

மனீஷாம் மாஹேந்த்³ரீம் ககுப⁴மிவ தே காமபி த³ஶாம்
ப்ரத⁴த்தே காமாக்ஷ்யா: சரணதருணாதி³த்யகிரணː |
யதீ³யே ஸம்பர்கே த்⁴ரு'தரஸமரந்தா³ கவயதாம்
பரீபாகம் த⁴த்தே பரிமலவதீ ஸூக்திநலினீ ||

யோ(அ)ந்தː ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயதி அகி²லஶக்தித⁴ரː ஸ்வதா⁴ம்னா |
அன்யாம்ஶ்ச ஹஸ்தசரண-ஶ்ரவண-த்வகா³தீ³ன்
ப்ராணான் நமோ ப⁴க³வதே புருஷாய துப்⁴யம் ||

க்ரு'ஷ்ணாய வாஸுதே³வாய ஹரயே பரமாத்மனே |
ப்ரணதக்லேஶநாஶாய கோ³விந்தா³ய நமோ நமː ||

த்⁴யேயம் ஸதா³ பரிப⁴வக்⁴னம்-அபீ⁴ஷ்டதோ³ஹம்
தீர்தா²ஸ்பத³ம் ஶிவவிரிஞ்சி-நுதம் ஶரண்யம் |
ப்⁴ரு'த்யார்திஹம் ப்ரணதபால ப⁴வாப்³தி⁴போதம்
வந்தே³ மஹாபுருஷ தே சரணாரவிந்த³ம் ||

த்யக்த்வா ஸுது³ஸ்த்யஜ-ஸுரேப்ஸித-ராஜ்யலக்ஷ்மீம்
த⁴ர்மிஷ்ட² ஆர்யவசஸா யத³கா³த³ரண்யம் |
மாயாம்ரு'க³ம் த³யிதயேப்ஸிதம்-அன்வதா⁴வத்³
வந்தே³ மஹாபுருஷ தே சரணாரவிந்த³ம் ||

ப⁴வே ப⁴வே யதா² ப⁴க்திː பாத³யோஸ்தவ ஜாயதே |
ததா² குருஷ்வ தே³வேஶ நாத²ஸ்த்வம்' நோ யதː ப்ரபோ⁴ ||

நாமஸங்கீர்தனம் யஸ்ய ஸர்வபாபப்ரணாஶனம் |
ப்ரணாமோ து³ːக²ஶமனː தம்' நமாமி ஹரிம்' பரம் ||

## ஸ்ரீமத் பாகவதத்தில் 11வது ஸ்கந்தத்தின் சிறப்பு

ஸ்ரீமத் பாகவதத்தின் பதினொன்றாவது ஸ்கந்தத்தில் வரக்கூடிய 'நவயோகி உபாக்கியானம்', 'உத்தவ கீதை' என்கிற பகுதிகளை, நாராயணீயத்தில் தொண்ணூற்று ஒன்றிலிருந்து தொண்ணூற்று ஏழாவது தசகம் வரை உள்ள ஏழு தசகங்களில் மேல்பத்தூர் நாராயண பட்டத்ரி, ஒரு முக்கியமான விஷயத்தைக் கூட விடாமல், மிக நேர்த்தியாக தொகுத்து, மிக அழகான ஸ்லோகங்களில் நமக்கு வழங்கியுள்ளார். இந்த புத்தகத்தில் நாம், அந்த 70 ஸ்லோகங்களைக் கொண்டு, ஸ்ரீக்ருஷ்ணனே, தன்னை வந்தடைய, தன் அந்தரங்க தோழரான உத்தவருக்கு செய்த உபதேசங்களையும், அவற்றை நம் குருநாதர் ஸ்ரீ கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் தம் வாழ்வில் எவ்வாறு கடைப்பிடித்தார் என்பதையும், அவரைப் பின்பற்றி நாமும் எவ்வாறு கடைத்தேற முடியும் என்பதையும் சிறிது சிந்திப்போம்.

மஹா பெரியவா சந்நிதியில், கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் ஒவ்வொரு வருடமும் ஒரு முறை, ஸ்ரீமத் பாகவதத்தைக் காலையில் பாராயணமும், மாலையில் பிரவசனமும் செய்வார். அதில் இந்த 11வது ஸ்கந்தம் வரும்போது, பெரியவா ஒருத்தரை அனுப்பி, மடத்தில் இருக்கிற மற்ற ஸந்நியாசிகளையும் வந்து கேட்கச் சொல்வாராம். அப்படி ஸந்நியாசிகளும் கேட்க வேண்டிய ஒரு முக்கியமான பகுதி இந்த பாகவதத்தின் 11வது ஸ்கந்தம் என்று பெரியவா நினைத்திருக்கிறார்கள்.

மேலும் பெரியவாளுக்கு இந்த உத்தவ கீதையிடமும், க்ருஷ்ணன் மீதும் எவ்வளவு பக்தி இருந்தது என்பதற்கு ஸ்வாமிகள் ஒரு விஷயம் சொல்வார். மஹா பெரியவா தான், முதன்முதலில், வியாஸ பௌர்ணமி அன்று எப்படி வியாஸ பூஜை செய்ய வேண்டும் என்பதை முறைப்படுத்தி, அழகாக ஒரு புத்தகமாகப் போட்டுக் கொடுத்தார். அந்தப் புத்தகத்தின் முன் அட்டையில் இந்த ஸ்லோகம் வருகிறது:

भवभयं अपहन्तुं ज्ञान-विज्ञान-सारं निगमकृद्-उपजह्रे भृंगवद्-वेदसारम्।
अमृतमुदधितश्च अपाययद्-भृत्यवर्गान् पुरुषं-ऋषभं-आद्यं कृष्णसंज्ञं नतोऽस्मि।।

"ப⁴வப⁴யம்’ அபஹந்தும் ஜ்ஞான-விஜ்ஞான-ஸாரம்
நிக³மக்ரு’த்³-உபஜஹ்ரே ப்⁴ரு’ங்க³வத்³-வேத³ஸாரம் |

அம்ரு’தமுத$^3$தி$^4$தஸ்ச அபாயயத்$^3$-ப்$^4$ரு’த்யவர்கா$^3$ன்
புருஷம்-ரு’ஷப$^4$ம்-ஆத்$^3$யம் க்ரு’ஷ்ணஸஞ்ஜ்ஞம் நதோ(அ)ஸ்மி ॥”

இதற்கு என்ன அர்த்தம் என்றால், “க்ருஷ்ணன் என்ற பெயர் கொண்ட, வேதங்களை அருளிய ஆதி பகவான், நம் பிறவித் துன்பத்தைப் போக்குவதற்காக, வண்டானது மலர்களிலிருந்து எப்படித் தேனைச் சேகரித்துத் தருமோ, அதுபோல் வேதத்தின் ஸாரமாகிய ஞான விஞ்ஞானத்தை (இந்த உத்தவ உபதேசத்தின் மூலம்) நமக்கு வழங்கியுள்ளார். பாற்கடலைக் கடைந்து அமுதத்தை எடுத்துத் தன் பக்தர்களைப் பருகச் செய்த, முதல் பொருளும் புருஷோத்தமனுமான அந்த க்ருஷ்ணனை வணங்குகிறேன்” என்று அர்த்தம்.

இந்த ஃஸ்லோகத்தைப் புத்தகத்தின் அட்டையில் போட்டது மட்டும் இல்லாமல், அந்த அட்டையைத் திறந்தவுடனே முதல் பக்கத்திலும் இதைப் போட்டிருக்கிறார்கள். நாள்பட அந்த அட்டை கிழிந்து போனால் கூட, இந்த ஃஸ்லோகம் விடுபட்டு விடக்கூடாது என்பதில் பெரியவாளுக்கு அவ்வளவு கவனம் இருந்திருக்கிறது. இந்த ஃஸ்லோகம் எங்கே வருகிறது தெரியுமா? உத்தவ கீதையின் கடைசி ஃஸ்லோகம் இது. அப்படி இந்த உத்தவ கீதை வேத ஸாரம், ஞான விஞ்ஞான ஸாரம், அமுதமயமானது என்பதில் பெரியவாளுக்கு அத்தனை நம்பிக்கை. அந்தச் செய்தி எல்லாரையும் சென்றடைய வேண்டும் என்பதற்காகவே இந்த ஃஸ்லோகத்தைப் போட்டுக் கொடுத்திருக்கிறார்.

சிவன் சார் தன் 'ஏணிப்படிகளில் மாந்தர்கள்' இரண்டாம் பகுதியில், “மனிதர்கள் ஏற்க வேண்டிய தன்மைகளையும், குணங்களையும், தூய்மையில் உயர வேண்டிய வழிகளையும் நம் தெய்வ மதத்தில் போதித்து, பொது மக்களை தலைமுறை தத்துவமாக அதில் நிலவ வைத்து, இதிகாச புராணங்களிலும் விளக்கி உள்ளார்கள். ராமாயண, பாகவத புராணங்களைக் கருத்தூன்றிப் படிப்பவர்கள் இந்த உண்மைகளை உணர்ந்து தூய்மையில் உயரலாம்” என்று எழுதி இருக்கிறார். இதைப் படித்த போது எனக்கு மிகவும் சந்தோஷமாகி விட்டது. ஏனென்றால், ஏணிப்படிகளில் மாந்தர்கள் முதல் பகுதியில் ராமாயணத்தைப் பற்றிச் சொல்லி, எல்லாரும் அதை அடிக்கடி படிக்க வேண்டும் என்று எழுதியிருந்தார்; ஆனால் பாகவதத்தைப் பற்றிச் சொல்லவில்லை. சாருடைய புத்தகத்தின் முதல் பகுதியைப் படிக்கும் போது, அவர் பக்தி மார்கத்தில் எதை ஏற்றுக் கொள்கிறார் எதை

தள்ளுகிறார் என்பதில் ஒரு சந்தேகம் இருக்கும். ஏனென்றால், அந்தப் பகுதியில், பக்தியில் இன்றைக்கு வந்து விட்ட போலித்தனத்தை கண்டித்து தான் நிறைய சொல்லியிருப்பார். பக்தி மார்கத்தில் எதை அவர் ஒத்துக் கொள்கிறார் என்று தெரியவில்லையே என்ற ஒரு பயம் வரும். ஆனால், 'ஏணிப்படிகளில் மாந்தர்கள்' இரண்டாம் பகுதியில் உள்ள இந்த வரியையும், ஸ்ரீமத் பாகவதத்தை இரண்டு மூன்று இடங்களில் அவர் கொண்டாடி இருப்பதையும் படித்தபோது, அவருடைய உள்ளத்தை புரிந்து கொள்ள முடிந்தது.

**உத்தவ கீதையைப் பற்றி நான் ஏன் பேச முற்படுகிறேன்?**

பாகவதத்தின் பதினொன்றாவது ஸ்கந்தத்தைப் பற்றி நம் ஸ்வாமிகளுடைய உபன்யாசமே ஒலிப்பதிவாக இருக்கிறது. யூடியூபிலும் கிடைக்கிறது; நான் வேறு சில பேருடைய உபன்யாஸங்களைக் கேட்டேன். அதில் பிரம்மஸ்ரீ சுந்தர்குமார் அண்ணா - 'சுந்தர்குமார் நாராயணீயம்' என்று தேடிப் பார்த்தீர்களானால், அதில் எபிசோட் 49-ல் 13வது நிமிடத்திலிருந்து ரொம்ப ஆச்சரியமான விதத்தில் இந்தத் தலைப்பில் உபன்யாசம் செய்திருப்பார். ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டு, அதற்குறிய சரித்ரத்தைச் சொல்லி, ஒரு பின்னணியை அமைத்துக் கொண்டு, பாகவதத்திலிருந்து ஒரு மூன்று நான்கு ஶ்லோகங்களைச் சொல்லி, அது எந்த நாராயணீய ஶ்லோகத்தில் வருகிறது என்பதைச் சொல்லி, நாராயணீயம் எப்படி பாகவத ஸாரத்தை பிழிந்து தருகிறது என்பதை ஆச்சரியமான முறையில் விளக்கியிருப்பார். அதன் பின் அந்தத் தலைப்பை மேலும் தெளிவுபடுத்த சில உதாரணங்கள், என்று இப்படி சொல்லிக் கொண்டே போயிருப்பார். அந்த 49வது பாகத்திலிருந்து அடுத்த ஒரு பத்து மணி நேரம் உபன்யாசத்தைக் கேட்டாலே, இந்த பதினொன்றாவது ஸ்கந்தத்தின் அனைத்து மையக் கருத்துக்களைத் தெரிந்து கொண்டு விடலாம். அவ்வளவு அழகாகச் சொல்லி இருக்கிறார். பக்த லோகத்திற்கு பெரிய உபகாரம் அது.

நம் ஸ்வாமிகளுடைய பாகவத உபன்யாசத்தைப் பற்றி வார்த்தைகளால் வர்ணிக்க முடியுமா! மஹா பெரியவாளே கொண்டாடிய ஈஶ்வர வாக்கல்லவா அது? அவர் ஶ்லோகங்கள் சொல்வதெல்லாம் அவ்வளவு தேனாக இருக்கும். அந்த உபன்யாசமும் அமுதமாக இருக்கும். ஏனென்றால், பாகவத தர்மம் என்று நவ யோகிகள் எதைச் சொல்லித் தருகிறார்களோ, உத்தம பக்தி என்று பகவான் உத்தவருக்கு எதைச் சொல்லித் தருகிறாரோ, அதை அவர் அப்படியே வாழ்ந்து காட்டினார்.

அப்படி வாழ்ந்து, சோகம், மோகம், பயத்தை எல்லாம் போக்கிக் கொண்டு, பரம வைராக்யத்தோடு, உயர்ந்த ஞானத்தோடு விளங்கினார். அதனால் அவருடைய அனுபவமே வாக்காக வெளி வந்தது. அந்த மஹானின் முகத்திலிருந்து வெளிவரும் பாகவத உபன்யாசத்தைக் அடிக்கடி கேட்டாலே நாம் தெய்வீகத்தில் உயர முடியும்.

நம் ஸ்வாமிகள், நாராயணீயத்தின் இந்த ஏழு தசகங்களையும் (91-97) பொருள் உணர்ந்து தினமுமே படிக்க வேண்டும் என்று பல பக்தர்களிடம் சொல்லி இருக்கிறார். சுந்தர்குமார் அண்ணாவிடம் 'பகவானின் உபதேசத்தை பட்டத்ரி அழகாக ப்ரார்த்தனைகளாக மாற்றி இந்த ஏழு தசகங்களில் நமக்கு தந்துள்ளார். இவற்றை தினம் ஒரு தசகம் வீதம் படித்தால் வாரம் ஒரு ஆவர்த்தி ஆகி விடும். அப்படி படித்துக் கொண்டே வந்தால், அந்த ப்ரார்த்தனைக்கு செவி சாய்த்து, காலக் க்ரமத்தில், இந்த ஏகாதச ஸ்கந்தத்தில் உள்ள தத்துவங்கள் எல்லாம் நமக்கு சித்திக்கும் படி, குருவாயூரப்பன் அனுக்ரஹம் பண்ணுவார்' என்று சொல்லி இருக்கிறார்.

இவை எல்லாம் இருக்கும் போது, நான் ஏன் இந்தத் தலைப்பில் திரும்பவும் பேச விரும்புகிறேன் என்றால், எனக்கு இந்த ஏழு தசகங்களில் உள்ள ஒவ்வொரு ஶ்லோகத்தைப் படிக்கும் போதும், "ஆஹா! ஸ்வாமிகள் இதை அவ்வளவு அழகாக வாழ்ந்து காட்டி இருக்கிறாரே!" என்று ஒவ்வொரு சம்பவமாக நினைவுக்கு வந்தது. இந்தக் கலியிலும், நாம் காணும் வகையில் ஒரு பாகவதோத்தமர், பகவானின் சொற்படி வாழ்ந்தார் என்று, நாமும், நம் சந்ததியினரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. அதற்காக அந்த ஶ்லோகங்களை எல்லாம் நன்றாக படித்து புரிந்து கொண்டு, ஸ்வாமிகள் அனுபவத்தோடு கலந்து, என் மழலை மொழியில் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

ஸ்வாமிகளிடம் என்னை அடிக்கடி பார்த்துள்ள ஒரு நண்பர் சொன்னார், "நீ ஸ்வாமிகள் சொன்னதை எல்லாம் ஏன் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறாய்? அவர் சொன்னதைக் கேட்டாலே நீ உயரலாமே" என்று சொன்னார். உண்மையில் அது வாஸ்தவம் தான். ஆனால் ஸ்வாமிகள் சொல்படி நடப்பது ரொம்பக் கஷ்டமாக இருக்கிறதே! அவர், "பற்றுக்கள் எல்லாம் போக வேண்டும் என்றால் இடைவிடாது பகவத் பஜனம் செய்ய வேண்டும். தினம் ஐந்து மணி நேரம் செய்து பற்றுக்கள் போகவில்லை என்றால் தினம் எட்டு மணி நேரம் பஜனம் செய்ய

வேண்டும்; அப்படியும் போகவில்லை என்றால் 24 மணி நேரமும் பஜனம் செய்ய வேண்டும்" என்கிறார். அப்படி எல்லாம் என்னால் முடிவதில்லை. ஒரு சில மணி நேரங்கள் பாராயணம் செய்வதற்குள்ளாக மூச்சு வாங்குகிறது. வேறேதாவது ஃபோனில் பார்த்துக் கொண்டிருந்தால் பொழுது போவதே தெரிவதில்லை. ஆனால் ஒரு இலக்கு வைத்துக் கொண்டு காலையில் ஆரம்பித்த பாராயணத்தை முடிப்பதற்குள், ராத்திரி ஆகிவிடுகிறது.

ஆனால் ஸ்வாமிகளைப் பற்றிப் பேசினால், மற்ற வீணான காரியங்களில் நேரத்தை விரயம் செய்யாமல், இந்த சில மணி நேர பாராயணத்தை தொடர்ந்து செய்ய, எனக்கு அது ஒரு ஊக்கம் அளிக்கிறது. உங்களில் பலரும் ஸ்வாமிகள் பற்றி நான் பேசுவதை ஆசையாக கேட்கிறீர்கள், அது என்னுடைய பாக்கியம். ஸ்வாமிகள் சரித்ரம், நமக்கு இனம் புரியாத சந்தோஷத்தையும் ஆறுதலையும் தருகிறது அல்லவா!

திருப்புகழில் ஒரு பாடல் வரும்:
"பக்தர்கணப் ப்ரிய நிர்த்த நடித்திடு பட்சி நடத்திய குக பூர்வ
பச்சிம தக்ஷிண உத்தர திக்குள பக்தர்கள் அற்புதம் என ஓதும்
சித்ரகவித்துவ சத்தமிகுத்த திருப்புகழைச் சிறிதடியேனும்
செப்பென வைத்துலகில் பரவத் தெரிசித்த அனுக்ரஹம் மறவேனே”

‘சித்ரகவி’ என்றால் அழகான கவிதைகள். அவற்றின் மூலமாக நான்கு திக்கிலும் இருக்கிற பக்தர்களும், 'ஆஹா! அற்புதமாக இருக்கிறது' என்று வியக்கும் படியாக, கொண்டாடும் படியாக, ‘சத்தமிகுத்த’ என்றால் இங்கே சந்தம் மிகுந்த என்று அர்த்தம். திருப்புகழ் எல்லாமே அழகான சந்தங்களில் அமைந்த பாடல்கள். ‘சிறிதடியேனும் செப்பென வைத்து’ - என்னையும் அந்த உன்னுடைய பெருமையில் கொஞ்சத்தைப் திருப்புகழ் மூலம் பாட வைத்து, ’தெரிசித்த அனுக்ரஹம் மறவேனே’. "இந்த என்னுடைய பாட்டிலும் உன்னை தரிசனம் செய்ய முடிகிறது; அல்லது நான் உன்னை தரிசனம் செய்ததால் தான் உன்னைப் பாடுகிறேன்" என்று இரண்டு அர்த்தங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

### நவையறு காட்சி நல்கி, என்னையும் அடியன் ஆக்கி

அது போல, ஸ்வாமிகள் என்னோடு பல காலம் பழகி, எனக்கு ஒரு வியப்பூட்டும் தரிசனத்தை அருளினார். என்னுடைய வாழ்க்கைக்குள் பதினைந்து வயதில் நுழைந்து, ஒரு குழந்தையைப் போல என்னைச்

செல்லம் பாராட்டி, ஒரு நண்பனைப் போல சிரித்துப் பேசிப் பழகி, ஒவ்வொரு காலகட்டத்திலும், அந்தந்த வயதில் வரக்கூடிய என்னுடைய சுகதுக்கங்களில் எல்லாம், பங்கெடுத்துக் கொண்டார்.

"வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்⁴ரு’ஷம் ப⁴வதி து³:கி²த:।
உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி ॥"

‘ஶ்ரீ ராமர், தன் ப்ரஜைகளை தன் சொந்தக் குழந்தைகள் போலப் பார்த்து, அவர்களுடைய துக்கத்தில் உடனிருந்து ஆறுதல் அளிப்பவராகவும், அவர்களின் மகிழ்ச்சியைத் தன் மகிழ்ச்சியாகக் கொண்டாடும் ஒரு அப்பாவைப் போலவும் இருந்தார்’ என்று ராமரைப் பற்றி வால்மீகி கூறுகிறார். அது போல தான் ஸ்வாமிகளும் இருந்தார். நான் தேர்வில் தேர்ச்சி பெற்றால் அவரிடம் தான் முதலில் சொல்லுவேன்; வேலை கிடைத்தால் அவரிடம் தான் சொல்லுவேன்; கல்யாணமானவுடன் மாலையும் கழுத்துமாக போய் அவரை நமஸ்காரம் செய்தோம்; குழந்தை பிறந்தவுடன் அவரிடம் தான் சொன்னேன். அவர் தன் அகத்தில் ஒரு சந்தோஷ நிகழ்ச்சி மாதிரி அதைக் கொண்டாடுவார். அதே போல ஒவ்வொரு கஷ்டத்தையும் அவரிடம் தான் சொல்லுவேன். நான் அமெரிக்காவில் இருக்கும் போது கூட அவர் என் அப்பா அம்மாவிடம், "கணபதிக்கு என்ன நடந்தாலும் என் கிட்ட சொல்லணும்" என்பாராம். அவரும் அப்படி பொறுமையாகக் கேட்டுக் கொள்வார்.

ஸ்வாமிகளும், ராமாயணத்தில் இருந்து அவர் எடுத்த ரத்னங்கள், மஹா பெரியவாளுடன் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்கள், அவருக்கு இருக்கக் கூடிய சிரமங்கள் என பலவற்றையும் என்னிடம் பகிர்ந்து கொண்டு, அவ்வளவு அன்போடு எனக்கு தரிசனம் கொடுத்ததை நினைத்து நினைத்துப் பேசுவது எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. இந்த நாராயணீயம் ஶ்லோகங்களாக இருக்கட்டும், எந்தத் தலைப்பை எடுத்துக் கொண்டாலும் - ராமாயணம் ஆனாலும் சரி, முகுந்த மாலை ஆனாலும் சரி, சிவானந்த லஹரி ஆனாலும் சரி, கந்தரனுபூதி ஆனாலும் சரி - எந்த தலைப்பு கொடுத்தாலும் நான் ஸ்வாமிகளைப் பற்றித் தான் பேசுவேன். ஏனென்றால், எனக்குப் பிடித்த விஷயமாக அவரே இருக்கிறார். அதனால் அவரைப் பற்றி பேச, இந்த தலைப்பும் எனக்கு அழகாக அமைந்து விட்டது. இது உங்களுக்கும் பிடிக்கும் என்று நம்புகிறேன்.

## யாதவ குலத்திற்கு ஏற்பட்ட ப்ராஹ்மண சாபம்

இதில் பதினொன்றாவது ஸ்கந்தத்தின் முதல் அத்யாயம் - இந்த 12 ஸ்கந்தங்களை 12 புத்தகங்கள் என்று வைத்துக் கொள்ளலாம்; அதற்குள் வரும் அத்யாயங்களை தலைப்புகள் என்று வைத்துக் கொள்ளலாம். இந்த முதல் அத்யாயத்தில், யாதவ குலத்திற்கு ஒரு ப்ராஹ்மண சாபம் ஏற்படுகிறது. க்ருஷ்ணரின் பிள்ளை சாம்பன் என்ற ஒருவனுக்கு கர்ப்பிணிப் பெண் போல வேடம் போட்டு, ரிஷிகள் முன்னால் போய் நிறுத்தி, "இவனுக்கு என்ன குழந்தை பிறக்கும்?" என்று கேலியாகக் கேட்கிறார்கள். ரிஷிகளுக்குத் தெரியாதா என்ன? அவர்கள் "முஸலம் குலநாசனம்" என்று, ‘ஒரு உலக்கை பிறக்கும், அதனால் உங்கள் குலமே நாசமடையும்’ என்று சபிக்கிறார்கள். அவனுடைய வேடத்தைக் கலைத்துப் பார்த்தால், அவன் கையில் உலக்கை இருக்கிறது. எப்பொழுதும் ஒரு கஷ்டம் வந்தால் இவர்கள் உடனே க்ருஷ்ணரிடம் போய் சொல்வார்கள். ஆனால் இப்போது என்னவோ அவரிடம் சொல்லத் தோன்றவில்லை. நேரே போய் உக்ரசேன மகாராஜாவிடம் சொல்கிறார்கள். அவர், “இந்த உலக்கையை நன்றாகப் பொடி செய்து கடலில் போட்டு விடுங்கள்” என்கிறார்.

புத்தியினால் விதியை மாற்ற முடியாது என்பதை ஔவைப் பாட்டி கூட அழகாக ஒரு பாடலில் சொல்கிறாள்: "சிவாயநம என்று சிந்தித்திருப்பார்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை, உபாயம் இதுவே மதியாகும்”. ‘சிவாயநம:’ என்று சொல்லி பகவானை நம்பி பஜனம் செய்தால் தான் நம்முடைய விதியை மாற்றிக் கொள்ள முடியுமே தவிர, நீயாக ஏதாவது உபாயம் செய்கிறேன் என்று போனால், “விதியே மதியாய்விடும்”. அந்த விதி உன் மதியில் வந்து உட்கார்ந்து கொண்டு என்ன நடக்க வேண்டுமோ அதை நடத்திவிடும்” என்று சொல்கிறாள்.

அப்படி அவர்கள் ஏதோ ஒரு உபாயம் செய்கிறார்கள். ஆனால் அந்த உலக்கையின் பொடிகளே கடற்கரையில் கோரைப் புற்களாக முளைத்து, யாதவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளும் ஆயுதமாக ஆகி விடுகிறது. ப்ராஹ்மண சாபம் பலித்து விடுகிறது. பதினொன்றாவது ஸ்கந்தத்தின் முதல் அத்யாயத்தின் கடைசி ஶ்லோகம் சொல்கிறது, “காலரூபியான க்ருஷ்ண பகவான் இதை மாற்றுவதற்கு விரும்பவில்லை”.

இதற்கு மாறாக, இரண்டாவது அத்யாயத்தின் முதல் ஶ்லோகம், “நாரத பகவான் க்ருஷ்ணனுடைய ஸங்கத்தை விரும்பி மாஸக் கணக்காக

துவாரகையிலேயே தங்கியிருந்தார்” என்று வருகிறது. நாரத பகவானுக்கு ஒரு இடத்தில் ஒரு நாளுக்கு மேல் தங்க முடியாது என்று ஒரு சாபம் உண்டு. ஆனால் க்ருஷ்ண பகவான் அந்தச் சாபத்தை விலக்கி விட்டார்.

இதைக் கொண்டு ஸ்வாமிகள் சொல்லுவார், "சில பேர் என்னிடம், 'நீங்கள் சென்று ராமாயணம், பாகவதம் படிக்கும் இடத்தில் எல்லாம், எல்லாரும் ரொம்ப க்ஷேமமாக இருக்கிறார்கள், ஆனால் உங்கள் குடும்பத்தில் இவ்வளவு கஷ்டம் இருக்கிறதே' என்று கேட்பார்கள். நான் அதற்கு ஒன்றும் சொல்லாமல், 'ஏதோ நான் போகிற இடத்தில் எல்லாரும் நன்றாக இருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்கிறீர்களே, அதுவே போதுமே' என்று சொல்லி விடுவேன். ஆனால் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே இருந்தால், 'நான் பாகவதம் படிப்பது என்னுடைய பணக் கஷ்டம் தீர வேண்டும் என்றோ, என்னுடைய குடும்பக் கஷ்டம் தீர வேண்டும் என்றோ இல்லை; இன்னொரு முறை எனக்கு ஜன்மா வராமல் இருப்பதற்காகத் தான் நான் பாகவதம் படிக்கிறேன்!' என்று சொல்லுவேன், “புரிந்தால் புரிந்து கொள்ளட்டும்" என்பார்.

இந்த 'போகிற இடத்தில் எல்லாம் க்ஷேமம்' என்பதற்கு ஒரு உதாரணம், ஸ்வாமிகள் ஸந்நியாசம் வாங்கிக் கொண்ட பிறகு எங்கள் அகத்திற்கு இரண்டு முறை வந்திருக்கிறார். நாங்கள் ஒரு பத்து பேர் இருந்தோம், ஸ்வாமிகளோடு அவருடைய பக்தர்கள் ஒரு பத்து பேர் வந்திருந்தார்கள். எங்கள் அம்மா அப்பா பாகவத ஸம்ப்ரதாயத்தில் ஊறியவர்கள்; ஸ்வாமிகளை வாசலில் பூர்ண கும்பம் கொடுத்து வரவேற்று, கூடத்தில் உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தி, அவருடைய பாதங்களை அலம்பி, பாத பூஜை செய்து, பிரதக்ஷிணம் வந்து, நமஸ்காரம் செய்து, கற்பூர ஆரத்தி காண்பித்து,

“திருவடியும் தண்டையும் சிலம்பும் சிலம்போடு உருவப்
பொருவடிவேலும் கடம்பும் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடிவான வதனங்கள் ஆறும் மலர்க்கண்களும்
குருவடிவாய் வந்து என் உள்ளம் குளிரக் குதிகொண்டவே”

“பத்தித்திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித்திருக்கும் அமுதுகண்டேன் செயல்மாண்டடங்க
புத்திக்கமலத்து உருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக்கரைபுரளும் பரமானந்த சாகரத்தே”

என்று நிறைய கந்தர் அலங்காரப் பாடல்களை எல்லாம் பாடி, ஒரே ஆனந்த சந்தை தான் அங்கே. அதற்கு பின்னர் அவர் உட்கார்ந்து பாகவதம் படித்தார். முதல் முறையும் இது தான் நடந்தது, பாகவதம் படித்தார், சாப்பிட்டு விட்டு எல்லாரும் கிளம்பினார்கள். எனக்குக் கல்யாணத்திற்காகச் சில வருடங்களாக முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்; அவர் வந்து பாகவதம் படித்து விட்டுப் போன இரண்டு மூன்று மாதங்களில் எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. திரும்பவும் இரண்டாவது முறை அதே காட்சி! ஸ்வாமிகள் வந்தார், அவருக்கு பாத பூஜை செய்தோம், அவர் பாகவதம் படித்தார், இரண்டு மூன்று மாதங்களில் என் தம்பிக்கும் கல்யாணம் கூடி வந்தது. அப்படி அவர் போன இடத்திலெல்லாம் க்ஷேமம் என்பது ஸத்யம். ஸ்வாமிகளுடைய பக்தர்களின் அனுபவங்களை கேட்டால், அவர்களுடைய குடும்பங்களில், அவர்கள் பிள்ளைகள், பேரன், கொள்ளுப் பேரன் வரைக்கும் ஸ்வாமிகளுடைய அனுக்ரஹம் தொடர்வதை பகிர்வார்கள். ஆனால் ஸ்வாமிகள், தன் உடம்பில், தன் குடும்பத்தில் இருக்கிற கஷ்டத்தை, “காலரூபியான பகவான் எப்படி தன் குலத்துக்கு வந்த கஷ்டம் இருக்கட்டும் என்று நினைத்தானோ, அது போல பகவான் நினைத்தது நடக்கட்டும்” என்று விட்டுவிட்டார்.

### நவயோகி உபாக்யானம் ஆரம்பம்

இந்த இரண்டாவது அத்யாயம் எப்படி ஆரம்பிக்கிறது என்றால், தேவகியும் வசுதேவரும் நாரத பகவானை நமஸ்காரம் செய்து, "நாங்கள் நற்கதி அடைவதற்கு எங்களுக்குப் ஸதுபதேசம் செய்ய வேண்டும்" என்று வேண்டுகிறார்கள். அப்போது நாரத பகவான், “பரம மங்கள மூர்த்தியும், புண்ணிய ச்ரவண கீர்த்தனனுமாகிய (யாரைப் பற்றிப் பேசினாலோ கேட்டாலோ புண்ணியமோ), அந்த பகவானை ஸ்மரிப்பதற்கு எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தீர்களே!” என்கிறார். அவர் அனவரதமும் அகலாமல் பகவானுடைய சிந்தனையிலேயே இருக்கிறவர். ஆனால் அவ்வளவு விநயமாகச் சொல்லி, அவர் நவயோகி உபாக்கியானத்தை தொடங்குகிறார். பாகவத தர்மம் அவருக்கும் தெரிந்தது தான்! அவரே நேரடியாகச் சொல்லலாம், ஆனாலும், “நவ யோகிகள் ஜனகருக்கு உபதேசம் செய்தார்கள்” என்று அந்த ஒரு சரித்ரத்தைச் சொல்கிறார்.

இந்த நவயோகிகள் அவதாரம் செய்தது கிருதயுகத்தில்; அவர்கள் ஜனக மகாராஜருக்கு இந்த பாகவத தர்மத்தை உபதேசம் செய்தது திரேதாயுகத்தில்; வசுதேவருக்கும் தேவகிக்கும் நாரதர் அதை எடுத்துச்

சொன்னது துவாபரயுகத்தில்; அதை சுகப்பிரம்ம ரிஷி பரீக்ஷித்து மகாராஜனுக்குச் சொன்னது கலியுகத்தில்! இப்படி நான்கு யுகங்களையும் தொடும் ஒரு அற்புதமான சரித்ரம் இது.

சூரிய வம்சத்தைச் சேர்ந்த ஸ்வாயம்புவ மனுவின் வம்ச வழியில், ரிஷப தேவருக்குப் பிள்ளையாகப் பரதன் பிறக்கிறான், அவனுக்கு பின் பிறந்த ஒன்பது பேர் யோகிகளாக ஆனார்கள் என்று வரும் அல்லவா, அந்த ஒன்பது பேரும், ஜனக மகாராஜாவின் ஒரு யாகத்தின் போது வந்து தரிசனம் கொடுக்கிறார்கள். உடனே ராஜாவும் அங்கிருந்த ரிஷிகளும் எல்லாரும் எழுந்து அவர்களை வரவேற்கிறார்கள். அந்த யாக அக்னி கூட மேலெழுந்து அவர்களை வரவேற்றது என்று வருகிறது. அவர்களுக்கு முறைப்படி பூஜை செய்து, அவர்களைச் சிறந்த ஆசனத்தில் உட்கார வைத்து, ஜனக மகாராஜா சொல்கிறார், "மகான்களுடைய தரிசனம் என்பது பெரிய புதையல் கிடைத்தது மாதிரி! ஒரு முறை அரை க்ஷணம் அந்த தரிசனம் கிடைத்தால் கூட, வாழ்க்கை முழுக்க அதை நினைத்து நினைத்துச் சந்தோஷப் படலாம்; அப்படி எனக்கு உங்களுடைய தரிசனம் கிடைத்திருக்கிறது. எனக்கு யோக்யதை இருந்தால், எது மூலமாக பகவானே கிடைப்பாரோ, அப்பேர்ப்பட்ட பாகவத தர்மத்தை நீங்கள் எனக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்" என்று கேட்கிறார்.

இந்த இடத்தில் “எனக்கு யோக்யதை இருந்தால்!” என்று அவர் கேட்கிறார். ஸ்வாமிகள் நாலைந்து இடங்களில் ப்ரவசனம் செய்வதைத் பார்த்த ஒருவர், "திருவல்லிக்கேணியில் ஒரு பாகவதர் அழகாகப் ப்ரவசனம் செய்கிறார். ஆயிரக் கணக்கான பேர்கள் வந்து கேட்கிறார்கள்" என்று ஒரு சபாவில் போய் சொல்லி இருக்கிறார். உடனே அந்தச் சபையிலிருந்து ஸ்வாமிகளுக்கு ஒரு கடிதம் வந்ததாம். “நீங்கள் என்னென்ன தலைப்புகளில் ப்ரவசனம் செய்வீர்கள்?, எங்கெங்கெல்லாம் செய்திருக்கிறீர்கள்?, அதைக் கேட்க எவ்வளவு பேர் வந்திருந்தார்கள்?, வந்தவர்களில் சிலர் உங்களைப் பற்றிச் சொன்ன கருத்துக்கள், இதை எல்லாம் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்; அதை அடிப்படையாக வைத்து உங்களைத் தேர்ந்தெடுப்போம்” என்று. ஸ்வாமிகள் வி.ஜே.ஆர் மாமாவிடம் சொன்னாராம், "இந்த ஜனக மகாராஜா நவயோகிகளிடம் 'எனக்கு யோக்கியதை இருந்தால் உபதேசம் செய்யுங்கள்' என்று கேட்டதாக வருகிறது; புராணங்களில் எல்லாம் எங்குமே அப்படித் தான் வருகிறது. 'உங்களுக்கு என்ன யோக்கியதை?' என்று யாரும் கேட்டதாக வரவில்லை. அதெல்லாம் அவர்களுக்குப் புரியாது, நீ அதை இக்னோர்

பண்ணிவிடு" என்றாராம். (வி.ஜே.ஆர் என்பவர் ஸ்ரீ வி.ஜானகிராமன் மாமா; ஸ்வாமிகள் அவரை அன்பாக வி.ஜே.ஆர் என்று கூப்பிடுவார். ஸ்வாமிளுக்கு 40 வருடங்களுக்கு மேலாக அணுக்கத் தொண்டு செய்யும் பாக்யம் பெற்றவர். ஸ்வாமிகள் சித்தி அடைந்த பின், அவருடைய அதிஷ்டானம் அமைவதிலும், வருடாவருடம் ஆராதனைகள் நடப்பதிலும் பெரும் பங்கு ஆற்றியவர்.)

தஞ்சை மன்னர் தியாகராஜ ஸ்வாமிகளுக்கு அளவற்ற பொன்னையும் பொருட்களையும் அனுப்பி வைத்து, ‘சபைக்கு வந்து பாட வேண்டும்’ என்று கேட்ட போது, அவர், "நிதிசால சுகமா ராமுனி சந்நிதி ஸேவ சுகமா" (செல்வம் அதிகமான சுகத்தைத் தருமா? அல்லது ஸ்ரீராமனின் சேவை சுகத்தைத் தருமா?) என்று பாடினார் அல்லவா, அது போல ஸ்வாமிகளுக்கு அவ்வளவு வைராக்யம். இந்த நாலைந்து சபா செக்ரட்டரிகளும், அவர்களுக்குள் ஒரு தொடர்பு வைத்திருப்பார்கள்; அவர்களை அனுசரித்துப் போனால் தான் மேலும் மேலும் பணமும் கூட்டமும் வரும். ஆனால், ஸ்வாமிகளுக்கு ஒரு நாளும் அதில் ஆர்வம் இல்லை. "நான் பாகவதம், ராமாயணம் படிப்பது, ப்ரவசனம் செய்வதெல்லாம் ஜன்ம லாபத்திற்காக" என்பதில் முதலிலிருந்தே அவர் தெளிவாக இருந்தார். அதனால் தான் மஹா பெரியவாளே அவரைக் கூப்பிட்டு, பாகவதம் படிக்கச் சொல்லிக் கேட்டார்.

### 91வது தசகம்: பாகவத தர்மம் கடையனையும் கடைத்தேற்றும்

நாராயணீயம் 91வது தசகம், முதல் ஶ்லோகத்தைப் பார்ப்போம்.

**श्रीकृष्ण, त्वत्पदोपासनं अभयतमं, बद्धमिथ्यार्थदृष्टेः,**
**मर्त्यस्य आर्तस्य मन्ये, व्यपसरति भयं, येन सर्वात्मनैव ।**
**यत्तावत् त्वत्प्रणीतान्, इह भजनविधीन्, आस्थितो मोहमार्गे**
**धावन्नपि, आवृताक्षः, स्खलति न कुहचित्, देवदेव, अखिलात्मन् ॥**

ஜனக மகாராஜா நவயோகிகளிடம் கேள்விகள் கேட்க, அதற்கு ஒரு யோகி இவ்வாறு பதில் சொன்னார் என்று இப்படி வரிசையாக பாகவதத்தில் வரும். அதில் உள்ள தத்துவங்களை பட்டத்ரி பகவானிடம் ப்ரார்த்தனைகளாக முன் வைக்கிறார்.
**ஸ்ரீக்ரு’ஷ்ண, த்வத்பதோ³பாஸநம் அப⁴யதமம்** ”ஹே க்ருஷ்ணா! உன்னுடைய பாத பஜனம், (உன்னை வழிபடுவது என்பது) 'அபயதமம்'”.

‘அபயம்’ என்றால் பயத்தைப் போக்கும்; ‘அபயதமம்’ என்றால் பயத்தை அடியோடு போக்கும் என்று அர்த்தம். உலகத்தில் நமக்கு ஒவ்வொரு நேரத்தில் ஒவ்வொரு பயம் ஏற்படுகிறது; அதை நாம் செய்யும் உபாயங்களால் ஓரளவு போக்கிக் கொள்ள முடியும். ஆனால் பகவானுடைய பஜனம் மட்டும் தான் அதை அடியோடு போக்கும்.

**ப$^3$த்$^3$த$^4$மித்$^2$யார்த$^2$த்$^3$ரு’ஷ்டே:** இந்த பயம் ஏன் ஏற்படுகிறது என்றால், பொய்யான உலக விஷயங்களில் நமக்கு ஒரு ஈடுபாடு இருக்கிறது.

**மர்த்யஸ்ய ஆர்தஸ்ய மந்யே** நமக்கு இருக்கிற இந்த ஈடுபாட்டினால் பலவிதமான கவலைகள் உண்டாகி, திரும்பத் திரும்பச் செய்ததையே செய்து நாம் பிறந்து பிறந்து இறந்து கொண்டிருக்கிறோம்.

**வ்யபஸரதி ப$^4$யம் யேந ஸர்வாத்மனைவ** உன்னுடைய பாத பஜனம் இந்த பயத்தை அடியோடு போக்குகிறது. **யத்தாவத் த்வத்ப்ரணீதான்** என்ன செய்தால் போகும்? ‘த்வத்ப்ரணீதான்’- மற்ற சாஸ்த்ரங்களெல்லாம் ரிஷிகள் சொன்னவை; ஆனால் இந்த பாகவத தர்மம் என்பது பகவானே நேரடியாகச் சொன்னது. நீயே சொன்ன **இஹ ப$^4$ஜநவிதீ$^4$ன்** அது தான் அடுத்த சில ஸ்லோகங்களிலும் அத்யாயங்களிலும் வரப் போகிற பக்தி மார்க்கம், பஜன மார்க்கம். **ஆஸ்தி$^2$தோ மோஹமார்கே$^3$ தா$^4$வந்நபி ஆவ்ரு’தாக்ஷ:, ஸ்க$^2$லதி ந குஹசித், தே$^3$வதே$^3$வ, அகி$^2$லாத்மன்** எல்லா உயிர்களிலும் உறைபவனே! தெய்வங்களுக்கு எல்லாம் மேலான தெய்வமே! அப்படி உன்னுடைய பஜன மார்க்கத்தைப் பற்றிக் கொண்டு ஒருவன், மோக மார்க்கத்தில் கண்ணை மூடிக் கொண்டு ஓடினால் கூட அவன் கீழே விழ மாட்டான். உன்னை வந்தடைவான்.

இதற்கான எளிமையான விளக்கம் என்னவென்றால், பகவந்நாம நாம மகிமையைப் பற்றி மஹா பெரியவா சொல்லும் போது, "நாக்கு இருக்கிறது, நாமம் இருக்கிறது, அப்புறம் பயமேது!" என்று ஒரு வார்த்தை சொல்வார். அது ஒரு பெரிய அபய வாக்கு இல்லையா? அப்படி, நாக்கை வைத்துக் கொண்டு இடைவிடாது பகவந்நாமத்தை ஜபித்துக் கொண்டே இருந்தால், நமக்கு வாழ்க்கையில் எந்த பயமும் இருக்காது.

இந்த ‘இரண்டு கண்ணையும் கட்டிக் கொண்டு அல்லது கண் தெரியாமல்’ என்று சொல்வதற்கு, ‘வேதம் ஒரு கண், தர்ம சாஸ்த்ரம் ஒரு கண்’ என்று அர்த்தம். இந்த இரண்டும் நமக்கு இப்பொழுதெல்லாம் என்னவென்றே தெரியவில்லை. நாம் பணத்தின் பின்னாலும், உலக விஷயங்களின் பின்னாலும் தான் ஓடிக் கொண்டிருக்கிறோம். அப்படி ஓடும் போதும்,

நாம் பகவத் பஜனத்தை விடாமல், கூடவே செய்து கொண்டு வந்தால், க்ஷேமத்தை அடையலாம்.

வேத, தர்ம சாஸ்த்ரத்தின் ஸாரம், 'தெய்வத்தின் குரல்', 'ஏணிப்படிகளில் மாந்தர்கள்' போன்ற புத்தகங்களில் இருக்கிறது. நான் ஆரம்பத்தில் என்னுடைய சின்ன வயதில் அதை எல்லாம் படித்தேன். அப்போது, "இது என்னடா இது! எந்த தலைமுறைக்கானது இது! நமக்கு இதில் என்ன பயன் இருக்க முடியும், நாம் எப்படி இதைப் பின்பற்ற முடியும்!" என்றெல்லாம் ஒரு பெரிய கலக்கம் ஏற்பட்டது. அந்த நேரத்தில் தான் நான் ஸ்வாமிகளை தரிசனம் செய்தேன். என் அம்மா அப்பா நேர்மை, பொறுமை, எளிமை, கருணை போன்ற ஆத்ம குணங்களோடு வறுமையை பொருட்படுத்தாமல், திருப்தியாக மகிழ்ச்சியோடு வாழ்வதை பார்த்து வந்தேன். ஸ்வாமிகள், அதற்கும் மேல், எவ்வளவு கஷ்டம் வந்தாலும் கலங்காமல் பரம சாந்தராய், ஞான வைராக்யத்தோடு, விளங்கினார். அதனால் அவருடைய வழி என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவரை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த போது தான், அவர் இந்த பாகவத தர்மத்தின் படி வாழ்கிறார் என்பது புரிந்தது.

பாகவத தர்மத்தைப் பின்பற்றுபவன் வீண் போக மாட்டான். தர்ம சாஸ்த்ரமோ வேதமோ தெரியவில்லை என்றால் கூட, "பகவான் காப்பாற்றுவார்" என்பதில் முழு நம்பிக்கை இருந்தாலே, அவனுக்கு குறைவில்லை என்கிற அந்த உபதேசம் நம் மனதில் நன்றாகப் பதிவதற்காக, மாயவரம் பெரியவா ஒரு கதை சொல்வாராம். ஸ்வாமிகள் அந்தக் கதையை விடாமல் சொல்லுவார்.

ஒரு பிரம்மச்சாரி பையன் இருந்தான். அவனுக்குப் படிப்பு எல்லாம் ஒன்றும் அதிகம் வரவில்லை. பிக்ஷாசர்யம் செய்து (பிக்ஷை எடுத்தல்) காலத்தைத் தள்ளினான். அவனுக்கும் ஒருத்தர் பெண் கொடுத்தார். "அந்தக் காலத்தில் கொடுப்பார்கள்" என்று ஸ்வாமிகள் வேடிக்கையாகக் குறிப்பிடுகிறார்.

கல்யாணம் ஆகி விட்டதால், க்ருஹஸ்தன் ஆன பிறகு பிக்ஷை வாங்க முடியாது. அவன் ஒரு வித்வானிடம் போய், "எனக்கு ஏதாவது சொல்லிக் கொடுங்கள்" என்று கேட்டான். அவர் இவனைப் பார்த்து, "இவனுக்கு இதற்கு மேல் என்ன சொல்லிக் கொடுக்க முடியும்?" என்று நினைத்து,

ஒரே ஒரு பதம் சொல்லிக் கொடுத்தார்: 'ஸ்ரீ க்ருஷ்ணாய நமஹ'. "இதை நீ சொல்லிக் கொண்டே உஞ்சவிருத்தி எடு, பகவான் உன்னைக் காப்பாற்றுவார்" என்று சொன்னார்.

அவரும் அதை மனமார நம்பி, தினமும் வேடு கட்டிக் கொண்டு உஞ்சவிருத்தி செய்யக் கிளம்புவார். அவனுக்கு நாலு பேர் அரிசி போடுவார்கள்; அதை மனைவியிடம் கொண்டு வந்து கொடுப்பார். இப்படி அவருடைய காலம் போய்க் கொண்டிருந்தது. ஒரு நாள் வெயில் அதிகமாக இருந்ததால், ஒரு வீட்டு வாசலில் போகும் போது அவருக்குக் கடுமையான தாகம் எடுத்தது. தாகத்தின் தவிப்பால், 'ஸ்ரீ க்ருஷ்ணாய நமஹ' என்பதற்கு பதிலாக, 'ஸ்ரீ த்ருஷ்ணாய நமஹ' (த்ருஷ்ணா என்றால் தாகம்/ஆசை) என்று மாற்றிச் சொல்லி விட்டார்.

அந்த வீட்டுக்காரரர் ஒரு வியாகரண பண்டிதர் (இலக்கண அறிஞர்). அவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. "ஒரு ஶ்லோகம் கூட தெரியவில்லை, ஒரே ஒரு பதத்தைச் சொல்கிறாய்; அதையும் கூட தப்பாகச் சொல்கிறாயே!" என்று சத்தம் போட்டார். நம் உஞ்சவிருத்தி ப்ராஹ்மணருக்கு ஒன்றும் புரியவில்லை. "ஏதோ அரிசி போட இஷ்டமில்லை போலிருக்கிறது, அதனால் கோபித்துக் கொள்கிறார்" என்று நினைத்து, அவர் அடுத்த க்ருஹத்திற்குப் போய்விட்டார். வேறு யாரோ அரிசி போட்டார்கள், அவரும் க்ருஹம் திரும்பி விட்டார்.

அன்று இரவு, அந்த வியாகரண பண்டிதருடைய கனவில் ஹனுமார் வந்து அவருக்கு ஏழு எட்டு குத்து விட்டாராம்! அவர் பயந்து நடுங்கி, "பகவானே! நான் என்ன தப்பு செய்தேன் என்று தெரியவில்லையே!" என்று கதறினார். அதற்கு ஹனுமார், "நீ இன்று காலையில் அந்த உஞ்சவிருத்தி ப்ராஹ்மணரைத் திட்டினாயே, அவர் சொன்னதில் என்ன தப்பு? அவர் 'ஸ்ரீ த்ருஷ்ணாய நமஹ' என்று சொன்னார் அல்லவா? அதற்கு இப்படியும் அர்த்தம் பண்ணலாமே! 'ஸ்ரீ' என்றால் லக்ஷ்மி தேவி. 'ஸ்ரீயாம் ஜகன்மாதரி சீதாதேவ்யாம், த்ருஷ்ணா, அத்யந்த ஆஸக்திஹி, யஸ்ய ஸ:, தஸ்மை ராமாய நம:' லக்ஷ்மியின் வடிவமான, ஜகன்மாதாவான சீதாதேவியைப் பிரிந்த போது, 'மரமே கண்டாயா? மானே கண்டாயா?' என்று அவள் மேல் ஆசையோடு (த்ருஷ்ணையோடு) தவித்தாரே, அந்த ஸ்ரீராமருக்கு நமஸ்காரம் என்று அர்த்தம் சொல்லலாமே? க்ருஷ்ணருக்கு பதிலாக ராமரைச் சொல்கிறார், அவ்வளவு தானே! அவரைப் போய் அவ்வளவு ஏசினாயே!" என்று சொன்னாராம். பண்டிதர் நடுங்கிப் போய்,

“தெரியாமல் செய்து விட்டேன், கோபித்துக் கொள்ளாதீர்கள். நாளைக்கு அவர் வரும் போது அவருக்கு எட்டு மரக்கால் அரிசி கொடுத்து விடுகிறேன்” என்றாராம்.

“அது போல, பகவானை நம்பினால் அவர் கண்டிப்பாகக் காப்பாற்றுவார்” என்று இந்தக் கதையை ஸ்வாமிகள் சொன்னார். அந்த இடத்தில் ஸ்வாமிகள் ஒரு முக்கிய விஷயத்தைக் குறிப்பிடுவார்: “இப்படி ஒரே ஒரு பதத்தைத் தெரிந்து கொண்டு சொன்னதற்கே பகவான் காப்பாற்றுகிறார் என்னும்போது, நன்றாக ஸம்ஸ்கிருதம் படித்து, ராமாயணம் படித்து, அதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்கிற அளவுக்கு பகவான் ஒரு அனுக்ரஹமும் திறமையும் கொடுத்திருக்கிறார் என்றால், அதைப் போய் யாராவது விலை பேசுவார்களா? ராமாயணமும் பாகவதமும் கற்பக வ்ருக்ஷம், காமதேனு அல்லவா!” ‘நாடிய பொருள் கைகூடும்’ என்று கம்பன் போன்ற மஹாத்மாக்கள் சொல்லி இருக்கிறார்கள் அல்லவா, அதில் நமக்கு முழு நம்பிக்கை வர வேண்டும்” என்பார்.

ஸ்வாமிகளுக்கு அந்த நம்பிக்கை நிறைந்து இருந்தது. எங்கள் க்ருஹத்திற்கு இரண்டு தடவை ஸ்வாமிகள் வந்தார். இரண்டு தடவையும் அவர் வந்துவிட்டுப் போன பின்பு எங்கள் க்ருஹத்தில் எனக்கும் என் தம்பிக்கும் கல்யாணம் கூடி வந்தது என்று பொதுவாகச் சொன்னேன் அல்லவா? அந்த இரண்டு தடவையுமே அவர் பாகவதத்தில் இருந்து ‘ருக்மிணி கல்யாணம்’ என்ற பகுதியைப் படித்தார்.

நாங்கள் அவரிடம் அப்படி எந்தப் பிரார்த்தனையும் வைக்கவில்லை. “க்ருஹத்திற்கு வர வேண்டும், உங்கள் பாதம் பட வேண்டும்” என்று மட்டும் தான் வேண்டினோம். ஆனால், அவருக்கு எங்களைத் தெரியும் என்பதால், “எனக்கு முப்பது வயதாகிவிட்டதே” என்று அவரே மனதில் நினைத்து, ருக்மிணி கல்யாணம் படித்துப் பிரார்த்தனை செய்திருக்கிறார். அதற்கு பகவானும் உடனே பலன் கொடுத்து விட்டார். அவருக்கு அந்த அளவுக்கு நம்பிக்கை, அவ்வளவு உபாசனா பலம்!

### பக்திக்கு முதல் படியான கர்ம யோகம்

பட்டத்ரி அடுத்த சில ஸ்லோகங்களில் அந்த பாகவத தர்மம் என்றால் என்னவென்று சொல்கிறார். இந்த ஸ்லோகத்தில் பக்திக்கு முதல் படியான கர்ம யோகத்தைப் பற்றி சொல்கிறார்.

நாராயணீயம் 91வது தசகம், இரண்டாவது ஶ்லோகம்:

**भूमन् कायेन वाचा, मुहुरपि मनसा, त्वद्बलप्रेरितात्मा,**
**यद्यद्कुर्वे समस्तं तदिह परतरे, त्वय्यसौ अर्पयामि ।**
**जात्यापि इह श्वपाकः, त्वयि निहितमनःकर्मवागिन्द्रियार्थ-**
**प्राणः, विश्वं पुनीते, न तु विमुखमनाः, त्वत्पदात् विप्रवर्यः ॥**

**பூ⁴மன் காயேந வாசா, முஹுரபி மநஸா த்வத்³ப³லப்ரேரிதாத்மா,**
**யத்³யத்³குர்வே** ஹே க்ருஷ்ணா, 'காயேன வாசா' - உடம்பாலோ, மனதாலோ, வாக்கினாலோ உன்னால் உந்தப்பட்டு நான் என்னென்ன செய்கிறேனோ, **ஸமஸ்தம் ததி³ஹ** அவை எல்லாவற்றையும் **பரதரே த்வய்யஸௌ அர்பயாமி** பரம்பொருளான உனக்கே அர்ப்பணிக்கிறேன். ஸந்த்யா வந்தனம் செய்தாலும் கடைசியில் 'காயேன வாசா' சொல்கிறோம். அமாவாசை தர்ப்பணம் செய்தாலும் 'காயேன வாசா', சுந்தர காண்டம் பாராயணம் செய்தாலும் 'காயேன வாசா' என எல்லா வழிபாடுகளின் முடிவிலும் இந்த 'காயேன வாசா' சொல்கிறோம் அல்லவா, அது பாகவதத்தில் தான் இருக்கிறது.

"காயேந வாசா மநஸேந்த்³ரியைர்வா பு³த்³த்⁴யாத்மநா வா ப்ரக்ரு'தே: ஸ்வபா⁴வாத் । கரோமி யத்³யத் ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி ஸமர்பயாமி ॥" என்று நாம் சொல்கிறோம். அங்கே மூலத்தில் எப்படி இருக்கிறது என்றால், "கரோதி யத்³யத் ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி ஸமர்ப்பயேத் தத்" - "சமர்ப்பணம் செய்" என்று உபதேசமாக இருக்கிறது. யாரோ ஒரு மகான் அதை அழகாக நமக்கு ஒரு ப்ரயோகமாக மாற்றி அமைத்துக் கொடுத்திருக்கிறார்.

ஆர். வெங்கட்ராமன், ஜனாதிபதியாக இருந்தாரே, அவர் பெரியவாளிடம் மிகுந்த பக்தியோடு இருப்பார். அவர் பெரியவாளிடம், "நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டபோது, "தினம் ராத்திரி படுக்கும் போது 'காயேன வாசா' சொல்லிவிட்டு, நான் செய்ததெல்லாம், பகவானே உனக்கு அர்ப்பணம் என்று சொல்லிவிட்டுத் தூங்கு, உனக்கு நிம்மதி இருக்கும்" என்று சொல்லி இருக்கிறார். பற்றில்லாமல் நம் தொழிலைச் செய்து அதன் பலனை பகவானுக்கு அர்ப்பணம் செய்கிற கர்ம யோகம், பக்தியில் முன்னேற முதல் படி.

இந்தக் காலத்தில் உலகமே எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. ஏ.ஐ, ரோபோடிக்ஸ் (AI, Robotics) என்று போய்க் கொண்டு இருக்கும் போது, அந்த "மா பலேஷூ கதாசன" (கடமையைச் செய். பலனை எதிர்பார்க்காதே) என்பதை நாம் எப்படிப் புரிந்து கொள்வது?

எனக்கு இப்படி தோன்றுகிறது. எனக்கு ஒன்று வேண்டும் என்று இலக்கை வைத்துக் கொண்டு, ஸத்யமாவது தர்மமாவது, நான் எப்படியாவது, திருட்டு புரட்டு செய்தாவது (by hook or crook) அதை அடைவேன் என்பது தவறு. “நான் என்னால் முடிந்த சிறந்த உழைப்பைக் கொடுப்பேன், தர்ம நெறியோடு இருப்பேன், நேர்மையாக இருப்பேன்” (I will put my best efforts, I will be ethical, I will be honest) என்று நம் கடமையைச் செய்து விட்டு, ‘எது வருகிறதோ வரட்டும்’ என்று இருக்க வேண்டும்.

“தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்” என்று, பொய் புரட்டு செய்ய ஆரம்பித்தால் நம்முடைய மனசாட்சியே நம்மைக் கண்டிக்கும்; அதையும் கேட்காமல் செய்து கொண்டே போனால், மனதில் அழுக்கு படிந்து, புத்தி கெட்டு விடும். அது பக்திக்கு நல்லதல்ல. அதனால், உண்மையான பக்தி செய்வதற்கு, நம் மனது எப்போதும் தூய்மையாக இருக்க வேண்டும், அதற்கு நாம் நேர்மையாக இருக்க வேண்டும்.

மேலும் நமக்குக் பிடித்தவர்களுக்கு, மாப்பிள்ளைக்கோ அல்லது பேரன் பேத்திக்கோ ஒன்று கொடுக்கிறோம் என்றால், அழுகிப் போனதை எல்லாம் கொடுக்க மாட்டோம் அல்லவா? சிறந்ததைத் தானே கொடுப்போம்; நமக்கு இல்லை என்றாலும் பரவாயில்லை, அவர்களுக்கு நல்லதாக எடுத்து வைப்போம். அந்த மாதிரி, “பிடித்தவருக்கு அர்ப்பணிக்கும் போது நல்லதைத் தான் தர வேண்டும்” என்கிற முறையில் பகவானுக்கு, “நான் செய்கிற எல்லாவற்றையும் உனக்கு அர்ப்பணிக்கிறேன்” என்னும் போது, நல்ல காரியங்களை நேர்மையாகச் செய்து அதை அர்ப்பணிக்க வேண்டும்.

அதனால், ஒரு குறிக்கோளை வைத்துக் கொண்டு, குறுக்கு வழியில் அதை அடைய முயற்சி செய்யாமல், ஒரு நல்ல பாதையில், நாம் வாங்கும் சம்பளத்திற்கு நியாயமாக ஒரு வேலை பார்த்துக் கொண்டு, மனதைத் தெளிவாக வைத்துக் கொண்டிருந்தால் தான், நம்மால் பக்தியைப் புரிந்து

கொள்ள முடியும். அது தான் முதல் படி, என்ற அளவில் நான் இந்த ஸ்லோகத்தைப் புரிந்து கொள்கிறேன்.

‘மா பலேஷு கதாசன’ என்பதற்கு ராமாயணத்தில் ஒரு சிறந்த உதாரணம் இருக்கிறது. ஸ்ரீராமர் தன் தந்தை தசரதருக்கு உதவியாக ராஜ காரியங்கள் எல்லாம் பார்த்து வந்தார். அதனால் மக்கள் எல்லாரும் அவரிடம் மிகவும் திருப்தியாக இருந்தார்கள். “இந்த ராமனை யுவராஜாவாக பட்டாபிஷேகம் பண்ணட்டுமா?” என்று தசரதர் சபையில் கேட்டபோது, அந்த மண்டபமே அதிரும்படி கரகோஷம் செய்து எல்லாரும், “அவசியம் பண்ணுங்கள், ராமனுக்கு முடி சூட்டுங்கள்!” என்கிறார்கள். இது முதல் நாள் நடந்த கதை.

மறுநாள் காலையில் கைகேயி கூப்பிட்டு, “உனக்கு பட்டாபிஷேகம் இல்லை, வனவாசம்!” என்று சொன்ன போது லக்ஷ்மண ஸ்வாமிக்குக் கோபம் வருகிறது. ஆனால் கைகேயியின் அரண்மனையில் அவன் ஒன்றும் சொல்லவில்லை; ராமருடைய அரண்மனைக்கு வந்தவுடன், கைகேயியிடம் தனக்குள்ள கோபத்தை வெளிப்படுத்துகிறான். அப்பொழுது ராமர் லக்ஷ்மணனை அமைதிப்படுத்திச் சொல்கிறார்:

“ஹே லக்ஷ்மணா, நேற்று வரைக்கும், அந்த கைகேயி அம்மா என்னிடம் எவ்வளவு பிரியமாக இருந்தாள்! நானும் அவளுக்கு அவ்வளவு அன்பாக சுஷ்ரூஷை செய்து கொண்டிருந்தேன். அவ்வளவு நல்லவளான கைகேயி, தன் கணவன் முன்னால் என்னைப் பார்த்து இவ்வளவு கடுமையான வார்த்தைகளைப் பேசுகிறாள், அவளுடைய மனது இப்படி மாறி விட்டது என்றால்… நாம் ஒரு திட்டம் போடும்போது, அகஸ்மாத்தாக வேறொன்று நடந்தால் அது விதியின் செயல் (தெய்வ ஸங்கல்பம்). அதை நம்மால் மாற்றவே முடியாது, ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும்.”

நாம் எவ்வளவு தான் திட்டமிட்டு, நம்முடைய முழு உழைப்பை போட்டாலும், விதி அதை அப்படியே புரட்டிப் போடும் போது, அதை அமைதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். எப்படியாவது ராஜ்யத்தை அடைய வேண்டும் என்று ராமர் நினைத்திருந்தால், அவருக்குப் பின்னால் அயோத்தி மக்கள் ஆதரவு முழுமையாக இருந்தது; தசரதரே கூட, “என்னை ஜெயிலில் போட்டு விட்டு நீ ராஜ்யத்தை எடுத்துக் கொள்” என்று நேரடியாகவே சொல்கிறார். ஆனால் ராமர், “ஒரு நாளும் நான் அதைச் செய்ய மாட்டேன் அப்பா, நீங்கள் ஸத்யசந்தராக வேண்டும்” என்றார்.

இப்படி பல இக்கட்டான சூழ்நிலைகளிலும், ராமர் சௌகர்யமான பாதையைத் தேர்ந்து எடுக்காமல், தர்மத்தின்படி வாழ்ந்து காட்டி இருக்கிறார். அதைத் தான் க்ருஷ்ணர் பகவத் கீதையில் 'ஸ்திதப்ரஜ்ஞன்' என்று சொல்லி, கர்ம யோகமாக விளக்குகிறார் என்று தோன்றுகிறது.

### தூய்மை பிறப்பால் வருவதல்ல

91வது தசகம் 2வது ஶ்லோகத்தின் இரண்டாவது வரியில், பிரஹ்லாத சரித்ரத்தில் இருந்து ஒரு விஷயத்தை பட்டத்ரி எடுத்துச் சொல்கிறார். **ஜாத்யாபீஹ ஶ்வபாக:, த்வயி நிஹித மந:கர்மவாகி³ந்த்³ரியார்த²ப்ராண:, விஶ்வம் புநீதே** சமுதாயத்தில் கீழ் நிலையில் பிறந்தவனாக இருந்தாலும், யார் ஒருவன் "தன்னுடைய மனது, கர்மா, வாக்கு, இந்திரியங்கள் மூலம் செய்கிற எல்லாவற்றையும் உனக்கு அர்ப்பணிக்கிறானோ, அவன் உலகத்தையே தூய்மைப் படுத்துகிறான்". **ந து விமுக²மநா: த்வத்பதா³த்** உன்னிடத்தில் பக்தி இல்லாதவன், **விப்ரவர்ய:** சிறந்த ப்ராஹ்மணனாக இருந்தாலும், அவனால் உலகத்தைத் தூய்மைப் படுத்த முடியாது.

நந்தனாரைப் போல, திருப்பாணாழ்வாரைப் போல மகான்கள் இருந்தார்கள் அல்லவா? அவர்களுடைய சரித்ரத்தை இன்றைக்கும் நாம் தூய்மை அடைய, படிக்கிறோம் அல்லவா?

ஸ்வாமிகளிடம் ஒரு நாவிதர் வருவார். அவர் முன் உட்கார்ந்து கொண்டு, "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவுவேண்டும்" போன்ற சில பாடல்களை எல்லாம் சொல்வார். ஸ்வாமிகள், வெற்றிலை பாக்குடன் பத்தோ, இருபதோ ரூபாய்கள் வைத்துக் கொடுப்பார். அவர் அதை நமஸ்காரம் செய்து, வாங்கிக் கொண்டு போவார். ஸ்வாமிகள் ஸந்நியாசம் வாங்கிக் கொண்ட பிறகும் அவர் வருவதுண்டு. ஒரு தடவை ஸ்வாமிகள் என்னிடம் சொல்கிறார், "நான் இவரை நமஸ்காரம் செய்ய வேண்டும் என்று நினைப்பேன், ஆனால் அவர் பயந்து விடுவார், அதனால் தான் செய்வதில்லை" என்றார். எனக்கு "அப்பப்பா! என்ன ஒரு மனப் பக்குவம் இவருக்கு! அந்த நாவிதரிடம் பக்தி இருக்கிறது; அதனால் அவர் புனிதமானவர்" என்ற ஸ்வாமிகளுடைய ஆழ்ந்த நம்பிக்கை ஆச்சரியமாக இருந்தது!

இதில் எனக்கு ஒரு ஆறுதல் என்னவென்றால், நான் பிராஹ்மண குலத்தில் பிறந்திருந்தாலும், ஸ்வதர்மத்தை பின்பற்றத் தேவையான படிப்பும்

இல்லை, அதை உண்மையாக அனுஷ்டித்து அதில் வரக்கூடிய குறைச்சலான பணத்தில் வாழும் அளவுக்கு வைராக்கியமும் இல்லை. ஆங்கிலப் படிப்பால் மேலை நாகரீகத்தின் மேல் ஒரு கவர்ச்சியும், புதுயுகத்தின் விக்ஞான சாதனங்களில் மிகுந்த ஆர்வமும், பணத்தில் பற்றும், நிறைய இருக்கிறது. இப்படி குலத்திற்கேற்ற குணங்கள் எல்லாம் இல்லை என்றாலும் கூட, நம்பிக்கையோடு ஸ்தோத்திரங்களையும், பகவன் நாமத்தையும் சொல்லிக் கொண்டிருந்தாலே ஸ்வாமிகளின் மனத்தில் இடம் பிடிக்கலாம் என்ற எண்ணம் ஒன்றே, பக்தி மார்க்கத்தில் தொடர்ந்து செல்ல எனக்கு ஒரு ஊன்றுகோலாக இருந்து வருகிறது.

**பயம் ஏற்பட காரணம் என்ன?**

நாராயணீயம் 91வது தசகம், மூன்றாவது ஶ்லோகம்:

**भीतिर्नाम द्वितीयाद्भवति, ननु मनःकल्पितं च द्वितीयं,**
**तेन, ऐक्याभ्यासशीलो, हृदयमिह यथाशक्ति बुद्ध्या निरुन्ध्याम् ।**
**मायाविद्धे तु तस्मिन् पुनरपि, न तथा भाति, मायाधिनाथं,**
**तत् त्वां भक्त्या महत्या, सततमनुभजन्, ईश, भीतिं विजह्याम् ॥**

**பீ⁴திர்நாம த்³விதீயாத்³ப⁴வதி** பயம் போவதற்காக இந்த பாகவத தர்மம் என்று சொன்னார் அல்லவா? அடுத்தது, பயம் என்றால் என்ன என்பதைப் பற்றிச் சொல்கிறார். 'பீதி' என்பது எங்கே வருகிறது? இரண்டாவது ஒன்று இருக்கிறது என்று நாம் நினைப்பதனால் தான் பயம் வருகிறது. இது உபநிஷத்தில் இருக்கிற ஒரு உபதேசம். **நநு மந:கல்பிதம் ச த்³விதீயம்** இந்த உலகத்தில் நம்மைத் தவிர, ஆத்மாவைத் தவிர இரண்டாவது ஒரு வஸ்து இருக்கிறது என்பதே மந:கல்பிதம் - மனது தான் அதை எல்லாம் கற்பனை செய்கிறது. தூங்கும் போது எதுவும் தெரிவதில்லை; எழுந்தவுடனேயே அவனிடம் பயம், இவனிடம் கோபம் எல்லாம் வந்து விடுகிறது. **தேந ஐக்யாப்⁴யாஸஶீலோ ஹ்ரு'த³யமிஹ யதா²ஶக்தி பு³த்³த்⁴யா நிருந்த்⁴யாம்** புத்தியினால் முடிந்த வரைக்கும் அந்த மனதைக் கட்டுப்படுத்தி, இரண்டாவது ஒன்றும் இல்லை என்பதைப் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்கிறேன். ஆனால் ஆத்மாவை இரண்டாவதாக எது காட்டுகிறது என்றால், உன்னுடைய மாயை தான்.
**மாயாவித்³தே⁴ து தஸ்மின் புநரபி ந ததா² பா⁴தி** மாயையினால் மறைக்கப்பட்ட மனதில், இந்த உண்மை விளங்குவதில்லை. புத்தியில்

ஒரு தகவலாக, அறிவாக வருகிறதே தவிர, காரியத்தில் இது எனக்கு வரமாட்டேன் என்கிறது.
ஆனால் **மாயாதி⁴நாத²ம்** மாயைக்கு அதிபதியானவனே! "தை³வீ ஹ்யேஷா கு³ணமயீ மம மாயா து³ரத்யயா। மாமேவ யே ப்ரபத்³யந்தே மாயாமேதாம் தரந்தி தே॥" என்று கீதையில் பகவான் சொல்கிறான் அல்லவா, அந்த மாதிரி இந்த மாயையை அவ்வளவு சுலபமாகத் தாண்ட முடியாது. 'என்னை யார் சரண் அடைகிறார்களோ, அவர்களால் தான் தாண்ட முடியும்' என்கிறார் பகவான். **தத் த்வாம் ப⁴க்த்யா மஹத்யா ஸததமநுப⁴ஜன் ஈஶ பீ⁴திம் விஜஹ்யாம்** 'க்ருஷ்ணா, உன்னிடத்தில் செலுத்தும் தீவிரமான பக்தி மூலமாகவே மாயையை தாண்டி, இந்த பயத்தைப் போக்கிக் கொள்வேன்' என்கிறார் பட்டத்ரி.

இதற்கு ஸ்வாமிகள் அழகான ஒரு உதாரணம் சொல்வார். ஒரு ஜால வித்தைக்காரன் ஒரு பாம்பு போன்ற ஒரு தோற்றத்தைக் காட்டுகிறான்; அதைப் பார்க்கிற நமக்கெல்லாம் நடுங்குகிறது, ஆனால் அந்த வித்தைக்காரனுடைய பையன் பக்கத்தில் இருந்து பார்த்தபடி, சிரித்துக் கொண்டிருக்கிறான். ஏனென்றால், அவனுடைய அப்பா அவனுக்கு எப்படி அந்த வித்தையைச் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொடுத்திருக்கிறார்; அவனுக்கு அது வெறும் தோற்றம் தான் என்று தெரிகிறது. அது போல, மாயையால் பகவான் இந்த உலகம் என்கிற தோற்றத்தை நமக்குக் காட்டுகிறார். நாம் அதனால் தான் இதில் அழுகிறோம், சிரிக்கிறோம். அந்த வித்தைக் காரனுடைய அனுக்ரஹம் இருந்து விட்டால் - அதாவது அந்த பகவானுடைய அனுக்ரஹம் இருந்து விட்டால் - அந்தப் பையன் எப்படித் துக்கமில்லாமல், பயமில்லாமல் இருக்கிறானோ, அது போல நாமும் பயமில்லாமல் இருக்கலாம். அப்படி தீவிரமாகப் பக்தி செய்து நாம் எல்லா பயங்களில் இருந்தும் அடியோடு மீளலாம் என்று சொல்கிறார்.

தற்காலத்தில் ஜனங்கள் ஏதாவது கஷ்டம் வரும் போது, இந்த கஷ்டம் மேலும் பெரிதாகி ஆபத்தில் முடியுமோ என்று பயப்படுகிறார்கள். ஆறுதலுக்கு 'வினைகளைப் போக்குவேன்' என்று விளம்பரம் செய்யும் புனிதப் போலிகளை நாடுகிறார்கள். ஆனால் அந்த ஏமாற்றுப் பேர்வழிகள், இவர்களுடைய பயத்தைப் பெரிது படுத்தி, மிகுந்த செலவு பிடிக்கும் பரிகாரங்களைப் பரிந்துரைக்கிறார்கள். அப்படி போகாமல் பகவானிடத்தில் நம்பிக்கை வைத்து பஜனம் செய்தாலே அந்த பயம்

போகும், கஷ்டம் விலகும் என்பதை ஸ்வாமிகள் பாகவதத்தில் வரும் ஒரு கதையின் மூலம் எடுத்துச் சொல்வார்.

பிரம்மா, கிருஷ்ணனை பரிசோதிப்பதற்காக கன்றுகளை மாயையால் மறைக்கிறார். கிருஷ்ணனும் அந்த லீலையை தொடர விரும்பி, கன்றுகளைத் தேடுவது போல விலகிச் செல்கிறான். உடனே ப்ரம்மா கோபச் சிறுவர்களையும் மறைக்கிறார். ஆனால் கிருஷ்ண பகவான் தானே அத்தனை கோபச் சிறுவர்களாகவும், அத்தனை கன்றுகளாகவும், ஊது கொம்பாகவும், கயிறாகவும், இப்படி தானே எல்லாமாக ஆகி, மாலையில் கோகுலம் திரும்புகிறார். கோபிகைகள் ஒரு வருட காலம் பகவானையே தன் குழந்தையாக நினைத்து குளிப்பாட்டி, அலங்கரித்து, சாதம் ஊட்டி, பசுக்களும் அவனை தன் கன்றாக நினைத்து அவனுக்கு பாலூட்டி, தாங்கள் அறியாமல், ப்ரம்ம ஸ்பர்சத்தையே அடைந்து விடுகிறார்கள்.

ஸ்வாமிகள் “பிரம்மா அந்த கோபிகைகளும் பசுக்களும் ஒரு வருடம் தங்கள் குழந்தைகளைப் பிரிந்து தவிக்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால், அதற்கு மாறாக அவர்கள் கிருஷ்ணனையே தங்கள் குழந்தையாக அனுபவித்தார்கள். அது போல, பகவானுடைய பக்தர்களுக்கு ‘அடுத்து ஒரு கஷ்டம் வரும்!’ என்று, ப்ரம்மா தலையில் எழுதியதை ஜோசியர் பார்த்து சொன்னாலும், அவர்கள் தீவிர பஜனத்தின் மூலம், அந்த கஷ்டத்தில் இருந்து தப்புவதோடு மட்டுமல்லாமல், மேலான ஆனந்தத்தையும் அடைவார்கள்” என்று சொல்வார்.

வாழ்க்கைத் தவிப்பு என்கிற பவபயம் பகவானுடைய பாதங்களைப் பற்றிக் கொண்டால் போய் விடும் என்பதை அருணகிரிநாதர் ‘அந்தோ மனமே’ என தொடங்கும் ஒரு திருப்புகழில் மிக அழகாகச் சொல்லி இருக்கிறார்.

அந்தோமனமே நமதாக்கையை நம்பாதெ இதாகித சூத்திரம்
அம்போருகனாடிய பூட்டிது ...... இனிமேல் நாம்
அஞ்சாதமையா கிரியாக்கையை பஞ்சாடிய வேலவனார்க்கியல்
அங்காகுவம் வா இனி தாக்கையை ...... ஒழியாமல்
வந்தோமிதுவேகதி யாட்சியும் இந்தாமயில் வாகனர் சீட்டிது
வந்தாளுவம் நாமென வீக்கிய ...... சிவநீறும்
வந்தே வெகுவா நமையாட்கொளுவந்தார் மதமேதினி மேற்கொள
மைந்தா குமராவெனுமார்ப்புய ...... மறவாதே

ஏ மனமே! இந்த உடம்பு ரொம்ப நாளைக்கு நிலைத்திருக்கும், இதைக் கொண்டு நாம் சந்தோஷப் படலாம் என்று நம்பி மோசம் போய்விடாதே. ‘இதம் அகிதம்’ அதாவது இன்பம், துன்பம் இரண்டையும் அனுபவிப்பதற்காக, பிரம்மா உன்னை இந்த உடம்பு என்கிற சிறைக்குள் பூட்டிப் போட்டிருக்கிறான். நீ இதிலிருந்து தப்பிக்க முடியாது. இதற்கு ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களை எல்லாம் அனுபவித்துத் தான் தீர்க்க வேண்டும். (நம்முடைய பூர்வ வினைகளை அனுபவிப்பதற்காகக் கிடைத்த ஒரு ஜெயில் தண்டனை இது என்கிறார். இது தான் பவபயத்திற்கு மூல காரணம்.) இது தவிர, வயதாகி விட்டதே, இந்த உடம்பு எப்போது போய் விடுமோ என்கிற பயமும் வந்து விடும்.

கிரௌஞ்ச மலையைப் பஞ்சு போலத் தூளாக்கிய வேலாயுதக் கடவுளுக்கு, நீங்காத அன்பு உடையவர்களாக ஆகலாம் வா! இது தான் இன்பநெறி, உடம்பை வீணாக ஒழித்துவிடாமல் பகவானிடம் வந்து விட்டோம். இது தான் மோக்ஷ நெறி. ஆன்றோர்களின் மேலான வாக்கு இது தான், அதனால் இதைக் கேட்டுக் கொள். இது மயில்வாகனன் முருகன் நமக்குக் கொடுத்த அனுமதிச் சீட்டு! உன்னை வந்து நாம் சீக்கிரமே ஆட்கொள்வோம் என்று முருகன் நமக்காக அனுப்பியிருக்கிற மங்களகரமான திருநீறு (விபூதி) இருக்கிறது, அதையும் வாங்கிக் கொள்.

முருகபெருமான் நம்மை ஆட்கொள்ள காத்துக் கொண்டிருக்கிறார். இதற்கு மேல் நமக்கு வேறு என்ன காரியம் இருக்கிறது? சிவமைந்தா! குமரக் கடவுளே! என்று உரக்க அழைப்பதை மறந்துவிடாதே, தினமும் அவருடைய திருப்புகழைப் பாடு.

பாகவத தர்மத்தின் ஸாரத்தையே அருணகிரிநாதர் இந்த பாட்டில் சொல்லி இருக்கிறார் என்று தோன்றுகிறது.

**ஸத்ஸங்கம், ஸத்கதா ச்ரவணம்**

நாராயணீயம் 91வது தசகம், 4வது ஸ்லோகம்

**भक्तेः उत्पत्तिवृद्धी, तव चरणजुषां सङ्गमेनैव पुंसां ,**
**आसाद्ये पुण्यभाजां, श्रिय इव जगति, श्रीमतां सङ्गमेन ।**
**तत्सङ्गो देव, भूयान्मम खलु सततं, तन्मुखात् उन्मिषद्भिः,**
**त्वन्माहात्म्यप्रकारैः भवति च सुदृढा, भक्तिः उद्धूतपापा ॥**

**ப4க்தே: உத்பத்திவ்ருʼத்3தீ4, தவ சரணஜுஷாம் ஸங்க3மேநைவ பும்ஸாம்** உலகத்தில் புண்ணியம் செய்தவர்களுக்கு, பக்தி ஏற்படுவதற்கும், ஏற்பட்ட பக்தி வளர்வதற்கும் உன்னுடைய பாதத்தில் மனதை எப்பொழுதும் வைத்திருக்கும் உத்தம பக்தர்களுடைய ஸங்கம் தான் சிறந்த வழி. **ஆஸாத்3யே புண்யபா4ஜாம், ஶ்ரிய இவ ஜக3தி, ஶ்ரீமதாம் ஸங்க3மேந** செல்வந்தர்களோடு சேரும் போது எப்படிச் செல்வம் எளிதாக சேருமோ, அதுபோல பக்தர்களோடு சேர்ந்தால் நமக்கும் பக்தி ஏற்படும், வளரும்" என்கிறார் பட்டத்ரி.

செல்வந்தர்களோடு சேருபவர்களுக்கு செல்வம் வரும் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்லலாம். இந்த காலத்தில், இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்தி தன் நிறுவன டிரைவர், வேலைக்காரர்களுக்கு எல்லாம் கூட நிறுவனத்தின் பங்குகளை கொடுத்தார், அவர்களெல்லாம் கோடீஸ்வரர்கள் ஆனார்கள் என்றெல்லாம் சொல்வார்களே! அது போல, பணக்காரர்களோடு பழகுபவர்களுக்கு எப்படி பணம் வருமோ, அது போல உத்தம பக்தர்களோடு நாம் பழகிக் கொண்டே இருந்தால் நமக்கும் பக்தி வரும். **தத்ஸங்கோ3 தே3வ, பூ4யாந்மம க2லு ஸததம்** அப்படிப்பட்ட உத்தம பக்தர்களுடைய ஸங்கம் எனக்கு எப்பொழுதும் கிடைக்க வேண்டும். **தந்முகா2த், உந்மிஷத்3பி4:** அவர்களுடைய முகத்திலிருந்து வெளிவரும் **த்வந்மாஹாத்ம்ய ப்ரகாரை:** உன்னுடைய அவதார லீலைகளையும் மகாத்மியத்தையும் அடிக்கடி கேட்டு, **ப4வதி ச ஸுத்3ருʼடா4, ப4க்தி:, உத்3தூ4தபாபா** திடமான பக்தி எனக்கு ஏற்படும்; அதனால் என்னுடைய பாபங்கள் எல்லாம் விலகிவிடும்..

நான் என் 20 வயதில் முதன் முதலில் மஹா பெரியவாளோட குரலைக் கேட்டேன். அப்பொழுது தான் பெரியவாளோட குரலை டேப்பில் ரிலீஸ் செய்திருந்தார்கள். அதில் "ஶிவ ஶிவ பஶ்யந்தி ஸமம்" என்ற மூக பஞ்சஶதீ ஶ்லோகத்தைக் கொண்டு காமாக்ஷியினுடைய கடாக்ஷத்தைப் பெற்றதற்கு அடையாளம் என்ன என்று விளக்கியிருந்தார். அந்த அம்ருத வாக்கு என் வாழ்க்கையின் போக்கையே மாற்றி விட்டது.

இன்னொன்று, மஹாபாரதத்தைப் பற்றிய மஹா பெரியவாளோட ஒரு உபன்யாசம். அதைக் கேட்டு நான் ரொம்ப ஆனந்தப் பட்டேன். அந்த குரலும், அவர் ஶ்லோகம் சொல்லும் விதமும், அதை விளக்கும் பாணியும், ஏதோ சாதாரணமாகப் பேசுவது போல இருக்கும். ஆனால், அது அவ்வளவு

அழகாக மனதில் பதிந்துவிடும். இந்த ஒரு ஸ்லோகத்தை ஒரு முறை அவர் வாக்கால் கேட்டது அப்படியே மனதுக்குள் பதிந்துவிட்டது.

“ஜயதி பராஶரஸூநு: ஸத்யவதீ-ஹ்ரு’த³யநந்த³நோ வ்யாஸ: ।
யஸ்ய ஆஸ்ய-கமலக³ளிதம்’ வாங்மயமம்ரு’தம் ஜக³த்பிப³தி ॥”
“எவருடைய முகமாகிய தாமரையிலிருந்து வெளிப்பட்ட வாக்கு என்ற அமிர்தத்தை இந்த உலகமே விரும்பி பருகுகிறதோ, அந்த பராசரருடைய பிள்ளையும், ஸத்யவதியின் மனத்தைச் சந்தோஷப் படுத்துபவருமான, வியாச பகவானுக்கு ஜயம் உண்டாகட்டும்!” என்பது மஹாபாரதத்தைப் பற்றிய ஸ்லோகம். இது எங்கேயோ கம்போடியாவில் ஒரு கல்வெட்டில் இருந்ததாகப் பெரியவா குறிப்பிட்டார்கள். பாரதம், ராமாயணம் எல்லாம் உபன்யாசம் செய்வதற்காகவே ‘கங்கை கொண்டான் மண்டபம்’ என்று ஒவ்வொரு ஊரிலும் இடங்கள் இருந்திருக்கின்றன; பல்லவ மன்னர்கள் அங்கே உபன்யாசம் நடத்த, மான்யங்கள் விட்டிருந்தார்கள். இந்த ராமாயணத்தையும், பாரதத்தையும் மக்கள் அடிக்கடி கேட்டுக் கொண்டே இருந்ததால், “நாமும் இப்படி தர்ம வழியில் இருக்க வேண்டும்!” என்கிற எண்ணம் வந்து, எல்லாரும் நல்லவர்களாக இருந்தார்கள்.

நாமும் அதையெல்லாம் அடிக்கடி கேட்க வேண்டும். தானத்துக்கு கர்ணன், தர்மத்துக்கு யுதிஷ்டிரன், கண்ணியத்துக்கு அர்ஜுனன் என்று சொல்லும் போது எனக்கு, “ஆஹா! ‘கண்ணியத்துக்கு அர்ஜுனன்’ என்று பெரியவா சொல்கிறார்களே என்று ஆச்சரியமாக இருந்தது”. பொதுவாக அர்ஜுன், திரௌபதி, சுபத்திரை, உலுபி என்று பலரை மணந்த காதல் இளவரசன் என்று தானே நாம் அறிவோம்? பெரியவா, அவன் இந்த்ர லோகத்தில் ஊர்வசி, அவனிடதில் ஆசையோடு வந்த போது, ‘நீ என் தாய் போன்றவள்’ என்று கூறி மறுத்ததை வைத்து, கண்ணியத்துக்கு அர்ஜுனன் என்கிறார். அதனால் தான், பாகவத, ராமாயண, மகாபாரதத்துக்கு சாஸ்த்ர அர்த்தங்களைக் கேட்டால் தான் சரியான பாடங்களை நாம் கற்றுக் கொள்ள முடியும் என்று எனக்குத் தோன்றியது.

கடைசியில் பெரியவா அந்த உபன்யாசத்தில் என்ன சொல்கிறார் என்றால், “அதனால நாம ஒருத்தரும் பொய்யே பேசக் கூடாது, லஞ்சமே வாங்கக் கூடாது” என்கிறார். வியாசரின் ஸ்லோகத்தில் தொடங்கி, இன்றைய காலகட்டத்திற்குத் தேவையான ஒரு உபதேசத்தில் கொண்டு வந்து முடித்தது ரொம்ப ஆச்சரியமாக இருந்தது.

அப்படி, அந்த வியாசருடைய முகத்திலிருந்து வெளிவரும் அமிர்த வாக்கு என்று சொல்கிறார் அல்லவா, அது போல மகான்கள் முகத்திலிருந்து வெளிவரும் பகவானுடைய மாஹாத்மியத்தைக் கேட்டால் நமக்கு பக்தி ஏற்படும், அது வளரும்.

நம் ஸ்வாமிகள், அவராகவே ஆயிரக்கணக்கான ஶ்லோகங்களைச் சொல்லிப் ப்ரவசனம் பண்ணக் கூடிய திறமை கொண்டவர். அப்படி இருந்தும், தேடித் தேடிப் போய் மற்ற பெரியவர்களுடைய உபன்யாஸங்களை எல்லாம் கேட்பார். அனந்தராம தீக்ஷிதருடைய ராமாயணம், மாயவரம் பெரியவாளோட பாகவதம் நிறைய கேட்பார். குருவாயூரிலிருந்து வரும் ஆஞ்ஜன் நம்பூதிரி, க்ருஷ்ணன் நம்பூதிரி பாகவத உபன்யாஸத்தை கேட்பார். அவர்கள் வருடத்திற்கு ஒருமுறை சென்னைக்கு வருவார்கள். அவர்கள் குடும்பத்தில் ஆயிரம் ஆவர்த்தி பாகவதம் பாராயணம் செய்த பின்னர் தான், வெளியே ப்ரவசனம் செய்வதற்கு அனுமதிப்பார்களாம்! அப்படி ஒரு தபஸ். அவர்களின் முறை என்னவென்றால், காலையில் ஆறு மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை உபன்யாசம் நடக்கும். அண்ணா 50 ஶ்லோகம் படிப்பார்; தம்பி அதற்கு மலையாளத்தில் அர்த்தம் சொல்வார். தம்பி படித்தால் அண்ணா சொல்வார். இப்படி 18,000 ஶ்லோகங்களையும் அந்த ஏழு நாட்களில் படித்து முடித்து விடுவார்கள். இது ஸ்வாமிகளுக்கு ரொம்பவும் பிடிக்கும். உடம்பு சிரமத்தை எல்லாம் பார்க்காமல், 35 வருடங்கள் சாய் சமாஜத்திற்குப் போய் இந்த ஆஞ்ஜன் நம்பூதிரி அவர்களின் பாகவத உபன்யாசத்தைக் கேட்டிருக்கிறார். “அங்கே நானும் ப்ரவசனம் செய்கிறேன்; நீங்கள் வந்து கேட்டு அனுக்ரஹம் செய்ய வேண்டும்” என்று ஶ்ரீ சுந்தர்குமார் அண்ணா கேட்டுக் கொண்ட போது, அவருடைய பாகவதத்திற்கும் ஸ்வாமிகள் நேரில் போய்க் கேட்டிருக்கிறார்.

அதே போல சம்பிரதாய ஹரி பஜனையில் ஸ்வாமிகளுக்கு ரொம்பவும் ப்ரியம். புதுக்கோட்டை கோபாலக்ருஷ்ண பாகவதர் என்று ஒரு மஹான்; அவர் வருடத்தின் 365 நாளும் பஜனை செய்வாராம்! அவரை யாரும் அழைக்க வேண்டியதில்லை. அழைத்தால் அவர்கள் க்ருஹத்தில் போய் செய்வார், இல்லையென்றால் தான் எங்கே இருக்கிறாரோ அங்கே மாலையில் பஜனையை ஆரம்பித்துவிடுவார். ஸ்வாமிகள் அவருடைய பஜனையை நிறைய கேட்டிருக்கிறார்.

அதுபோல சிதலபதி சௌந்தரராஜ பாகவதர் – அவர் பின்னாளில் ஸ்வாமிகளுக்கு மாப்பிள்ளையாக ஆனார். 50, 60 வருடங்கள் தொடர்ந்து ஹரி பஜனை செய்து வந்தவர். அவருக்குக் கண் பார்வை குறைவாக இருந்தது. ஆனால், ஜயதேவரின் 24 அஷ்டபதிகளையும், அதில் வரும் எல்லா ஶ்லோகங்களோடு, அக்ஷர சுத்தமாக, அழகான ராகங்களில் பாடுவார். ஐந்து மணி நேரம் பாடுவார்! இதை ஸ்வாமிகள் நிறைய தடவை விரும்பிக் கேட்டிருக்கிறார்.

அதே போல வள்ளிமலை ஸ்வாமிகளுடைய சீடர்களான சாதுராம் ஸ்வாமிகள், எஸ். வி. சுப்பிரமணியம் ஆகியோரைத் தன் க்ருஹத்திற்கே வரவழைத்து, அவர்கள் 'வள்ளி கல்யாணம்' என்ற தலைப்பில் ஒரு ஐந்து, ஆறு மணி நேரம் திருப்புகழ் பாடல்களைக் கொண்டே உபன்யாசம் செய்வார்கள், அதை விரும்பிக் கேட்பார். அப்படி பகவத் விஷயங்களைக் கேட்பதும் அவ்வளவு முக்கியம்.

நாம் இந்த காலத்தில் மஹா பெரியவாளோட வாக்கை, ஸ்வாமிகள் வாக்கை, அடிக்கடி கேட்கலாம். மற்றதில் எது உண்மையான ஸத்ஸங்கம் என்று ரொம்பவும் பகுத்தறிந்து, எதன் மூலமாக நமக்கு பக்தி வளர்கிறதோ, அந்த மாதிரி விஷயங்களில் மனதை வைத்துத் தொடர்ந்து கேட்கலாம். மூக பஞ்சஶதீ, நாராயணீயம், ஆதி சங்கரர் ஸ்தோத்ரங்கள், தேவாரம், திருவாசகம், திருப்புகழ், நாலாயிர திவ்ய ப்ரபந்தம் போன்ற சாசுவதமான புண்ணிய கீர்த்தியைக் கொண்ட மகான்களுடைய அருள் வாக்கை பாராயணம் செய்வதும் ஸத்ஸங்கம் தான்.

**பகவானை அடைய பக்தியே சிறந்த வழி**

அடுத்து நாராயணீயம் 91வது தசகம், 5வது ஶ்லோகம்

**श्रेयोमार्गेषु भक्तौ अधिकबहुमतिः, जन्मकर्माणि भूयो**
**गायन्, क्षेमाणि नामान्यपि तदुभयतः, प्रद्रुतं प्रद्रुतात्मा ।**
**उद्यद्धासः कदाचित्, कुहचिदपि रुदन्, क्वापि गर्जन्, प्रगायन्,**
**उन्मादीव प्रनृत्यन्, अयि कुरु करुणां, लोकबाह्यश्चरेयम् ॥**

**ஶ்ரேயோமார்கே³ஷு ப⁴க்தௌ அதி⁴கப³ஹுமதி:** ஶ்ரேயஸை, அதாவது ஆன்மீக உயர்வை, கொடுக்கக் கூடிய மார்க்கங்களில் பக்திக்குத் தான் மகான்கள் அதிக ஏற்றம் கொடுக்கிறார்கள்.

ஏனென்றால், மற்ற மார்க்கங்களான கர்மா, ஞானம், யோகம் இதையெல்லாம் பழகும் போது, அதில் இரண்டு சிக்கல்கள் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஒன்று ‘ஹிப்பாக்ரஸி’ (hypocrisy) என்கிற போலித்தனம், இன்னொன்று ‘ஹோலியர்-தன்-தௌ ஆட்டிடியூட்’ (holier-than-thou attitude) - நான் தான் எல்லாரையும் விட தூய்மைமானவன் என்கிற தலைக்கனம்.

நாம் ஏதாவது ஒரு நியமத்தைச் செய்கிறோம் என்றால், “இந்த காலத்தில் யாருமே இதைச் செய்வதில்லை, நாம் இதைச் செய்து கொண்டிருக்கிறோம்” என்கிற அகந்தை வந்து விட்டால், மற்ற சாதுக்களைப் புண்படுத்துவது போலப் பேசி விடுவோம். அதனால் ஆன்மீக முன்னேற்றம் தடைபடும். அல்லது, கஷ்டமான நியமங்களை ஆரம்பித்து விட்டு, உண்மையாகச் செய்யாமலேயே செய்வது போல வெளியில் காட்டிக் கொள்வதும் உண்டு.

பக்தி மார்க்கத்திலும் அந்தத் தவற்றைச் செய்வதற்கு நிறைய வாய்ப்பிருக்கிறது. மற்ற மார்க்கங்களிலாவது, “நான் ஸஹஸ்ர காயத்ரி செய்கிறேன்” என்று சொன்னால், சும்மா பொய் சொல்ல முடியாது; ஒன்றரை மணி நேரம் ஒருவர் செய்கிறாரா என்று மற்றவர்கள் பார்ப்பார்கள் அல்லவா? “ஔபாஸநம் செய்கிறேன்” என்றால் அதைச் செய்கிறாரா இல்லையா என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால் பக்தியில், “நான் மனதுக்குள் பகவானை நினைத்துக் கொண்டிருக்கிறேன்” என்று சொன்னால் யாருக்குத் தெரியும்? அதனால் இதிலும் போலித்தனம் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. நாம் தான் நம்மிடம் நேர்மையாக (sincere ஆக) இருந்து கொள்ள வேண்டும். அதனால் தான், “பக்தி என்பது சுலபம், ஆனால் அது ஒன்றும் ‘ரோஜா மெத்தை’ (bed of roses) கிடையாது. ஞான மார்க்கத்தின் அளவுக்கு இதிலும் ரொம்ப உழைக்க வேண்டும்’ என்று ஸ்வாமிகள் சொல்லுவார். ஶ்ரீ சிவன் ஸார் இதற்கு ஒரு படி மேலே போய் "நேர்மையை விலக்கி பக்தியில் மூழ்குபவன் பாபி" என்றே கூறிவிட்டார்.

அப்படி இந்த பக்தி மார்க்கத்தில்: **ஜந்மகர்மாணி, பூ⁴யோ கா³யன்** பகவானுடைய அவதாரம், அவருடைய லீலைகள், ராமாயணம், பாகவதம், ஸ்காந்தம் போன்ற கதைகளை படித்துக் கொண்டும், **க்ஷேமாணி நாமாந்யபி** க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடிய பகவானுடைய நாமங்களைச் சொல்லிக் கொண்டும் இருக்க வேண்டும்.

**உத்³யத்³தா⁴ஸ: கதா³சித், குஹசித³பி ருத³ன், க்வாபி க³ர்ஜன், ப்ரகா³யன், உந்மாதீ³வ ப்ரந்ரு'த்யன், அயி குரு கருணாம், லோகபா³ஹ்யஸ்சரேயம்** “இப்படி பகவானுடைய கதைகளை பேசிக் கொண்டு, சில சமயம் சிரித்துக் கொண்டும், சில சமயம் அழுது கொண்டும், சில சமயம் உரக்கப் பாடிக் கொண்டும், கர்ஜனை செய்து கொண்டும், பைத்தியம் பிடித்தவன் போல ஆடிக் கொண்டும் உலகம் என்னை ‘இவன் பைத்தியம்’ என்று ஒதுக்கும்படியான ஒரு உன்னதமான பக்தி பரவச நிலையை எனக்கு அருள்வாய்” என்று குருவாயூரப்பனிடம் கேட்கிறார். இந்த சிரித்துக் கொண்டு, அழுது கொண்டும், ஆடிப் பாடிப் பரவசமடைவதற்கு ஸ்வாமிகள் சில உதாரணங்களைச் சொல்வார்.

க்ருஷ்ணன் ஒரு கோபியின் க்ருஹத்தில் போய் வெண்ணெய் சட்டிக்குள்ளே கையை விட்டுக் கொண்டிருந்தானாம். அந்த வீட்டு மாமி உள்ளே வந்துப் பார்த்து விட்டு, “கண்ணா! என்னடா செய்கிறாய் அங்கே?” என்று கேட்டாளாம்.

அதற்கு அந்தப் பாலகன், “எங்கள் வீட்டுக் கன்றுக்குட்டியைக் காணவில்லை மாமி; அம்மா அதைத் தேடிக் கொண்டு வரச் சொன்னாள், அதான் பார்க்கிறேன்” என்றானாம்.

மாமி சிரித்துக் கொண்டே, “ஏண்டா, வெண்ணெய் சட்டிக்குள்ளேயா கன்றுக்குட்டி இருக்கும்?” என்று கேட்டதற்கு,

“அது தான் இல்லை மாமி, நான் போகிறேன்” என்று நழுவப் பார்த்திருக்கிறான். மாமி அவனுடைய கையைப் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். “உன் அம்மா எப்போது சொன்னாலும், ‘நீ கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொண்டு வந்தால் தான் நம்புவேன்’ என்று சொல்லி இருக்கிறாள். வா, உன்னை இன்று அவளிடம் பிடித்துக் கொடுக்கிறேன்” என்று இழுத்தாள்.

க்ருஷ்ணன் உடனே பயந்தவன் போல நடித்து, “வேண்டாம் மாமி, எங்கள் அம்மா என்னை நையப் புடைப்பாள், விட்டு விடுங்கள் மாமி, விட்டு விடுங்கள் மாமி!” என்று கெஞ்சினான்.

“அதெல்லாம் முடியாது, வா வா, நீ இன்று மாட்டினாய்!” என்று பிடித்துக் கொண்டு போய் யசோதையின் முன்னால் நிறுத்தினாள். “யசோதே! வந்து பாரடி உன் அருமைப் பிள்ளையின் லீலையை!” என்று கூப்பிட்டாள்.

யசோதை வெளியே வந்து பார்த்துவிட்டுச் சிரிக்கிறாள். ஏன் தெரியுமா? அங்கே நின்ற க்ருஷ்ணன், அந்த மாமியின் சொந்தப் பிள்ளை போல காட்சி கொடுத்திருக்கிறான்! யசோதை, “என்னடி, உங்கள் வீட்டுப்

பிள்ளையை இப்படிப் பிடித்துக் கொண்டு வந்து திருடன் என்று சொல்கிறாயே!” என்றவுடன் சுற்றியிருந்தவர்கள் எல்லாரும் சிரிக்கிறார்கள்.

மாமி, “அய்யோ?!?” என்று பயந்து விட்டாள். பிள்ளையை அழைத்துக் கொண்டு தன் க்ருஹத்துக்கு வந்தால் கையில் க்ருஷ்ணன். திரும்ப யசோதையிடம் போகக் கிளம்பினாள். அப்பொழுது க்ருஷ்ணன், “மாமி, ஒரு தடவை விட்டேன். இந்தத் தடவை என்னை நீ பிடித்துக் கொண்டு போனால், உங்க ஆத்துக்காரர் மாதிரி காட்சி கொடுப்பேன்!” என்றானாம். உடனே அந்த மாமி பயந்து போய், “வேண்டாமடா கண்ணா, உனக்கு என்ன வேண்டுமோ கேளு, நானே தருகிறேன்!” என்றாளாம். இப்படி கண்ணனின் பால லீலைகளை ஸ்வாமிகள் சிரிக்கச் சிரிக்கச் சொல்வார்.

பகவானுடைய நாமங்களைச் சொல்லி, மெய்சிலிர்த்து, மனமுருகி, அழுது, தொழுவதைப் பற்றி அருணகிரிநாதர் நிறைய இடங்களில் சொல்கிறார்:

“முருக சரவண மகளிர் அறுவர்முலை நுகரும் அறுமுக
குமர சரணமென அருள்பாடி யாடிமிக மொழிகுழற”

“முருகனுடைய பாதங்கள் நனையும்படி அவன் நாமங்களை மொழி குழற, அழுது தொழுது உருகி, நீ கண்ணீர் விட்டால்”, முருகன், “வருகவென அறைகூவி ஆளுவதும்” – “உன்னை வா என்று கூப்பிட்டு ஆட்கொள்வான்” என்கிறார்.

“வாழியென நித்த மறவாது பரவிற் சரண வாரிஜமளிக்கும் உபகாரக்காரனும்” தினமும் அவனை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருந்தால், ‘வாழி’ என்றால் ‘ஜயது!’ (வெற்றி) என்று அர்த்தம்.

“ஜயானந்த$^3$பூ$^4$மன் ஜயாபாரதா$^4$மன்
ஜயாமோக$^4$கீர்தே ஜயானந்த$^3$மூர்தே |
ஜயானந்த$^3$ஸிந்தோ$^4$ ஜயாஶேஷப$^3$ந்தோ$^4$
ஜய த்வம்’ ஸதா$^3$ முக்திதா$^3$னேஶஸூனோ|| ” என்று அந்த ஸுப்ரமணிய புஜங்கத்தைச் சொல்லி, இந்த ஸ்லோகம் வரும்போது எழுந்து ஆடினோம் என்றால், ‘சரண வாரிஜமளிக்கும் உபகாரக்காரனும்’ என்றபடி, தன் பாத தாமரைகளையே உனக்கு கொடுத்து விடுவானே என்கிறார்.

“முடியா பிறவிக் கடலில் புகார் முழுதும் கெடுக்கும்
மிடியார் படியில் விதனப்படார் வெற்றிவேல் பெருமாள்

அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல்பவரே”

பகவானுடைய நாமங்களைச் சொல்லிக் கொண்டே இருந்தால், ‘முடியா பிறவிக் கடலில் புகார்’ – பிறவிப் பெருங்கடலில் விழ மாட்டார்கள், என்று இப்படி எவ்வளவு பலன்களைச் சொல்கிறார்!

“படிக்கின்றிலை பழநித் திருநாமம் படிப்பவர் தாள்
முடிக்கின்றிலை முருகா என்கிலை முசியாமலிட்டு
மிடிக்கின்றிலை பரமானந்தம் மேற்கொள்ள விம்மி விம்மி
நடிக்கின்றிலை... நெஞ்சமே தஞ்சம் ஏது நமக்கு இனியே?”

இங்கு ‘நடித்தல்’ என்றால் ஆடுவது என்று பொருள். “அப்படியே பரமானந்தம் மேலிட, என்னால் உட்கார முடியவில்லை என்று எழுந்து விம்மி விம்மி ஆடவில்லையே நீ!” என்கிறார். ‘உன்மாதீவ ப்ரந்ருத்யந்’ என்று பட்டத்ரி சொல்கிறார் அல்லவா, அந்த மாதிரி ஆட வேண்டும். இதையெல்லாம் ஒன்றும் செய்ய மாட்டேன் என்கிறாயே, “நெஞ்சமே தஞ்சமேது நமக்கு இனியே” என்று ஒரு எச்சரிக்கை போல அருணகிரிநாதர் சொல்கிறார். இதையெல்லாம் செய்தால் தான் நமக்கு பகவானுடைய தஞ்சம் கிடைக்கும் என்று பொருள்.

### பகவந்நாம மஹிமை

இந்த ‘க்ஷேமாணி நாமானி’ என்பதில் ஸ்வாமிகளுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. “இந்த காலத்தில் யந்த்ர, தந்த்ர, மந்த்ரம் எல்லாம் வேண்டாம்” என்பார். அவர் அதைச் சொன்னபோது ஆரம்பத்தில் நான் கொஞ்சம் சந்தேகப் பட்டேன். ஆனால், நம் சிவன் சார், தன் புத்தகத்தில் அந்த ஏணிப்படிகளைப் போட்டு, ‘பாமரன், விவேகி, சாது, தெய்வ சாது, தெய்வ விவேகி’ என்று விளக்கியிருந்த போது தான், அந்த ‘தெய்வ விவேகிகள்’ மட்டும் தான் தூய்மையான மந்திரங்களைக் கையாள முடியும் என்கிற உண்மை என் மனதில் பதிந்தது.

ஸ்வாமிகளுக்கு ஸ்ரீவித்யை முழுமையாக தெரியும். பற்றற்றவர்களுக்குத் தான் ஸ்ரீவித்யை போன்ற தூய மந்திரங்களை கையாளத் தகுதி இருக்கிறது என்பது புரிந்தது. ஆனால் அவரே, “அதெல்லாம் இருக்கட்டுமே, யாராவது படிக்கிறார்கள் என்றால் படிக்கட்டும், அவர்களெல்லாம் கொடுத்து வைத்தவர்கள்! நாம் மூக பஞ்சஶதீ படிப்போம்” என்று எனக்குச் சொல்லி விட்டார்.

நாம மஹிமையைப் பற்றிப் பெரியவா சொல்லும் போது, “யோகம், யாகம், பிராணாயாமம் அதை எல்லாம் மற்றவர்கள் செய்கிறார்கள் என்றால் அவர்கள் பாக்கியசாலிகள், கொடுத்து வைத்தவர்கள்! எனக்கு பகவானுடைய நாமங்களைச் ஜபிப்பது மட்டும் தான் தெரிகிறது’ என்று நீ ரொம்பவும் ஹம்பிள் ஆ (பணிவாக) இருந்து கொள். ஆனால், இந்த நாம ஜபத்தை மட்டும் குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொள். அப்பொழுது அந்த யோகமும் யாகமும் பிராணாயாமமும் என்ன பலனைக் கொடுக்குமோ, அதை இந்த நாமம் ஒன்றே உனக்குக் கொடுத்துவிடும்” என்று அந்த உபன்யாசத்தில் மிக உறுதியாகச் சொல்கிறார். ஸ்வாமிகளுக்கும் “பகவந்நாமங்கள் பரம க்ஷேமத்தைக் கொடுக்கும்!” என்பது ஆணித்தரமான நம்பிக்கை.

எனக்கு பிள்ளை பிறந்த போது, ஸ்வாமிகள் தான் அவனுக்கு ‘ரகுராமன்’ என்று பெயர் வைத்தார். பிறந்த இரண்டு மூன்று நாட்களிலேயே அவனுக்கு உடம்பில் கொஞ்சம் மஞ்சள் காமாலை போல வந்தது. நான் அவரிடம் போய் விஷயத்தைச் சொன்னேன். அவர் விபூதி மந்திரித்துக் கொடுத்தார். “என்ன மந்திரம் சொல்கிறீர்கள்?” என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர்,

कुमारेशसूनो गुह स्कन्द सेनापते शक्तिपाणे मयूराधिरूढ ।
पुलिन्दात्मजाकान्त भक्तार्तिहारिन् प्रभो तारकारे सदा रक्ष मां त्वम् ॥

“குமாரேஶஸூநோ கு³ஹ ஸ்கந்த³ ஸேநா-
பதே ஶக்திபாணே மயூராதி⁴ரூட⁴ ।
புளிந்தா³த்மஜா-காந்த ப⁴க்தார்திஹாரின்
ப்ரபோ⁴ தாரகாரே ஸதா³ ரக்ஷ மாம்’ த்வம் ॥”
என்ற ஸுப்ரமண்ய புஜங்கத்தில் இருக்கிற முருகப் பெருமானுடைய நாமங்களைத் தான் சொன்னார். இதைச் 36 ஆவர்த்தி ஜபம் செய்து அந்த விபூதியைக் கொடுத்தார். அதை அவனுக்கு இட்டோம். குணம் கண்டது.

அன்றிலிருந்து இன்று வரை எங்கள் க்ருஹத்தில் எந்தக் குழந்தைக்கு உடம்பு சரியில்லை என்றாலும், “குமாரேஶஸூநோ” சொல்லி விபூதி இடுவது தான் வழக்கம். அப்படி நமக்கு அந்த ஸ்லோகத்தின் மேல் ஒரு நம்பிக்கை, பக்தி வரும்படி செய்துவிடுவார். அவனுக்கே அப்புறம் ‘ஃபெப்ரல் ஃபிட்ஸ்’ (Febrile fits - காய்ச்சல் வலிப்பு) எல்லாம் வந்தது. இன்று

நன்றாக வளர்ந்து ஆளாகி நிற்கிறான்! அப்படி உடம்புக்கு வியாதி என்றால் “குமாரேஶஸூநோ”;

அதே போல ஏதாவது கெட்ட கனவு வந்தால்
து³:ஸ்வப்ந-து³:ஶகுந-து³ர்க³தி-தௌ³ர்மநஸ்ய
து³ர்பி⁴க்ஷ-து³ர்வ்யஸந-து³:ஸஹ-து³ர்யஶாம்ஸி।
உத்பாத-தாப-விஷ-பீ⁴திமஸத்³-க்³ரஹார்திம்
வ்யாதீ⁴ம்ஶ்ச நாஶயது மே ஜக³தாமதீ⁴ஶ: ॥
என்று ஒரு ஶ்லோகம் இருக்கிறது, அதைச் சொல்லச் சொல்வார்.

குழந்தையை வளர்ப்பது எவ்வளவு பளுவான காரியம்! குழந்தை எதற்கு அழுகிறது என்றே தெரியாமல் அழுது கொண்டிருக்கும் போது நமக்கு ஒரு பயம் வரும் அல்லவா? அந்த மாதிரி சமயங்களில்,

नारायण नारायण जय गोविन्द हरे । नारायण नारायण जय गोपाल हरे ॥
நாராயண நாராயண ஜய கோ³விந்த³ ஹரே । நாராயண நாராயண ஜய கோ³பால ஹரே ॥ என்ற வரியை நிறைய ஜபம் பண்ணச் சொல்வார். கொஞ்சம் வளர்ந்த குழந்தைகள் ரொம்ப படுத்தினால்,

कर्मसु आत्मोचितेषु स्थिरतरधिषणां देहदार्ढ्यं तदर्थं
दीर्घं चायुः यशश्च त्रिभुवनविदितं पापमार्गाद्विरक्तिम् ।
सत्सङ्गं सत्कथायाः श्रवणमपि सदा देवि दत्वा कृपाब्धे
विद्यां शुद्धां च बुद्धिं कमलजदयिते सत्वरं देहि मह्यम् ॥

கர்மஸு ஆத்மோசிதேஷு ஸ்தி²ரதரதி⁴ஷணாம் தே³ஹதா³ர்ட்⁴யம் தத³ர்த²ம் தீ³ர்க⁴ம்சாயு: யஶஶ்ச த்ரிபு⁴வநவிதி³தம் பாபமார்கா³த்³விரக்திம் । ஸத்ஸங்க³ம் ஸத்கதா²யா: ஶ்ரவணமபி ஸதா³ தே³வி த³த்வா க்ரு'பாப்³தே⁴ வித்³யாம்' ஶுத்³தா⁴ம் ச பு³த்³தி⁴ம் கமலஜத³யிதே ஸத்வரம் தே³ஹி மஹ்யம் ॥ என்ற கமலஜ தயிதாஷ்டகத்தில் உள்ள அழகான ஶ்லோகத்தை 12 தடவை சொல்லச் சொல்வார். அதன் பொருள் -

‘கர்மஸு ஆத்மோசிதேஷு’ – அவரவர்களுக்கு வர்ணாஶ்ரமத்தின் படி உசிதமான கர்மத்தில், ‘ஸ்தி²ரதரதி⁴ஷணாம்’ – உறுதியான புத்தியும் ‘தே³ஹதா³ர்ட்⁴யம் தத³ர்த²ம்’ – அதற்கு தேவையான உடம்பில் வலுவும்,

‘தீ³ர்க⁴ம்சாயு:’ – இந்த ஜன்மாவிலேயே ஞானத்தை அடையணும். அதற்காக நீண்ட ஆயுள்
‘யஶஶ்ச த்ரிபு⁴வநவிதி³தம்’ – மூவுலகத்துலேயும் புகழ். ஸ்வாமிகள் சொல்வார் ‘இந்த உலகத்துல போஸ்டர் அடிச்சு புகழ் வாங்கலாம். மூவுலகத்துலேயும் புகழ் என்றால் ‘தெய்வங்கள் ஸர்வ சாக்ஷி, நம்ம மனதுல நினைக்கறது கூட அவாளுக்கு தெரியும். உத்தமமான நடத்தை இருந்தால் தான் தெய்வங்கள் கிட்ட நல்ல பேர் வாங்க முடியும்’. அந்த மாதிரி புகழைக் கேட்கிறார்.
‘பாபமார்க³த்³விரக்திம்’ – பாப வழியில் புத்தி போகவே கூடாது. அதுக்கு என்ன பண்ணனும்? ‘ஸத்ஸங்க³ம்’ – சாதுக்களோட ஸங்கத்துல இருக்க வேண்டும். கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் மாதிரி, மஹா பெரியவா மாதிரி, சிவன் சார் மாதிரி மஹான்களை ஆச்ரயிக்கணும். அப்படி ஒரு ஸத்ஸங்கம் நேரிலே கிடைக்கவில்லை என்றாலும்
‘ஸத்கதா²யா: ஶ்ரவணமபி’ – அவா வாக்கு, அவர்களை பற்றி கேட்க வேண்டும். ராமாயணம் கேட்கற மாதிரி மஹா பெரியவாளோட அனுபவங்களை கேட்டுண்டே இருந்தா அதுவும் ஸத்கதா ஸ்ரவணம்
‘ஸதா³ தே³வி த³த்வா’ – எப்போதும் எனக்கு இதெல்லாம் வேணும்.
‘க்ரு’பாப்³தே⁴’ - கருணைக் கடலே
‘வித்³யாம்’ ஶுத்³தா⁴ம் ச பு³த்³தி⁴ம்’ – ஆத்ம வித்தையும் தூய்மையான புத்தியும், அதாவது சித்தசுத்தி,
‘கமலஜத³யிதே’ – தாமரையில் உதித்த பிரமனின் மனைவியான ஹே சாரதா தேவியே, ‘ஸத்வரம் தே³ஹி மஹ்யம்’ – வெகு சீக்ரமாக எனக்கு ஆத்ம வித்தையும் நல்ல புத்தியையும் கொடு.

இந்த மாதிரிப் பல பிரச்சினைகளுக்கு எளிமையான ஶ்லோகங்களையும் நாம மந்த்ரங்களை சொல்லி வழிகாட்டுவார்.
யாராவது செவ்வாய் தோஷம் என்று வந்தால்,

सर्वमंगल मांगल्ये शिवे सर्वार्थ साधिके ।
शरण्ये त्र्यम्बके गौरी नारायणी नमोऽस्तुते ॥
ஸர்வமங்க³ள மாங்க³ல்யே ஶிவே ஸர்வார்த² ஸாதி⁴கே ।
ஶரண்யே த்ர்யம்ப³கே கௌ³ரீ நாராயணீ நமோ(அ)ஸ்துதே ॥
இதை தினமும் 108 தடவை சொல்லச் சொல்வார்.

கல்யாணம் ஆவதற்கு, शिव शङ्कर सर्वात्मन् श्रीमातर्जगदम्बिके “ஶிவசங்கர ஸர்வாத்மன் ஸ்ரீமாதர் ஜகதம்பிகே” என்ற வரியை, மாலையில் பிரதோஷ வேளையில் (நான்கரை மணியிலிருந்து ஏழரை மணிக்குள்) விளக்கேற்றி வைத்து 1008 தடவை ஜபம் செய்யச் சொல்வார். வேலையில் ப்ரச்சனைகள், கோர்ட், கேஸ் போன்ற மன உளைச்சலைத் தரும் தொல்லைகளில் இருந்து விடுபட अपराजित पिङ्गाक्ष नमस्ते रामपूजित “அபராஜித பிங்கா³க்ஷ நமஸ்தே ராமபூஜித” என்ற வரியை ஒரு இடத்தில் அமர்ந்து 336 ஜபித்து விட்டு பிறகு நாள் முழுவதும் நேரம் கிடைக்கும் போதெல்லம் ஜபிக்கச் சொல்வார். அது நமக்கு ஒரு மன வலிமையையும், பொறுமையையும் கொடுக்கும்; முடிவில் நல்ல பலனையும் கொடுக்கும். அப்படி ‘க்ஷேமாணி நாமாநி’ என்பதில் ஸ்வாமிகளுக்கு முழு நம்பிக்கை. அவர் சொல்லித் தந்த நாம மந்த்ரங்களை அவர் பேரால் ஜபித்து, அதன் பலனை நாங்கள் பல முறை கண்கூடாகக் கண்டிருக்கிறோம்.

### தனிமையில் பகவத் பஜனம் செய்வதே க்ஷேமம்

பகவத் பஜனத்தை தனிமையில் செய்ய வேண்டும் என்பதை ஸ்வாமிகள் ரொம்பவும் வலியுறுத்துவார். “நிறைய பேர் சேர்ந்தால் அங்கே சண்டை வரும். மன்றங்கள் எல்லாம் வைத்துக் கொண்டு பஜனை செய்தால் ‘நீ பெரியவனா, நான் பெரியவனா? எனக்கு ஏன் சான்ஸ் தர மாட்டேன்கிறார்கள்? நான் பின்பாட்டு தான் பாட வேண்டுமா?’ என்றெல்லாம் தேவையில்லாத ஈகோ பிரச்சினைகள் வரும்” என்பார்.
சரி, தனியாக எப்படி பஜனை செய்வது? ஸ்ருதி போடுவதற்காகவாவது ஒருத்தர் வேண்டும் அல்லவா? என்று நினைத்து, “எட்டு மணிக்கு இந்தக் கோயிலுக்கு வந்து விடு” என்று ஒருத்தர் சொல்வார். அந்த நண்பன் கொஞ்சம் மெதுவாக எட்டரைக்கு வருவான். அவன் வந்த உடனே, “ஏண்டா லேட்?” என்று கேட்க, பத்தரை மணி வரை அவன் ஏன் லேட், என்று அவன் ஆபீஸ் கதையையே பேசிக் கொண்டிருப்பார்கள்! இப்படி பேச்சிலேயே பொழுது போய்விடும். இரண்டு பேர் இருந்தால் கூட வீண் பேச்சில் பொழுது போய்விடும் என்பதால், “பகவானின் பஜனம் தனிமையில் செய்வது தான் ரொம்பவும் க்ஷேமம்” என்று ஸ்வாமிகள் சொல்லுவார். ஆசார்யாள் கூட சோபான பஞ்சகத்தில் “एकान्ते (ஏகாந்தே) - தனிமையில் सुखमास्यताम् (ஸுக²மாஸ்யதாம்) - மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் परतरे (பரதரே) - பரம்பொருளின் மீது चेतः समाधीयताम् (சேதஃ ஸமாதீ⁴யதாம்) - மனதை நிலைநிறுத்த வேண்டும்” என்கிறார் அல்லவா?

ஆனால், நமக்குத் தனியாக உட்கார்ந்து பஜனம் செய்ய முடிவதில்லை. தனியாக நெட்ஃப்ளிக்ஸில் (Netflix) ‘பிஞ்ஜ் வாட்சிங்’ (binge-watching) பல மணி நேரம் கூடச் செய்ய முடிகிறது; ஆனால் தனியாக ஒரு மணி நேரம் உட்கார்ந்து பாராயணம் செய்வதற்கு நமக்குக் கசக்கிறது. ஏன் தெரியுமா? நமக்கு ‘உலக விஷயங்களில் மோஹம்’ என்கிற காய்ச்சல் வந்திருக்கிறது. காய்ச்சல் வந்த நாக்கிற்கு இனிப்பான வஸ்து கூடக் கசக்கும் அல்லவா? அதைப் போலத் தான் இதுவும்.

இதைத் தான் பெரியவா புரிந்து கொண்டு, ஒரு கசப்பு மருந்துக்குத் தேன் சேர்த்துச் சாப்பிடுவது போல, ஆரம்பத்தில் ஸத்ஸங்கத்தில் சேர்ந்து பஜனை செய்யலாம் என்கிறார். ஆனால் வால்மீகி, வியாசர் போன்ற சாசுவதமான புண்ணிய கீர்த்தியைக் கொண்ட மகான்களுடைய வாக்கே உண்மையான ஸத்ஸங்கம். நாம் தனியாக உட்கார்ந்து படிக்கும் போது வியாசரோடு அமர்ந்து படிக்கிறோம் என்று நினைக்க வேண்டும்; க்ருஷ்ணரே கேட்கிறான், மஹா பெரியவாளே கேட்கிறார் என்று நினைத்துத் தானே ஸ்வாமிகள் பாகவதம் படித்தார்!

ஸ்வாமிகளுக்கு 43 வயதாக இருக்கும் போது, முதல் முறை மஹா பெரியவா அவரைத் தன் பக்கத்தில் உட்கார வைத்துப் பாகவதம் படிக்கச் சொன்னார். பெரியவா முன்னிலையில் படித்த பின்னர், அவர் எங்கே பாகவதம் படித்தாலும், ப்ரவசனம் செய்தாலும் “பெரியவா நம்மைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார், கேட்டுக் கொண்டே இருக்கிறார்” என்ற ஞாபகம் அவருக்குள் இருந்து கொண்டே இருக்குமே! அந்த மாதிரி தெய்வ உணர்வோடு தனிமையில் மனமுருகிப் படிக்க வேண்டும். அப்பொழுது தான் இந்த அடுத்த சில ஶ்லோகங்களில் வரக்கூடிய உத்தம பக்தி நிலையை அடைய முடியும்.

### எது உண்மையான ஸத்ஸங்கம்

எது உண்மையான ஸத்ஸங்கம் என்பதற்கு ராமாயணத்திலிருந்து ஸ்வாமிகள் ஒரு அழகான விஷயம் சொல்வார். அசோக வனத்தில் சீதாதேவி, மரத்தின் மேல் இருந்து ஹனுமார் சொன்ன ராம கதையைக் கேட்டு ரொம்பவும் சந்தோஷம் அடைகிறாள். ஹனுமார் கீழே இறங்கி வந்து, “நீ யார்?” என்று கேட்க, சீதையும் பதில் சொல்கிறாள். அவளுக்குக் கொஞ்சம் நம்பிக்கை ஏற்படுகிறது.

ஆனால், ஹனுமார் ஒரு அடி முன்னாடி எடுத்து வைத்த உடனே, இவளுக்கு, "ஒருவேளை ராவணன் தான் இந்த வேஷத்தில் வந்திருக்கிறானோ!" என்று ஒரு பயம் வந்து விடுகிறது. உடனே பேசாமல் மௌனமாகி விடுகிறாள். ஹனுமார் அவளுக்கு நமஸ்காரம் செய்து கொண்டே இருக்கிறார். நமஸ்காரம் பண்ணினால் ஆசீர்வாதம் செய்ய வேண்டும் அல்லவா? சீதாதேவி, "நீ ராம தூதனாக இருந்தால் க்ஷேமமாக இரு!" என்கிறாள். 'இது நமக்குப் போதுமே' என்று ஸ்வாமிகள் சொல்வார், "நாம் மஹா பெரியவா பக்தர்கள். அவர் 24 கேரட் தங்கம் ; நமக்கு என்ன கவலை!" என்பார்.

அதுபோல, 'ராம பக்தனாக இருந்தால் நீ க்ஷேமமாக இரு' என்று சீதை சொல்கிறாள். அப்போது சீதை சொல்கிறாள், "ராவணன் அன்று ஸந்நியாசி வேஷத்தில் வந்தான். ஆனால், அவனைப் பார்த்தபோது என் மனம் நடுங்கியது. நீ இன்று ஒரு குரங்கு வேஷத்தில் வந்திருக்கிறாய். குரங்கைப் பார்த்தால் அபசகுனம் என்று உலகம் சொல்லும், நானும் கலங்கி இருக்கிறேன். ஆனால், உன்னைப் பார்க்கும் போது என் மனதில் ஒரு தனி திருப்தியும், சாந்தியும் ஏற்படுகிறது."

இதை வைத்துக் கொண்டு ஸ்வாமிகள் நமக்கு ஒரு பாடம் சொல்வார்: "நாம் 'ஸத்ஸங்கம்' என்று ஒரு இடத்தில் பழகினோம் என்றால், அதனால் நம்முடைய மனது சாந்தமடைகிறதா என்று பார்க்க வேண்டும்" என்பார். இதை அவர் மற்றவர்களுக்குச் சொல்கிறார் என்றால், அவரிடம் வருபவர்கள் அதை முதலில் அவரிடம்தானே சோதித்துப் பார்ப்பார்கள்! 'He was willing to undergo that test' – அந்த சோதனையை எதிர்கொள்ள அவர் தயாராகவே இருந்தார். அந்த மாதிரி நாம் சோதித்துப் பார்த்து, உண்மையான ஸத்ஸங்கத்தில் சேர வேண்டும்.

இந்த காலத்தில் எல்லாரிடமும் பணம் இருக்கிறது, ஆனால் அந்த மனஸ் சமாதானம் மட்டும் யாரிடமும் இல்லை. ஏதோ ஒரு தவிப்பு இருந்து கொண்டே இருக்கிறது. ஆனால், ஸ்வாமிகள் சந்நிதிக்குப் போனால் அந்தத் தவிப்பு அப்படியே அடங்கிவிடும். யாராவது தாங்க முடியாத கஷ்டத்தோடு வந்தாலும், "நான் துருவ சரித்ரம் சொல்கிறேன் கேள், அதைக் கேட்டால் மனஸ் சமாதானம் ஏற்படும் என்று அதில் பலச்ருதி இருக்கிறது" என்று சரித்ரத்தைச் சொல்லத் தொடங்கி விடுவார். இப்படி ஏதாவது ஒரு பகவத் விஷயத்தைச் சொல்லி, அவர்களின் மனதைச் சமாதானம் அடையச் செய்து விடுவார்.

**உத்தம, மத்யம, ப்ராக்ருத பக்தி**

அடுத்த இரண்டு மூன்று ஶ்லோகங்களில் உத்தம பக்தன் என்றால் யார், மத்யம பக்தன் என்றால் யார் என்பது வருகிறது. பாகவதத்தில் 'அதம பக்தி' என்று சொல்லவில்லையாம்; பக்தி வந்து விட்டாலே அவன் அதமன் கிடையாது என்பதால், 'ப்ராக்ருத பக்தன்' என்று ஒரு வார்த்தை போட்டிருக்கிறார் – அதாவது ஆரம்ப நிலை பக்தன்.

**எங்கும் எதிலும் தெய்வ தரிசனம்**

91வது தசகம், 6வது ஶ்லோகம்

**भूतान्येतानि भूतात्मकमपि सकलं, पक्षिमत्स्यान् मृगादीन्,**
**मर्त्यान् मित्राणि शत्रूनपि, यमितमतिस्त्वन्मयानि, आनमानि ।**
**त्वत्सेवायां हि सिद्ध्येत्, मम तव कृपया, भक्तिदार्ढ्यं विरागः,**
**त्वत्तत्वस्यावबोधोऽपि च, भुवनपते, यत्नभेदं विनैव ॥**

**பூ⁴தான்யேதானி பூ⁴தாத்மகமபி ஸகலம், பக்ஷிமத்ஸ்யான் ம்ரு'கா³தீ³ன், மர்த்யான் மித்ராணி ஶத்ரூனபி, யமிதமதிஸ்த்வன்மயானி, ஆனமானி**

பஞ்சபூதங்களிலும், அதன் சேர்க்கையால் உண்டான ப்ரபஞ்சத்திலும், மீன்கள், பறவைகள், மிருகங்களிடத்திலும், நண்பனிடத்திலும், எதிரியினிடத்திலும் என எல்லாவற்றிலும் உன்னையே பார்த்து வணங்குவேன்.

அடுத்து உத்தம பக்தனுடைய லக்ஷணங்களைச் சொல்கிறார். "எங்கும் எதிலும் தெய்வத்தைக் காண்பவன் உத்தம பக்தன்". இந்த 'எங்கும் எதிலும் தெய்வம்' என்கிற நிலையை மகான்கள் பல விதமாகப் பாடியிருக்கிறார்கள். திருவாசகத்தில்
"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே!"
என்று மாணிக்கவாசகர் பாடுகிறார்.
அதையே அருணகிரிநாதர்:
"வானோ புனல்பார் கனல் மாருதமோ
ஞானோதயமோ நவில் நான்மறையோ

யானோ மனமோ எனையாண்டவிடம்
தானோ பொருளாவது ஷண்முகனே" என்று சொல்கிறார்.
நம் மூககவி:
"சராசரஜக³ன்மயீம் ஸகலஹ்ருன்மயீம் சின்மயீம்
கு³ணத்ரயமயீம் ஜக³த்த்ரயமயீம் த்ரிதா⁴மாமயீம்
பராபரமயீம் ஸதா³ த³ஶதி³ஶாம் நிஶாஹர்மயீம்
பராம் ஸததஸன்மயீம் மனஸி சின்மயீம் ஶீலயே"
என்று உருகுகிறார். சராசர ஜகத் எல்லாமே அவருக்குக் காமாக்ஷியாகத் தெரிகிறது.

அப்பர் பெருமான் கைலாசத்திற்குப் போக வேண்டும் என்று புறப்படுகிறார். ரொம்ப சிரமப்பட்டுப் போகிறார். ஒரு கட்டத்தில் நடக்க முடியாமல், மண்ணில் தவழ்ந்து போகிறார்; கைகால்கள் எல்லாம் ரத்தமாகி விடுகிறது. ஆனாலும் முயற்சி செய்து, விடாமல் போய்க் கொண்டே இருக்கிறார். அப்போது சிவபெருமான் ஒரு முதியவர் வடிவில் அவருக்கு தரிசனம் தந்து, "நீ அருகிலிருக்கும் இந்தச் சூரிய தீர்த்தக் குளத்தில் நீராடு" என்று சொல்கிறார். அப்பர் பெருமானும் அந்தக் குளத்தில் மூழ்கி எழுகிறார். ஆச்சரியமாக, அவர் திருவையாறு தலத்திற்கு வந்து விடுகிறார்!
அங்கே திருவையாற்றுப் பெருங்கோயில் கோபுரம் தெரிகிறது. ஐயாறப்பரை தரிசனம் செய்யப் போகிறார். அப்போது பாடுகிறார்:
"மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளோடும் பாடிப் போதொடு நீர் சுமந்தேத்தி புகுவார் அவர்பின் புகுவேன்". ஸ்வாமியையும் அம்பாளையும் பாடிக் கொண்டு, அபிஷேகத்திற்குத் தீர்த்தமும், அர்ச்சனைக்குப் புஷ்பமும் எடுத்துக் கொண்டு ஆலயத்திற்குள் நுழைகிறார்களே, அவர்கள் பின்னாடியே நானும் போகிறேன் என்கிறார். "யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்ற போது". நான் சிரமப்பட்டு நடந்து வரவில்லை, திடீரென்று திருவையாற்றுக்கு வந்துவிட்டேன். அப்படி வரும்போது:

காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப் பாதம் கண்டறியாதன கண்டேன்!
ஒரு ஆண் யானையும் பெண் யானையும் விளையாடிக் கொண்டு வருகின்றன. அதைப் பார்க்கும் போதே அப்பர் பெருமானுக்கு அவை பார்வதி பரமேஸ்வரர்களாகக் காட்சி தருகிறது. "கண்டேன் அவர் திருப்பாதம்! இது வரை என் வாழ்வில் நான் கண்டிராத ஒரு தெய்வீக

அனுபவத்தை அங்கே அடைந்தேன்" என்று உருகுகிறார். அதே போல சேவலும் கோழியுமாக, அன்னமும் பேடையுமாக, எல்லா ஜோடிகளிலும் அவர் பார்வதி பரமேஸ்வர தரிசனத்தைக் காண்கிறார். உலகத்தையே சிவசக்தி ஐக்கிய சொரூபமாகப் பார்க்கிறார்.

அதே போல ஆதிசங்கர பகவத்பாதர் பல க்ஷேத்திரங்களுக்கும் சென்று பாடியிருந்தாலும், அவருக்கு ஸ்ரீசைலத்தின் மீது தனிப்ப்ரியம் இருந்திருக்கிறது என்று தோன்றுகிறது. ஏனென்றால், அவர் 'யோக தாராவளி' என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அது, மனதை முழுக்க லயம் செய்து, அதாவது மனதை இல்லாததாக்கி எப்படிப் பூரண சமாதி நிலையில் இருப்பது என்பதைப் பற்றிய வேதாந்த கிரந்தம். அதில், "ஸ்ரீசைல குகையில் நான் ஸ்தாணுவாக (அசையாத மரக்கட்டை போல) சமாதியில் இருக்கும்போது, என் காதுகளில் பறவைகள் வந்து கூடுகட்டும் படியாக எப்பொழுது நான் அமர்ந்திருப்பேன்?" என்று ஒரு ஶ்லோகம் சொல்கிறார். அப்படி அவருக்கு ஸ்ரீசைலத்தின் மேல் ஒரு ஆசை.

அவர் எழுதிய 'சிவானந்த லஹரி' ஸ்தோத்திரமும் ஸ்ரீசைலத்தில் தான் இயற்றப்பட்டது. அதில் 50வது ஶ்லோகத்திலிருந்து 55வது ஶ்லோகம் வரை அவருக்கு கிடைத்த பேரண்ட தரிசனத்தைப் (Cosmic Darshan) பாடி இருக்கிறார் என்று எனக்குத் தோன்றும்.

ஒருநாள் அவர் காலை முதல் மாலை வரை சமாதி நிலையிலிருந்துவிட்டு வெளியே வந்திருப்பார். வந்தபோது எங்கும் மல்லிகைப் பூ வாசனை கம்மென்று வீசுகிறது. உடனே, "ஸந்த்யாரம்ப விஜ்ரும்பிதம்" என்று மல்லிகார்ஜுன ஸ்வாமியை அந்த மல்லிகை மலராகவே பாடுகிறார். பின்னர் அந்த மல்லிகை மலர்கள் மேல் நிறைய வண்டுகள் வந்து அமர்கின்றன; "ப்ருங்கீச்சா" என்று ஸ்வாமியை வண்டுகளாகப் பாடுகிறார். அப்புறம் லேசாக ஆகாயத்தில் மேகம் சூழ்கிறது; பரமேஸ்வரனை மேகமாகப் பாடுகிறார். அந்த மேகத்தைப் பார்த்து ஒரு மயில் தோகை விரித்து ஆடுகிறது; பரமேஸ்வரனை மயிலாகப் பாடுகிறார். அப்புறம் நிறைய மயில்கள் வருகின்றன, அடுத்த பாட்டிலும் மயிலாகப் பாடுகிறார். அதற்கடுத்த இரண்டு ஶ்லோகங்களில் அந்த ஆனந்தத் தாண்டவத்தைப் பாடுகிறார். இப்படிப் பார்க்கும் எல்லாவற்றிலும் அந்தப் பரமேஸ்வரனைக் கண்டு, அதுவே அவருக்குப் பகவானுடைய ஆனந்தத் தாண்டவமாகக் காட்சி தருகிறது.

**பக்தி ஒன்றினாலேயே வைராக்யம், ஞானம் அடையலாம்**

அடுத்த வரி - **த்வத்ஸேவாயாம் ஹி ஸித்³த்⁴யேத், மம தவ க்ரு’பயா, ப⁴க்திதா³ர்ட்⁴யம் விராக³: த்வத்தத்வஸ்ய அவபோ³தோ⁴(அ)பி ச பு⁴வனபதே, யத்னபே⁴த³ம் வினைவ**

உன்னுடைய அளவற்ற கருணையினால், உனக்குச் செய்யும் பக்தித் தொண்டின் மூலம் மட்டுமே, எனக்கு உறுதியான பக்தியும், உலக ஆசைகளிலிருந்து விடுதலையளிக்கும் வைராக்யமும், உன்னுடைய தத்துவத்தைப் பற்றிய மெய்ஞானமும் கை கூட வேண்டும்.

இதற்கு பாகவதத்தில் அழகான ஒரு உபமானம் இருக்கிறது. இரண்டு மூன்று நாட்களாக பசியில் இருக்கும் ஒருவனுக்கு உணவு கிடைக்கிறது. அவன் ஒவ்வொரு கவளமாக அதை உண்ணுகிறான். உண்ணும் போதே அவனுடைய பசியும் தீருகிறது, உண்ட த்ருப்தியும், தெம்பும் வருகிறது. அவன் உடம்பு போஷாக்கைப் பெற்று வளர்கிறது. அவன் செய்ததோ ஒரே காரியம் தான்—உணவு உண்டது. அதன் மூலமாக இந்த மூன்று பலன்களும் கிடைப்பதைப் போல, நாம் பக்தி செய்தாலே அந்த பக்தி உறுதிப்படுவதும், வைராக்யம் ஏற்படுவதும், பகவானுடைய தத்துவ ஞானம் விளங்குவதும் ஏற்படும்.

ஸ்வாமிகள் இந்த 'யத்ன பேதம் வினைவ' என்பதை அழுத்திச் சொல்வார். தனியாக அஷ்டாங்க யோகம் பயில வேண்டாம், வேதாந்த பாடம் கேட்க வேண்டாம். பகவானுடைய பூஜையை, பஜனத்தை, நாம ஜபத்தை, பாராயணங்களைச் செய்து கொண்டிருந்தாலே வைராக்யமும் ஞானமும் ஏற்படும். பக்தியின் மூலமாகவே ஞானத்தை அடையலாம் என்று உறுதியாகக் கூறுவார். அவரை பார்த்ததால் அதில் எனக்கு நம்பிக்கையும் ஏற்பட்டது.

நாராயணீயம் 91வது தசகம், 7வது ஶ்லோகம்

**नो मुह्यन् क्षुत्तृडाद्यैः, भवसरणिभवैः, त्वन्निलीनाशयत्वात्,**
**चिन्तासातत्यशाली, निमिषलवमपि त्वत्पदात् अप्रकम्पः ।**
**इष्टानिष्टेषु तुष्टिव्यसनविरहितो, मायिकत्वावबोधात्**
**ज्योत्स्नाभिः त्वन्नखेन्दोः, अधिकशिशिरितेन, आत्मना सञ्चरेयम् ॥**

உத்தம பக்தனுடைய லக்ஷணங்களைச் மேலும் சொல்கிறார். **நோ முஹ்யன் க்ஷுத்த்ரு’டா³த்³யை:, ப⁴வஸரணிப⁴வை:** இந்த உலகத்தில் வந்து பிறந்தால் பசி, தாகம் என்பது எல்லாரையும் தாக்கும். ஆனால் உத்தம பக்தனை அது தாக்காது. அங்கே பாகவதத்தில் அப்படிச் சொல்லியிருப்பதை, பட்டத்ரி இங்கே அழகாக, “என்னை அது தாக்காமல் இருக்கட்டும்” என்று பகவானிடத்தில் பிரார்த்தனையாக மாற்றியிருக்கிறார்!

**த்வந்நிலீநாஶயத்வாத்** உன்னிடத்திலேயே என் மனதை எப்பொழுதும் வைப்பதனால், எனக்குப் பசி தாகம் தெரியாமல் இருக்கட்டும். **சிந்தாஸாதத்யஶாலீ, நிமிஷலவமபி த்வத்பதா³த், அப்ரகம்ப:** உன்னுடைய பாதத்திலிருந்து என் மனது ஒரு க்ஷணம் கூட விலகாமல் இருக்க வேண்டும். **இஷ்டாநிஷ்டேஷு துஷ்டிவ்யஸநவிரஹிதோ, மாயிகத்வாவபோ³தா⁴த்** “இவனை எனக்குப் பிடித்திருக்கிறது, அவனை எனக்குப் பிடிக்கவில்லை” என்று பிரித்துப் பார்த்து, அதனால் “இந்த மாதிரி என்னிடம் நடந்தால் மகிழ்ச்சி (துஷ்டி), இந்த மாதிரி நடந்தால் வருத்தம் (வ்யஸனம்)” என்பது எல்லாமே மாயையினால் ஏற்படுவது என்கிற தெளிந்த அறிவோடு, அந்த இன்ப துன்பங்களிலிருந்து விலகியிருப்பவனே உத்தம பக்தன். **ஜ்யோத்ஸ்நாபி⁴: த்வந்நகே²ந்தோ³:, அதி⁴கஶிஶிரிதேந, ஆத்மநா ஸஞ்சரேயம்** அவனுக்குக் கவலைகளே இருக்காதா? மனைவி, மக்கள், பணக்கவலை எல்லாம் இருக்குமா என்றால்... இருக்கும்! ஆனால் பகவானுடைய பாதத்து நகங்களிலிருந்து வீசும் சந்திர ஒளியினால் (நக-இந்து) அவன் மனது எப்பொழுதும் குளிர்ந்திருப்பதால், கவலைகள் அவனை தாக்காது. அவன் உலகத்தில் ஆனந்தமாகச் சஞ்ஸாரம் செய்து கொண்டிருப்பான்.

நாராயணீயம் 91வது தசகம், 8வது ஶ்லோகம்

**भूतेषु एषु त्वदैक्यस्मृतिसमधिगतौ, नाधिकारोऽधुना चेत्
त्वत्प्रेम, त्वत्कमैत्री, जडमतिषु कृपा, द्विट्सु भूयात् उपेक्षा ।
अर्चायां वा समर्चाकुतुकं, उरुतरश्रद्धया वर्धतां मे,
त्वत्संसेवी तथापि, द्रुतमुपलभते भक्तलोकोत्तमत्वम् ॥**

**பூ⁴தேஷு ஏஷு த்வதை³க்யஸ்ம்ரு’தி ஸமதி⁴க³தௌ, நாதி⁴காரோ(அ)து⁴நா சேத்** “ஹே குருவாயூரப்பா! எல்லா ஜீவராசிகளிலும் பகவானைப் பார்க்கக் கூடிய அந்த உயர்ந்த ஞான நிலைக்கு (உத்தம பக்திக்கு) எனக்கு இப்போது தகுதி இல்லை என்று நீ

சொன்னால் கூட பரவாயில்லை; எனக்கு இந்த மத்யம பக்தனுடைய லக்ஷணங்களாவது ஏற்படட்டும்; **த்வத்ப்ரேம** உன்னிடத்தில் அதிகமான அன்பும், **த்வத்கமைத்ரீ** உன்னைச் சேர்ந்த பக்தர்களிடத்தில் நல்ல நட்பும், **ஜட³மதிஷு க்ருபா** ஆன்மீக அறிவில்லாமல் ஜடமாக இருக்கும் சாமான்ய ஜனங்களிடம் ஒரு கருணையும், **த்³வித்ஸு பூ⁴யாத் உபேக்ஷா** உன்னை வெறுப்பவர்களிடம் ஒரு உபேக்ஷையும் (விலகியிருக்கும் தன்மையும்) எனக்கு ஏற்படட்டும்.” இது தான் மத்யம பக்தனுடைய லக்ஷணம்.

“எனக்கு பக்தர்களிடம் பழகுவதெல்லாம் வராது; எனக்குப் பார்த்தசாரதி பெருமாளை தரிசனம் செய்யப் பிடிக்கும். எனக்கு என் பிள்ளையார் இருக்கிறார். அவர் தலையில் தண்ணீர் கொட்டுவதை (அபிஷேகம் செய்வதைப்) பார்த்துக் கொண்டிருந்தால் போதும்” என்று சிலர் சொல்வார்கள் அல்லவா? அந்த மாதிரி, **அர்சாயாம் வா ஸமர்சாகுதுகம், உருதரஶ்ரத்³த⁴யா, வர்த⁴தாம் மே** அந்த விக்ரஹ ஆராதனையில் இருக்கும் ஆசையும் பிரியமும், மிகுந்த நம்பிக்கையோடு எனக்கு வளர்ந்து கொண்டே போகட்டும்.

இப்படி விக்ரஹ வழிபாட்டை செய்து கொண்டு, இந்த ப்ராக்ருத பக்தனாக தொடர்ந்து வந்தாலே, **த்வத்ஸம்’ஸேவீ ததா²பி, த்³ருதமுபலப⁴தே ப⁴க்தலோகோத்தமத்வம்** அவன் மிக விரைவில் உத்தம பக்தனாக உயர்ந்து விடுவான் என்கிறார்.

எவ்வளவு அழகாகப் பட்டத்ரி சொல்லியிருக்கிறார்! “நீ முதலில் ப்ராக்ருத பக்தி பண்ணு, அப்புறம் உனக்கு பக்தர்கள் மேல் நட்பு வரும், (மத்யம பக்தி) அதற்கப்புறம் எங்கும் பகவானையே பார்க்கக் கூடிய உத்தம பக்தி உனக்குத் தானாகவே கைகூடும்” என்கிறார்.

ஆறாவது, ஏழாவது, எட்டாவது ஶ்லோகங்களில் உத்தம பக்தி, மத்யம பக்தி, ப்ராக்ருத பக்தி ஆகியவற்றைப் பற்றிப் பார்த்தோம். அதை மீண்டும் ஒருமுறை நினைவு படுத்திக் கொள்வோம்.

பகவானிடத்திலேயே மனது தோய்ந்திருப்பதனால் பசி, தாகத்தைக் கூட மறந்திருப்பவன் எவனோ, அவனே உத்தம பக்தன். சிவன் சாரைப் போல.

மூவுலகத்துச் செல்வத்தையும் அவனிடம் கொடுத்தாலும், பகவானுடைய பாதங்களிலிருந்து தன் மனதை ஒரு க்ஷணம் கூட பிரிக்காதவன் உத்தம பக்தன். ஸ்வாமிகளைப் போல.
படிப்பு, பணம், பிறப்பு ஆகியவற்றைப் பற்றிய கர்வமே இல்லாதவன் உத்தம பக்தன். பிறரிடத்தில் மகிழ்ச்சியையோ, வருத்தத்தையோ காட்டாதவன் உத்தம பக்தன்.

இதைச் சொல்லும்போது ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது. ஸ்வாமிகளிடம் யாராவது வந்து தங்கள் கஷ்டத்தைச் சொன்னால், அதற்குப் பரிகாரமாக "இந்த ஶ்லோகத்தைப் படியுங்கள்" என்று சொல்லிக் கொடுப்பார். ஆனால், அடுத்த முறை அவர்கள் வரும்போது, "அதைப் படித்தீர்களா?" என்று அவராக விசாரித்துக் கேட்கவே மாட்டார். நாம் அவரிடம் இதைப் பற்றிக் கேட்டால், "நாம் சொல்கிறோம்; அவர்களுக்குப் படிக்க வேண்டும் என்று பாகவானுடைய ப்ரேரணை இருந்தால் படிப்பார்கள், பகவான் அதற்குரிய பலனைக் கொடுப்பார்" என்று மிகச் சாதாரணமாகச் சொல்லிவிடுவார். அவர்கள் அதைப் படிக்க வேண்டும், தனக்குத் திரும்ப வந்து நன்றி சொல்ல வேண்டும் என்றெல்லாம் அவர் எதையுமே எதிர்பார்க்க மாட்டார். பகவானுடைய அனுக்ரஹம் அவர் மூலமாக அவர்களுக்குச் சென்றடையும் பாக்கியம் இருந்தால் அது நடக்கும், அவ்வளவு தான்.

பொதுவாக வயதானவர்கள், "என்னிடம் யாரும் எதுவும் சொல்வதில்லை, என்னை மதித்து எதுவும் கேட்டுக் கொள்வதில்லை" என்று குறைப்பட்டுக் கொள்வதைப் பார்த்திருப்போம். சரி, அவர்களிடம் வந்து ஏதேனும் கேட்டாலும், தாங்கள் சொன்ன ஆலோசனையை அடுத்தவர்கள் ஏற்றுக் கொண்டார்களா என்று பின்னாடி விசாரித்துக் கொண்டே இருப்பார்கள். அப்படிச் செய்யவில்லை என்றால், "எல்லாம் கேட்டுக்க வேண்டியது, ஆனால் நாம் சொன்னதை ஒன்றும் பின்பற்றுவது கிடையாது" என்று கோபித்துக் கொள்வார்கள். இதனாலேயே அவர்களிடம் போய் யாரும் எதுவும் கேட்பதில்லை. உலகம் இப்படித் தான் இருக்கிறது. ஆனால், நம் ஸ்வாமிகள் யாரிடமும் இப்படி வருத்தமோ, மகிழ்ச்சியோ படமாட்டார். "இது ஈஶ்வர சித்தம், இதெல்லாம் மாயையின் விளையாட்டு" என்ற தெளிவோடு அவர் இருப்பார். இதனுடைய உச்சத்தை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

ஒரு பத்து பன்னிரண்டு வருடங்கள், வி.ஜே.ஆர் மாமா மாதிரி ஸ்வாமிகளிடம் பழகி, அவரிடம் எல்லாவற்றையும் கற்றுக் கொண்டு, பாராயணம் எல்லாம் பண்ணக் கூடியவர் ஒருவர் இருந்தார். அவரும் அவருடைய குடும்பத்தினரும், “ஸ்வாமிகள் தன் ஆன்மீகக் கொள்கைகளில் மிகவும் தீவிரமாக இருக்கிறார். அதனால் தான் மேலும் மேலும் பணக் கஷ்டம் வருகிறது. இதெல்லாம் இந்த காலத்தில் பலிக்காது; இவர் ரொம்ப பிடிவாதமாக இருக்கிறார்" என்று சொல்லி அவரை விட்டு விலகிப் போய் விட்டார்கள்.

அதன் பிறகு ஸ்ரீ சுந்தர்குமார் அண்ணா, முதலில் மஹா பெரியவா ஸன்னதியில் ஸ்வாமிகளை தர்சனம் பண்ணி, பின்னர் அடிக்கடி ஸ்வாமிகளை தரிசித்து பல விஷயங்களைக் கற்றுக் கொண்டு, தன் ப்ரவசங்களில் ஸ்வாமிகளின் மஹிமையை தினமும் சொல்வதைக் கேட்டு, அந்தப் பழைய குடும்பம் மீண்டும் ஸ்வாமிகளிடம் திரும்ப வந்தது. சுமார் பதிமூன்று வருடங்கள் கழித்து அவர்கள் வந்து நமஸ்காரம் செய்யும் போது, ஸ்வாமிகள் எவ்வித வேறுபாடும் காட்டாமல், பழையபடியே "வாருங்கள்" என்று அன்போடு வரவேற்றார். அது மட்டுமன்றி, அதற்குப் பிறகு அவர்கள் குடும்பத்தில் நடந்த சுகதுக்கங்களில் பங்கெடுத்துக் கொண்டார். இங்கு இருந்தவர்களுக்கு எல்லாம் ஒரே ஆச்சரியம்! "என்னென்னவோ பேசி உங்களை விட்டுட்டுப் போனார்களே, அவர்கள் திரும்ப வந்தபோது எப்படிக் கோபமே இல்லாமல் முன்ன மாதிரியே பழக முடிகிறது?" என்று அனைவரும் வியந்து போனார்கள். அது தான் உத்தம பக்தனுடைய லக்ஷணம்.

"அந்த மாதிரியான உத்தம பக்திக்கு, ஐகாத்மிய பாவத்திற்கு, எனக்கு இன்னும் தகுதி வரவில்லை என்றால், உன்னிடத்தில் பிரேமையும், உன்னுடைய பக்தர்களிடத்தில் ஒரு நட்பும், ஜடமாக இருக்கிறவர்களிடம் கிருபையும், எதிரிகளிடம் உதாஸீனத்தன்மை எனப்படும் உபேக்ஷையும் எனக்குக் கொடு" என்று வேண்டுகிறார். இது மத்யம பக்தி. "அதுகூட என்னிடம் இல்லை என்றாலும், விக்ரஹ ஆராதனையில் எனக்கு அதிகமான விருப்பத்தை ஏற்படுத்திக் கொடு" என்கிறார். இது பக்தியினுடைய ஆரம்ப நிலை. இப்படி ப்ராக்ருத பக்தி செய்யத் தொடங்கினால், காலப்போக்கில் அவர்களே உத்தம பக்தர்களாக ஆகிவிடுவார்கள் என்று எட்டாவது ஃலோகத்தில் அழகாகப் பட்டத்ரி சொல்லி முடிக்கிறார்.

## பஞ்ச க்ருத்ய பராயணா

அடுத்து, 91வது தசகம் ஒன்பதாவது ஶ்லோகத்தைப் பார்ப்போம்:

**आवृत्य त्वत्स्वरूपं, क्षितिजलमरुदाद्यात्मना विक्षिपन्ती,**
**जीवान् भूयिष्ठकर्मावलिविवश गतीन्, दुःखजाले क्षिपन्ती ।**
**त्वन्माया माभिभून्मां, अयि भुवनपते, कल्पते तत्प्रशान्त्यै**
**त्वत्पादे भक्तिरेवेत्यवदत्, अयि विभो, सिद्धयोगी प्रबुद्धः ॥**

**ஆவ்ரு’த்ய த்வத்ஸ்வரூபம், க்ஷிதிஜலமருதா³த்³யாத்மநா விக்ஷிபந்தீ, ஜீவான் பூ⁴யிஷ்ட²கர்மாவலிவிவஶக³தீன்** உன்னுடைய மாயையானது உன்னுடைய நிஜ ஸ்வரூபத்தை மறைத்து, இந்த க்ஷிதி (பூமி), ஜலம் (நீர்), மருத் (காற்று) போன்ற வடிவங்களில் இந்த ஜகத்தைக் காண்பிக்கிறது. ஜீவர்களுக்கு அவரவர் வினைக்கு ஏற்ற மாதிரி ஒரு ஜன்மத்தைக் கொடுத்து, **து³:க²ஜாலே க்ஷிபந்தீ த்வந்மாயா மாபி⁴பூ⁴ந்மாம்** துக்க வலையில் தள்ளுகிற உன் மாயை, என்னை வீழ்த்த வேண்டாம். **அயி பு⁴வநபதே, கல்பதே தத்ப்ரஶாந்த்யை** ஹே ஜகன்னாத! அந்த மாயையை போக்க வல்லது **த்வத்பாதே³ ப⁴க்திரேவேத்யவத³த், அயி விபோ⁴ ஸித்³த⁴யோகீ³ ப்ரபு³த்³த⁴:** உன்னுடைய பாத பக்தி ஒன்றே, என்று ப்ரபுத்தர் என்கிற யோகி சொல்லி இருக்கிறார்.

பிரம்மத்தை மறைத்து உலகமாக நமக்கு மாயை காண்பிக்கிறதே, இதைத் தான் ‘திரோதானம்’ என்று சொல்வார்கள். சிருஷ்டி, ஸ்திதி, லயம், திரோதானம், அனுக்ரஹம் என்று ஐந்து காரியங்களை பகவான் செய்கிறான். உலகத்தைப் படைப்பது (சிருஷ்டி), காப்பது (ஸ்திதி), பிரளய காலத்தில் தன்னிடத்திலேயே ஒடுக்கிக் கொள்வது (லயம்), இந்த மாயையினால் நமக்கு இது பரபிரம்மம் தான் என்று தெரியாமல் மறைப்பது (திரோதானம்), பாக்கியம் இருக்கிற பக்தர்களுக்கு அந்த மாயையை விலக்கி அருள்வது (அனுக்ரஹம்) ஆகிய இந்த ஐந்து காரியங்களையும் பகவானே செய்கிறான். பஞ்சகிருத்ய பராயணாவாக அம்பாளையும் சொல்லுவார்கள், பரமேஸ்வரனையும் சொல்லுவார்கள். அவர்கள் அருள் இருந்தால் நாம் மாயையின் பிடியிலிருந்து விடுபடலாம்.

காணும் அனைத்திலும் கடவுளைக் காணும் பேற்றை எப்படி அடையலாம் என்று அடுத்த பத்தாவது ஶ்லோகத்தில் ஒரு உபாயம் (வழி) சொல்கிறார்.

**दुःखानि आलोक्य जन्तुषु, अलं उदितविवेकः, अहं आचार्यवर्यात्,**
**लब्ध्वा त्वद्रूपतत्वं, गुणचरित कथाद्युद्भवत् भक्तिभूमा ।**
**मायामेनां तरित्वा, परमसुखमये त्वत्पदे मोदिताहे,**
**तस्यायं पूर्वरङ्गः पवनपुरपते, नाशय अशेषरोगान् ॥**

**து³:கா²நி ஆலோக்ய ஜந்துஷு, அலம் உதி³தவிவேக:** இந்த உலகத்தில் எல்லாருக்கும் பலவிதமான துக்கங்கள் இருக்கின்றன. பள்ளிக்குப் போகும் போது நல்ல மதிப்பெண் வாங்க வேண்டுமே என்கிற கவலை; அதற்கு அப்புறம் நல்ல வேலை கிடைக்க வேண்டும். வேலை கிடைத்த பின் அங்கே நல்ல பெயர் வாங்க வேண்டுமே என்ற கவலை. அதற்கடுத்துக் கல்யாணம் ஆயிற்று என்றால் அதிலிருந்து பல விதமான கவலைகள் பிடித்துக் கொள்கின்றன. குழந்தைகளைப் பற்றிக் கவலை, பேரன் பேத்திகளைப் பற்றிக் கவலை, பணத்தைப் பற்றிக் கவலையோ, வாழ்க்கை முழுவதும் ஓயாத கவலை. இப்படி எல்லாருக்கும் பல விதத்தில் கவலைகளும், துன்பங்களும் நிறைய இருக்கின்றன.

இதைப் பார்த்து, "பக்தி மூலம் நாடிய பொருள் கைகூடும், உலகத்தில் நமக்கு வேண்டியதை எல்லாம் கொடுக்கும்" என்று இருந்தாலும், அது வேண்டும் இது வேண்டும் என்று பகவானிடம் கேட்டு வாங்கிக் கொண்டால் கூட, அதில் பரமசாந்தம் என்கிற மேலான நிம்மதி இல்லை என்கிற விவேகம் நமக்கு வர வேண்டும்.

அப்படியென்றால், அந்தப் பரமசாந்தமும், வைராக்யமும், ஞானமும் எப்படி கிடைக்கும் என்று விசாரணை செய்து, **அஹம் ஆசார்யவர்யாத்** நான் சிறந்த ஒரு குருவினிடமிருந்து, — உத்தமமான குரு என்பவர் வெறும் வேதாந்தத்தைப் படித்தவராக மட்டும் இருக்க மாட்டார்; அந்த வேதாந்தத்தை தன் அனுபவத்தில் கொண்டு வந்தவராக இருப்பார். அப்பேர்ப்பட்ட உத்தம குருவிடமிருந்து **லப்³த்⁴வா த்வத்³ரூபதத்வம்** உன்னுடைய ரூப தத்துவத்தைக் கேட்டறிந்து, **கு³ணசரித கதா²த்³யுத்³ப⁴வத் ப⁴க்திபூ⁴மா** உன்னுடைய குணங்களையும், சரித்ரத்தையும், கதைகளையும் கேட்டால் மேலான பக்தி ஏற்படும்.

**மாயாமேநாம் தரித்வா, பரமஸுக²மயே த்வத்பதே³ மோதி³தாஹே,**
**தஸ்யாயம் பூர்வரங்க³: பவநபுரபதே, நாஶய அஶேஷரோகா³ன்**
அப்படி உயர்ந்த பக்தி ஏற்பட்ட பின், மாயையைக் கடந்து அந்தப் பரம சுகம் என்கிற பேரானந்தத்தில் நான் திளைத்திருப்பேன். ஹே

குருவாயூரப்பா, அதற்கு முதல் படியாக என்னுடைய எல்லா வியாதிகளையும் போக்க வேண்டும் என்று இந்த தசகம் முடிகிறது.

**ஸத்குரு சரணாரவிந்தாப்யாம் நம:**

"ஆசார்யவர்ய" என்று வருகிறதல்லவா? நான் ஸ்வாமிகளை தரிசித்து அவரைப் புரிந்து கொண்ட பின்னர், அவருடைய பாதங்களையே கெட்டியாக பிடித்துக் கொண்டேன். அதற்கு முன்னால் வரை ஒரு குருவைத் தேடி அங்கங்கே போய்க் கொண்டிருப்பேன். ஆனால் ஸ்வாமிகளைப் பார்த்து, கொஞ்ச நாளில் அவரை புரிந்து கொண்டு, அவரிடம் சரணாகதி செய்த பின்னர், வேறொருவரைப் போய் பார்ப்பதில்லை என்று தீவிரமாக ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்.

அவர் சொன்னதால் சிவன் சாரை தரிசனம் செய்தேன். சிவன் சார் என்னிடம், "ராமாயண, பாகவதத்திற்காகத் தன்னுடைய உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் அர்ப்பணித்த ஒரு மகான்; இந்த மாதிரி ஒரு உத்தம ஜீவனைப் பார்க்க முடியாது. அவர் சொல்வதை எல்லாம் எழுதி வைத்துக் கொள். அவருடைய ஆஶ்ரயம் உனக்குக் கிடைத்தது 2000 ரூபாய் வேலை கிடைப்பதற்கும் மேலே" என்றெல்லாம் சொல்வார், ஸ்வாமிகளின் 63வது ஜயந்தி அன்று நான் சிவன் சாருடன் இருந்தேன். "இன்று ஸ்வாமிகளுக்கு ஜன்ம நக்ஷத்ரம்" என்று சொன்ன போது, இரண்டு கைகளையும் தன் தலைமேல் கூப்பி, "அவர் நன்றாக இருக்க வேண்டும் என்று நானும் வேண்டிக் கொள்கிறேன்" என்றெல்லாம் சொல்லி, எனக்கு ஸ்வாமிகளிடம் பக்தி வளரும்படிச் செய்தார்.

மஹா பெரியவாளை தரிசனம் செய்திருக்கிறேன், சிவன் சாரை தரிசனம் செய்திருக்கிறேன். "ஶ்ரீமடத்திற்குப் போனால் அங்கே உள்ள மற்ற ஸந்நியாசிகளையும் போய் பார்" என்று சொல்வார்கள். ஆனால் வேறு ஒருவரையும் போய் பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லை. ஸ்வாமிகளிடமே "எனக்கு எங்கேயும் போக வேண்டாம், உங்களிடம் இருப்பதே எனக்கு போதும் " என்று நேரடியாகச் சொல்லிவிட்டேன்.
திருவாசகத்தில்:
"கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்து
உற்று இறுமாந்திருந்தேன்"
"கற்றறியேன் கலைஞானம்", நான் ஞான நூல்களை படித்ததில்லை. பக்தி பண்ணி உருக்கம் எல்லாம் ஒன்றும் வரமாட்டேன் என்கிறது. ஆனால் "நீ

தான் என் தெய்வம்" என்று உன்னுடைய பாதங்களைப் பற்றிக் கொண்டு இறுமாந்து இருக்கிறேன். எனக்கு ஸ்வாமிகள் இருக்கிறார் போதும் என்று இருந்தேன். "என்னிடம் இவனுக்கு ஹீரோ வர்ஷிப் (hero worship)" என்று ஸ்வாமிகள் சொல்வார். அப்படி இருந்தால் அவர்கள் செய்கிற அனுக்ரஹம் எப்படி இருக்கும் தெரியுமா? "எம் பெருமானே! அடியேற்குப் பொற்றவிசு நாய்க்கிடுமாறு அன்றே நின் பொன்னருளே" என்கிறார். தனக்குப் பிடித்த ஒரு நாய் இருந்தால் அதற்கு ஒரு தங்கச் சிம்மாசனம் கூட செய்து கொடுப்பார்கள் அல்லவா, அப்படி ஒரு அனுக்ரஹம் எனக்கு நீ செய்திருக்கிறாய் என்கிறார். அது போல குருவிடம் ஏக பக்தியாக இருந்தால், நம் தகுதிக்கு மேலான பலனை பகவான் அருள்வார்.

"ஆசார்யவர்யஹ" என்பதற்கு இலக்கணமாக, இந்த மூவுலகத்துச் செல்வத்தைக் கொடுத்தாலும் பகவானுடைய பாதத்திலிருந்து ஒரு கணம் கூட மனதை எடுக்காத நிலையைத் தான் ஸ்வாமிகளிடம் நான் பார்த்தேன். என் வாழ்க்கையில், நான் பார்த்த வரையில், பணத்தில் கொஞ்சம் கூட பற்றில்லாமல், "தநேந ந ரமாமஹே" என்று 28 வயதில் சொன்னதை, 75 வயது வரைக்கும் முழுமையாக, நேர்மையாக, பின்பற்றியவர் அவர் ஒருவர் தான். அந்த ஒன்றுக்காகவே அவர் தான் என் ஸத்குரு என்று தீர்மானம் செய்து கொண்டேன்.

சிவன் சாரும் தன்னிடம் வருகிறவர்கள் பலரை “குருவாக இருப்பதற்கு அந்த ஸ்வாமிகள் தான் தகுதியானவர். அவரிடம் நல்ல விஷயங்களை கேட்டுக் கொள், அவர் சொன்னபடி நட" என்று அறிவுறுத்தி ஸ்வாமிகளிடம் அனுப்பி வைத்தார்.

என்னிடம் கேட்பவர்களுக்கு “ஸ்வாமிகளிடம் தான் குருவிற்குரிய எல்லா லக்ஷணங்களும் இருக்கின்றன. அவரை புரிந்து கொண்டு, அவரையே குருவாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்கிறேன். பலரும் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். அப்படி ஒரு உத்தம குருவாக, ஆசார்யவர்யராக கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் இருந்தார், இன்றும் இருக்கிறார்.

**ॐ तत्सदिति श्रीमन्नारायणीये एकनवतितमं दशकं समाप्तम् ।**
**श्री हरये नमः । रमा रमण गोविन्द गोविन्द । श्रीकृष्णार्पणमस्तु ।**

**ஓம் தத்ஸதி³தி ஶ்ரீமந்நாராயணீயே ஏகநவதிதமம் த³ஶகம் ஸமாப்தம் | ஶ்ரீ ஹரயே நம: | ரமா ரமண கோ³விந்த³, கோ³விந்த³ | ஶ்ரீக்ரு’ஷ்ணார்பணமஸ்து**

**92வது  தசகம்: கர்மமும் பக்தியும்**

அடுத்து 92வது ஸர்க்கத்தின் முதல் ஶ்லோகத்தைப் பார்ப்போம்.

**वेदैस्सर्वाणि कर्माणि, अफलपरतया वर्णितानीति बुध्वा,**
**तानि त्वय्यर्पितान्येव हि समनुचरन्, यानि नैष्कर्म्यमीश ।**
**मा भूत् वेदैर्निषिद्धे, कुहचिदपि मनःकर्मवाचां प्रवृत्तिः,**
**दुर्वर्जं चेत् अवाप्तं तदपि खलु, भवति अर्पये चित्प्रकाशे ॥**

**வேதை³ஸ்ஸர்வாணி கர்மாணி, அப²லபரதயா வர்ணிதாநீதி பு³த்⁴வா, தாநி த்வய்யர்பிதாந்யேவ ஹி ஸமநுசரன், யாநி நைஷ்கர்ம்யமீஶ**
“வேதத்தின் கர்ம காண்டங்களில் நிறைய புண்ய கார்யங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவை எல்லாம் ‘நைஷ்கர்ம்ய சித்தி’க்காகத் தான் (பலனில் மனதை வைக்காமல் செய்து, மனத் தூய்மை அடைந்து, அதன் மூலம் ஞானம் பெறுவதற்காகத் தான்) சொல்லப் பட்டிருக்கின்றன என்பதைப் புரிந்து கொண்டு, அவற்றை அனுஷ்டித்து, பகவானாகிய உன்னிடத்தில் அர்ப்பணம் செய்வேன்” என்று பட்டத்ரி சொல்கிறார்.
**மா பூ⁴த், வேதை³ர்நிஷித்³தே⁴ குஹசித³பி மந:கர்மவாசாம் ப்ரவ்ரு’த்திஹி** வேதத்தால் செய்யக் கூடாது என்று விலக்கப்பட்ட காரியங்களில், "மந:கர்மவாசாம்" — என் மனதாலோ, வாக்காலோ, செய்கையாலோ ஒருநாளும் என்னுடைய நாட்டம் போகக்கூடாது; அதுபோன்ற ஒரு அனுக்ரஹத்தை எனக்குச் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறார். "கள்ளுண்ணாதே" என்று சொல்லியிருந்தால் அதை ஒரு நாளும் செய்யக் கூடாது.
**து³ர்வர்ஜம்’ சேத் அவாப்தம்** என்னை மீறி அது போல ஏதாவது செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், **தத³பி க²லு ப⁴வதி அர்பயே சித்ப்ரகாஶே** அதையும் உன்னுடைய ஞான ஒளியில், சித்ப்ரகாசத்தில் அர்ப்பணம் செய்துவிடுகிறேன்" என்கிறார். இந்த காலத்தில், மீற முடியாமல், நாம் சாஸ்த்ர சம்மதமில்லாத சில விஷயங்களைச் செய்து கொண்டு தான் இருக்கிறோம். அதை எல்லாமும் பகவானிடத்தில் அர்ப்பணம் செய்ய வேண்டும்.

**உருவ வழிபாடு பக்தியை வளர்க்கும்**

92வது ஸர்க்கத்தின் இரண்டாவது ஶ்லோகம்

**यस्त्वन्यः कर्मयोगस्तव भजनमयः, तत्र चाभीष्टमूर्तिं,
हृद्यां सत्वैकरूपां, दृषदि हृदि मृदि, क्वापि वा, भावयित्वा ।
पुष्पैः गन्धैः निवेद्यैः, अपि च विरचितैः, शक्तितो भक्तिपूतैः
नित्यं वर्यां सपर्यां विदधत् अयि विभो त्वत्प्रसादं भजेयम् ॥**

**யஸ்த்வந்ய: கர்மயோக³ஸ்தவ ப⁴ஜநமய:** இந்த கர்ம யோகத்திலேயே உன்னுடைய பஜன வடிவமான ஒரு கர்மயோகம் இருக்கிறது. அது என்னவென்றால், **தத்ர சாபீ⁴ஷ்டமூர்திம் ஹ்ரு’த்³யாம் ஸத்வைகரூபாம்** தனக்குப் பிடித்தமான ஒரு உருவத்தில், அது ஸத்வ ரூபமாக இருக்க வேண்டும். "ஹ்ருத்யாம்" — பார்த்த உடனே அன்பு வர வேண்டும், ஒவ்வொரு முறை அதை பார்க்கும்போதும் சந்தோஷம் வளர வேண்டும். **த்³ரு’ஷதி³ ஹ்ரு’தி³ ம்ரு’தி³ க்வாபி வா பா⁴வயித்வா** ஒரு விக்ரஹத்திலோ, ஒரு கல்லிலோ, ஒரு மண்ணிலோ அல்லது மனதிலோ அந்த ரூபத்தைப் பாவிப்பது. இந்த காலத்தில் நாம் படங்களை வைத்துக் கொண்டு பூஜை செய்கிறோம், அதுவும் பொருத்தமானது தான்.

ஸ்வாமிகள் ஒரு 6x4 அளவிலான பிள்ளையார் படத்தை என் நண்பரிடம் கொடுத்து, அவருக்கு "ஜயஸ்ரீ கணபதி" என்று பெயர் வைத்து, "இந்தப் படத்தை பிரேம் (frame) செய்து வைத்துக் கொள். ஒரு பத்து நிமிஷம் அருகம்புல்லை வைத்து ஒரு அர்ச்சனை, காய்ந்த திராட்சையை வைத்து ஒரு நைவேத்தியம் — இதைத் தினமும் விடாமல் பண்ணிக் கொண்டு வா" என்று சொல்லிக் கொடுத்தார். அந்த நேரத்தில் அந்த பூஜை செய்வது என்பது ஒரு புறம் இருந்தாலும், நாம் எதைச் செய்யும் போதும் அவரிடம் சொல்லி விட்டு ஆரம்பிப்பது, ஏதேனும் ஒரு நல்ல பண்டம் கிடைத்தால், அந்தப் பிள்ளையாரிடம் காட்டி விட்டு, அல்லது அவரை நினைத்துக் கொண்டு, அதைச் சாப்பிடுவது. இப்படி மனதை அந்த தெய்வத்திடம் செலுத்தி, அவரிடம் நம் பக்தியை வளர்ப்பதற்கான காரியங்களைச் செய்ய வேண்டும். விரிவான பூஜையை விட அந்த பக்தி தான் முக்கியம் என்று ஸ்வாமிகள் சொல்லுவார்.

ஸ்வாமிகளுடைய குருவாயூரப்பன், ஓரடி உயரத்தில் ஒரு அழகான விக்ரஹம், சாக்ஷாத் அந்த குருவாயூரில் இருக்கிற ஸ்வாமி மாதிரியே இருப்பார். அதே சங்கு, சக்கரம், கதாயுதம், பத்மம், அந்தப் பாதங்கள், அந்தப் புன்னகை, தலையில் மயில்பீலி என அவ்வளவு அழகாக இருக்கும். அதற்குத் தினமும் நாராயணீயம் சொல்லிக் கொண்டே பால் அபிஷேகம், சந்தன அபிஷேகம் செய்வார். அப்புறம் துடைத்துச் சந்தனம், குங்குமம்

இட்டு, வஸ்திரங்கள், ஆபரணங்கள் எல்லாம் அணிவித்து, க்ருஷ்ண அஷ்டோத்திரம் சொல்லி அர்ச்சனை செய்வார். ஒரு குழந்தையைக் கொஞ்சுவது போலக் கையில் வைத்துக் கொண்டு கொஞ்சுவார்; அப்புறம் திருஷ்டி கழிப்பார். அதுமாதிரி மிகுந்த ஆசையோடு பூஜை செய்வார்.

யாராவது அபிஷேகத்துக்கு பால் மட்டும் கொடுத்தால் வாங்கிக் கொள்வார். மற்றபடி, வெளியில் இருந்தெல்லாம் எதையும் வாங்காமல் நம்முடைய வசதியைக் கொண்டே நம் பூஜையை நாம் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். "நிறையத் த்ரவ்யங்கள் வைத்துப் பூஜை செய்வதற்குப் பெரிய கோவில்கள் இருக்கின்றன, மடங்கள் இருக்கின்றன; அங்கே கொடுங்கள், நம் அகத்து பூஜைக்கு வெளியில் இருந்து எதையும் வாங்கக் கூடாது" என்று சொல்லி விடுவார்.

**புஷ்பை:, க³ந்தை⁴: நிவேத்³யை:, அபி ச விரசிதை: ஶக்திதோ ப⁴க்திபூதை:** புஷ்பம், சந்தனம், நைவேத்யம் ஆகியவற்றை அவரவர் சக்திக்கு ஏத்த அளவுக்குப் பூஜை செய்ய வேண்டும். அது எவ்வளவு தூய்மையாக இருக்க வேண்டும் என்று கேட்டால், ரொம்பவும் "ஆசாரம், ஆசாரம்" என்று எல்லாரையும் பயமுறுத்திக் கொண்டு, தானும் ஷோ பண்ணாமல், "பக்திபூதை:" பக்தியினால் தூய்மை அடைந்த பொருட்களை வைத்துக் கொண்டு வழிபட வேண்டும்.

**நித்யம் வர்யாம் ஸபர்யாம் வித³த⁴த்** தினமும் பூஜை பண்ண வேண்டும். அந்தத் தொடர்ச்சி (constancy) தான் பஜனத்தில் மிக முக்கியம். **அயி விபோ⁴ த்வத்ப்ரஸாத³ம்' ப⁴ஜேயம்** இதன் மூலமாக உன்னுடைய பிரசாதத்தை, அருளை நாடுகிறேன்.

### ஸ்தோத்திர பாராயணங்கள் பூஜைக்கும் மேல்

"கோடி பூஜா ஸமம் ஸ்தோத்திரம்" என்று ஒரு ஶ்லோகம் இருக்கிறது. அதாவது கோடி பூஜைக்குச் ஸமம் ஸ்தோத்திரம்; கோடி ஸ்தோத்திரத்திற்குச் ஸமம் ஜபம்; கோடி ஜபத்திற்குச் ஸமம் தியானம்; கோடி தியானத்திற்குச் ஸமம் லயம் என்பது அதன் கருத்து. இதை ரொம்பவும் ஆராய்ச்சி செய்ய வேண்டாம். ஆனால், ஸ்தோத்திரப் பாராயணத்திற்கு ஸ்வாமிகள் மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பார். ஸ்வாமிகளோடு பழகியவர்கள் எல்லாருமே ஸ்தோத்திர பாராயணத்தை முக்கியமாகக் கொள்வார்கள்.

"ஸுமுகஸ்ச ஏகதந்தஸ்ச" என்கிற ஶ்லோகத்தை 63 முறை சொன்னால், அதுவே கணபதி ஸஹஸ்ரநாமத்திற்குச் ஸமம் என்று சொல்லுவார். புராணத்தில் உள்ள கணபதி ஸஹஸ்ரநாமம் என்றால், அந்தப் புத்தகத்தை வைத்துக் கொண்டு உட்கார ஒரு இடத்தைப் பார்க்க வேண்டும், அதை முழுக்க படித்து முடிக்க நேரம் வேண்டும். "அந்த மாதிரியான கட்டுப்பாடுகள் கூட வேண்டாம்; இந்த ஶ்லோகத்தை 63 தடவை சொல்லுங்கள். எங்கு வேண்டுமானாலும் சொல்லலாம். அதே பலன் கிடைக்கும்" என்கிற அறுதியிட்டுச் சொல்லுவார். கோவிலுக்குச் சென்று அர்ச்சகரிடம் தேங்காய், பழம், தக்ஷிணை கொடுத்து, கணபதிக்கு ஒரு அஷ்டோத்திர அர்ச்சனை பண்ணச் சொல்கிறோம். அது போல, நாமே நமக்காக ஒரு ஸஹஸ்ரநாமம் பண்ணினால், நிச்சயமாக நல்ல பலன் கிடைக்கும் என்று சொல்லுவார்.

### நேரத்தை வீணாக்காமல் பக்தி பண்ணுங்கள்

அடுத்த ஶ்லோகம்: 92வது தசகம் 3வது ஶ்லோகம்

**स्त्रीशूद्राः त्वत्कथादिश्रवणविरहिताः, आसतां ते दयार्हाः,**
**त्वत्पादासन्नयातान् द्विजकुलजनुषो, हन्त शोचामि अशान्तान् ।**
**वृत्यर्थं ते यजन्तः, बहुकथितमपि त्वामनाकर्णयन्तः,**
**दृप्ताः विद्याभिजात्यैः, किमु न विदधते, तादृशं मा कृथा माम् ॥**

**ஸ்த்ரீஶூத்³ரா: த்வத்கதா²தி³ஶ்ரவணவிரஹிதா:, ஆஸதாம் தே த³யார்ஹா:** ஸ்த்ரீகளுக்கும் நான்காம் வர்ணத்தவர்களுக்கும் உன்னுடைய கதைகளைக் கேட்க நேரம் கிடைப்பதில்லை. இது பட்டத்ரி வாழ்ந்த காலத்தில் இருக்கலாம் - அந்த காலத்தில் அவர்கள் எப்போதும் வேலை செய்து கொண்டே இருந்ததால், அவர்களுக்கு பகவானுடைய கதைகளை கேட்பதற்கு நேரமோ, அதற்கான வாய்ப்போ இல்லாமல் இருந்திருக்கலாம். போகட்டும், "ஐயோ பாவம், அவர்கள் உன்னுடைய தயவுக்குப் பாத்திரமானவர்கள்" என்று சொல்கிறார்.

ஆனால், இந்த காலத்தில் அப்படி இல்லை. இப்போது எல்லாருக்கும் நேரம் இருக்கிறது, அந்தக் கதைகளை எல்லாம் கேட்பதற்குப் பல வாய்ப்புகளும் இருக்கின்றன. நான் பார்க்கிறேன், நிறையப் பெண்கள் அதிகமாக உபவாசம் இருக்கிறார்கள். "உப-வாசம்" என்றால் பகவானோடு வசிப்பது என்று அர்த்தம். அதனால் அந்த உபவாசம் இருக்கிற போதாவது, அல்லது

தினமுமே பகவான் பக்கத்தில் இருக்க என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய வேண்டும். பகவானுடைய கதைகளைக் கேட்க வேண்டும். எனக்கு என்ன தோன்றும் என்றால், பெண்களுக்கு மௌன விரதம் இருந்தால் அது உபவாசத்தை விட நல்லது. அது தான் ரொம்பக் கஷ்டம். அதை விட கஷ்டம் மொபைல் போனே இல்லாமல் இருப்பது. அதை ஒரு நாள் முயற்சி செய்து பார்க்கலாம், ஒரு மணி நேரம் முயற்சி பண்ணுவோம். அதெல்லாமே பெரிய தபஸ் தான். சுலபமாக இருப்பதைச் விட கஷ்டமாக இருப்பதைச் செய்தால் தான் தபஸ் இல்லையா? சுகமான போக்கிலிருந்து வெளியில் வந்தால் தான் தபஸ்.

**த்வத்பாதா³ஸந்நயாதான் த்³விஜகுலஜநுஷோ, ஹந்த ஶோசாமி அஶாந்தான்** ஆனால், த்விஜ குலத்தில் பிறந்தும் கூட உன்னுடைய பாதத்தில் பக்தி இல்லாததால், அவர்கள் நிம்மதி இல்லாமல் இருப்பதைப் பார்த்து நான் வருத்தப் படுகிறேன்.
**வ்ரு'த்யர்த²ம் தே யஜந்த:, ப³ஹுகதி²தமபி த்வாமநாகர்ணயந்த:** பிழைப்பிற்காக என்னென்னவோ செய்கிறார்கள், மற்றவர்களுக்கு பூஜை பண்ணி வைக்கிறார்கள். ஆனால், அவர்கள் உன்னுடைய கதைகளைக் கேட்க மாட்டேன் என்கிறார்கள். உன்னுடைய பெருமையை எடுத்துச் சொன்னால் கூடக் காதில் வாங்கிக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள்.
**த்³ரு'ப்தா: வித்³யாபி⁴ஜாத்யை:, கிமு ந வித³த⁴தே, தாத்³ரு'ஶம்', மா க்ரு'தா² மாம்** "நாங்கள் அவ்வளவு படித்திருக்கிறோம், நாங்கள் மேல் ஜாதி" என்கிற கர்வத்தோடு இருக்கிறார்கள். சரி போகட்டும், "என்னை அந்த மாதிரி பண்ணி விடாதே" என்கிறார் பட்டத்ரி. நான் அந்த மாதிரி அகந்தை பிடித்தவனாக ஆகிவிடாமல் இருந்தால் போதும் என்று வேண்டுகிறார்.

**பக்தர்களை பழிக்கக் கூடாது**

அடுத்த ஶ்லோகம் 92வது தசகம் 4வது ஶ்லோகம்

**पापोऽयं कृष्ण राम इत्यभिलपति, निजं गूहितुं दुश्चरित्रं,**
**निर्लज्जस्यास्य वाचा, बहुतरकथनीयानि मे विघ्नितानि ।**
**भ्राता मे वन्ध्यशीलो, भजति किल सदा विष्णुं, इत्थं बुधान् ते**
**निन्दन्ति, उच्चैर्हसन्ति, त्वयि निहितमतीन्, तादृशं मा कृथा माम् ॥**

**ப்⁴ராதா மே வந்த்⁴யஶீலோ, ப⁴ஜதி கில ஸதா³ விஷ்ணும்** என் தம்பி இருக்கிறானே, அவன்  எப்போதும் பூஜை, பாராயணம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறான். **பாபோ(அ)யம் க்ரு’ஷ்ண ராம இத்யபி⁴லபதி, நிஜம் கூ³ஹிதும் து³ஶ்சரித்ரம்** அவன் ஒன்றும் நல்லவன் கிடையாது, தன் துர்க்குணங்களை மறைப்பதற்காகத் தான் எப்போதும் க்ருஷ்ணா, ராமா என்று பஜனை பண்ணிக் கொண்டிருக்கிறான்.
**நிர்லஜ்ஜஸ்யாஸ்ய வாசா, ப³ஹுதரகத²நீயாநி மே விக்⁴நிதாநி** இவனுடைய வெட்கம் கெட்ட நடத்தையினால், என்னுடைய காரியங்கள் எல்லாம் கெடுகிறது" என்று **இத்த²ம் புதான்** வாழ்க்கையின் பயன் என்னவென்று தெரிந்து கொண்ட புத்திமான்களை **த்வயி நிஹிதமதீன்** உன்னிடமே மனதை வைத்திருக்கிற அந்த உத்தமர்களை **தே நிந்த³ந்தி உச்சைர்ஹஸந்தி** துஷ்டர்கள் நிந்தனை செய்கிறார்கள், கேலி செய்கிறார்கள்.  அதாவது, அவனிடம் ஏதேனும் வேலை ஏவ வேண்டுமாம்; அதற்கு இடமில்லாமல் அவன் எப்போதும் பாராயணம் பண்ணிக் கொண்டிருக்கிறான் என்பதால் அவன் பேரில் இவனுக்குக் கோபம் வருகிறது. **தாத்³ரு’ஶம் மா க்ரு’தா² மாம்** என்னை அந்த மாதிரி பக்தர்களை, சாதுக்களை நிந்தனை செய்பவனாக ஆக்கிவிடாதே என்று பட்டத்ரி வேண்டுகிறார்.

பிறர் நம்மை நிந்தனை பண்ணவில்லை என்றால் கூட, நமக்கே நம்மிடம் உள்ள குறைகளை நினைத்து தன்னிரக்கம் ஏற்பட்டு, பஜனத்தில் ஆர்வம் குறையும் வாய்ப்பு இருக்கிறது.

“குஸுமஶரக³ர்வஸம்பத்கோஶக்³ருஹம் பா⁴தி காஞ்சிதே³ஶக³தம் ।
ஸ்தா²பிதமஸ்மிந்கத²மபி கோ³பிதமந்தர்மயா மநோரத்நம் ॥”
ஸ்வாமிகள் மூக பஞ்சஶதீ ஆர்யா சதகத்தில் இருந்து இந்த 65வது ஶ்லோகத்தைச் சொல்லி “உன் மனமாகிய ரத்னத்தை ரகசியமாக காமாக்ஷி என்ற லாக்கரில் வைத்து விடு” என்று சொல்வார். “என் மனம் ஒன்றும் ரத்னமாக இல்லையே” என்று சொல்வேன். “மூக பஞ்சஶதீ படிப்பதால் உன் மனமும் ரத்னம் என்று வைத்துக் கொள். ஏதாவது அழுக்கு படிந்து விட்டது என்று தோன்றினால் ‘ஶ்ரீராம ஜய ராம ஜய ஜய ராம என்று 21 முறை ஜபித்தால் ப்ரம்மஹத்தி போன்ற பாபங்களும் விலகி விடும்’ என்ற தர்ம சாஸ்த்ர வாக்கை நம்பி, அதை ஜபித்து விட்டு, பாராயணத்தை தொடர்ந்து பண்ணு” என்பார். "ஞானம் பிறக்கும்; உண்மை விளங்கும். மூக பஞ்சஶதீ ஸ்தோத்திரத்தை ஐந்து தடவை திருப்பி திருப்பி வாசித்துக் கொண்டே இரு" என்று என்னுடைய

புத்தகத்தில் ஸ்வாமிகள் எழுதிக் கொடுத்து இருக்கிறார். “பாராயணம் செய்து என்ன கண்டேன்? உலக வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா? ஆன்மீகத்தில் முன்னேற்றம் வந்திருக்கிறதா? முகத்தில் ஒளி காணப்படுகிறதா? மற்றவர்கள் மதிக்கிறார்களா? என்று எதையும் யோசிக்காதே. பாராயணம் பண்ணிக் கொண்டே போ, முடிவில் பலன் தெரியும்” என்று சொல்வார்.

நான் அமெரிக்கா போயிருந்தேன். அங்கிருந்த கொஞ்ச நாளிலேயே ஸ்வாமிகளை பிரிந்து இருக்க முடியாது என்று நன்றாகப் புரிந்து கொண்டேன். அவருக்கு நான் கடிதங்கள் எல்லாம் எழுதுவேன். அதில் ஒரு கடிதத்தில், 94வது பாதாரவிந்த சதகத்தில் வரும் ஒரு ஶ்லோகத்தை எழுதினேன்.

ஸதா³ ஸ்வாது³ங்காரம் விஷயலஹரீஶாலிகணிகாம்
ஸமாஸ்வாத்³ய ஶ்ராந்தம் ஹ்ருத³யஶுகபோதம் ஜநநி மே ।
க்ருபாஜாலே பா²லேக்ஷணமஹிஷி காமாக்ஷி ரப⁴ஸாத்
க்³ருஹீத்வா ருந்தீ⁴தா²ஸ்தவ பத³யுகீ³பஞ்ஜரபுடே ॥

"அம்மா! காமாக்ஷி! என் மனமாகிய கிளிக்குஞ்சு உலக போகங்கள் என்கிற நொய் அரிசியை ரசித்து நிறைய சாப்பிட்டு தளர்ந்து போய் விட்டது; கிருபை என்கிற வலையைப் போட்டு என்னைப் பிடித்து, உன்னுடைய பாதமாகிய கூண்டில் வைத்துக் கொள்" என்கிற அர்த்தம் வரும் அந்த ஶ்லோகத்தை எழுதி அனுப்பினேன். அதைப் படித்து விட்டு அவர், "நீ திரும்ப வந்து விடு, போதும் அமெரிக்கா! இன்னும் கொஞ்சம் சம்பாதித்து விட்டு வருகிறேன், கொஞ்சம் அனுபவித்து விட்டு வருகிறேன் என்று நினைக்கதே. நெய்யை ஊற்றி நெருப்பை அணைக்க முடியாது. (எவ்வளவு சம்பாதித்தாலும் பணத்தில் போதும் என்ற எண்ணம் வராது.) பேராசை நரகத்திற்கு வாசல். அதிலிருந்து மனத்தைத் திருப்பினால் தான் நம் ஆத்மாவுக்கு நன்மையான கார்யங்களை பண்ண முடியும். சுந்தரம் பிள்ளையாக பிறந்து (உன் அப்பா முருக பக்தியில் திளைத்து, அதிலேயே பூரண த்ருப்தியோடு, எளிமையாக வாழ்ந்து, எல்லோருக்கும் ஆனந்தத்தைத் தந்து கொண்டு இருக்கிறார். அவரைப் பார்த்துக் கொள்.) அங்கே போய் உட்கார்ந்து இருக்கிறாயே, வந்து விடு" என்றார். உடனே நான் வந்து விட்டேன். அவருடைய கிருபை வலையினால் என்னைப் பிடித்துத் தன் திருவடி நிழலில் வைத்துக் கொண்டார்.

என்னிடம் எப்போதும் போல கருணையுடனேயே இருந்தார். நான் வெளிநாடு போகும்போது அவரிடம் சொல்லிக் கொண்டு போகவில்லை. "இவன் வெளிநாடு போயிட்டு வந்தான், ஆசாரம் கெட்டவன், ப்ராஹ்மணனே கிடையாது" என்றெல்லாம் அவர் எதையுமே சொல்லவில்லை. நான் வந்த பிறகு "இந்த பாராயணங்கள் பண்ணலாமா, இனிமேல் எனக்கு இதற்குத் தகுதி இருக்கிறதா?" என்று அவரிடம் கேட்டபோது, "நீ பாட்டுக்கு படி" என்று சொல்லி விட்டார். எப்போதும் போல பிரியமாய் இருந்தார்.

ஸ்வாமிகளிடம் உட்கார்ந்து, பல வருடங்கள் படித்து, அவரைப் போலவே நாராயணீயத்தை அழகாகப் படிக்கக் கூடிய இன்னொரு பையன் இருந்தான். அந்தப் பையனும் வெளிநாடு போனான். அவன் ஒரு நாள் ஊரிலிருந்து வந்திருந்தான். ஆனால் ஸ்வாமிகள் அவனிடம் அவ்வளவாக அன்பு பாராட்டவில்லை. அவன் போன பின்பு நான் ஸ்வாமிகளிடமே, "நான் வெளிநாடு போயிட்டு வந்த போது என்னிடம் நீங்கள் கோபித்துக் கொள்ளவில்லையே, அவனிடம் ஏன் இவ்வளவு உதாஸீனமாக இருந்தீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு அவர், "இல்லைப்பா, அவனுடைய நண்பர்கள் தான் 'நீ அவரைப் பார்க்காமல் இருக்கக் கூடாது' என்று கட்டாயப்படுத்தி கூட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவனோ, 'நான் இவரை எல்லாம் நமஸ்காரம் செய்ய மாட்டேன், இவர் செய்வதெல்லாம் டைம் வேஸ்ட்' என்று சொல்கிறான்பா" என்றார். அம்மாடி! எனக்குப் பயமே வந்துவிட்டது. "தாத்³ரு'ஶம்', மா க்ரு'தா² மாம்" — பகவானே! என்னை அந்த மாதிரி ஆக்கி விடாதே என்று வேண்டிக் கொண்டேன்.

**நாலு யுகங்களில் தெய்வ வழிபாடு**
அடுத்த ஶ்லோகம் 92வது தசகம் 5வது ஶ்லோகம்

**श्वेतच्छायं कृते त्वां मुनिवरवपुषं, प्रीणयन्ते तपोभिः**
**त्रेतायां स्रुक्स्रुवाद्यङ्कितं अरुणतनुं, यज्ञरूपं यजन्ते ।**
**सेवन्ते तन्त्रमार्गैः, विलसदरिगदं द्वापरे श्यामलाङ्गं,**
**नीलं सङ्कीर्तनाद्यैः इह कलिसमये, मानुषाः त्वां भजन्ते ॥**

**ஶ்வேதச்சா²யம் க்ரு'தே த்வாம் முநிவரவபுஷம், ப்ரீணயந்தே தபோபி⁴:, த்ரேதாயாம் ஸ்ருக்ஸ்ருவாத்³யங்கிதம் அருணதநும், யஜ்ஞரூபம் யஜந்தே | ஸேவந்தே தந்த்ரமார்கை³: விலஸத³ரிக³த³ம்**

**த்$^{3}$வாபரே ஶ்யாமளாங்க$^{3}$ம், நீலம் ஸங்கீர்தநாத்$^{3}$யை: இஹ கலிஸமயே மாநுஷா:, த்வாம் ப$^{4}$ஜந்தே ॥**
கிருதயுகத்தில் வெண்ணிறமுடைய முனிவரின் வடிவத்தில் உன்னைத் தபஸினால் திருப்தி செய்கிறார்கள். திரேதாயுகத்தில் ஸ்ருக், ஸ்ருவம் முதலிய யாகக் கரண்டிகளை அடையாளமாகக் கொண்டு, சிவந்த உருவமுடைய யக்ஞரூபியான உன்னை வழிபடுகிறார்கள். துவாபரயுகத்தில் பிரகாசிக்கின்ற சக்கரத்தையும் கதையையும் உடைய சியாமளவர்ணமாக (கருநீல நிறமாக), தந்திர சாஸ்த்ரங்களில் கூறிய பூஜா மார்க்கங்களில் உன்னைச் சேவிக்கிறார்கள். இந்தக் கலியுகத்தில் நீலவர்ணனான உன்னை நாம ஸங்கீர்த்தனம் முதலியவற்றால் மனிதர்கள் பஜிக்கிறார்கள் என்று கரபாஜன யோகி சொல்கிறார்.

சுருக்கமாக சொல்வதானால் - கிருதயுகத்தில் பகவானைத் தவம், தியானம் மூலமாகவும், திரேதாயுகத்தில் யாகங்கள் மூலமாகவும், துவாபரயுகத்தில் பூஜை செய்தும் வழிபடுகிறார்கள்; ஆனால், இந்த கலியுகத்தில் நாம ஸங்கீர்த்தனம் மூலமாகவே மிக எளிமையாக பகவானை அடைந்து விடலாம்.

இந்த இடத்தில் பாகவதத்தில், கலியில் ராமரை இவ்வாறு துதித்து வழிபடுகிறார்கள் என்று இரண்டு ஶ்லோகங்கள் வருகின்றன.
த்$^{4}$யேயம்’ ஸதா$^{3}$ பரிப$^{4}$வக்$^{4}$னம்-அபீ$^{4}$ஷ்டதோ$^{3}$ஹம்
தீர்தா$^{2}$ஸ்பத$^{3}$ம் ஶிவவிரிஞ்சினுதம் ஶரண்யம் |
ப்$^{4}$ரு’த்யார்திஹம் ப்ரணதபால ப$^{4}$வாப்$^{3}$தி$^{4}$போதம்
வந்தே$^{3}$ மஹாபுருஷ தே சரணாரவிந்த$^{3}$ம் ||

த்யக்த்வா ஸுது$^{3}$ஸ்த்யஜ-ஸுரேப்ஸித-ராஜ்யலக்ஷ்மீம்
த$^{4}$ர்மிஷ்ட$^{2}$ ஆர்யவசஸா யத$^{3}$கா$^{3}$த$^{3}$ரண்யம் |
மாயாம்ரு’க$^{3}$ம்’ த$^{3}$யிதயேப்ஸிதம்-அன்வதா$^{4}$வத்$^{3}$
வந்தே$^{3}$ மஹாபுருஷ தே சரணாரவிந்த$^{3}$ம் ||

என்கிற ஶ்லோகங்களைச் சொல்லி கலியுகத்தில் உன்னை வழிபடுகிறார்கள் என்று வருகிறது.

"த்$^{4}$யேயம்’ ஸதா$^{3}$ பரிப$^{4}$வக்$^{4}$னம்" — தன்னை தியானம் செய்பவர்களுடைய குறைகளைப் போக்குபவர். "அபீ$^{4}$ஷ்டதோ$^{3}$ஹம்" — விரும்பியவற்றை எல்லாம் தருபவர். "தீர்தா$^{2}$ஸ்பத$^{3}$ம்" — புண்ணிய

தீர்த்தங்களுக்கு நிகரானவர் (ராமரை நினைத்தாலே கங்கையில் நீராடியதற்குச் சமம்). "ஶிவவிரிஞ்சினுதம்" — பரமேஸ்வரனும் பிரம்மாவும் வணங்குகிற "ஶரண்யம்" — சர்வலோக சரண்யராச்சே ராமர்! “ப்⁴ரு’த்யார்திஹம்" — தன்னுடைய பக்தர்களுடைய துன்பத்தைப் போக்குபவர். "ப்ரணதபால" — நமஸ்காரம் செய்கிற தன்னுடைய பக்தர்களைக் காப்பாற்றுபவர். "ப⁴வாப்³தி⁴போதம்" — இந்த பவக்கடலைத் தாண்ட வைக்கிற ஓடம் போன்றவர் அவர். "வந்தே³ மஹாபுருஷ தே சரணாரவிந்த³ம்" — ஹே மஹாபுருஷ, உன்னுடைய சரணாரவிந்தத்தை வணங்குகிறேன்.

"த்யக்த்வா ஸுது³ஸ்த்யஜ-ஸுரேப்ஸித-ராஜ்யலக்ஷ்மீம்" — தேவர்களும் விரும்பும் கோசல ராஜ்யத்தை, அயோத்திப் பட்டினத்தை ‘த்யக்த்வா’ — துறந்துவிட்டு, எதற்காகத் துறந்தார்? தந்தையின் பேச்சைக் கேட்க வேண்டும், அவர் கொடுத்த வார்த்தை ஸத்யமாக்க வேண்டும் என்பதற்காக, “த⁴ர்மிஷ்ட² ஆர்யவசஸா யத³கா³த³ரண்யம்" — யார் காட்டுக்குச் சென்றாரோ, அவருடைய பாதங்களை வணங்குகிறேன். "மாயாம்ரு’க³ம்’ த³யிதயேப்ஸிதம்-அன்வதா⁴வத்³" — தன்னுடைய ப்ரிய மனைவியான சீதை ஆசைப்பட்டாள் என்பதற்காக, அந்த மாயமான் பின்னால் ஓடிய "வந்தே³ மஹாபுருஷ தே சரணாரவிந்த³ம்" - ஹே மஹாபுருஷ, உன்னுடைய சரணாரவிந்தங்களை வணங்குகிறேன்.

ராம பூஜையின் முடிவில், அவரிடம் பிரார்த்தனை செய்வதற்குப் பொருத்தமாக, பாகவதத்தில் இந்த அழகான இரண்டு ஶ்லோகங்கள் இருக்கின்றன. இந்த இரண்டாவது ஶ்லோகத்தில், தந்தை பேச்சைக் கேட்டுக் காட்டுக்கு வந்தார், சீதை ஆசைப்பட்டதற்காக மாயமான் பின்னாடி ஓடினார் என்று இருக்கிறதே. ஸ்வாமிகள் அதை அப்படியே சொல்லுவார்; வேறு விசேஷ அர்த்தங்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்க மாட்டார்.

## பகவானுடைய கதைகளை உள்ளபடி படித்தாலே போதும்

ஸ்வாமிகளிடம் பாகவதம் கேட்பதும், ராமாயணம் கேட்பதும் மிகவும் எளிமையாக இருக்கும்; மனது உருகும்படிச் சொல்லுவார். மூல நூலில் என்ன கதை இருக்கிறதோ, அதை அப்படியே சொல்லுவார். ஒரு விஷயத்தை பேசும் போது, அதே மூலத்தில் இன்னொரு இடத்தில் இருக்கிற விஷயத்தைச் சேர்த்துச் சொல்லுவார். அடுத்தவர்களைப் பிரமிக்க வைக்க வேண்டும் என்பதற்காக எதையும் சொல்ல மாட்டார்.

இப்போது இந்தச் சீதையைப் பிரிந்து ராமர் கஷ்டப்பட்டார் என்கிற இடத்தில் - ராமர் தவித்துப் போய்விடுகிறார். தேடிக் கொண்டே போகிறார். ஜடாயுவும் ராவணனும் யுத்தம் செய்த இடத்தைப் பார்க்கிறார். ரத்தக்களறி, தேர் உடைந்திருக்கிறது, சாரதி விழுந்து கிடக்கிறான்; ஜடாயுவைக் காணோம், அவர் தள்ளிப் போய் எங்கேயோ விழுந்திருக்கிறார். இதைப் பார்த்தவுடனேயே ராமருக்கு அதுவரை இருந்த அந்த வருத்தம், பசி, தாகம், அலைச்சல், சீதையை காணோமே என்கிற துக்கம் எல்லாமே பெரும் கோபமாக மாறுகிறது.

அவர் சொல்கிறார்: "இந்த தேவர்கள் என்னை கேலி செய்கிறார்கள். நான் சாதுவாக இருக்கிறேன் என்பதை வைத்துக் கொண்டு என்னை அவமானப் படுத்துகிறார்கள். நான் இதற்கு பழிவாங்கப் போகிறேன்; மூவுலகத்தையும் புரட்டிப் போடப் போகிறேன்" என்று கோபத்துடன் கையில் வில்லையும் அம்பையும் எடுக்கிறார். ப்ரம்மாஸ்த்ரம் முதலிய சக்தி வாய்ந்த ஆயுதங்கள் அவரிடம் இருப்பதால், ராமரால் அதைச் செய்யவும் முடியும். அப்பொழுது லக்ஷ்மணன் அவருடைய பாதங்களைப் பற்றிக் கொள்கிறான்.

லக்ஷ்மணனுக்கு ராமர் மேல் இருந்த உண்மையான அன்பிற்கு இது தான் மிகச் சிறந்த அடையாளம். சீதை தகாத வார்த்தைகளை பேசி லக்ஷ்மணனை வெளியில் அனுப்பி விட்டாள். ராமர் லக்ஷ்மணனைப் பார்த்தவுடனே, "என் கட்டளையை மீறி நீ ஏன் வந்தாய்? உன்னை நம்பித் தானே நான் சீதையை விட்டு வந்தேன்?" என்று கடுமையாக திட்டுகிறார். ஆனால், லக்ஷ்மணன் அதையெல்லாம் மனதில் வைக்காமல், உண்மையான அன்பின் காரணமாக ராமருடைய பாதங்களைப் பற்றிக் கொண்டு, "அண்ணா, பூமிக்கே பூகம்பம் ஏற்படுகிறது அல்லவா? சந்திர சூரியர்களுக்கே க்ரஹணம் பிடிக்கிறது அல்லவா? வசிஷ்டருக்கே புத்திர சோகம் வரவில்லையா? கஷ்டம் என்பது யாருக்குத் தான் வருவதில்லை? உன்னைப் போன்ற பெரியவர்களாக இருக்கிறவர்கள் இதைப் பொறுத்துக் கொள்ள வேண்டாமா? புயல் காற்றில் மரங்கள் விழும், மலை விழுமா? அந்த மாதிரி தைரியமாக இரு. நீ இப்படிக் கோபித்துக் கொள்ளாதே. யாரோ ஒருத்தன் செய்த தப்பிற்காக ராக்ஷஸ குலத்தையே அழிப்பேன், உலகத்தையே புரட்டிப் போடுவேன் என்றெல்லாம் சொல்லலாமா? ராமன் என்றால் நம்மைக் காப்பாற்றுவான் என்று

எவ்வளவு பேர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்! கொஞ்சம் பொறுமையாக இரு" என்று சொல்கிறான்.

உடனே "பூர்வஜோபி" — அண்ணாவாக இருந்தாலும், "உக்தமாத்ரஸ்து" — அந்த வார்த்தையைச் சொன்னவுடனேயே, "ஸாரக்ராஹீ" — ராமன், ஒரு சின்னக் குழந்தை சொன்னால் கூட அதில் இருக்கும் ஸாரத்தை எடுத்துக் கொள்வான். "லக்ஷ்மணேன ஸுபாஷிதம்" — லக்ஷ்மணன் அவ்வளவு அழகாக, நல்ல வார்த்தைகளைச் சொல்லித் தருகிறான். "மஹாஸாரம் ப்ரதிஜக்ராஹ ராகவ:" — மஹாஸாரமான அந்த வார்த்தைகளை ராமர் உடனே கேட்டுக் கொண்டார். "சரி லக்ஷ்மணா, இப்போது என்ன பண்ணலாம் சொல்லு? எங்கே போகலாம்?" என்று கேட்கிறார்.

இந்த இடத்தில் ஸ்வாமிகள் சொல்லுவார்: "எந்த ராமனை 'உத்தரோத்தர யுக்தீநாம் வக்தா வாசஸ்பதி: யதா' — இதை எப்படிச் செய்யலாம் என்று பேசிக் கொண்டிருக்கும் போது, இப்படிச் செய்யலாமா என்று ஒருத்தர் சொன்னால், இப்படி பண்ணலாமே என்று ராமர் ஒரு சிறந்த யுக்தி சொல்லுவார். அப்படி மேலான யுக்தி சொல்லுவதில் பிரஹஸ்பதியைப் போன்ற புத்திமானான ராமன், 'எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லையே, என் புத்தியே மழுங்கிப் போய்விட்டதடா! என்ன செய்யலாம் சொல்லு' என்று லக்ஷ்மணனிடம் அழுகிறார்" என்று சொல்லி, நம்மையும் ராமருக்காக அழ வைத்து விடுவார். அது தான் ஸ்வாமிகள்! அவரிடம் ராமாயணம், பாகவதம் கேட்பது ஒரு தனி ஆனந்தம். ராம பக்தி ஏற்படும். க்ருஷ்ண பக்தி ஏற்படும்.

முகுந்தமாலையில் 35வது ஶ்லோகம்:
தா$^{3}$ரா வாராகரவரஸுதா தே தனூஜோ விரிஞ்சி:
ஸ்தோதா வேத$^{3}$: தவ ஸுரக$^{3}$ணா: ப்$^{4}$ரு’த்யவர்க:$^{3}$ ப்ரஸாத$^{3}$: ।
முக்தி: மாயா ஜக$^{3}$த$^{3}$விகலம் தாவகீ தே$^{3}$வகீ தே
மாதா மித்ரம் ப$^{3}$லரிபுஸுத: த்வய்யத: அன்யம் ந ஜானே ॥

உன்னுடைய மனைவி பாற்கடலில் பிறந்த "வாராகரவரஸுதா" அலைமகள் லக்ஷ்மி. லக்ஷ்மி எப்படிப் பாற்கடலில் இருந்து வந்து பகவானுக்கு மாலையிட்டாள் என்கிற அந்த கதையை ஸ்மரிக்க வேண்டும். "தே தனூஜோ விரிஞ்சி:" — உன்னுடைய தொப்புளிலிருந்து தாமரை வந்தது, அதில் பிரம்மா தோன்றினார் என்கிற கதை. "ஸ்தோதா வேத$^{3}$:" — வேதங்கள் உன்னை ஸ்தோத்திரம் செய்கின்றன. "தவ

ஸூரக³ணா: ப்⁴ரு'த்யவர்க:³" — தேவர்கள் உன்னுடைய ஏவலாளர்கள். "ப்ரஸாத³ முக்தி:" — நீ செய்கிற அருள் என்னவென்றால், அது முக்தி தான். "மாயா ஜக³த³விகலம் தாவகீ" — இந்த ஜகமே உன்னுடைய மாயை. "தே³வகீ தே மாதா" — உன்னுடைய அம்மா தேவகி; உடனே அந்த தேவகியோடும் யசோதையோடும் நடந்த க்ருஷ்ணனுடைய பால லீலைகள் நினைவுக்கு வர வேண்டும். "மித்ரம் ப³லரிபுஸூத:" — உன்னுடைய நண்பன் அர்ஜுனன் - திருவல்லிக்கேணி க்ஷேத்திரத்தில் கீதாசாரியனாக நின்று கொண்டிருக்கிறான் என்பதை நினைத்துக் கொள்ள வேண்டும். "த்வய்யத: அன்யம் ந ஜானே" — இதைத் தவிர எனக்கு உன்னைப் பற்றி வேறொன்றும் தெரியாது என்கிறார்.

அதுபோல, நம்மால் பிரம்மத்தை நேரடியாக எப்படி நினைக்க முடியும்? இந்த க்ருஷ்ணனுடைய கதைகளை எல்லாம் படித்து மிகச் சுலபமாகத் தியானம் செய்ய முடியும். அந்த மாதிரி ஸ்வாமிகள், ராமரைப் பற்றியோ, க்ருஷ்ணரைப் பற்றியோ அந்தக் கதைகளின் மூலமாக அவருடைய குணத்தைத் தியானம் செய்யச் சொல்லிக் கொடுப்பார். இதுதான் நம்மால் இயன்றது. உலக விஷயங்களில் ஆழமாக மாட்டிக் கொண்டிருக்கிறோம் நாம் பிரம்மத்தை எங்கே போய் தியானம் செய்வது? இந்தக் கதைகளைக் கேட்டுக் கொண்டிருந்தால், அதன் மூலமாகப் பகவான் தானாகவே மனதிற்குள் வந்து விடுவார் என்று சொல்லிக் கொடுப்பார்.

### கலியுகத்தின் பெருமை

அடுத்ததாக, 92வது தசகத்தின் ஆறாவது ஶ்லோகம்:

**सोऽयं कालेयकालो जयति, मुररिपो यत्र, सङ्कीर्तनाद्यैः**
**निर्यत्नैरेव मार्गैः, अखिलदा, न चिरात्, त्वत्प्रसादं भजन्ते ।**
**जाताः त्रेताकृतादावपि हि किल, कलौ सम्भवं कामयन्ते**
**दैवात् तत्रैव जातान्, विषयविषरसैः मा विभो वञ्चयास्मान् ॥**

**ஸோ(அ)யம் காலேயகாலோ ஜயதி, முரரிபோ யத்ர, ஸங்கீர்தநாத்³யை: நிர்யத்நைரேவ மார்கை³:, அகி²லதா³, ந சிராத், த்வத்ப்ரஸாத³ம் ப⁴ஜந்தே** முரரிபோ! அப்பேர்ப்பட்ட சிறந்த இந்த கலிகாலமானது வெற்றியோடு விளங்குகிறது. ஏனென்றால், இந்த கலியில் ஸங்கீர்த்தனம் போன்ற அதிக சிரமமில்லாத எளிய

மார்க்கத்தின் மூலமாகவே, நசிராத் — மிக விரைவிலேயே, அகிலத த்வத்ப்ரஸாதம் பஜந்தே — உன்னுடைய அருளை மனிதர்கள் முழுமையாக அடைந்து விடுகிறார்கள்.

### ஸ்வாமிகள் உபதேசித்த நாம மந்த்ரம்

ஸ்வாமிகள் 1990-இல், அதாவது 36 வருடங்களுக்கு முன்னால் ஒரு பேப்பரில் எனக்கு இதை எழுதிக் கொடுத்தார்:

"குரு$^3$மூர்தே த்வாம் நமாமி காமாக்ஷி" என்று நான்கு முறை சொல்லவும். அதற்குப் பிறகு வில்வமங்களாச்சாரியார் என்பவர் 'கோவிந்த தாமோதர ஸ்தோத்திரம்' என்று ஒன்று செய்திருக்கிறார். அது ஸ்வாமிகளுக்கு மிகவும் பிடிக்கும். அதனால் தான் அவரை எல்லாரும் 'கோவிந்த தாமோதர ஸ்வாமிகள்' என்றே அழைக்கிறோம். அந்த ஸ்தோத்திரத்திலிருந்து ஒரு ஶ்லோகம்:

"த்$^4$யேய: ஸதா$^3$, யோகி$^3$பி$^4$: அப்ரமேய:,
சிந்தாஹர:, சிந்தித-பாரிஜாத: |
கஸ்தூரிகா-கல்பித-நீலவர்ண:,
கோ$^3$விந்த$^3$ தா$^3$மோத$^3$ர மாத$^4$வேதி||" இதை ஒரு முறை சொல்லவும்.
"த்$^4$யேய: ஸதா$^3$, யோகி$^3$பி$^4$" — யோகிகளால் எப்போதும் தியானம் செய்யப்படுபவரும், "அப்ரமேய:" — எல்லையற்றவரும், "சிந்தாஹர:" — கவலைகளைப் போக்குபவரும், "சிந்தித-பாரிஜாத:" — தன்னை தியானம் செய்பவர்களுக்குப் பாரிஜாத மரத்தைப் போல, கற்பக வ்ருக்ஷத்தைப் போல வேண்டியதை எல்லாம் கொடுப்பவரும், "கஸ்தூரிகா கல்பிதநீலவர்ண:" — கஸ்தூரி போன்ற நீலவண்ணம் கொண்டவருமான அந்த க்ருஷ்ணனுடைய "கோவிந்தா, தாமோதரா, மாதவா" என்ற நாமங்களைச் சொல்லுங்கள் என்று அர்த்தம். இந்த ஶ்லோகம் ஒரு முறை. அதற்கு அப்புறம்:

"கோ$^3$விந்த$^3$ கோ$^3$விந்த$^3$ ஹரே முராரே,
கோ$^3$விந்த$^3$ கோ$^3$விந்த$^3$ முகுந்த$^3$ க்ரு'ஷ்ண |
கோ$^3$விந்த$^3$ கோ$^3$விந்த$^3$ ரதா$^2$ங்க$^3$பாணே,
கோ$^3$விந்த$^3$ தா$^3$மோத$^3$ர மாத$^4$வேதி ||"

இதை 72 முறை சொல்லுங்கள் என்று ஸ்வாமிகள் சொன்னார். இப்படிச் சொன்னால், இந்த ஶ்லோகத்தில் 14 விஷ்ணு பகவான் நாமங்கள்

இருக்கின்றன. 72 x 14 = 1008. ஒரு விஷ்ணு ஸஹஸ்ரநாமம் சொல்வதற்குச் சமம். இந்த நாம ஜபத்திற்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் கிடையாது; யார் வேண்டுமானாலும் சொல்லலாம், எங்கே வேண்டுமானாலும் சொல்லலாம், எப்போது வேண்டுமானாலும் சொல்லலாம். தலைக்கு ஒரு தலகாணி, காலுக்கு ஒரு தலகாணி வைத்துக் கொண்டு, படுக்கையில் படுத்துக் கொண்டே கூடச் சொல்லலாம். "சிந்திதபாரிஜாத:" — பாரிஜாதம் போல நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் இந்த பகவந்நாமங்கள் கொடுக்கும் என்று ஸ்வாமிகள் கூறுவார்.

“உனக்கு சுகம் வேண்டுமா? இந்த நாமங்களைச் சொல்லிக் கொண்டே இருந்தால், இந்த்ராதி தேவர்களுக்கும் மேலான சுகத்தை நீ அனுபவிப்பாய். உனக்குத் தாங்க முடியாத கஷ்டம் இருக்கிறதா, அழுகையாக வருகிறதா, என்ன செய்தாலும் மனம் ஆறவில்லையா? இந்த கோவிந்த தாமோதர நாமங்களைச் சொல்லிக் கொண்டே இருந்தால் மனதிற்குச் சாந்தி ஏற்படும். உடல் கீழே விழப் போகும் அந்த இறுதி நேரத்தில் கூட, நாக்கில் இந்த கோவிந்த தாமோதர நாமம் வரும்படி இப்பொழுதிலிருந்தே பழகிக் கொள். அப்படி பகவந்நாமத்தை சொல்லிக் கொண்டே இந்த உடம்பின் முடிவு ஏற்பட்டால், பகவான் நம்மை கோலோகத்திற்கோ, அல்லது சிவபக்தனாக இருந்தால் கைலாசத்திற்கோ அழைத்துச் செல்வார்.”

"நாக்கே! உனக்குப் பிடித்த பாதாம் அல்வா, தயிர்வடை எல்லாம் ஆயுள் முழுவதும் வாங்கிக் கொடுத்திருக்கிறேன். உன்னிடம் எனக்கு இருக்கும் ஒரே ஒரு வேண்டுகோள் (obligation), எமன் வந்து தன் தண்டத்தைக் காட்டிப் பயமுறுத்தும்போது என் நாவில் பகவானுடைய நாமம் வர வேண்டும் என்பது தான். அந்த நேரத்தில் கூடவே யார் இருப்பார்கள் என்று நம்மால் எதுவும் சொல்ல முடியாது. எப்போதும் தொண்டையில் நாக்கு இருக்கிறது, அதனால் நாக்கே! உன்னிடமே கேட்டுக் கொள்கிறேன்" என்று ஸ்வாமிகள் நயமாகச் சொல்வார். அப்படி இடையறாது பகவந்நாமத்தைச் சொல்லி நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

ஸ்வாமிகளிடம் விச்வநாத ஐயர் என்று ஒருத்தர் வருவார். அவர் ஸ்வாமிகளுடைய அனுக்ரஹத்தினால், நல்ல செல்வந்தர் ஆனார். அவருக்கு ராமாயணத்தில் மிகவும் ப்ரியம். ஸ்வாமிகள் எங்கே ராமாயணம் படித்தாலும், தன்னுடைய அந்தஸ்தைப் பார்க்காமல்,

அங்கே போய் உட்கார்ந்து கேட்டு, ஸ்வாமிகளை நமஸ்காரம் பண்ணிவிட்டு வருவார். அவருடைய பார்ட்னர் ஒருத்தர், "நீங்க எப்போதும் ஓய்வில்லாமல் என்னவோ இந்த பாராயணம் எல்லாம் செய்கிறீர்கள். நான் அப்படி எல்லாம் ஸ்வாமியை ஒண்ணும் தொந்தரவு பண்ண விரும்பவில்லை. எனக்கு வேண்டியது எல்லாம் கடவுள் கொடுத்துட்டார், நான் பாட்டுக்கு நிம்மதியாக இருக்கேன்" என்று சொன்னாராம். இதை விச்வநாத ஐயர் ஸ்வாமிகளிடம் வந்து சொன்னார். ஸ்வாமிகள் அதற்கு பதில் சொன்னார்:

"சுகம், துக்கம் என்பது வேறு; சந்துஷ்டி என்கிற மகிழ்ச்சி என்பது வேறு. துன்பமும் இன்பமும் ஒன்றை ஒன்று துரத்தி அழித்துக் கொள்பவை. ஆனால் மகிழ்ச்சி என்பது மன அமைதியால், சமநிலையால் மட்டுமே வரக்கூடியது. அதற்காகத் தான் நாம் பகவத் பஜனம் செய்கிறோம். பஜனம் பண்ணினால் பேங்க் பேலன்ஸ் ஜாஸ்தியாகுமா, வெளிநாடு போன நண்பர்கள் எல்லாம் அங்கே ஒரு வீடு, இங்கே ஒரு வீடு, வசதியான வாழ்க்கைக்கு வேண்டியதை வாங்கிப் போட்டுக் கொண்டு இருக்கிறார்களே, அதெல்லாம் இப்படி உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தால் வருமா என்றால், நமக்கு உண்மையில் எது தேவையோ அது நிச்சயம் கிடைக்கும். அதோடு 'பரமாம் சாந்திம்' — உயர்ந்த சாந்தி கிடைக்கும்; முடிவில் பகவானே கிடைப்பார், இந்த முதல் இரண்டும் (தேவையானது கிடைப்பதும், சாந்தியும்) அனுபவத்தில் தெரியும். பிறவித் தளையிலிருந்து விடுபடலாம், மீண்டும் ஜன்மம் இருக்காது என்பதை, நம்பி பண்ண வேண்டியது தான்" என்பார் ஸ்வாமிகள்.

### தமிழ் தேசத்தின் பெருமை

இந்த இடத்தில் இன்னொரு அழகான பிரார்த்தனையை ஶ்லோகத்தின் பிற்பகுதியில் பட்டத்ரி சேர்க்கிறார்:

**ஜாதா: த்ரேதா-க்ரு’தாதா³வபி ஹி கில கலௌ ஸம்ப⁴வம் காமயந்தே**

திரேதாயுகத்திலும் கிருதயுகத்திலும் பிறந்தவர்கள் கூட, இந்த கலியுகத்தில் மிகச் சுலபமான மார்க்கத்தில் (நாம ஸங்கீர்த்தனத்தில்) பகவானை அடையலாம் என்பதால், "நாங்கள் கலியுகத்தில் போய் பிறக்க வேண்டும்" என்று ஆசைப்படுகிறார்களாம். **தை³வாத்** ஏதோ புண்ணியவசத்தினால், **தத்ரைவ ஜாதான்** அந்த கலியுகத்தில் வந்து பிறந்திருக்கும் எங்களை, **விஷயவிஷரஸை:, மா விபோ⁴, வஞ்சயாஸ்மான்** இந்த உலக விஷயங்கள், போகப் பொருட்கள் என்கிற விஷம் போன்ற மாயைகளில் தள்ளி, பகவானே! எங்களை

வஞ்சித்துவிடாதே’ என்கிறார். கலியுகத்தில் இந்த கவர்ச்சிகளும் ஜாஸ்தியாக இருக்கின்றன அல்லவா, அதனால் எங்களை அதில் தள்ளி விடாதே என்கிறார் பட்டத்ரி.

அடுத்த ஶ்லோகம்: 92வது தசகம் ஏழாவது ஶ்லோகம்:

**भक्तास्तावत्कलौ स्युः, द्रमिलभुवि ततो भूरिशः, तत्र चोच्चैः**
**कावेरीं, ताम्रपर्णीं, अनु किल कृतमालां च, पुण्यां प्रतीचीम् ।**
**हा मामपि एतत् अन्तर्भवं, अपि च विभो, किञ्चिदञ्चद्रसं त्वयि,**
**आशापाशैर्निबध्य, भ्रमय न भगवन्, पूरय त्वन्निषेवाम् ॥**

**ப⁴க்தாஸ்தாவத்கலௌ ஸ்யு:, த்³ரமிலபு⁴வி ததோ பூ⁴ரிஶ:** இந்த கலியுகத்திலேயே பக்தர்கள் நிறைய பேர் இருப்பார்கள். அதிலும் தமிழ் தேசத்தில் (திராவிட தேசத்தில்) மிக அதிகமாகப் பக்தர்கள் பிறப்பார்கள். **தத்ர ச உச்சைஹி காவேரீம், தாம்ரபர்ணீம்** புண்ணியமான காவேரி நதிக்கரையிலும், தாம்ரபர்ணி தீரத்திலும், **அநு கில க்ருதமாலாம்** கிருதமாலா என்றால் வைகை நதி, **புண்யாம் ப்ரதீசீம்** அப்புறம் பாரதப்புழா என்று மேற்கு நோக்கி ஓடும் நதிகள், இப்படிப்பட்ட பகுதிகளில் அதிகமான பக்தர்கள் பிறப்பார்கள். ஆழ்வார்களும், நாயன்மார்களும் இங்கே தானே அவதாரம் செய்தார்கள்!

ஆழ்வார் திருநகரியில் நம்மாழ்வார் அவதாரம் செய்தார். நம்மாழ்வாருக்கு அங்கே பகல்பத்து, ராப்பத்து உற்சவங்கள் நடக்கும் போது, ஸ்வாமிகள் இங்கே அவரைத் தியானம் செய்வார். ஶ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள், இங்கே நம் காஞ்சீபுரத்தில் காமாக்ஷி அருகில் எத்தனை பக்தர்கள்! திருவண்ணாமலை போன்ற எத்தனை புண்ணிய க்ஷேத்திரங்களில் எத்தனை சித்தர்கள், மகான்கள்! ஸங்கீத மும்மூர்த்திகள் திருவாரூரில் பிறந்து நமக்கு எவ்வளவு அழகழகான கிருதிகளைப் பண்ணிக் கொடுத்திருக்கிறார்கள்! உங்களுக்குக் கல்யாணி ராகம் பிடிக்குமா? மூன்று பேரும் அழகாகக் கல்யாணியில் பாடியிருக்கிறார்கள். காம்போதி பிடிக்குமா, சங்கராபரணம் பிடிக்குமா, எல்லாவற்றிலும், ஏன், வித்தியாசமான அபூர்வ ராகங்களில் கூட தியாகராஜ ஸ்வாமிகள் எத்தனையோ கிருதிகள் பாடிக் கொடுத்திருக்கிறார். அதையெல்லாம் கேட்டுக் கொண்டு ஆனந்தமாகப் பகவத் தியானத்தில் இருக்கலாம்.

தமிழ் தேசத்தில் பிறந்தவர்களுக்கு எல்லாம் கிடைத்த பெரிய பாக்கியம் அருணகிரிநாதர். அருணகிரிநாதர் அவ்வளவு அழகாக இந்த பாகவதத்தில் இருக்கிற 11வது ஸ்கந்தக் கருத்துக்களை முழுக்க முழுக்க முருக பக்தியோடு சேர்த்து நமக்குக் கொடுக்கிறார்!

அதுவும் பகவந்நாமங்களில் தான் அவருக்கு எவ்வளவு பிரீதி! 'மைவரும் கண்டத்தர் மைந்த, கந்தா, என்று வாழ்த்தும் இந்தக் கைவரும் தொண்டு அன்றி மற்று அறியேன்' என்கிறார். 'முருகா, உன் நாமங்களைச் சொல்லி துதிப்பதைத் தவிர வேறு ஒன்றும் எனக்குத் தெரியாது' என்கிறார்.
பொதுவாக விஷ்ணு பகவானைப் பற்றி சொல்ல வரும் போது ராமாயண, பாகவதக் கதைகளைச் சொல்வார்; பரமேஸ்வரன் என்றால், அவருடைய அந்த ரூபத்தை நிறைய வர்ணிப்பார்; ஆனால் அம்பாள் என்று வந்து விட்டாலே, அவருடைய வாக்கில் அம்பாள் நாமங்கள் மடை திறந்த வெள்ளம் போலக் கரை புரண்டோடி வரும். நாம அர்ச்சனைதான்! 'கமல மாதுடன்' என்று தொடங்கும் பாடலில்,

"குமரி காளி பயங்கரி சங்கரி கௌரி நீலி பரம்பரையம்பிகை
குடிலை யோகினி சண்டினி குண்டலி எமதாயீ
குறைவிலாளுமை மந்தரி அந்தரி வெகுவிதாகம சுந்தரி தந்தருள்
குமர மூஷிக முந்திய ஐங்கர கணராயன்
மம விநாயகன் நஞ்சுமழ் கஞ்சுகி அணிகஜானன விம்பனொரம்புலி
மௌலியானுரு சிந்தையுகந்தருள் இளையோனே
வளரும் வாழையும் மஞ்சளும் இஞ்சியும் இடைவிடாது நெருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்திலில் வந்தருள் பெருமாளே" என்பார்.

சீர் பாத வகுப்பில் "யுவதி பவதி பகவதி மதுரவசனி பயிரவி கவுரி உமையாள் த்ரிசூலதரி வநசை மதுபதி அமலை விசயை திரிபுரை புநிதை வநிதை அபினவை அநகை அபிராம நாயகி தன் மதலை" என்பார். அவர் காமாக்ஷி ஸ்துதியாக பாடியுள்ள "தரணியிலரணிய" என்று தொடங்கும் தேவேந்திர சங்க வகுப்பு, 16 பேறுகளையும் அளிக்கக் கூடிய, 16 வரிகள் கொண்ட, இந்த்ராக்ஷிக்கு நிகரான ஒரு மகா மந்திரமாக மகான்களால் கொண்டாடப் படுகிறது.

எங்கள் அப்பாவிற்குத் திருப்புகழில் ரொம்பப் ப்ரியம். அதனால் எங்களுடைய இல்லத்தில் திருப்புகழ் நிறையக் கேட்டு, சின்ன

வயதிலிருந்தே அது என் மனதிற்குள் ஆழப் பதிந்திருக்கிறது. திருத்தணியில் வருஷா வருஷம் படிவிழா நடத்துவார்கள். அங்கே
"திருத்தணி மேவும் பெருமாளே! உனைப்பல நாளும் திருப்புகழாலும்
உரைத்திடுவார் தம்குளிமேவி உணர்த்திய போதம்
தனைப்பிரியாதொண் பொலச்சரணானும் தொழுவேனோ — திருத்தணி மேவும் பெருமாளே" என்று கரஹரப்ரியாவில் பாடுவார்கள்.

அங்கே ஜிலுஜிலுவென்று அந்த டிசம்பர் மாதக் குளிரில் கோவில் படிகளில் எல்லாருமாக பாடும் போது அதைக் கேட்பதே ஆனந்தம். அதன் அர்த்தமும் அவ்வளவு அழகு. "பக்தர்களோடு போய் சேர்ந்து கொண்டு, அவர்கள் உணர்த்திய அந்த ஞானத்தை (போதத்தை) அங்கேயே மறந்துவிடாமல் மனதிற்குள் ஏற்றிக் கொண்டு, அதை வாழ்க்கையில் கடைப்பிடித்து, நான் உன்னுடைய பாதங்களை அடைய வேண்டும்" என்பது போன்ற வேண்டுதல்கள் எல்லாமே இந்த பாகவத தர்மத்தை உச்சக்கட்டமாக வலியுறுத்துகிறது.

காவேரி கரையில் பிறந்து காவேரி ஜலத்தைக் குடித்தால், அவர்களுக்கு விஷ்ணு பக்தி வரும் என்று பாகவதத்தில் இருக்கிறது. இந்த இடத்தில் ஸ்வாமிகள் “ஶ்லோகத்தில் ‘ப்ராயஶ:’ (அநேகமாக) என்று ஒரு வார்த்தை போட்டார், அதனால் பிழைத்தேன்”, என்பார். “ஏனென்றால், காவேரி கரையில் பிறக்கிறவர்கள் தான் இப்போது அதிக அளவில் வெளிநாடு போகிறார்கள், அப்புறம் ஏன் எல்லாரும் பக்தர்களாக இல்லை என்று யாராவது வந்து கேட்டால் நான் என்ன சொல்வது?” என்று ஸ்வாமிகள் விளையாட்டாகச் சொல்வார்.

இந்த இடத்திலும் ஒரு அழகான பிரார்த்தனையைப் பட்டத்ரி சேர்த்துக் கொள்கிறார் - **ஹா மாமபி, ஏதத் அந்தர்ப$^{4}$வம், அபி ச விபோ$^{4}$, கிஞ்சித$^{3}$ஞ்சத்$^{3}$ரஸம் த்வயி** நானும் இந்தத் தமிழ் தேசத்தில்தான் வந்து பிறந்திருக்கிறேன். 'ஹே விபோ', ஏதோ உன்னிடத்தில் கொஞ்சம் பக்தியும் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. **ஆஶாபாஶைர்நிப$^{3}$த்$^{4}$ய, ப்$^{4}$ரமய ந, ப$^{4}$க$^{3}$வன்** என்னை ஆசாபாசங்களால் கட்டி அங்கும் இங்கும் அலைக் கழிக்காதே. **பூரய, த்வந்நிஷேவாம்** “ஹே க்ருஷ்ணா, உன்னுடைய பூஜையை, அதாவது உன்னுடைய சேவையை நான் முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு அனுக்ரஹம் பண்ணு" என்று வேண்டுகிறார்.

**கலியுகத்தின் ஆபத்து**

அடுத்த ஶ்லோகம்: 92வது தசகம் 8வது ஶ்லோகம்

**दृष्ट्वा धर्मद्रुहं तं कलिमपकरुणं, प्राङ्महीक्षित् परीक्षित्,**
**हन्तुं व्याकृष्टखड्गोऽपि, न विनिहतवान् सारवेदी, गुणांशात् ।**
**त्वत्सेवादि आशु सिद्ध्येत्, असदिह न तथा, त्वत्परे चैष भीरुः,**
**यत्तु प्रागेव रोगादिभिः अपहरते, तत्र हा शिक्षयैनम् ॥**

**த்³ரு'ஷ்ட்வா த⁴ர்மத்³ருஹம் தம் கலிமபகருணம், ப்ராங்மஹீக்ஷித் பரீக்ஷித்** இது முதல் ஸ்கந்தத்தில் இருக்கிற ஒரு கதை. க்ருஷ்ண பகவான் வைகுண்ட ஆரோஹணம் செய்த பின்பு, பரிக்ஷித் மகாராஜன் நாட்டை வலம் வந்து கொண்டு இருக்கிறான். சரஸ்வதி நதிக்கரையில், ஒரு காளை மாடு ஒரே ஒரு காலில் நிற்கிறது, பக்கத்தில் ஒரு பசு மாடு இருக்கிறது, கலி புருஷன் காளை மாட்டை அடித்துக் கொண்டிருக்கிறான். இந்த காளை மாடு என்பது தர்மத்தின் வடிவம். தர்மம் முந்தைய யுகங்களில் எல்லாம் தவம், சௌசம் (தூய்மை), தயை, ஸத்யம் என்று நான்கு கால்களில் நின்றது. இப்போது கலியில் ஸத்யம் மட்டும் தான் கொஞ்சம் மிஞ்சியிருக்கிறது. அந்த ஒரு காலில் நிற்கிற காளை மாட்டை இந்த கலி புருஷன் அடிக்கிறான். பக்கத்தில் இருக்கும் பசு என்பது பூமி தேவி, அவளும் அழுது கொண்டிருக்கிறாள். இதைப் பார்த்தவுடனே பரிக்ஷித்திற்கு கடும் கோபம் வருகிறது. கலி புருஷனை வெட்டுவதற்கு கையில் கத்தியை எடுக்கிறான். ஆனால் அந்த கலி புருஷன் பரிக்ஷித்தின் காலில் விழுந்துவிடுகிறான். காலில் விழுந்தவர்களை க்ஷத்திரியர்கள் வதம் செய்ய மாட்டார்கள்.

பரிக்ஷித் "என்னுடைய தேசத்தில் நீ இருக்கக் கூடாது" என்கிறான். கலி புருஷன் சொல்கிறான், "என்னுடைய வேளை வந்து விட்டது, ஆனாலும் நான் நீ சொல்கிறதைக் கேட்கிறேன். நான் எங்கேயாவது கொஞ்சம் இருந்துக் கொள்கிறேன், இடம் கொடு" என்று கேட்கிறான். அப்பொழுது பரிக்ஷித் சொல்கிறான், "கசாப்புக் கடையிலும், மதுபானம் அருந்துமிடத்திலும், சூதாட்டக் களத்திலும், விபச்சாரத்திலும போய் இருந்து கொள்" என்று சொல்கிறான். "இவை ஒவ்வொன்றிலும் கசாப்புக் கடையில் ஹிம்சையும், மதுவில் மதமும், சூதாட்டத்தில் பொய்யும், விபச்சாரத்தில் காமமும் ஆகிய தோஷங்கள் இருக்கின்றன. பிறகு கலி

புருஷன், "எனக்கு இன்னும் கொஞ்சம் இடம் கொடு" என்று கேட்கும்போது, "தங்கத்தில் போய் இரு" என்று பரிக்ஷித் சொல்கிறான்.

ஸ்வாமிகள் இதற்கு ஒரு விளக்கம் சொல்வார்: "இதைத் தங்கத்தில் இரு என்று இந்த காலத்தில் உபன்யாசம் செய்பவர்கள் ரொம்ப எச்சரிக்கையாகச் சொல்லி விடுகிறார்கள். 'பணத்தில் இரு' என்று தான் சொல்ல வேண்டும், அப்போதுதான் ஜனங்களுக்கு உறைக்கும். பணத்தாசை மூலமாகத் தான் கலி வளருகிறான்." இந்த நான்கு தோஷங்கள் — ஹிம்சை, மதம், பொய், காமம் — பணத்தில் இந்த நான்கு தோஷங்களும் இருக்கிறது. யாராவது சூதாடினாலோ அல்லது குடித்தாலோ ஜனங்கள் அவர்களை வெறுப்பார்கள். ஆனால், பணம் சம்பாதித்து விட்டால் "ஆஹா... அள்ளிப் போடுகிறான் பாரு!" என்று உலகம் அவனைக் கொண்டாடும். ஆனால் இந்த பாகவதம் என்கிற புஸ்தகம், உலகாதாயத்தை (materialism) முதல் அட்டைப் பக்கத்திலிருந்து கடைசி அட்டைப் பக்கம் வரை நிராகரித்து, மனதை அதிலிருந்து எடுத்துப் பகவானிடம் வைக்க வேண்டும் என்கிற செய்தியைத் தருகிறது; அதைத் தைரியமாகச் சொல்ல வேண்டும் என்பார் ஸ்வாமிகள்.

அப்படி தர்மத்தை ஹிம்சை பண்ணும் கலியை, **ஹந்தும் வ்யாக்ரு'ஷ்டக²ட்³கோ³(அ)பி** கொல்லுவதற்கு கையில் கத்தியை எடுத்த போதும் **ந விநிஹதவான்** பரிக்ஷித் கொல்லவில்லை. ஏனென்றால், **ஸாரவேதீ³, கு³ணாம்'ஶாத்** அவன் கலியிடம் இருக்கும் ஸாரத்தைப் பார்த்தான். இந்த கலியுகத்தில் ஒரு பெரிய குணம் இருக்கிறது என்பதற்காக அவனைக் கொல்லாமல் விட்டுவிடுகிறான். அது என்ன குணம் என்றால், **த்வத்ஸேவாதி³, ஆஶு ஸித்³த்⁴யேத்** உன் சேவையால், உன்னுடைய கருணையை, இந்த பகவந்நாம ஸங்கீர்த்தனம் முதலியவற்றால் மிகச் சுலபமாக அடைந்து விடலாம்; பக்தி மூலமாகவே முக்தி அடையலாம் என்பதுதான் இந்த கலியின் பெரிய குணம். **அஸதி³ஹ ந ததா²** மற்ற யுகங்களில் எல்லாம் பாவத்தை மனதில் நினைத்தாலே அது பாவம் என்று கணக்காகும்; தீய செயல்களுக்குத் துணை நின்றாலும் மகாபாவம். ஆனால் இந்த கலியுகத்தில் அப்படி இல்லை. கலியில் நாம் பிரத்யக்ஷமாகச் செய்தால் தான் அது பாவம் என்று எடுத்துக் கொள்ளப் படும். **த்வத்பரே சைஷ பீ⁴ரு** மேலும் பகவானிடம் பக்தி இருக்கிறவர்களிடம் இந்த கலி புருஷன் பயப்படுகிறான். இதெல்லாம் கலியின் நல்ல குணங்கள். **யத்து ப்ராகே³வ ரோகா³தி³பி⁴ அபஹரதே** ஆனால் உன்னிடம் பக்தி செய்ய

கூட முடியாமல், இந்த கலி வியாதிகளின் மூலமாக என்னுடைய ஆற்றலை எல்லாம் திருடுகிறானே, **தத்ர ஹா, ஶிக்ஷயைநம்** அந்த ஒரு விஷயத்தில் மட்டும் நீ கொஞ்சம் அவனுக்குச் சிக்ஷை (தண்டனை) கொடு என்று குருவாயூரப்பனிடம் பட்டத்ரி வேண்டிக் கொள்கிறார்.

**கங்கா கீதா ச காயத்ரீ**

அடுத்த ஶ்லோகம்: 92வது தசகம் 9வது ஶ்லோகம்

**गङ्गा गीता च गायत्री, अपि च तुलसिका गोपिकाचन्दनं तत्,**
**सालग्रामाभिपूजा, परपुरुष तथा, एकादशी नामवर्णाः ।**
**एतानि अष्टापि अयत्नानि, अयि कलिसमये त्वत्प्रसादप्रवृद्ध्या,**
**क्षिप्रं मुक्तिप्रदानीति, अभिदधुः ऋषयः, तेषु मां सज्जयेथाः ॥**

**க³ங்கா³ கீ³தா ச கா³யத்ரீ, அபி ச துலஸிகா கோ³பிகாசந்த³நம் தத், ஸாலக்³ராமாபி⁴பூஜா, பரபுருஷ ததா², ஏகாத³ஶீ, நாமவர்ணா:** "கங்கை, கீதை காயத்ரீ, துளஸி, கோபிசந்தனம், ஸாலக்ராம பூஜை, ஏகாதசி விரதம், பகவந்நாமம்" எனறு ஒரு எட்டு விஷயங்களைச் சொல்லி, இதன் மூலமாகச் சுலபமாக முக்தி கிடைக்கும் என்று மகான்கள் சொல்கிறார்கள். இந்த இடத்தில் சிவ பக்தர்கள் துளசி என்பதற்கு பதிலாக வில்வம் என்றும், கோபி சந்தனத்திற்கு பதிலாக விபூதி என்றும், சாலக்ராம பூஜைக்கு பதிலாக சிவலிங்க பூஜை என்றும் வைத்துக் கொள்ளலாம். "நாம வர்ணா:" என்றால் பொதுவாக பகவந்நாமம் என்று அர்த்தம். ஸ்வாமிகள் “அந்த நாமத்துடைய எழுத்துக்களுக்கே ஒரு சக்தி உண்டு; ராம நாம ஜபம் செய்யும்போது, அந்த "ராம" என்கிற எழுத்தையே தியானம் செய்யுங்கள்” என்பார். "ரா" என்பது மூலாதாரம், "மா" என்பது ஸஹஸ்ராரம்; ராம நாம ஜபமே ஒரு குண்டலினி யோகம் என்றும் கூறுவார். **ஏதாநி, அஷ்டாபி அயத்நாநி** இந்த எட்டும் அதிக முயற்சி இல்லாமலேயே, **அயி கலிஸமயே, த்வத்ப்ரஸாத³ ப்ரவ்ரு’த்³த்⁴யா** இந்த கலியில் உன்னுடைய பிரசாதம் (அருள்) இவற்றில் நிரம்பி இருக்கிறபடியால், **க்ஷிப்ரம் முக்திப்ரதா³நீதி** விரைவில் முக்தியை அளிக்கும் என்று, **அபி⁴த³து⁴: ரு’ஷய:** ரிஷிகள் சொல்லி இருக்கிறார்கள். **தேஷு மாம் ஸஜ்ஜயேதா²:** அந்த எட்டிலும் என் மனதை எப்போதும் ஈடுபடச் செய்வாய் என்று வேண்டுகிறார்.

"ஸ்வாமிகள் சத்சங்கம்" என்கிற புதையல் எனக்குக் கிடைத்தது என்று நான் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறேன் அல்லவா? ஒரு புதையல்

வேண்டும் என்றால் மை போட்டு அது எங்கே கிடைக்கும் என்று பார்க்க வேண்டும், அங்கே தோண்ட வேண்டும், உள்ளே போனால் ஒரு பூதம் புதையலைக் காத்துக் கொண்டிருக்கும், மந்திரம் போட்டு அந்தப் பூதத்தை விரட்ட வேண்டும், அதற்கு அப்புறம் ஒரு பெரிய பாம்பு சுற்றிக் கொண்டிருக்கும்... இப்படி எல்லாம் கதைகளில் வரும். இந்த மாதிரி புதையல் எடுப்பதற்குப் பல முயற்சிகள் செய்ய வேண்டும். என் விஷயத்தில், இந்த எல்லா முயற்சிகளையும் எங்கள் அப்பாவே செய்து முடித்து விட்டார். (விளையாட்டாகச் சொல்கிறேன்) எங்க அப்பா 1954-இல் தன் 19 வயதில் சென்னைக்கு வந்தார். அப்போதிலிருந்தே சாதுக்களோடு சேர்ந்து கொண்டு, தினமும் சாயங்காலமெல்லாம் திருப்புகழ் பஜனைகளில் கலந்து கொள்வது, ஹரி பஜனைகளில் கலந்து கொள்வது, ஸத்ஸங்கங்களில் கி.வா.ஜ, தணிகைமணி போன்ற பெரியவர்களுடைய உபன்யாஸங்களைக் கேட்பது என்று இருப்பார். க்ருஹத்தில் தன் அம்மாவுக்கு வேண்டியதைச் செய்வார், கல்யாணம் ஆன பின்பு மனைவி, குழந்தைகளுக்கு வேண்டியதைச் செய்வார்; மற்ற நேரமெல்லாம் இந்த மாதிரி சாது ஸங்கத்திலேயே தான் இருப்பார். காலையில் ஸூக்தங்கள் எல்லாம் சொல்லிச் சந்தனம் அரைப்பார். அதற்கு அப்புறம் ஒரு மணி நேரம் ருத்ரம், சமகம் சொல்லிச் சிவபூஜை செய்வார். எல்லாம் நிதானமாகச் செய்வார். இப்படி 50 வருஷம் சிவ பூஜை பண்ணி இருக்கிறார். அப்படி இந்த புதையல் எடுப்பதற்கு வேண்டிய அத்தனை உழைப்பையும் அவர் போட்டு விட்டார். நான் போய் ஸ்வாமிகளை நமஸ்காரம் பண்ணும் போது, அவர் என்னைப் பார்த்து "ஓ, சுந்தரம் பிள்ளையா... வா, வா!" என்று என்னை சேர்த்து கொண்டு விட்டார். அப்படி அவர் பாடுபட்டதற்கு ஸ்வாமிகளின் ஸங்கம் என்கிற புதையல் எனக்குக் கிடைத்தது.

இங்கே "துளஸிகா கோபிசந்தனம் ஸாலக்ராமாபிபூஜா" என்று வந்ததே, அது போல எங்க அப்பா நெற்றியில் எப்போதும் விபூதி இட்டுக் கொண்டிருப்பார், ஆபீஸுக்கு கூட வேஷ்டி தான் கட்டிண்டு போவார், வாழ்க்கையில் பேண்ட்டே போட்டது கிடையாது. பணியிலிருந்து ஒய்வு பெற்ற பின் சட்டை போடுவதையும் கூட விட்டுவிட்டார். வேட்டியும் அங்க வஸ்திரமுமாய் கடைசி வரைக்கும் இருந்து விட்டார். சிவராத்திரி அன்று நாலு காலம், ஒவ்வொரு காலமும் 11 ஆவர்த்தி ருத்ரம் சொல்லிச் சிவ பூஜை செய்வார். அவருடைய விரத முறைகள் எல்லாம் அத்தனை மஹத்துவமானது.

**பூர்ண சரணாகதி செய்தவன் கடன்களிலிருந்து விடுபடுவான்**

அடுத்த ஶ்லோகம்: 92வது தசகம் 10வது ஶ்லோகம்

**देवर्षीणां पितृणां, अपि न पुनः ऋणी किङ्करो वा स भूमन्,**
**योऽसौ सर्वात्मना त्वां शरणमुपगतः, सर्वकृत्यानि हित्वा ।**
**तस्योत्पन्नं विकर्माणि, अखिलमपनुदस्येव चित्तस्थितस्त्वं,**
**तन्मे पापोत्थतापान्. पवनपुरपते रुन्धि, भक्तिं प्रणीयाः ॥**

**தே³வர்ஷீணாம் பித்ரூ'ணாம் அபி ந புந: ரு'ணீ கிங்கரோ வா ஸ பூ⁴மன் யோ(அ)ஸௌ ஸர்வாத்மநா த்வாம் ஶரணமுபக³த:, ஸர்வக்ரு'த்யாநி ஹித்வா** இங்கே ஒரு உயர்ந்த தர்மத்தைச் சொல்கிறார். தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும், பித்ருக்களுக்கும் நாம் பிறக்கும் போதே கடன் பட்டிருக்கிறோம். ஆனால், 'யோஸௌ ஸர்வாத்மநா த்வாம் ஶரணமுபகதஹ' யார் ஒருவன் தன் முழு மனதோடு உன்னைச் சரணாகதி செய்து விட்டானோ, 'ஸர்வக்ருத்யாநி ஹித்வா' இது தான் இங்கே முக்கியக் குறிப்பு. மற்ற உலக காரியங்களை, சம்பாதிக்கிற வேலையோ, சுகத்தைத் தேடுகிற வேலைகளோ அவன் செய்யக் கூடாது. அப்படி எல்லாவற்றையும் விட்டுவிட்டு உன்னைச் சரணாகதி செய்து, "நீயே காப்பாற்றுவாய்" என்று "உன்னுடைய சேவையை மட்டுமே" செய்து கொண்டு இருப்பவனுக்கு, தன் பின் இந்த தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் ரிஷிகளுக்குமான கடன் கிடையாது; அவர்களுக்கு அவன் அடிமை (கிங்கரன்) கிடையாது என்று சொல்கிறார்.

இதைத் தான் ஸ்வாமிகள் நம்பி ஸந்நியாசம் வாங்கிக் கொண்டார். அவர் சிராத்தம் எல்லாம் ஈடுபாட்டுடன் செய்வார். மஹா பெரியவாளிடம் நடக்கும் கோகுலாஷ்டமி ஸப்தாஹத்தில் ஆறாவது நாள் அவருடைய தாயாரின் சிராத்தம் வரும். அந்த சிராத்தத்தை முடித்துவிட்டு, பாராயணத்தையும் முடிப்பார். பொதுவாக அடுத்த நாள் பாகவத பூர்த்தி என்பது காலை 10 மணிக்கு வந்து விடும், ஆனால் பெரியவா சந்நிதியில் பூர்த்தி முடிந்து அவப்ருத ஸ்நானம் செய்யும் போது மதியம் மூன்று மணி ஆகி விடும். பாகவத பூர்த்தி, அதற்கு அப்புறம் பகவத் கீதை முழுக்கப் படிப்பார், அப்புறம் விஷ்ணு ஸஹஸ்ரநாமம் படிப்பார், அதற்கு அப்புறம் க்ருஷ்ண அஷ்டோத்தரம் ஸ்தோத்திரத்தைப் படிப்பார், அதற்கு அப்புறம் அவப்ருத ஸ்நானம். மஹா பெரியவாளும் இவை எல்லாவற்றிற்கும் கூடவே இருப்பார். ராத்திரி உபன்யாசம் 12 மணிக்கு முடியும். 12 மணிக்கு

பெரியவா, ஸ்வாமிகளையே க்ருஷ்ண பூஜை செய்யச் சொல்வார். இப்படி இரண்டு பேருமாகச் சேர்ந்து க்ருஷ்ணனை அனுபவித்து இருக்கிறார்கள்!

மஹா பெரியவா, ஸ்ரீகண்டன் (ஸ்வாமிகளுடைய மாமா பிள்ளை) என்பவரிடம், "உன் அத்தைக்கு மோக்ஷம் தான்டா, எத்தனை வாட்டி பாகவதர் அவாளுக்கு காஞ்சீபுரத்துல சிராத்தம் பண்ணிருக்கார்" என்று சொல்லி இருக்கிறார். அப்படி ஸ்வாமிகள் முழு மனதோடு சிராத்தம், ஸந்த்யா வந்தனம் எல்லாம் செய்வார். அவர் மஹா பெரியவா பாதுகையிலிருந்து ஸந்நியாசம் எடுத்துக் கொண்டதற்கு அப்புறம் சிராத்தம் எல்லாம் செய்யவில்லை; பூரண சரணாகதி பண்ணி அவர் அதிலிருந்து விலக்கு வாங்கிக் கொண்டார். சிவன் சார் அனுமதியின் பேரில் தான் அவர் ஸந்நியாசம் வாங்கிக் கொண்டார் என்பதையும் கவனிக்க வேண்டும்.

இந்த ஶ்லோகம் ஒரு விதத்தில் நமக்குக் கூடப் பொருந்தும், ஆனால் ரொம்ப ஜாக்ரதையாகச் புரிந்து கொள்ள வேண்டும்.

"ஸர்வத⁴ர்மாந்பரித்யஜ்ய மாமேகம்' ஶரணம்' வ்ரஜ।
அஹம்' த்வா ஸர்வபாபேப்⁴யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ॥"
என்று ஒரு கீதை ஶ்லோகம் (அத்யாயம் 18 ஶ்லோகம் 66) இருக்கிறது அல்லவா, அதைத் தான் இங்கே சொல்கிறார். இந்த ஶ்லோகத்திற்கு, வேதாந்த தேசிகர் தன் பாஷ்யத்தில் ஓர் அழகான கருத்து சொல்லியிருக்கிறார். ஸ்வாமிகள் அதை ரொம்ப கொண்டாடுவார். 'ஸர்வதர்மான் பரித்யஜ்ய' என்றால் எல்லா தர்மங்களையும் விட்டுவிட்டு என்னைச் சரணாகதி பண்ணு என்று பொதுவாகப் புரிந்து கொள்வார்கள். ஆனால், 'அநித்யமஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வமாம்' என்று இன்னொரு ஶ்லோகத்தில் வருகிறது. அநித்யமானதும் (இங்கே வந்தால் கொஞ்ச நாள் தான் இருக்கப் போகிறோம்), அஸுகமானதும் (இருக்கிற நேரத்திலும் நிறைய துக்கம் தான்), அப்பேர்ப்பட்ட இந்த பூமியில் வந்து நீ பிறந்திருக்கும் நீ 'இமம் ப்ராப்ய' (இதை அடைந்துள்ள நீ) 'மாம் பஜஸ்வ' (என்னுடைய பஜனத்தைச் செய்), திரும்ப வந்து பிறக்கமாட்டாய் என்று பகவான் சொல்கிறார். இதற்கு, "இந்த அநித்தியமானதும் அஸுகமானதுமான உலகத்தில் அவசியம் வந்து பிற" என்று யாராவது அர்த்தம் சொல்வார்களா? "வந்து பிறந்து விட்டாய், அதனால் பகவத் பஜனம் செய்" என்று தானே இதற்கு அர்த்தம்!

அந்த மாதிரி 'ஸர்வதர்மான் பரித்யஜ்ய' என்றால் எல்லா தர்மங்களையும் விடு என்று அர்த்தம் இல்லை. "நீ எல்லா தர்மங்களையும் விட்டவனாக இருக்கிறாய்". எழுபது வயதில் வேதாந்த பாடம் கேட்கப் போனால், ஆசார்யாளின் ஸோபான பஞ்சகத்தில் இருந்து 'வேதோ நித்யமதீயதாம், ததுதித: கர்மஸ்வநுஷ்டீயதாம்' என்று பாடத்தில் வரும். ‘வேதத்தைப் படி, அதில் இருக்கிற கர்மாவை எல்லாம் செய்’ என்று அர்த்தம். இனிமேல் போய் வேதம் படிக்க முடியுமா? மனைவியும் காலமாகி இருப்பார், ஔபாஸனம் செய்ய முடியுமா? அப்படி எந்த கர்மாவை அனுஷ்டிப்பது? அது போல எல்லாவற்றையும் நீ விட்டுவிட்டாய், "எல்லாவற்றையும் விட்டுவிட்டேனே, எனக்கு நல்ல கதி கிடைக்குமா?" என்று நீ ஏங்கினாயானால், நீ கவலைப்படாதே, 'மா சுச:, என்னைச் சரணாகதி செய். மாமேகம் சரணம் வ்ரஜ அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' — எல்லா தர்மங்களையும் விட்ட பாவத்திலிருந்து உன்னை நான் விடுவிக்கிறேன் என்று வேதாந்த தேசிகர் இதற்கு பொருள் சொல்லி இருக்கிறார்.

மஹா பெரியவா ஒரு சொற்பொழிவில் எதேச்சையாக இந்த ஶ்லோகத்தைக் குறிப்பிட்டு, "அஹம்’ த்வா ஸர்வபாபேப்⁴யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:” என்று சொல்கிறார் பகவான்; உனக்கு இனிமேல் எந்த ஆபத்தும் வராது என்று சொல்லவில்லை, நீ இனிமேல் பாவம் செய்ய மாட்டாய், உன் பாவத்திலிருந்து உன்னை விடுவித்து விடுகிறேன் என்று தான் சொல்கிறார்" என்கிறார். இது ரொம்ப யோசித்துப் பார்க்க வேண்டிய விஷயம்.

இதை நான் ஸ்வாமிகளிடம் நேராகப் பார்த்திருக்கிறேன். அவருக்கு ஆபத்துக்கள் வந்து கொண்டே இருந்தன, ஆனால் அவர் தர்மத்திலிருந்து கொஞ்சமும் சலிக்க மாட்டார், ஒரு பாவமும் செய்ய மாட்டார்; தூய்மையின் வடிவமாக, அபார புண்ய கார்யங்களைச் செய்து கொண்டே இருந்தார். ஆனால் அவருடைய வாழ்க்கையில் இருக்கிற கஷ்டங்களைப் பார்த்தால் மற்றவர்களுக்கு, "ரொம்பப் பாவம் பண்ணியிருக்கிறார், அவஸ்தைப் படுகிறார்" என்று தோன்றும். அதெல்லாமே பூர்வ வினைகளாக இருக்கலாம்; அல்லது பக்தர்கள் வந்து நமஸ்காரம் பண்ணித் தங்கள் கஷ்டத்தைப் போக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்ட போது, அவர்களுடைய பாவத்தைத் தான் வாங்கி அவர் அனுபவிப்பதாக இருக்கலாம். அந்த மாதிரி அவரது வாழ்க்கை

பார்க்கிறதற்கு ஒரே துக்க மயமாக இருப்பதாக தோன்றும். அதை இந்த பொதுவான உலகம் ரசிக்காது, இன்றைக்கும் சரி, என்றைக்கும் சரி.

உலகத்தினர் அவரைப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அவர் பகவானை நம்பி சரணாகதி செய்து, ஒரு பாவம் இல்லாமல் வாழ்ந்தார். அதனால் அவர் கொஞ்சம் கூடக் கலங்கவில்லை, கொஞ்சம் கூடத் துக்கப்படவே இல்லை. அத்தனை கஷ்டங்களுக்கும் நடுவில் தர்மம் தவறாமல் பகவானை பஜித்துக் கொண்டு அவர் வாழ்ந்த வாழ்க்கையே ஒரு பஞ்சாக்னி தபஸ் போல இருந்தது. அப்படி பகவான் அவரை பாவங்களிலிருந்து விடுவித்து விட்டார்.

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், நாமும் கூட நமக்கும் வரும் கஷ்டங்களைத் தாங்கிக் கொண்டு போய் விடலாம். நாம் ஏதாவது பாவம் செய்தால் தான் மனது ரொம்ப அல்லல்படும். ஆனமட்டும் ஒழுங்காக வாழ்ந்து விட்டாலே, கஷ்டங்களை எல்லாம் தாங்கிக் கொண்டு நிம்மதியாக இருந்து விட்டுப் போய்விடலாம். அப்படி, இந்த ஸ்லோகத்திற்கு, சுலபமாக பெரியவா சொன்னதும், வேதாந்த தேசிகர் சொன்னதும் சேர்ந்து அந்த ஸ்லோகத்தின் அர்த்தத்தையே ரொம்ப உயர்த்தி விடுகிறது. இந்த விதத்தில் நாமும் இதை அப்ளை பண்ணிக் கொள்ளலாம்.

10வது ஸ்லோகம் அடுத்த வரி - அப்படிப் பகவானைச் சரணாகதி செய்த பின்பு **தஸ்யோத்பந்நம் விகர்மாணி** ஏதாவது ஒரு தவறு நடந்து விட்டாலும், **அகி²லமபநுத³ஸ்யேவ சித்தஸ்தி²தஸ்த்வம்** பகவானையே நீ நினைத்துக் கொண்டிருப்பதனால், மனதிற்குள் பகவான் இருந்து கொண்டு அந்த எல்லாப் பாவங்களையும் போக்கிவிடுவார்.

இவ்வாறு இருந்தாலும், நாம் பகவானை சரணாகதி செய்த பின் பழைய தவறுகளை தொடர்ந்து செய்யக்கூடாது என்பதற்கு, ஸ்வாமிகள் ராமாயணத்திலிருந்து ஒரு பகுதியை எடுத்துக் காட்டி ஒரு படிப்பினை கூறுவார். சீதாதேவியை ராக்ஷசிகள் பலவாறு பயமுறுத்தி அழச் செய்கிறார்கள். அப்போது திரிஜடை என்ற ராக்ஷசி அவர்களை தடுத்து “நான் ஒரு கனவு கண்டேன். அதில் சீதைக்கு மீண்டும் ராமரோடு சேர்ந்து நல்ல வாழ்வும், ராவணாதி ராக்ஷசர்களுக்கு அழிவும் ஏற்படும் என்று தெரிகிறது. அதனால் சீதையை துன்புறுத்தாதீர்கள். தன் அன்பு மனைவியை நீங்கள் துன்புறுத்தியதாக ராமர் அறிந்தால், உங்களையும்

கண்டிப்பாக தண்டிப்பார். அதனால் அவளிடம் வணங்கி மன்னிப்பு கேட்டுக் கொள்ளுங்கள். இந்த சீதை தன்னைப் பணிந்தவர்களிடம் கருணை காட்டுபவள்" என்று சொல்லித் தருகிறாள். அவர்களும் அவ்வாறே செய்கிறார்கள். இந்த இடத்தில் 'இனிமேல் அவளிடம் நீங்கள் கடுமையான வார்த்தைகளையே பேசக்கூடாது' என்று திரிஜடை ராக்ஷிகளுக்கு சொல்வதில் இருந்து, பகவானை சரணாகதி செய்தபின், பழைய வழியிலேயே இல்லாமல், நம் தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும் என்று ஸ்வாமிகள் எடுத்துரைப்பார். திரிஜடை ராக்ஷிகளுக்குக் கூறும் போது, "சீதை தன்னைப் பணிந்தவர்களிடம் கருணை காட்டுபவள்" என்கிறாள். அதே போல, பின்னாளில் யுத்த காண்டத்தில், ராவணன் மடிந்த பிறகு அனுமன் அந்த அரக்கிகளைத் தண்டிக்க முற்படும்போது சீதா தேவி தடுத்து நிறுத்துகிறாள்.

**தந்மே பாபோத்த²தாபான், பவநபுரபதே, ருந்தி⁴, ப⁴க்திம்' ப்ரணீயா:**
"என்னுடைய பாவத்தினால் ஏற்பட்ட தாபங்களையெல்லாம் போக்கி, ஹே குருவாயூரப்பா! எனக்கு பக்தியை வளர்த்துத் தர வேண்டும்."

**நவயோகி உபாக்யானம் பூர்த்தி**

நாரதர், தேவகிக்கும் வசுதேவருக்கும் அதனைச் சொல்லி முடித்துவிட்டு, "பகவானிடம் எல்லா காரியங்களையும் ஒப்படைத்து, ஸர்வாத்மநா சரணாகதி செய்து விட்டால், அவர்களுக்கு தேவர்கள், ரிஷிகள், பித்ருக்களுக்கு உண்டான ருணங்கள் கூடத் முடிந்து விடும்" போன்ற தத்துவங்களைச் சொல்லிக் கொடுத்தார். பின்னர், "ஸ்ரீக்ருஷ்ணனை உங்களது குழந்தை என்று நினைத்து மோஹிக்காதீர்கள். அவன் ஸாக்ஷாத் விஷ்ணு பகவான் தான்! பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காகவும், சாதுக்களைக் காப்பாற்றுவதற்காகவும் இங்கே அவதாரம் செய்திருக்கிறான். அந்த ஸ்ரீக்ருஷ்ணனை உபாசனை செய்து க்ஷேமத்தை அடையுங்கள்" என்று உபதேசித்து விட்டுச் செல்கிறார். வசுதேவரும் தேவகியும் அதே போல இடைவிடாது பஜனம் செய்து, தங்களது மோஹத்தைக் கடந்தார்கள்; ஞானத்தை அடைந்தார்கள் என்று நவயோகி உபாக்கியானம் முடிகிறது. அத்துடன் 92வது தசகம் பூர்த்தியாகிறது.

நவயோகி உபாக்யானத்தின் முக்கியமான உபதேசம் என்னவென்றால், இந்த கலியுகத்தில் நாம் பக்தி மூலமாகவும், பகவந்நாம ஸங்கீர்த்தனத்தின் மூலமாகவுமே பகவானை அடையலாம் என்பது தான்.

**ஆதிசங்கரரின் விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்**

இதைச் சொல்லும் போது, ஆதிசங்கர பகவத் பாதாள் விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கு எழுதிய பாஷ்யம் நமக்கு நினைவுக்கு வருகிறது. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் முதல் பகுதியான உபோத்காதத்தில், "ஏஷ மே ஸர்வத⁴ர்மாணாம் த⁴ர்மோ(அ)தி⁴கதமோ மத꞉। யத்³ப⁴க்த்யா புண்ட³ரீகாக்ஷம் ஸ்தவைரர்சேந்நர꞉ ஸதா³॥" (எல்லா தர்மங்களையும் விட புண்டரீகாக்ஷனை பக்தியோடு துதிப்பதே மேலான தர்மம்) என்ற ஶ்லோகத்திற்கும், "மங்களாநாம் ச மங்களம்" என்று பகவந்நாமங்களின் பெருமையைக் கூறும் ஶ்லோகங்களுக்கும் விளக்கம் அளிக்கும் போது, பல்வேறு புராணங்களிலிருந்து முப்பது நாற்பது ஶ்லோகங்களை எடுத்து மேற்கோள் காட்டி பகவந்நாமத்தின் பெருமையை அவ்வளவு அழகாக அவர் அங்கே நிலை நிறுத்தியுள்ளார்.

அவர் எடுத்துக் காட்டிய சில ஶ்லோகங்களை பார்ப்போம்:

"கலௌ கல்மஷசித்தாநாம் பாபத்³ரவ்யோபஜீவிநாம் |
விதி²க்ரியா விஹீநாநாம் கதி: கோ³விந்த³ கீர்த்தநம் ||"
(கலியுகத்தில் மனிதர்களுக்குத் தூய்மையான மனம் இருப்பதில்லை; பல பாவச் செயல்களாலேயே அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள்; சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட முறையில் வாழ முடிவதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், மனிதர்கள் உய்வடைவதற்கும், ஒரே வழி "கோவிந்த நாமம்".)

"த்யாயந் க்ருதே யஜந் யஜ்ஞை: த்ரேதாயாம் த்வாபரே(அ)ர்ச்சயந் |
யதா³ப்நோதி ததா³ப்நோதி கலௌ ஸங்கீர்த்ய கேஶவம் ||"
(க்ருதயுகத்தில் தியானத்தினாலும், த்ரேதாயுகத்தில் யாகங்களினாலும், த்வாபரயுகத்தில் பூஜையாலும் எதை அடைந்தார்களோ, அதை கலியுகத்தில் கேசவனை கீர்த்தனம் செய்வதன் மூலமே அடைந்து விடலாம்.)

"சிந்த்யமாந: ஸமஸ்தாநாம் க்லேஶாநாம் ஹாநிதோ³ ஹி ய: |
ஸமுத்ஸ்ருஜ்ய அகி²லம் சிந்த்யம் ஸோச்யுத: கிந்ந சிந்த்யதே ||"

(எவரைச் சிந்தித்தால் எல்லாத் துன்பங்களும் அழியுமோ, மற்ற கவலைகளை எல்லாம் விட்டுவிட்டு அந்த அச்சுதனை ஏன் சிந்திக்கக் கூடாது?)

"ஹரேர் நாமைவ நாமைவ நாமைவ மம ஜீவனம்
கலௌ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ க³திரந்யதா."

(ஹரியின் நாமமே என் ஜீவன். இந்த கலியுகத்தில் நாமத்தைத் தவிர வேறு கதியே இல்லை, இல்லவே இல்லை.)

"ஏகோபி க்ருஷ்ணஸ்ய க்ருத: ப்ரணாமஹ: தசாஸ்வமேத அவப்ருதேந துல்ய: | தசாஸ்வமேதீ புநரேதி ஜந்ம க்ருஷ்ண ப்ரணாமீ ந புநர்பவாய ||"
(க்ருஷ்ணனுக்குச் செய்யும் ஒரு நமஸ்காரமானது, பத்து அஸ்வமேத யாகங்களுக்கு ஈடானது. அஸ்வமேத யாகம் செய்தவன் மீண்டும் பிறவி எடுப்பான், ஆனால் க்ருஷ்ணனை வணங்கியவனுக்கு மறு பிறவி என்பது இல்லை.)

இந்த விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம் மிகவும் ஆச்சரியமானது. ஆதிசங்கரர் அத்வைத வேதாந்தத்தை ஸ்தாபித்தவர் என்றாலும், அவருடைய ராம பக்தியும் க்ருஷ்ண பக்தியும் இந்த பாஷ்யத்தில் அவ்வளவு அழகாக வெளிப்படும். உதாரணமாக, "ஸுவ்ரத:" என்ற நாமத்திற்கு விளக்கம் எழுதும்போது, 'என்னை ஒரு முறை வணங்கி, ராமா! உன்னை சேர்ந்தவனாக எண்ணி என்னை காப்பாற்று என்று வேண்டுபவர்களை எல்லா ஆபத்துகளிலிருந்தும் காப்பேன் என்ற உயர்ந்த விரதத்தை கொண்ட ராமர்' என்பார். "ஸுமுக:" என்ற நாமத்திற்கு, 'நேற்று உனக்கு ராஜ்யாபிஷேகம் என்று சொல்லி, இன்று கானகம் போ என்று சொன்ன போதும் புன்னகை மாறாத முகத்தோடு இருந்தவர் ராமர்' என்று விளக்குவார். "சூரஸேந:" என்ற நாமத்திற்கு, 'அனுமன் போன்ற சூரர்களைத் தன் சேனையாய்க் கொண்ட வானரப் படைக்குத் தலைமை தாங்கிய ராமர்' என்று பல புராணச் செய்திகளை அழகாகக் கையாளுவார். அதே போல், "வஸுப்ரத:", "வஸுப்ரத:" என்று நாமம் அடுத்தடுத்து வரும். அதற்கு விளக்கம் தரும் போது, ஒரு "வஸுப்ரத: என்பதற்கு 'இகலோக செல்வங்களை அள்ளித் தருபவர்' என்றும், அடுத்த "வஸுப்ரத:" என்பதற்கு 'மோக்ஷப் பெருஞ்செல்வத்தை அருளுபவர்' என்றும் உரை எழுதியிருப்பது படிக்கப் படிக்க இன்பம் தருவதாகும்.

**ॐ तत्सदिति श्रीमन्नारायणीये द्विनवतितमं दशकं समाप्तम् |**
**श्री हरये नमः | रमा रमण गोविन्द गोविन्द | श्रीकृष्णार्पणमस्तु |**

**ஓம் தத்ஸதி³தி ஶ்ரீமந்நாராயணீயே த்³விநவதிதமம் த³ஶகம் ஸமாப்தம் | ஶ்ரீ ஹரயே நம: | ரமா ரமண கோ³விந்த³, கோ³விந்த³ | ஶ்ரீக்ரு’ஷ்ணார்பணமஸ்து |**

**93வது தசகம்: பற்றுகள் விலக ப்ரார்த்தனைகளும், பாடங்களும்**

93வது தசகம் ஆரம்பிப்பதற்கு முன்னால், அதனுடைய கதைப் பகுதியை உங்களுக்குச் சொல்கிறேன். பாகவதத்தில் பிரம்மாதி தேவர்கள் ஸ்ரீக்ருஷ்ணரிடம் "ஹே க்ருஷ்ணா! எங்களது பிரார்த்தனையை ஏற்று நீ பூமியில் அவதாரம் செய்து, பூபாரத்தைக் குறைத்தாய். உன்னுடைய லீலைகளைத் தியானம் செய்வதன் மூலமாகவே ஜனங்களுக்குப் பாவங்கள் நீங்கி, உலகப் பற்றுகள் எல்லாம் விலகும்படியாக ஆச்சரியமான காரியங்கள் பலவற்றைச் செய்தாய். இனிமேல் நீ வைகுண்டத்திற்கு எழுந்தருளி எங்களை எல்லாம் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டுகிறார்கள்.

க்ருஷ்ணரும், "ஆமாம், நானும் அந்த எண்ணத்தில் தான் இருக்கிறேன். இந்த யாதவர்கள் மிகுந்த பலசாலிகளாக இருக்கிறார்கள். அவர்கள் பூமியில் இருந்தால், மீண்டும் அத்துமீறி ஏதேனும் செய்யக் கூடும். எனவே, பிரம்ம சாபத்தினால் இந்த யது குலம் அழியப் போகிறது. அதனை முடித்து விட்டு நான் வைகுண்டத்திற்கு வரப் போகிறேன்" என்று சொல்கிறார். பின்னர் தன்னுடைய பந்துக்களிடம், "இந்தத் துவாரகையில் இப்போது தீய நிமித்தங்கள் தோன்றுகின்றன. அதனால் நாம் அனைவரும் பிரபாஸ தீர்த்தத்திற்குப் புறப்படுவோம்" என்று சொன்னவுடனே, எல்லாரும் உற்சாகமாகப் பயணத்திற்குத் தயாராகிறார்கள்.

**உத்தவர் செய்த சரணாகதி**

உத்தவர் — நாம் உத்தவ ஸ்வாமி என்று தான் சொல்ல வேண்டும் — இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருக்குப் புரிந்து விட்டது. அவர் க்ருஷ்ணனுடைய 15 வயதிலிருந்தே அவன் கூடவே இருப்பவர். க்ருஷ்ணனுடைய தோழர், தேரோட்டி, மந்திரி, எல்லாவற்றிற்கும் மேலாக உத்தம பக்தர். அதனால் க்ருஷ்ணன் தனிமையில் இருக்கும் போது அவரிடம் வந்து, "ஹே க்ருஷ்ணா, நீ வைகுண்ட ஆரோஹணம் செய்யப் போகிறாய் என்பது எனக்குத் தெரிகிறது. உன்னைப் பிரிந்து ஒரு கணம் கூட என்னால் இருக்க முடியாதே, என்னையும் உன்னோடு அழைத்துக் கொண்டு போ" என்று கேட்கிறார். அப்போது பகவான் சொல்கிறார்: "இன்றிலிருந்து ஏழாவது நாள் கடல் துவாரகையை மூழ்கடிக்கப் போகிறது. நீ உன்னுடைய பந்துக்களிடம் வைத்திருக்கும் சிநேகத்தை எல்லாம் விட்டுவிட்டு, தனிமையானதொரு இடத்திற்குச் சென்று, பகவானைத் தியானம் செய்"

என்று கூறி, இந்த 93வது தசகத்தின் முதல் ஶ்லோகத்தில் வரும் விஷயங்களை உபதேசம் செய்கிறார்.

பந்துக்களிடம் உள்ள பாசத்தை விடுவதை பட்டத்ரி இங்கே பிரார்த்தனையாக மாற்றுகிறார்:

**बन्धुस्नेहं विजह्यां, तव हि करुणया, त्वय्युपावेशितात्मा,**
**सर्वं त्यक्त्वा चरेयं, सकलमपि जगद्वीक्ष्य मायाविलासम् ।**
**नानात्वात्, भ्रान्तिजन्यात्, सति खलु गुणदोषाववबोधे, विधिर्वा**
**व्यासेधो वा, कथं तौ त्वयि निहितमतेः, वीतवैषम्यबुद्धेः ॥**

**ப³ந்து⁴ஸ்நேஹம் விஜஹ்யாம், தவ ஹி கருணயா** உன்னுடைய கருணையினால் பந்துக்களின் மீதான ஸ்நேஹத்தை விடுத்து, **த்வய்யுபாவேஶிதாத்மா** உன்னிடத்திலேயே என் மனதை நிலை நிறுத்தி, **ஸகலமபி ஜக³த்³வீக்ஷ்ய, மாயாவிலாஸம்** இந்த உலகில் எல்லாமே உன்னுடைய மாயா விலாஸம் என்று புரிந்து கொண்டு, **ஸர்வம் த்யக்த்வா சரேயம்** மேலும் ஏதேனும் பொருட்பற்று போன்ற மற்ற பற்றுகள் இருந்தால் அவற்றையும் விட்டுட்டு நான் உலகில் சஞ்சரிப்பேன்.
**நாநாத்வாத், ப்⁴ராந்திஜந்யாத், ஸதி க²லு கு³ணதோ³ஷாவபோ³தே⁴** இந்த உலகம் பலவிதமாகக் காட்சி தருவதெல்லாம் ஒரு மனத்தோற்றம் தான் என்று தெரிந்து கொண்டதனால், இதில் குணம், தோஷம் என்கிற இரண்டையும் நான் பாராட்டப் போவதில்லை.
**விதி⁴ர்வா வ்யாஸேதோ⁴ வா, கத²ம்' தௌ, த்வயி நிஹிதமதே:, வீதவைஷம்யபு³த்³தே⁴:** விஷம புத்தியை (வேறுபாட்டை) விட்டுவிட்டுச் சமதரிசனத்தோடு எல்லாவற்றையும் பார்ப்பதனால், அப்படிப்பட்டவர்களுக்கு விதி-நிஷேதங்கள் (இதைச் செய்ய வேண்டும், இதைச் செய்யக் கூடாது என்கிற சாஸ்த்ரக் கட்டுப்பாடுகள்) கிடையாது. இவன் வேண்டியவன், இவன் வேண்டாதவன், இது நல்லது, இது கெட்டது என்பதையெல்லாம் தாண்டிவிட்ட பிறகு, அவர்களுக்கு எந்தப் பாகுபாடும் இருப்பதில்லையே என்று இந்த ஶ்லோகத்தில் வருகிறது.

இத்தகைய உயர்ந்ததொரு உபதேசத்தைக் க்ருஷ்ணர் உத்தவருக்குச் செய்கிறார். அப்போது உத்தவர் சொல்கிறார், "ஹே க்ருஷ்ணா! சின்ன வயதிலிருந்து உன்னோடு விளையாடி, உன்னோடு சாப்பிட்டும், தூங்கியும், நீ அணிந்து கழற்றிய மாலையை அணிந்தும், நீ பூசிய சந்தனத்தைப் பூசியும், நீ சாப்பிட்டு மிஞ்சிய பிரசாதத்தைச் சாப்பிட்டும்,

உன்னுடைய பாத தீர்த்தத்தைப் பருகியும், இப்படி நாங்கள் உன்னோடு இருந்தே மாயையைக் கடந்துவிட்டோம். ஆனால், நீ கிளம்பிப் போய் விட்டாய் என்றால், இந்த அனுபவம் எனக்கு ஸ்திரமாக இருப்பதற்கும், முடிவில் உன்னிடமே வந்து சேர்வதற்கும், எனக்குப் புரியும்படி உபதேசம் செய். இப்போது நீ சுருக்கமாகச் சொன்னதை எனக்கு விஸ்தாரமாகச் சொல்லிக் கொடு." என்று வேண்டி, "நாராயணம் நரஸகம் சரணம் ப்ரபத்யே" (நரனுக்குத் தோழனான நாராயணனே, உன்னைச் சரணடைகிறேன்) என்று உத்தவர் சொல்கிறார். அர்ஜுனன் கீதையில் "ஶிஷ்யஸ்தேஹம் ஶாதிமாம் த்வாம் ப்ரபந்நம்" (நான் உன்னுடைய சிஷ்யன், எனக்கு நல்வழி காட்டு, உன்னைச் சரணடைகிறேன்) என்று சொன்னது போல, இங்கே உத்தவரும் பூரணமாகப் ப்ரபத்தி செய்த பின்னரே பகவான் அவனுக்கு உபதேசிக்கத் தொடங்குகிறார்.

### அவதார புருஷர்களின் திருமேனி தரிசனம்

இந்த அவதார புருஷர்களுடைய அந்த திருமேனி தரிசனம் (physical presence) என்பது அசாதாரணமான ஒன்று. காஞ்சி மஹா பெரியவாளுக்கு நெருங்கிய பக்தர்களாக இருந்தவர்களை எல்லாம் பார்த்தால், அவா ஜாதகத்தில் உயர்ந்த ராஜயோகங்கள், அதற்கெல்லாம் மேலான யோகங்கள் எல்லாம் இருக்கும் என்று நினைக்கிறேன். அதனால் தான் அவர்கள் எல்லாரும் அந்த மகானோடு த்யானத்தில் எப்போதும் ஆனந்தமாக இருந்து விட்டு போய் விட்டார்கள்.

வீழிநாதன் மாமா "என்ன இருந்தாலும் அந்த Physical Body ல பெரியவா இருந்தபோது (திருமேனி தரிசனம்), அவாளோட கூடவே இருந்தது தனி அனுபவம் தான்ப்பா" என்று அடிக்கடிச் சொல்வார், அல்லவா?

இந்த இடத்தில் எனக்கு மூக கவியின் பாதாரவிந்த சதகத்திலிருந்து ஒரு ஶ்லோகம் நினைவுக்கு வருகிறது:

ஜக³ன்னேத³ம் நேத³ம் பரமிதி பரித்யஜ்ய யதிபி³:
குஶாக்³ரீயஸ்வாந்தை: குஶலதி⁴ஷணை: ஶாஸ்த்ர ஸரணௌ|
க³வேஷ்யம் காமாக்ஷி த்⁴ருவமக்ரு'தகாநாம் கி³ரிஸுதே
கி³ராமைதை³ம்பர்யம் தவ சரணபத்³மம் விஜயதே || (ஶ்லோகம் 24)

சில யோகிகள் பட்டினி கிடந்து, பலவிதமான தவங்கள் செய்து அந்த மாயையைக் கடப்பதற்காகப் பாடு படுகிறார்கள். "ஆனால், நாங்கள்

உன்னோடு விளையாட்டாகப் பழகியே மாயையைக் கடந்துவிட்டோம்" என்று உத்தவர் சொல்கிறார் அல்லவா?

அது போல இந்த ஸ்லோகத்தில், எது பரம்பொருள் என்று தேடிக் கொண்டிருக்கிற சில துறவிகள், இந்த ஜகத்தில் 'இது பிரம்மம் இல்லை, இது பிரம்மம் இல்லை' (நேதி நேதி) என்று ஒவ்வொன்றாகத் தள்ளுகிறார்கள். 'கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்து அறிவதே மெய்' என்பது இந்த நேதி நேதி என்பது தான். அப்படி அந்த ஸந்நியாசிகள் தர்ப்பைப் புல்லின் நுனி போன்ற கூர்மையான புத்தியினால், சாஸ்த்ர விசாரம் செய்து, உபநிஷத் பாஷ்யங்கள் எல்லாம் படித்து, ஒருவராலும் செய்யப்படாத வேத வசனங்களின் உட்பொருள் (ஐதம்பர்யம்) எதுவென்று தேடுகிறார்கள் . "காமாக்ஷி! அப்படி அவர்கள் தேடும் பரம்பொருள், உன்னுடைய பாதத்தாமரை தானே! அது வெற்றியோடு விளங்குகிறது" என்கிறார் மூக கவி. பக்தர்களுக்கு, அம்பாளின் பாதத்தைப் பார்த்துக் கொண்டு இருப்பதிலேயே அந்த வேதத்தின் உட்பொருள் மிகச் சுலபமாகக் கிடைத்து விடுகிறது. அது போல மகான்களோடு இருக்கிறவர்களுக்கும் அந்த அனுபவம் அவ்வளவு சுலபமாக வாய்த்து விடுகிறது.

இந்த பூத உலகத்திலேயே மஹான்களுக்கு அந்த ஒரு 'ப்ரபஞ்ச தரிசனம்' (cosmic darshan), கிடைக்கிறது. ரிஷிகள் நடராஜ ரூபத்தில் 'ப்ரபஞ்ச தாண்டவம்' (cosmic dance) என்று சொல்வார்களே, அப்படி சிருஷ்டி, ஸ்திதி, லயம், திரோதானம், அனுக்ரஹம் ஆகிய ஐந்து தொழில்களும் அந்தத் தாண்டவத்திற்கு உள்ளேயே அடங்கி இருப்பதை பார்க்கிறார்கள். "நீ இதில் மனதை வைத்துத் தியானம் செய்து கொண்டே இருந்தால், ஈசனுடைய மாயா விலாசத்தை புரிந்து கொண்டு, அதைத் தாண்டி அவனுடைய அனுக்ரஹமும் கிடைக்கும்" என்கிறார்கள்.

அத்தகைய மகான்கள் தான், "பிறவா வரம் தாரும், பெம்மானே, பிறந்தால் உன் திருவடியை மறவா வரம் தாரும்" என்று வேண்டுகிறார்கள். அப்படிப் பட்ட ஒரு காட்சியைக் கணடதால் தான் அப்பர் பெருமான், "மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று பாடினார்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்

இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே!

"இங்கே பூமியில் இருக்க வேண்டும் என்றால் இருக்கிறேன். ஆனால் எனக்கு அந்த ப்ரபஞ்ச தரிசனம், ஏதோ ஒருமுறை வந்து போவதாக இல்லாமல் எப்போதும் நிலைத்த அனுபவமாக ஆகி விட்டது என்றால், நான் எத்தனை பிறவி வேண்டுமானாலும் எடுக்கத் தயார். எங்கேயோ கைலாசத்தில் போய் இருப்பதைக் காட்டிலும், இந்த சிதம்பர தரிசனமே பேரானந்தமாக இருக்கிறதே!" என்கிற ரீதியில் சொல்கிறார்.

அதைப் போல உத்தவரும், "உன்னோடு இருந்த அந்த ஆனந்தம், நீ இப்போது சொல்கிறாயே இந்த வேதாந்தத்தை விட எனக்கு ரொம்பப் பிடித்திருந்ததே! எனவே, அந்த அனுபவத்தைக் உறுதிப் படுத்தி, அதை என் நிரந்தர அனுபவமாக்கிக் கொள்வதற்கு எனக்கு உபதேசம் செய். எனக்குப் புரியும்படிச் சொல்லிக் கொடு. ‘வேறே யாரிடமாவது போய் விளக்கம் கேட்டுக் கொள்' என்று மட்டும் சொல்லி விடாதே. நீயே விஸ்தாரமாக எனக்கு உபதேசம் செய்" என்று கேட்கிறார்.

அடுத்ததாக வரும் 93வது தசகம் இரண்டாவது ஶ்லோகத்திலிருந்து தான், உத்தவருக்குக் க்ருஷ்ணர் செய்யும் உபதேசம் துவங்குகிறது. "பாகவதத்தில் வரும் இந்த விஸ்தாரமான கதைப் பகுதிகள் எல்லாம் நாராயணீயத்தில் வரவில்லையா?" என்ற கேள்வி நமக்கு எழும் அல்லவா? எதையுமே விடமாட்டாரே நம்முடைய பட்டத்ரி! 'நவயோகி உபாக்கியானம் நாரதரால் சொல்லிக் கொடுக்கப்பட்டது; உத்தவர் க்ருஷ்ணரிடமிருந்து மேலான தத்துவங்களை கற்றுக் கொண்டார்' என்கிற அந்த இணைப்புகள் விடுபட்டு விட்டதா? 'பகவானுடைய வைகுண்ட ஆரோஹணத்துக்கு முன் பிரம்மாதி தேவர்கள் வந்து ஸ்தோத்திரம் செய்தார்கள்;’ இதெல்லாம் இல்லையா? என்றால்—நிச்சயமாக இருக்கிறது!

88வது தசகத்தில், "ஏவம் நாநாவிஹாரை:, ஜக³த்³பி⁴ரமயன்" — இப்படிப் பலவிதமான உன்னுடைய லீலைகளால் உலகத்தை ரமிக்கச் செய்து கொண்டு, "வ்ரு’ஷ்ணிவம்ஶம் ப்ரபுஷ்ணன்" — வ்ருஷ்ணி வம்சத்தை வளர்த்துக் கொண்டு, "ஈஜாநோ யஜ்ஞபே⁴தை³:" — யக்ஞங்கள் பல செய்து, "அதுலவிஹ்ரு’திபி⁴:, ப்ரீணயன் ஏணநேத்ரா:" — கோபிகைகளையும், 16,008 மனைவிகளையும், ரமிக்கச் செய்து

கொண்டு, "பூ$^4$பா$^4$ரக்ஷேபத$^3$ம்பா$^4$த்" — பூமியின் பாரத்தைக் குறைத்தாய் என்று பாடுகிறார். பிரம்ம ஸ்துதியில் இதையெல்லாம் தான் தேவர்கள் சொல்கிறார்கள். ‘கம்ஸ வதம், ஜராஸந்த வதம், ராஸக்ரீடை, மேலும் உன்னுடைய பால லீலைகளை ஒருவன் தியானம் செய்து கொண்டிருந்தாலே, அவன் மோகத்திலிருந்து மீண்டு விடுவான்; பற்றுகள் எல்லாம் போய்விடும். "பத$^3$கமலஜுஷாம்’ மோக்ஷணாய அவதீர்ண:" — இப்படி உன்னுடைய லீலைகளைத் தியானம் செய்வதனால் பக்தர்கள் மோக்ஷம் அடையப் போகிறார்கள், அதற்காகவே நீ பூமியில் அவதாரம் செய்தாய். "பூர்ணம் ப்$^3$ரஹ்மைவ ஸாக்ஷாத், யது$^3$ஷு, மநுஜதாரூஷித:, த்வம், வ்யலாஸீ:" — ‘ஸாக்ஷாத் பூர்ண பரப்பிரம்ம சொரூபமான நீ, யதுகுலத்தில் மனித ரூபத்தில் இப்படி மறைந்து விளங்கினாய்’ என்று பாடுகிறார். ‘இனி நீ வைகுண்டத்திற்கு வர வேண்டும்’ என்று தேவர்கள் கேட்கிறார்கள். அதனை பட்டத்ரி இங்கே மிக அழகாகச் சுருக்கித் தந்து விடுகிறார்.

அடுத்த ஸ்லோகத்தில், "ப்ராயேண த்$^3$வாரவத்யாம்’ அவ்ரு’தத், அயி ததா$^3$ நாரத$^3$:, த்வத்$^3$ரஸார்த்$^3$ர:"—நாரதர் உன்னுடைய ஸங்கம் வேண்டும் என்பதற்காகவே கொஞ்ச நாள் துவாரகையிலேயே தங்கியிருந்தார். “தஸ்மாத், லேபே$^4$ கதா$^3$சித்க$^2$லு ஸுக்ரு’தநிதி$^4$:, த்வத்பிதா தத்வபோ$^3$த$^4$ம்” புண்ணிய நிதியான உன்னுடைய அப்பா வசுதேவர், தேவகியோடு சேர்ந்து நாரதரிடமிருந்து அந்த தத்துவ போதத்தை அறிந்து கொண்டார். இதுதான் அந்த நவயோகி உபாக்கியானம்.

“ப$^4$க்தாநாம், அக்$^3$ரயாயீ, ஸ ச க$^2$லு மதிமான்” பிருஹஸ்பதியின் சிஷ்யரான உத்தவர், மகா புத்திசாலி (மதிமான்). “உத்$^3$த$^4$வஸ்த்வத்த ஏவ ப்ராப்தோ, விஜ்ஞாநஸாரம்” அந்த விஞ்ஞான ஸாரம் தான் உத்தவ கீதை. அதனை உன்னிடமிருந்தே நேரடியாகக் கேட்டுத் தெரிந்து கொண்டு, "ஸ கில ஜநஹிதாய, அது$^4$நா(ஆ)ஸ்தே ப$^3$த$^3$ர்யாம்" —இன்றைக்கும் உன்னுடைய உத்தரவின்படி பத்ரிகாஶ்ரமத்தில் எழுந்தருளி இருக்கிறார் அல்லவா! பாக்கியசாலிகள் இன்றைக்கும் அங்கே சென்று அவரை தரிசனம் செய்து, அவரிடமிருந்து இந்த உபதேசத்தை நேரடியாகப் பெற்று வைகுண்டத்திற்குப் போகலாம். நாமும் இந்த உத்தவ கீதையை படிக்கும் போது, "முதலில் உத்தவரை தரிசனம் செய்ய வேண்டும்; பின்னர் வைகுண்டத்தில் போய்க் க்ருஷ்ணனையே தரிசிக்க வேண்டும்" என்கிற பிரார்த்தனையோடு படிக்க வேண்டும்.

## மனிதப் பிறவியின் மேன்மை

இனி க்ருஷ்ணனுடைய உபதேசம் எப்படி ஆரம்பிக்கிறது என்று பார்ப்போம்: 93வது தசகம் 2வது ஶ்லோகம்

**क्षुत्तृष्णालोपमात्रे सततकृतधियो, जन्तवः सन्ति अनन्ताः,**
**तेभ्यो विज्ञानवत्वात्, पुरुष इह वरः, तज्जनिः दुर्लभैव ।**
**तत्रापि आत्मात्मनस्स्यात् सुहृदपि च रिपुः, यस्त्वयि न्यस्तचेताः,**
**तापोच्छित्तेरुपायं स्मरति स हि सुहृत्, स्वात्मवैरी ततोऽन्यः ॥**

**க்ஷுத்த்ரு'ஷ்ணாலோபமாத்ரே ஸததக்ரு'ததி⁴யோ, ஜந்தவ: ஸந்தி அநந்தா:** பசி, தாகத்தைப் போக்கிக் கொள்வதற்காகவே எப்பொழுதும் அலைந்து கொண்டிருக்கும் ஜீவஜந்துக்கள் இந்த உலகத்தில் எண்ணற்றவை இருக்கின்றன. **தேப்⁴யோ விஜ்ஞாநவத்வாத்** எல்லா உயிர்களுக்கும் சுக-துக்கங்கள் உண்டு. “சுகம் எப்போதும் இருக்க வேண்டும், துக்கம் எனக்கு வரவே கூடாது" என்று எல்லாரும் நினைக்கிறார்கள். ஆனால், அது எப்படிச் சாத்தியம்? "இந்தத் துக்கத்தை எப்படிப் போக்கிக் கொள்வது? நிரந்தர சுகத்தை எப்படி அடைவது என்பதைத் தன் பகுத்தறிவினால் அறிந்து கொள்ளும் பாக்கியத்தை, இந்த மனிதப் பிறவிக்கு மட்டும் தான் நான் கொடுத்து இருக்கிறேன். **புருஷ இஹ வர:** அதனால் மனிதன் எல்லாரைக் காட்டிலும் உயர்ந்தவன். இந்த இடத்தில் க்ருஷ்ணர் "அதனால் என் சிருஷ்டியிலேயே எனக்கு மனிதனைத் தான் ரொம்பப் பிடிக்கும்" என்கிறார். **தஜ்ஜநி: து³ர்லபை⁴வ** அப்படி அந்த மனித ஜன்மா என்பது மிகவும் அரிதானது.

**தத்ராபி ஆத்மாத்மநஸ்ஸ்யாத் ஸுஹ்ரு'த³பி ச ரிபு:** அப்படிப்பட்ட மனிதப் பிறவியில், ஒருவனுக்குத் தன்னுடைய ஆத்மாவே தான் நல்ல நண்பன் (ஸுஹ்ருத்); அவனுடைய ஆத்மாவே தான் அவனுக்கு எதிரியும் (ரிபு:). அதாவது, ஒருவனுடைய மனமே தான் அவனுக்கு நண்பனாகவும் இருக்கிறது, எதிரியாகவும் இருக்கிறது. **யஸ்த்வயி ந்யஸ்தசேதா:, தாபோச்சி²த்தேருபாயம் ஸ்மரதி** யார் உன்னிடத்தில் (பகவானிடம்) மனதை வைத்து, தன் தாபங்களைப் போக்கிக் கொள்வதற்கான உபாயத்தை யோசிக்கிறானோ, **ஸ ஹி ஸுஹ்ரு'த்** அவன் தான் தன்னுடைய க்ஷேமத்திற்கான காரியங்களைச் செய்து கொள்கிறான்; அவனே அவனுக்கு உண்மையான நண்பன். **ஸ்வாத்மவைரீ**

**ததோ(அ)ந்ய:** அப்படி அல்லாதவன் தனக்கு தானே எதிரி தான் என்று பகவான் கூறுகிறார்.

மனித பிறவியில் தான் மீண்டும் பிறவாமல் இருக்க என்ன செய்வது என்று சிந்தித்து மோக்ஷத்தின் வாயிலைத் திறக்க முடியும். இதை விட்டுவிட்டு, மற்ற விலங்குகளைப் போல வெறும் உணவைத் தேடுவதிலும், பொருள் சம்பாதிப்பதிலும், புலனின்பங்களை அனுபவிப்பதிலுமே வாழ்நாளை வீணடித்து விடக்கூடாது. அப்படிச் செய்பவன் ஒரு மாளிகையின் ஏழு மாடிகளை ஏறி உச்சியை அடைந்து அங்கிருந்து விழுவது போலாகி விடும். எனவே, எத்தனையோ பிறவிகளைத் தாண்டிய பின் கிடைத்துள்ள இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்கிறார் பகவான்.

வாரியார் ஸ்வாமிகள் இதை அழகாகச் சொல்வார்: "இரை தேடுவதோடு இறையும் தேடு" என்று. இடையின 'ர', வல்லின 'ற', இரை என்றால் சாப்பாடு; சாப்பாடு தேடுவது சரி, அதோடு சேர்ந்து இறைவனையும் தேட வேண்டும் என்று சொல்லுவார்.

ஒரு நூறு வருடங்களுக்கு முன்னால் கூட நம் சமூகம் விவசாயம் சார்ந்த (Agrarian setup) அமைப்பாக இருந்தது. அதில் பணக்காரன் என்றால் ஒரு வில்வண்டி வைத்திருப்பான், கொஞ்சம் தனதானியங்கள் சேர்த்து வைத்திருப்பான். இப்போது இருப்பது போல, "பணத்தைச் சம்பாதித்து பேங்கில் போட்டுக் கொள்ளலாம்" என்கிற கலாசாரம் அப்போது இல்லை.மற்ற மிருகங்களுக்கும் மனிதனுக்கும் என்ன வித்தியாசம்? மனிதன் தன் பகுத்தறிவினால் ஞானத்தை அடைய முடியும் என்பது தான் வித்தியாசம். ஆனால், உலகத்தில் முக்கால்வாசி மனிதர்களை விட, மிருகங்கள் நிம்மதியாக இருப்பது போலத் தோன்றுகிறது. ஏனென்றால் அதற்கு 'பேங்க் பேலன்ஸ்' கிடையாது; அதனால் பல கவலைகள் இல்லை.

இதனை அருணகிரிநாதர் "அற்றைக்கிரை தேடி அத்தத்திலும் ஆசை" என்ற திருப்புகழில் மிக அழகாகப் பாடுகிறார்: அத்தம் என்றால் பணம். அன்றாடம் சாப்பாட்டைத் தேடுகிறோம், அதோடு கூட "இன்னும் கொஞ்சம் பணம் சேர்க்க வேண்டும்" என்கிற ஆசை வந்து விடுவதால் அதைப் பற்றித் தவிக்கிறோம். "அதைப் பற்றித் தவியாமல் உன்னுடைய பற்றைப் பெறுவேனோ" என்று முருகனிடம் கேட்கிறார். உன்னிடம்

எனக்கு ஒரு பற்று வராதா? அப்போது தான் நாம் இந்த உலக ஓட்டத்திலிருந்து திரும்பி, உண்மையை நோக்கிச் செல்ல முடியும்.

அற்றைக் கிரைதேடி அத்தத் ...... திலுமாசை
பற்றித் தவியாத பற்றைப் ...... பெறுவேனோ
வெற்றிக் கதிர்வேலா வெற்பைத் ...... தொளைசீலா
கற்றுற் றுணர்போதா கச்சிப் ...... பெருமாளே!

இவ்வளவு சிறிய பாடலில் எவ்வளவு பெரிய தத்துவத்தைப் பாடியிருக்கிறார் பாருங்கள்! இங்கே நாம் பார்த்த ஸ்லோகத்தின் மொத்த ஸாரமும் இதில் இருக்கிறது அல்லவா! அது தான் அருணகிரிநாதருடைய அருள்வாக்கு!

**பணியுமாம் என்றும் பெருமை**

இதனைச் சொல்லிவிட்டுக் க்ருஷ்ணர் உத்தவரிடம் ஒரு கதையைக் கூறுகிறார்:

"எங்களுடைய மூதாதையரான (கூடஸ்தர்களான) யது மகாராஜா ஒருமுறை ஒரு யோகியைப் பார்த்தார். பாகவதத்தில் அவர் 'அவதூத யோகி' என்று தான் குறிப்பிடப்பட்டு இருக்கிறார். ஆனால், அவர் 'தத்தாத்ரேய யோகி' என்று பெரியோர்களும், ஸ்வாமிகளும் சொல்கிறார்கள். அந்த யோகி எதைக் குறித்தும் கவலையின்றிப் பேரானந்தத்தில் திளைத்து இருந்தார். இந்த யது மகாராஜா அவரிடம் சென்று கேட்கிறார்: 'நீங்கள் நல்ல பலசாலியாக, ஆரோக்கியமாக இருக்கிறீர்கள்; சிறந்த புத்திமானாகவும் தெரிகிறீர்கள். ஆனால், உலக மக்கள் அனைவரும் காமம், குரோதம், லோபம் (பேராசை) ஆகியவற்றால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் போது, காட்டுத் தீயில் அனைத்து விலங்குகளும் தவிக்கும் போது, ஒரு யானை மட்டும் தப்பித்து ஓடி கங்கையின் குளிர்ந்த மடுவுக்குள் ஆனந்தமாகக் குளிப்பது போல, நீங்கள் எப்போதும் இவ்வளவு ஆனந்தமாக இருக்கிறீர்களே! உங்களது இந்த ஆனந்தத்திற்கு என்ன காரணம்?'" என்று கேட்கிறார். அந்த யோகி சொன்னார், "நான் இந்த உலகத்தில் 24 குருக்களைக் கண்டேன்."

குருமார்கள் என்றால், அவர்களிடம் சென்று, நமஸ்காரம் செய்து, மந்திர உபதேசம் பெற்றுக் கொண்டார் என்று அர்த்தமில்லை. உலகத்தில் நம்மைச் சுற்றியிருக்கும் ஒவ்வொன்றைப் பார்த்தும் நாம் கற்றுக் கொள்வது தான் அது. உலகில் எதைப் பார்த்தாலும் அதிலிருந்து ஒரு பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்றால், அதற்கு முதலில் நம்மிடம்

பணிவு இருக்க வேண்டும். அதுவே பகவானுடைய கருணை இருந்தால் தான் வரும். 93வது தசகம் 3வது ஶ்லோகம்

**त्वत्कारुण्ये प्रवृत्ते, क इव नहि गुरुः, लोकवृत्ते विभूमन्,**
**सर्वाक्रान्तापि भूमिः, नहि चलति ततः, सत्क्षमां शिक्षयेयम् ।**
**गृह्णीयामीश तत्तद्विषयपरिचयेऽपि, अप्रसक्तिं समीरात्,**
**व्याप्तत्वं चात्मनो मे गगनगुरुवशात्, भातु निर्लेपता च ॥**

**த்வத்காருண்யே ப்ரவ்ரு'த்தே, க இவ நஹி கு³ரு:, லோகவ்ரு'த்தே விபூ⁴மன்** உன்னுடைய கருணை அமைந்து விட்டால், இந்த உலக விவகாரத்தில் காண்பவை எல்லாமே உனக்குக் குருவாக மாறி விடும் என்கிறார் பட்டத்ரி.

இந்த இடத்தில், காஞ்சி மஹா பெரியவா காசி யாத்திரை சென்றிருந்த போது நடந்த ஒரு சுவையான சம்பவம் நினைவுக்கு வருகிறது. பெரியவாளுக்கு அங்கே பிரமாதமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கிருந்த சில பண்டிதர்கள் பெரியவாளிடம் வந்து கேட்டார்கள், "உங்களை எல்லாரும் 'ஜகத்குரு' என்று கொண்டாடுகிறார்களே. நாங்கள் ஒன்றும் உங்களை எங்களுடைய குருவாக ஏற்றுக் கொள்ளவில்லையே, அப்படியிருக்க நீங்கள் எப்படி ஜகத்குரு ஆவீர்கள்?" என்று வாதிட்டார்கள்.

அதற்குப் பெரியவா மிக அமைதியாக பதில் சொன்னார்களாம், "இல்லை இல்லை, நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். 'நான் இந்த ஜகத்திற்கு (உலகத்திற்கு) குரு கிடையாது; இந்த ஜகமே எனக்கு குரு!' அதனால்தான் நான் ஜகத்குரு." என்று சொல்லிட்டு விளக்கினாராம்:
"அங்கே ஒரு மாடத்தில் ஒரு குருவி கூடு கட்டியிருக்கிறது பாருங்கள். அந்தக் குருவிக்கு அப்படிக் கூடு கட்டுவதற்கு ஒரு கிரியா சக்தி இருக்கிறது. அதை அந்தக் குருவியிடமிருந்து நான் கற்றுக் கொண்டேன். இப்படி இந்த உலகத்தில் எதைப் பார்த்தாலும் அதிலிருந்து நான் ஒரு விஷயத்தைக் கற்றுக் கொள்கிறேன். எனவே, இந்த ஜகத்தே எனக்குக் குரு தானே தவிர, நான் ஜகத்திற்கு குரு அல்ல." என்று கூறினாராம். அதைக் கேட்ட அந்த பண்டிதர்கள் ஆச்சரியப்பட்டு, "நாங்கள் ஏதோ தெரியாமல் பேசிவிட்டோம்" என்று பெரியவாளை நமஸ்கரித்தார்கள். அத்தகையதொரு பணிவு பெரியவாளிடம் இருந்தது.

பெரியவா எப்போதும் எதையும் கற்றுக் கொள்ளும் ஆர்வத்துடனேயே இருப்பார். யார் வந்தாலும் அவர்களிடம் கேள்விகள் கேட்டுத் தெரிந்து கொள்வார். ஒரு முறை அணுசக்தித் துறை ஆராய்ச்சியாளரான ராஜா ராமண்ணா அவர்களை பெரியவா கூப்பிட்டு அனுப்பி, அவர் தரிசனம் செய்ய வந்திருந்தார். பெரியவா தன்னைத் வரச் சொல்லிப் பேசியதை நினைத்து ராஜா ராமண்ணாவிற்கு ஒரே ஆச்சரியம்! "நமக்கு பெரியவாளுடன் என்ன தொடர்பு?" என்று வியந்த போது, பெரியவா சொன்னாராம்: "நீ உன்னுடைய தாயாரைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தாய் அல்லவா, அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால் தான் உன்னைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப் பட்டேன். அது தான், வேறொன்றும் இல்லை." என்று கூறி விட்டு அவரிடம் அணு ஆராய்ச்சி பற்றி பல விஷயங்களை கேட்டுத் தெரிந்து கொள்கிறார். பின் மெதுவாக ஆன்மீக விஷயங்களைப் பேச ஆரம்பித்தார். அவருக்குப் பௌத்த மதத்தில் ஆர்வம் இருக்கிறது என்பதை அறிந்து, பெரியவா "ஹீனயான புத்த மதம் பற்றி இந்த இரண்டு புத்தகங்கள் இருக்கின்றன, அதனைப் படித்துப் பார், உனக்கு உபயோகமாக இருக்கும்" என்று பரிந்துரை செய்தார். உலகமே யாரை 'ஸர்வக்ஞர்' என்று கொண்டாடியதோ, அவர் எல்லாரிடம் இருந்தும் ஏதேனும் ஒன்றைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்கிற ஆர்வத்தோடு இருந்தாரே, அது தான் ஆச்சரியம்!

இதே போன்றதொரு கேள்வியைச் சிருங்கேரி ஜகத்குரு ஶ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளிடமும் சிலர் கேட்டிருக்கிறார்கள்: "நீங்கள் எப்படி ஜகத்குரு ஆக முடியும்? நாங்கள் உங்களை ஜகத்குருவாக நினைக்கவில்லையே, நாங்கள் வேறு மடத்தைச் சேர்ந்தவர்கள்" என்று சொன்னபோது, அவர் சொன்னாராம், "அப்படி இல்லை, ஜகத்குரு என்றால், இந்த உலகத்தில் யார் வந்து அர்ஜுனனைப் போல 'ஶிஷ்யஸ்தேஹம் ஶாதிமாம் த்வாம் ப்ரபந்நம்' (என்னை உமது சிஷ்யனாக ஏற்றுக் கொண்டு நல்வழி காட்டுங்கள்) என்று கேட்டாலும், அல்லது ஒரு சின்ன குழந்தை வந்து ஏதேனும் ஒரு கேள்வி கேட்டால் கூட, நாங்கள் குரு ஸ்தானத்திலிருந்து அதற்கு பதில் சொல்ல வேண்டும். அது எங்களுடைய கடமை. எனவே, இந்த ஜகத்குரு என்பது ஒரு கௌரவப் பட்டமோ, பெருமையோ கிடையாது; அடிக்கடி எங்களுடைய கடமை என்ன என்பதை எங்களுக்கு நினைவூட்டுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு பெயர்" என்றாராம். அவர் அவ்வளவு பெரிய ஞானி! ஆனால் அவ்வளவு எளிமை. அது போல, பகவானுடைய கருணை

இருந்தால் மட்டும் தான் நம்மால் உலகத்தில் எல்லாவற்றிலிருந்தும் ஒவ்வொன்றைக் கற்றுக் கொள்ள முடியும்.

**தத்தாத்ரேய யோகியின் இருபத்து நான்கு குருமார்கள்**

அந்த அவதூத யோகி தான் கற்றுக் கொண்ட 24 குருக்களைப் பற்றிக் கூறுகிறார். அவற்றை நாம் இப்போது வரிசையாகப் பார்ப்போம்:

**1. பூமி (பூமி தேவி)**

**ஸர்வாக்ராந்தாபி பூ⁴மி:, நஹி சலதி தத:, ஸத்க்ஷமாம் ஶிக்ஷயேயம்**

பூமியை மனிதர்கள் என்ன பாடுபடுத்தினாலும், அது எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு மக்களுக்கு வேண்டிய நன்மைகளை மட்டுமே செய்து வருகிறது. மனிதர்கள் பூமியை உழுகிறார்கள், ஆனால் அது பயிரைக் கொடுக்கிறது; கிணறு வெட்டுகிறார்கள், அது தூய நீரைக் கொடுக்கிறது; அஸ்திவாரம் போடுகிறார்கள், அது வாழ க்ருஹம் கொடுக்கிறது. ஆடை நெய்ய பருத்தியைக் கொடுக்கிறது; மரங்களையும் பழங்களையும் தருகிறது. இன்னும் சொல்லப் போனால், வெடி வைத்துப் தன்னைப் பிளந்தால் கூட, தனக்குள்ளிருக்கும் தங்கம், வெள்ளி போன்ற செல்வங்களை எடுத்துக் கொடுக்கிறது. இப்படி நாம் அதற்குத் தீமையே செய்தாலும், எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளும் உன்னதமான பொறுமையை (ஸத்க்ஷமாம்) நான் பூமியிடமிருந்து கற்றுக் கொண்டேன்.

நாராயணீயத்தில் இங்கே பூமி மட்டும் தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், பாகவதத்தில் மரங்கள், மலைகள் ஆகிய இரண்டையும் சேர்த்துக் குருவாகச் சொல்லியிருக்கிறார்.

மரங்களிடமிருந்து 'பரோபகாரம்' செய்வதைக் கற்றுக் கொண்டேன் என்கிறார். மரங்கள் நமக்குக் கனிகளைத் தருகின்றன. அதனை வெட்டினால் கூடப் பொறுத்துக் கொண்டு, வீடு கட்டுவதற்குத் மரங்களைக் கொடுக்கிறது. இந்தத் தலைப்பில் நமது ஸ்ரீ சுந்தர்குமார் அண்ணா ரொம்ப ரசமாக இரண்டு விஷயங்களைச் சொன்னார்:

"வாழை மரத்திற்கு ஏன் வாழை மரம் என்று பெயர் தெரியுமா?" என்று கேட்டுவிட்டு "மற்ற மரங்களாவது பழம் கொடுக்கும், அல்லது காய் கொடுக்கும். ஆனால், இந்த வாழை மரம் தன் தண்டு, இலை, பூ, பழம், காய் என்று ஒன்று விடாமல் எல்லாவற்றையும் மனிதர்களுக்கு உபயோகமாகக் கொடுக்கிறது. அது மட்டுமல்ல, தான் கீழே சாயும் போது கூட, தன் பக்கத்தில் நான்கு வாழைக் கன்றுகளை 'வாழையடி

வாழையாக' வளர விட்டுவிட்டுப் போகிறது. இப்படி மற்றவர்களுக்காகவே வாழ்வதனால் தான் அதற்கு வாழை மரம் என்று பெயர்.

திருமணங்களில் ஏன் வாழை மரம் கட்டுகிறோம் தெரியுமா? 'பிரம்மச்சாரியாக இவ்வளவு நாள் நீ எந்தக் கவலையும் இல்லாமல் கேர்-ஃப்ரீயாக இருந்து விட்டாய். இனிமேல் ஒரு பெண்ணிற்குப் பொறுப்பாகப் போகிறாய், அடுத்தது குழந்தைகள் வரும், அதற்கெல்லாம் பொறுப்பாகப் போகிறாய். இந்த வாழை மரம் போல நீயும் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் வாரி வழங்கக் கற்றுக் கொள்ள வேண்டும்' என்பதை உணர்த்துவதற்காகத் தான்.

அடுத்ததாக, "ஸ்வாமி சிவானந்தர் ஒரு கதை சொல்வார்" என்று கூறி ஒரு கதையைச் சொன்னார் அண்ணா: ஒரு விறகுவெட்டி, பரம ஏழை. காட்டுக்கு விறகு வெட்டச் சென்றிருந்தான். பசியினால் இரண்டு நாட்களாக அவன் சாப்பிடவில்லை. சோர்ந்து போய் ஒரு மரத்தடியில் படுத்தான். நிமிர்ந்து பார்த்தபோது அங்கே ஒரு மாமரம் தெரிந்தது, அதில் இரண்டு நல்ல மாம்பழங்கள் இருந்தன. 'சரி, ஒரு கல்லை எறிந்து பார்ப்போமே' என்று ஒரு கல்லை எடுத்து வீசினான். அந்த இரண்டு மாம்பழங்களும் கீழே விழுந்தன. 'அப்பாடி' என்று அதனைச் சாப்பிட்டுத் தன் பசியைத் தீர்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது அந்த நாட்டின் ராஜா வேட்டையாடுவதற்காக அங்கே வந்தார். குதிரையில் வேகமாக வந்தவர், தன் வீரர்களை எல்லாம் பின்னே விட்டுவிட்டுத் தனியாக முன்னால் வந்து விட்டார். இந்த விறகுவெட்டி வீசிய கல், எதிர்பாராத விதமாக ராஜாவின் தலையில் பட்டுவிட்டது! தலையிலிருந்து ரத்தம் வழிகிறது. பின்னால் வந்த வீரர்கள் இதைப் பார்த்தவுடனே, 'ராஜாவை இந்த நிலைமைக்கு ஆக்கியது யார்?' என்று சுற்றிலும் தேடிப் பார்க்கிறார்கள். அங்கே இந்த விறகுவெட்டி பசியார மாம்பழம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். 'உனக்கு எப்படி இந்த மாம்பழம் கிடைத்தது?' என்று கேட்க, அவன் அப்பாவியாக, 'பசியினால் மாம்பழத்திற்காக ஒரு கல்லை எறிந்தேன்.' என்றான். உடனே அவனைக் கைது செய்து ராஜாவின் முன்னால் நிறுத்தினார்கள். 'இவன் தான் உங்கள் மேல் கல் எறிந்தவன்' என்று சொன்னவுடனே, அங்கிருந்த மந்திரிகள், 'இவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?' என்று விவாதித்தார்கள். ஒரு மந்திரி சொன்னான், 'இவனைச் சிறையில்

அடைத்துச் சித்திரவதை செய்ய வேண்டும்' என்று; இன்னொருவன், 'இவன் தலையைத் துண்டிக்க வேண்டும்' என்றான்.

ஆனால் ராஜா எல்லாவற்றையும் கேட்டுவிட்டுச் சொன்னார்: 'இவனுக்குத் தினமும் ஒரு கூடை மாம்பழம், இவனுடைய வீட்டுக்கே கொண்டு போய் கொடுத்து விடுங்கள்' என்றாராம். எல்லாரும், 'என்ன இது ஆச்சரியமாக இருக்கிறது!' என்று வியந்த போது, ராஜா சொன்னாராம்: 'ஓரறிவு இருக்கிற ஒரு மரமே, தன் மேல் கல்லை எறிந்தவனுக்கு இரண்டு சுவையான மாம்பழங்களைக் கொடுத்ததே! ஆறறிவு படைத்தவனாய், இவ்வளவு செல்வங்கள் கொண்ட அரசனாய் இருக்கும் நானும் அவ்வாறு தர வேண்டாமா?' என்றாராம். அந்த மாதிரி, பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் இருந்தால் பரோபகாரம் செய்யலாம்.
அதே போல, மலையைப் போலத் தர்மத்தில் உறுதியாக இருக்க வேண்டும் என்பதையும் கற்றுக் கொண்டேன் என்று அவதூதர் கூறுகிறார்.

**2. வாயு (காற்று)**

**க்³ரு’ஹ்ணீயாமீஸ, தத்தத்³விஷயபரிசயே(அ)பி, அப்ரஸக்திம்’ ஸமீராத்** வாயுவானது (காற்று) எல்லா இடங்களிலும் வீசுகிறது. மல்லிகைத் தோட்டம் வழியாக வரும்போது மல்லிகைப் பூ வாசனை வருகிறது; ரோஜாத் தோட்டம் வழியாக வரும்போது ரோஜா மலரின் வாசனை வருகிறது; ஏதேனும் துர்நாற்றம் வீசும் இடத்தின் வழியே சென்றால் அந்த நாற்றமும் வருகிறது. ஆனால் காற்று, "ஐயோ, என் மல்லிகைப் பூ வாசனை போய்விட்டதே!" என்று வருத்தப்படுகிறதா? இல்லை. அந்தந்தக் கணத்தில் அந்தந்த அனுபவம், அவ்வளவுதான். அந்த வாசனையைத் தன்னுள் பிடித்து வைத்துக் கொண்டு காற்று கஷ்டப்படுவதில்லை. அதுபோல, நாமும் உலக விவகாரங்களில் பழகினாலும், அந்தந்த அனுபவங்களை மனதிற்குள் பிடித்து வைத்துக் வாசனைகளை ஏற்றிக் கொண்டு கஷ்டப்படக் கூடாது என்பதை வாயுவிடமிருந்து கற்றுக் கொண்டேன்.

**3. ஆகாசம்**

**வ்யாப்தத்வம் சாத்மநோ மே க³க³நகு³ருவஶாத், பா⁴து நிர்லேபதா ச** அடுத்தது ஆகாசம் (ககனம்). வாயு என்பது நமது மூக்கிற்குள் போய்வி்ட்டு வருகிறது, ஜில்லென்று உடம்பில் வீசுவதால் நம்மால் உணர முடிகிறது. ஆனால் ஆகாசமும் அப்படித் தானே? எங்கும்

வியாபித்திருக்கிறது (வ்யாப்தத்வம்)! நமக்கு உள்ளேயும் வெளியேயும் அந்த ஆகாசம் நிறைந்திருக்கிறது அல்லவா? அது போல பகவானும் எங்கும் வியாபித்திருக்கிறார். ஆகாசம் எங்கும் நிறைந்திருந்தாலும், அது எந்தப் பொருளோடும் ஒட்டிக் கொள்வதில்லை (நிர்லேபதா). அதுபோல நாமும் உலகத்தில் எதிலும் பற்றற்று, ஒட்டாமல் இருக்க வேண்டும் என்பதை ஆகாசத்தின் மூலம் கற்றுக் கொண்டேன்.
அடுத்தது 93வது தசகம் 4வது ஸ்லோகம்

**स्वच्छः स्यां पावनोऽहं, मधुर उदकवत्, वह्निवत् मा स्म गृह्णां,
सर्वान्नीनोऽपि दोषं, तरुषु तमिव मां, सर्वभूतेषु अवेयाम् ।
पुष्टिर्नष्टिः कलानां शशिन इव तनोः, नात्मनोऽस्तीति विद्यां,
तोयादिव्यस्तमार्ताण्डवत्, अपि च तनुषु एकतां त्वत्प्रसादात् ॥**

**4. ஜலம் (நீர்)**

**ஸ்வச்ச²: ஸ்யாம் பாவநோ(அ)ஹம், மது⁴ர உத³கவத்** ஜலம் எப்போதும் தூய்மையாக (ஸ்வச்சமாக) இருக்கிறது. ஒரு நீர்நிலையைப் பார்த்த மாத்திரத்திலேயே நம் மனதிற்குள் ஒரு ஆனந்தம் ஏற்படுகிறது அல்லவா? அது போல, நம்மைப் பார்த்தவுடனேயே மற்றவர்கள் மனதிற்குள் ஒரு சந்தோஷம் ஏற்படும் படியாக நாம் வாழ வேண்டும். நீர் நமக்கு மதுரமாக (இனிமையாக) இருந்து, தாகத்தைத் தீர்க்கிறது (தாஹ சாந்தி). அதுபோல, நம்மோடு பழகுபவர்களுக்கும் பகவானைப் பற்றிய விஷயங்களைச் சொல்லி, மகான்களைப் பற்றிப் பேசி, அவர்களுக்கு ஒரு நிம்மதியையும் சந்தோஷத்தையும் கொடுக்க வேண்டும். ஜலத்தைக் கொண்டு நீராடினால் உடம்பிற்குத் தூய்மை கிடைப்பது போல, நம்மோடு பழகுபவர்களின் பாவங்கள் நீங்கும்படியாக நாம் எப்போதும் பகவந்நாமங்களைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்.

**5. அக்னி (நெருப்பு)**

**வஹ்நிவத் மா ஸ்ம க்³ருஹ்ணாம், ஸர்வாந்நீநோ(அ)பி தோ³ஷம்** —அக்னியானது (நெருப்பு) தன்னுள் விழும் எல்லாவற்றையும் எரித்துச் சாம்பலாக்கித் தூய்மைப்படுத்திவிடுகிறது. அதுபோல, நாம் எங்கே சென்று உணவருந்தினாலும், எத்தகைய சூழ்நிலையில் இருந்தாலும், அதனால் நமக்கு எந்தத் தோஷமும் (பாவமும்) ஒட்டாத அளவுக்கு நம்முடைய தபஸை நாம் விருத்தி செய்து கொள்ள வேண்டும் என்பதை அக்னியிடமிருந்து கற்றுக் கொண்டேன். **தருஷு தமிவ மாம்,**

**ஸர்வபூ⁴தேஷு அவேயாம் -** மரக்கட்டைகளில் அக்னி ஒளிந்து இருப்பது போல் ஆத்மா எல்லா உடல்களிலும் இருப்பதை அறிவேனாக.

**6. சந்திரன்**

**புஷ்டிர்நஷ்டி: கலாநாம் ஶஶிந இவ தநோ:, நாத்மநோ(அ)ஸ்தீதி வித்³யாம்** —சந்திரனுடைய கலைகள் (திதிகள்) தான் தேய்ந்து வளர்கின்றனவே தவிர, சந்திரன் தேய்ந்து வளர்வதில்லை. அதுபோல, இந்த மனித உடம்பானது தேய்ந்து வளர்கிறது; ஒவ்வொரு வயதிலும் ஒரு விதமாக மாறுகிறது. ஆனால், நமக்குள்ளிருக்கும் ஆத்மாவிற்கு அத்தகைய தேய்வோ, வளர்ச்சியோ கிடையாது என்கிற உண்மையைச் சந்திரனிடமிருந்து தெரிந்து கொண்டேன்.

**7. சூரியன்**

**தோயாதி³வ்யஸ்தமார்தாண்ட³வத், அபி ச தநுஷு, ஏகதாம் த்வத்ப்ரஸாதா³த்** — 'மார்த்தாண்ட:' என்றால் சூரியன். ஒரு தொட்டியில் இருக்கும் தண்ணீரில் சூரியன் பிரதிபலிக்கிறது. அந்தத் தொட்டித் தண்ணீரை கீழே கொட்டி விட்டால், தொட்டிக்குள் தெரிந்த சூரியன் மறைந்து விடுகிறது; அதற்காக ஆகாயத்தில் இருக்கும் நிஜ சூரியனுக்கு ஏதேனும் ஆபத்து உண்டா? அதுபோல, எல்லா உடம்புகளுக்குள்ளும் பகவான்தான் பிரதிபலிக்கிறான். இந்த எல்லா ஜீவன்களும் அழிந்தாலும், பகவான் அக்ஷயமானவன், அழிவற்ற பரம்பொருள் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

### ஆறிடும் மேடும் மடுவும் போலவாம் செல்வம்

சூரியனை வைத்துக் கொண்டு, ஸ்வாமிகள் எனக்கு இன்னுமொரு பாடம் சொல்லிக் கொடுத்தார்: சூரியன் பூமியிலிருக்கும் தண்ணீரைத் தன்பால் இழுக்கிறது, பின்னர் அதனை வேறொரு இடத்தில் மழையாகக் கொண்டு போய் விடுகிறது. அந்தத் தண்ணீரைப் பற்றிச் சூரியன் ஏதேனும் கவலைப்படுகிறதா? "என்னுடைய ஜலத்தை இவர்கள் கொடுத்தார்கள், அவர்கள் எடுத்துக் கொண்டு விட்டார்கள்," என்றெல்லாம் அது கவலைப் படுவதில்லை. அது போல, பணம் யாரிடமிருந்தோ வருகிறது, யாரோ வாங்கிச் செலவு செய்கிறார்கள்; அதனைப் பற்றி நாம் அதிகம் அலட்டிக் கொள்ளக் கூடாது என்று ஸ்வாமிகள் சொன்னார்.

என் அப்பாவைப் பற்றி உங்களிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். என் அப்பா நிறைய பரோபகாரங்கள் செய்வார். 'பொன்மலர்

நாற்றமுடைத்து' என்று சொல்வார்களே—அழகான தங்கப் புஷ்பத்தில் நல்ல நறுமணமும் வீசினால் எப்படி இருக்குமோ, அதைப் போல அவருடைய பக்தியும் நற்குணங்களின் மேல் கட்டமைக்கப்பட்ட பக்தியாக இருந்தது. அதனால் தான் ஸ்வாமிகளுக்கு என் அப்பாவிடம் ரொம்பப் த்ருப்தி. ஸ்வாமிகள் அடிக்கடிச் சொல்வார்: "முருக பக்தி செய்தால், திருப்புகழ் ஓதினால், ஒருத்தர் எப்படிப்பட்ட குணங்களோடு இருக்க வேண்டுமோ, அப்படி உன்னுடைய அப்பா இருக்கிறார். அண்ணா தம்பிகள் எல்லாரும் வசதியாக இருக்கிறார்களே என்கிற பொறாமை கிடையாது; எதிலும் நிதானமாக இருக்கிறார், நிறைய பரோபகாரம் செய்கிறார்." என்று பாராட்டுவார்.

நான் என் கல்லூரிப் படிப்பை முடித்த பின்னர் ஒரு வருடம் வேலை பார்த்தேன். கல்லூரிப் படிப்பின் போது ஸ்வாமிகளோடு நிறைய நேரத்தைச் செலவழிக்கும் பாக்கியம் கிடைத்தது. அதனால், ஸ்வாமிகள் செய்கிற இடையறாத தெய்வ வழிபாடு தான் சரியானது, நாமும் அதையே செய்ய வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. ஒருநாள் ஸ்வாமிகளிடம் சென்று, "நான் இங்கேயே உங்களுடனேயே தங்கிவிடுகிறேன், எப்போதும் பாராயணம் செய்து கொண்டே இருக்கிறேன். உங்களுடைய குழந்தைகளில் ஒருவரைப் போல என்னையும் எண்ணி பகவான் எப்படியும் காப்பாற்றுவான்." என்று கூறி வேலையை விட்டுவிட்டேன்.

ஸ்வாமிகள் என்னிடம் "அப்படி இருக்க முடியாதுப்பா! அப்பா வேலையிலிருந்து ஓய்வு பெற்றிருக்கிறார். தம்பி ஒரு கம்ப்யூட்டர் கிளாஸ் சேர்ந்திருக்கிறான். தங்கை படித்துக் கொண்டிருக்கிறாள். அப்பா உன்னை இவ்வளவு தூரம் படிக்க வைத்திருக்கிறார். உனக்கென்று சில கடமைகள் இருக்கின்றன. நீ இப்போது இப்படி இருக்கக் கூடாது. வேண்டுமானால் கொஞ்ச நாள் இப்படி இருந்து விட்டுப் பிறகு வேலைக்குப் போ" என்றார்.

சரியென்று ஒரு வருடம் ஸ்வாமிகளுடனேயே இருந்தேன். அதற்கப்புறம் வேலை தேடிய போது, எனக்கு வேலை கிடைக்கவில்லை. அப்படியே மேலும் ஒரு வருடம் ஸ்வாமிகள் அருகிலேயே அமர்ந்திருந்தேன். அந்த காலக்கட்டத்தில் தான் எனக்குச் சிவன் சார் தரிசனமும் கிடைத்தது. அது என் வாழ்க்கையின் பொன்னான காலம்.

அந்தச் சமயத்தில் என் அப்பா ஒருமுறை ஸ்வாமிகளைப் பார்க்க வந்தார். ஸ்வாமிகள் அவரிடம், "நான் இவனிடம் தொடர்ந்து 'நீ வேலை தேட வேண்டும், வேலைக்குத் திரும்பப் போக வேண்டும், இப்படியே இருந்துவிடக் கூடாது' என்று சொல்லிக் கொண்டே இருக்கிறேன்" என்றார்.

அதற்கு என் அப்பா, "நான் ரமண பகவானுடைய உபதேசத்தில் படித்திருக்கிறேன்... 'ஒரு புலியின் வாயில் அகப்பட்ட இரை அதனிடமிருந்து தப்பிக்கவே முடியாது. அதைப் போல ஒரு ஸத்குருவின் கடாக்ஷத்தில் ஒருவன் பட்டு விட்டான் என்றால், அவன் வாழ்வில் ஒருபோதும் வீண் போக மாட்டான்' என்று. அதனால் "இவன் உங்களுடைய பார்வையில் இருக்கிறான். எனக்கு இவனைப் பற்றிக் கவலை இல்லை" என்றார்.

அத்தகையதொரு வைராக்யமும் ஞானமும் என் அப்பாவிற்குள் இருந்தது. அடுத்து நாம் பார்க்கப் போகும் ஶ்லோகத்தில் 'கடல்' ஒரு குருவாக வருகிறது. கடல் நமக்கு வெறும் கிளிஞ்சல்களை மட்டும் தான் வெளியே காட்டுகிறது; ஆனால், விலை மதிப்பற்ற ரத்தினங்களை எல்லாம் தனக்குள்ளே மறைத்து வைத்திருக்கிறது. அதுபோல, நம்முடைய பக்தி, வைராக்யம் எல்லாவற்றையும் வெளியே காட்டிக் கொள்ளாமல் மறைத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று வரும். என் அப்பா அப்படித் தான் இருந்தார். இதைக் கேட்டபோது ஸ்வாமிகள் மிகவும் சந்தோஷப்பட்டார். பின்னர் என்னிடம், "நீ உன்னுடைய அப்பாவைப் போல ஆக வேண்டும் என்று வாழ்க்கையில் ஆசைப்படு. அது ஒன்றே உனக்குப் போதும்" என்றார். அதாவது "என்னைப் போல ஸந்நியாசியாக எல்லாம் ஆக வேண்டாம். அவரைப் போல சாது குணங்களை அடைந்தாலே உன் ஜன்மா பயன் அடைந்து விட்டது" என்று சொல்லாமல் சொன்னார்.

ஸ்வாமிகள் சொன்னபடியே—நான் அதன் பின்னர் நல்ல வேலைக்குச் சென்று, அமெரிக்கா சென்றேன். நிறையச் சம்பாதித்துக் கொடுத்தேன். அப்பாவிற்கு அதற்கப்புறம் சுக்கிர தசை ஆரம்பித்தது. நான் சம்பாதித்துக் கொடுத்த பணத்தையெல்லாம் அப்பா புண்ணியமாக மாற்றிக் கொடுத்தார்; அவ்வளவு தான். அவர் எப்போதும் போல அதே வேஷ்டி, அதே விபூதி, அதே சிவ பூஜை என்று தான் இருந்தார்; அவர் தன் நித்திய நியமங்களை மாற்றிக் கொள்ளவே இல்லை. நான் என் சம்பாத்தியத்தை அப்பாவிடம் கொடுத்து, அவர் அதனைச் செலவு செய்யும் போது, "நான் இவ்வளவு சம்பாதிக்கிறேன், இவ்வளவு

கொடுக்கிறேன், அதில் அவர் என்ன செலவு செய்கிறார்?" என்று ஒரு நாளும் கணக்குக் கேட்டதில்லை. திருமணமாகி, குழந்தைகள் பெற்ற பிறகும் கூட—அப்பாவிற்கு ஒரு 60 முதல் 75 வயது இருக்கும் வரை—என் சம்பளத்தை அவரிடம் கொடுத்து விட்டு, என் செலவிற்கு அவரிடமிருந்து தான் பணம் வாங்கிச் செல்வேன். அது ஸ்வாமிகள் எனக்குச் செய்த உபதேசம். ஸ்வாமிகள் மேல் என் அப்பா வைத்திருந்த பக்திக்குக் அவருக்கு கிடைத்த ஒரு பரிசு.

ஆனால், என் அப்பா பணம் வர ஆரம்பித்த பின்னர் என்னிடம் "கணேஷ்! இந்தப் பணம் வந்த பிறகு, முன்னமிருந்த அந்த மனநிம்மதி எனக்கு இல்லை" என்பார். அவருக்குள் அவ்வளவு தெளிவு இருந்தது! அப்புறம் அவர் ஒரு காலகட்டத்தில், "கணேஷ்! நீ இனிமேல் எனக்குப் பணம் தர வேண்டாம், நீயே வைத்துக் கொள். நீ பெரியவனாகி விட்டாய், உன்னுடைய குடும்பத்தைக் கவனிக்க வேண்டும்" என்று சொல்லி விட்டார். அதற்கப்புறம் சில வருடங்களிலேயே அவர் முருகன் திருவடி சேர்ந்தார்.

அவர் தன் சிறு வயதில் கடுமையான ஏழ்மையைக் கண்டவர்; அதிலிருந்து மீண்டு, கடைசிக் காலத்தில் கொஞ்சம் பணம் வந்தபோது, அதனைத் தான தருமங்கள் செய்து, உறவோடு பகிர்ந்து அனுபவித்தார். அவருக்குள் இருந்த ஒரு ஸந்நியாசி குணம் வெளியே யாருக்கும் தெரியாது; தன் பேரன் பேத்திகளோடு விளையாடி மகிழ்வார். ஜாலியாக இருப்பார், ஆனால் அதிகம் பேச மாட்டார். அந்த மௌனத்தில் தான் தெரியும் அவர் ஒரு 'முனி' என்று.

இறுதி நாட்களில் உடல்நலக் குறைவோடு ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். அவர் படுத்திருந்த கட்டிலுக்கு எதிரே ஒரு முருகப் பெருமானின் படம் இருந்தது. நான் ஒரு நாள் காலையில் அவரை பார்க்கச் சென்றபோது, அவர் என்னிடம், “மாகத்தை முட்டி வரும்நெடுங் கூற்றன் வந்தால் என் முன்னே தோகைப் புரவியில் தோன்றி நிற்பாய்...!” என்று சொன்னார். அன்று மாலையே அவர் அந்த முருகப் பெருமானின் திருவடி நிழலை அடைந்து விட்டார்.

இங்கே நான் உங்களுக்கு மீண்டும் ஒரு விஷயத்தைத் தெளிவு படுத்தி விடுகிறேன். என் தந்தையிடம் இருந்த அந்தப் பக்தியோ, தாராள குணமோ, அந்த எளிமையோ — அதில் ஒரு சிறு பகுதி கூட என்னிடம்

இல்லை. நான் இவ்வளவு ஸ்வாமிகளைப் பற்றியும், என் தந்தையைப் பற்றியும் பேசுகிறேன் என்பதற்காக நீங்கள் என்னைப் பற்றித் தவறாக ஏதேனும் நினைத்துக் கொள்ள வேண்டாம். ஏதோ பெரியவர்களை எல்லாம் தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது, அவ்வளவு தான். “பக்தியை ரசிப்பது என்பது வேறு; பக்தி செய்வது என்பது வேறு", என்பார் ஸ்ரீ சிவன் சார். எனக்கு உண்மையான பக்தி வரவேண்டும் என்று நான் தினமும் பகவானிடம் வேண்டிக் கொள்கிறேன்.

தத்தாத்ரேயர் "நான் இந்த உலகத்தில் 24 குருமார்களிடமிருந்து பல படிப்பினைகளைக் கற்றுக் கொண்டேன்" என்று கூறி, சூரியன், சந்திரன் போன்ற இயற்கைப் பொருட்களைத் தன் குருவாகக் கொண்டு கற்ற பாடங்களை விவரிக்கிறார். நாமும் அவற்றை ஒவ்வொன்றாகப் பார்த்து வருகிறோம். அடுத்தது 93வது தசகம் 5வது ஶ்லோகம்

**स्नेहात् व्याधास्तपुत्रव्यसनमृतकपोतायितो, मा स्म भूवं,**
**प्राप्तं प्राश्नन्, सहेय क्षुधमपि शयुवत्, सिन्धुवत्स्यां अगाधः ।**
**मा पप्तं योषिदादौ शिखिनि शलभवत्, भृङ्गवत्सारभागी**
**भूयासं, किन्तु तद्वत् धनचयनवशात्, माहमीश प्रणेशम् ॥**

**8.மாடப்புறா (சம்ஸார பந்தம்)**
**ஸ்நேஹாத், வ்யாதா⁴ஸ்தபுத்ரவ்யஸநம்ருதகபோதாயிதோ, மா ஸ்ம பூ⁴வம்** - ஒரு புறா, இன்னொரு புறாவோடு ஜோடி சேர்ந்து வாழ்கிறது. இரண்டு புறாக்களும் சேர்ந்து இரையைத் தேடி வருகின்றன. (இதை உபன்யாசத்தில் ஸ்வாமிகள் குறிப்பிடும் போது நகைச்சுவையாகக், 'இக்காலத்தில் கணவன், மனைவி இருவருமே வேலைக்குச் செல்வதைப் போல' என்பார்). அவற்றுக்குக் குஞ்சுகள் பிறக்கின்றன. அவற்றுக்கு உணவூட்டி மகிழ்வோடு வாழ்கின்றன. ஒருநாள் வேடன் ஒருவன் வலை வீசுகிறான். அதில் குஞ்சுகள் மாட்டிக் கொள்கின்றன. இதைப் பார்த்த தாய் புறா, 'என் குழந்தைகள் இல்லாத இந்த வாழ்க்கை எனக்கு எதற்கு?' என்று கதறிக் கொண்டு தானும் அந்த வலையில் போய் விழுகிறது. ஆண் புறாவும் அதைத் தாங்க முடியாமல், 'என் குடும்பமே அழிந்த பிறகு எனக்கு என்ன இருக்கிறது?' என்று அதுவும் வலையில் விழுகிறது.

இது எதைக் காட்டுகிறது என்றால், நாம் சம்ஸார பாச வலையில் அளவுக்கு அதிகமாக மாட்டிக் கொள்ளக் கூடாது என்பதைத் தான். இதற்கு ஸ்வாமிகள் ஒரு உதாரணம் சொல்வார். மகன் அல்லது மகள்

வெளிநாட்டில் இருக்கிறார்கள். மகள் கர்ப்பமாக இருக்கிறாள் அல்லது மகன் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுகிறான் என்று கேள்விப்பட்டதும், அம்மா உடனே வெளிநாட்டுக்குக் கிளம்பி விடுகிறார். 'அவள் போன பிறகு நான் இங்கே தனியாக என்ன செய்வேன்?' என்று அப்பாவும் அவர் பின்னாடியே கிளம்பி விடுகிறார். இதனால் பித்ருக்களுக்குச் செய்ய வேண்டிய தர்ப்பணங்கள், ஶ்ராத்தங்கள் எல்லாம் விடுபட்டுப் போகின்றன. நம்முடைய தர்மங்களை நாம் எதற்காகவும் விட்டுக் கொடுக்கக் கூடாது.

இன்றைய காலத்தில் நாம் வெளிநாட்டிற்குத் தான் போக வேண்டும் என்பதில்லை; 'மெட்டீரியலிசம்' எனப்படும் இந்த உலகாயத வலை, 'வேர்ல்ட் வைட் வெப்' (World Wide Web) போல உலகம் முழுவதையும் ஆக்கிரமித்து, நம்மை மேன்மேலும் இறுக்கிக் கொண்டு இருக்கிறது. எனவே, நாம் இந்த உலகக் காரியங்களில் அளவுக்கு அதிகமாக மூழ்கிவிடக் கூடாது. எல்லாவற்றிலும் 'நானும் வருகிறேன்' என்ற மூக்கை நுழைக்காமல், அடுத்த தலைமுறையினரிடம், "நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள், உங்களுக்குத் தெரியாததா?" என்று பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு, நாம் பகவத் பஜனத்தில் அதிக நேரத்தைச் செலவிட வேண்டும் என்பதும் ஒரு பாடம்.

### 9.மலைப்பாம்பு (திருப்தி)

**ப்ராப்தம் ப்ராஶ்நன், ஸஹேய க்ஷுத⁴மபி ஶயுவத்** - மலைப்பாம்பு தனக்கென இரை தேடி அலைவதில்லை; அது இருந்த இடத்திலேயே இருக்கும். ஏதேனும் ஆடோ அல்லது பிற விலங்கோ கிடைத்தால் அதை அப்படியே விழுங்கிவிட்டு, ஒரு மாதம் வரை ஜீரணம் செய்து கொண்டு பேசாமல் இருக்கும். உணவு கிடைக்கா விட்டால் பட்டினி கிடக்கும், கிடைத்தால் சாப்பிட்டுக் கொள்ளும். அதைப் போல, ஒரு துறவி (ஸந்நியாசி) தனக்கு உணவு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் கவலைப்படக் கூடாது.

ஸ்வாமிகள் கூறுவார்: "உணவைப் பற்றிய கவலைப் படுபவன் ஸந்நியாசம் வாங்கிக் கொள்ளவே கூடாது." ஸந்நியாசம் வாங்கிவிட்டு, பிறகு ஒரு ஸங்கத்தையோ, மடத்தையோ ஆரம்பித்து, சிறிய குடும்பத்திலிருந்து பெரிய குடும்பத்தின் பொறுப்பைத் தலையில் ஏற்றிக் கொண்டால் அப்பறம் என்ன இருக்கிறது? 'தனித்து இயங்குபவனே வைராக்யவான் ஆவான்' என்று சிவன் சார் தன் புத்தகத்தில் எழுதி இருக்கிறார். உணவுக் கவலையைத் தாண்டிய பின்னர் தான் ஒருவன் துறவியாக வேண்டும்.

அதே போல, சிவன் சார் தன் புத்தகத்தில், "ஸந்நியாசி பணத்தைத் தொடக் கூடாது, சேர்த்து வைக்கக் கூடாது. அது துறவறத்திற்குப் பெரிய களங்கம்" என்று எழுதியுள்ளார். "இது எப்படிச் சாத்தியம்?" என்று நீங்கள் கேட்டால், "அப்படியானால் ஸந்நியாசமே வாங்கிக் கொள்ளாதீர்கள். இல்லறத்திலேயே இருந்து கொண்டு, வெள்ளை ஆடை உடுத்தி, குடும்ப விஷயங்களில் அதிகமாக ஒட்டாமல் வைராக்யத்தோடு இருங்கள்" என்கிறார். பணத்தோடு தொடர்பு இருந்தால் அது உண்மையான ஸந்நியாசம் கிடையாது என்பது அவர் கருத்து.

**10.கடல் (ஆழமான உள்ளம்)**
**ஸிந்து$^4$வத்ஸ்யாம் அகா$^3$த$^4$:** - கடல் நமக்கு வெளியிலிருந்து பார்க்கும் போது வெறும் கிளிஞ்சல்களைத் தான் காட்டுகிறது; ஆனால் அதன் ஆழத்திற்குள் விலைமதிப்பற்ற ரத்தினங்கள் ஒளிந்திருக்கின்றன. அதைப் போல, நம்முடைய பக்தி, வைராக்யம் போன்ற மேலான குணங்களை வெளியில் காட்டிக் கொள்ளாமல், பார்ப்பதற்குச் சாதாரணமாகப் பழக வேண்டும். ஆனால், உள்ளுக்குள் பகவானை அடைவதற்கான ஏக்கத்தையும் பக்தியையும் ஆழமாக வளர்த்துக் கொண்டே போக வேண்டும்.

**11.விட்டில்பூச்சி (புலன் அடக்கம் - கண்)**
**மா பப்தம் யோஷிதா$^3$தெள$^3$, ஶிகி$^2$நி ஶலப$^4$வத்** - விட்டில்பூச்சியானது எரியும் விளக்கை ஏதோ ஒரு சுவையான பழம் என்று நினைத்து, அதன் அழகில் மயங்கி, நெருப்பில் விழுந்து தன் உயிரை மாய்த்துக் கொள்கிறது. அதைப் போல, கண்களால் காணும் தற்காலிக அழகுகளில் மயங்கி, மனிதன் தன் மனதையும் உயிரையும் பறிகொடுத்து விடக்கூடாது.

ஸ்வாமிகளின் பாகவத உபன்யாசம், இப்போது யூடியூபில் (YouTube) இருக்கிறதல்லவா, அது அவர் 1996-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பேசியது. அப்பொழுது அவர் சொல்கிறார்: "புது வருடம் வந்தால் ஏதேனும் ஒரு காலண்டரை வாங்கி மாட்டி வைத்துக் கொள்கிறார்கள்." அவர் வெளிப்படையாகச் சொல்லவில்லை என்றாலும், நடிகைகளின் படங்களைக் குறிப்பிடுகிறார். இது போன்ற விஷயங்களை நாம் கண்களால் பார்த்துக் கொண்டே இருந்தால், அது ஆழமாக மனதில் பதிந்துவிடும். வாழ்நாளின் கடைசி நிமிடத்தில் அது நினைவுக்கு வந்தால், அடுத்த பிறவி அதே போன்ற ஒரு பிறவியாக அமைந்துவிடும். எனவே, நாம் எதைப் பார்க்கிறோம் என்பதில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்கிறார். அன்று அவர் காலண்டரை ஒரு எளிய

உதாரணமாகச் சொன்னார். இன்று நம் கையிலேயே, போன்களிலேயே எத்தனையோ கவர்ச்சிகள் வந்துவிட்டன. எனவே, கண்ணுக்குக் கவர்ச்சியான காட்சிகளைப் பார்த்து, புலன்களுக்கு அடிமையாகக் கூடாது என்பதை விட்டில் பூச்சியிடமிருந்து கற்றுக் கொண்டேன்.

**12.தேனீ (ஸாரத்தைக் க்ரஹித்தல் & சேமிக்காமை)**

**ப்⁴ருங்க³வத்ஸாரபா⁴கீ³ பூ⁴யாஸம், கிந்து தத்³வத் த⁴நசயநவஶாத், மாஹமீஶ ப்ரணேஶம்** - தேனீயானது பல பூக்களுக்குச் சென்று, அதில் இருக்கும் ஸாரமான தேனை மட்டும் க்ரஹித்துக் கொள்கிறது. அதைப் போல, நாமும் எதைப் படித்தாலும், எதைக் கேட்டாலும் அதில் இருக்கும் நல்ல ஸாரமான விஷயங்களை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதே நேரத்தில், தேனீ தேனைச் சேர்த்து வைக்கிறது; ஆனால் அதைத் தானும் உண்பதில்லை, பிறருக்கும் தருவதில்லை. இறுதியில் வேடன் அதை எடுத்துச் சென்று விடுகிறான். அதைப் போல, நாம் கஞ்சத்தனமாகப் பணத்தைச் சேர்த்துக் கொண்டே போகக் கூடாது. நமக்கும் பயன்படுத்தாமல், பிறருக்கும் கொடுக்காமல் வைப்பது வீணாகப் போகும். குடும்பத்தோடும், இல்லாதவர்களோடும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை இதன் மூலம் அறியலாம்.

அடுத்தது 93வது தசகம் 6வது ஶ்லோகம்

**मा बद्ध्यासं तरुण्या, गज इव वशया, नार्जयेयं धनौघं,**
**हर्तान्यस्तं हि माध्वीहर इव, मृगवत्, मा मुहं ग्राम्यगीतैः ।**
**नात्यासज्जेय भोज्ये, झष इव बडिशे, पिङ्गलावत् निराशः**
**सुप्यां, भर्तव्ययोगात् कुरर इव विभो, सामिषः अन्यैः न हन्यै ॥**

**13.யானை (தொடு உணர்ச்சி)**

**மா ப³த்³த்⁴யாஸம் தருண்யா, க³ஜ இவ வஶயா** - யானைக்குத் தொடுதல் உணர்ச்சி மிகவும் அதிகம். அதனால்தான், பாகன்கள் ஒரு குழி தோண்டி, அதன் மேல் இலை தழைகளைப் பரப்பி, மறுபுறம் ஒரு பெண் யானையை நிறுத்தி வைக்கிறார்கள். அந்தப் பெண் யானையைத் தொட வேண்டும் என்ற ஆசையோடு வரும் ஆண் யானை, அந்தக் குழியில் விழுந்து மாட்டிக் கொள்கிறது. அதன் பிறகு அதை எத்தனையோ துன்புறுத்தி, அடக்கி மனிதன் தன் வசப்படுத்திக் கொள்கிறான். மனிதனை விட ஆயிரம் மடங்கு பலம் கொண்ட யானை, தன் ஒரு புலன்

இன்ப ஆசையினால் மனிதனின் பேச்சைக் கேட்க வேண்டிய நிலைக்கு ஆளாகிறது.

**14. தேன் எடுப்பவன் (பொருளாசை)**

**நார்ஜயேயம் த⁴நௌக⁴ம், ஹர்தாந்யஸ்தம் ஹி மாத்⁴வீஹர இவ** - தேனீக்கள் எவ்வளவோ பாடுபட்டுத் தேனைச் சேமிக்கின்றன. ஆனால், தேன் எடுப்பவன் புகையைப் போட்டு, அத்தனை தேனீக்களையும் விரட்டிவிட்டு அந்தத் தேனை எளிதாக எடுத்துச் சென்று விடுகிறான். அதைப் போல, நாம் அரும்பாடுபட்டுப் பணத்தைச் சேர்த்து வைத்தாலும், யாரோ ஒருவன் அதைத் தட்டிச் சென்று விடுவான். இன்றைய காலத்தில் டிஜிட்டல் ஸ்கேம்கள் (Digital Scams) மூலம் ஆன்லைனிலேயே பணம் திருடப்படுவதைப் பார்க்கிறோம். பணம் என்பது, ஆறு, மேடு பள்ளங்கள் மீது போவது போலத் தான்; லாப நஷ்டங்கள் வந்து கொண்டே இருக்கும். பணம் சேர்ப்பதில் தீவிரமாக இருந்தால் நிறைய நேரம் விரயமாகி விடும்.

**15.மான் (கேட்டல் உணர்ச்சி)**

**ம்ருக³வத், மா முஹம் க்³ராம்யகீ³தை:** - மானுக்கு இசை கேட்பதில் மிகுந்த விருப்பம் உண்டு. வேடன் ஒரு கருவியை வாசித்து அழகான இசையை எழுப்புவான். மான் அந்த இசையில் மயங்கி அப்படியே நிற்கும் போது, வேடன் அதன் மேல் அம்பு எய்து கொன்று விடுவான். அதைப் போல, நாம் கிராமிய கீதங்களிலும் மனதைச் செலுத்தக் கூடாது. கிராமிய கீதம் என்றால் சினிமா பாடல்கள் என்று ஸ்வாமிகள் குறிப்பிடுகிறார். அவற்றைக் கேட்டுக் கொண்டே இருந்தால் நம் மனம் கெட்டுப் போகும்.

**16.மீன் (சுவை உணர்ச்சி)**

**நாத்யாஸஜ்ஜேய போ⁴ஜ்யே, ஜ²ஷ இவ ப³டி³ஶே** - மீனானது ஆற்றில் கிடைக்கும் உணவை உண்டு நிம்மதியாக வாழலாம். ஆனால், தூண்டிலில் இருக்கும் ஒரு சிறிய மாமிசத் துண்டிற்கு ஆசைப்பட்டு, அதைத் தீண்டும் போது மாட்டிக் கொண்டு தன் உயிரை இழக்கிறது. அதைப் போல, மனிதன் நாக்கு ருசிக்கு அடிமையாகித் தன் வாழ்நாளைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது. இந்த இடத்தில் பாகவதத்தில் "நாக்கை வென்றவன் எல்லாப் புலன்களையும் வென்றவன் ஆவான்" என்று ஒரு வரி வருகிறது.

## 17.பிங்கலை (ஆசையே துக்கத்திற்கு காரணம்)

**பிங்க³ளாவத் நிராஶ: ஸுப்யாம், ப⁴ர்தவ்யயோகா³த்** - பிங்கலை என்றொரு வேசி இருந்தாள். அவள் ஒரு நாள் இரவு, தனக்கு வருமானம் தரக்கூடிய வாடிக்கையாளர்கள் யாராவது வருவார்களா என்று வெகு நேரம் வாசல் புறம் பார்த்துப் பார்த்து ஏமாந்து போகிறாள். யாரும் வராததால் அவளுக்குள் ஒரு பெரும் விரக்தி ஏற்படுகிறது. அந்த விரக்திதான் பகவான் அவளுக்குச் செய்த அனுக்ரஹம்.

அவள் தனக்குள்ளேயே பேசிக் கொள்கிறாள்: "அறிவில்லாத நான், எனக்குள்ளேயே இருந்து கொண்டு அழியாத பேரின்பத்தை அளிக்கக்கூடிய பரமாத்மாவை மறந்து விட்டு, துன்பத்தையும் கவலையையும் மட்டுமே தரும் இந்த அற்ப மனிதர்களை நாடினேனே! எவ்வளவு மூடபுத்தி இது!" என்று வைராக்யம் அடைந்து, பொருளாசையையும் மனிதர்கள் மீதான பற்றையும் துறந்துவிட்டு நிம்மதியாகத் தூங்குகிறாள்.

இதைக் குறிப்பிட்டுத் தான் பாகவதத்தில், "ஆஶாஹி பரமம் து:க²ம் நைராஶ்யம் பரமம் ஸுக²ம்" என்ற ஶ்லோகம் வருகிறது. ஆசையே எல்லையற்ற துக்கம்; ஆசையின்மையே மேலான சுகம்.

## 18.குரர பக்ஷி (பொருட்பற்றுக்களை விடுதல்)

**குரர இவ விபோ⁴, ஸாமிஷ: அந்யை:, ந ஹந்யை** - குரர பக்ஷி (அன்றில் பறவை) ஒரு மாமிசத் துண்டைக் கவ்விக் கொண்டு பறக்கிறது. அதைப் பார்த்த மற்ற பருந்துகளும் காகங்களும் அதைத் துரத்திக் கொத்துகின்றன. அந்தப் பறவையால் அந்தத் தாக்குதலைத் தாங்க முடியவில்லை. உடனே அது அந்த மாமிசத் துண்டைக் கீழே போட்டுவிடுகிறது. உடனே மற்ற பறவைகள் அந்த மாமிசத் துண்டைத் தேடிச் சென்றுவிடுகின்றன; குரர பக்ஷி நிம்மதியடைகிறது.

அதைப் போல, நாம் பொருட்களையும் பணத்தையும் சேர்த்து வைத்தால், உலகத்தில் பல துன்பங்கள் நம்மைத் தேடி வரும். அதைத் துறந்து விட்டால் நாம் நிம்மதியாக வாழலாம். ஸ்வாமிகள் சொல்வார்: "வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின் பி.எஃப் பணம் வந்தால், யாராவது கடன் கேட்டுத் தொல்லை பண்ணிக் கொண்டே இருப்பார்கள். 'நான் அந்தப் பணத்தை ஸ்வாமி காரியத்திற்காக எழுதி வைத்துவிட்டேன்' என்று சொல்லி விட்டால், யாரும் தொல்லை செய்ய மாட்டார்கள்."

பக்தி மார்க்கத்தில் மிகப்பெரிய கவனச்சிதறல் எதுவென்றால் அது பணம் தான். பணத்தை வைத்துக் கொண்டு அதை ஷேர் மார்க்கெட்டில் போடுவதா, தங்கம் வாங்குவதா, என்று இப்படி, குறிப்பாக ஆண்களுக்கு இது ஒரு பொன்னான நேரத்தையும், மனத்தின் சக்தியையும் விரயமாக்கும் போதையாக இருக்கிறது.

ஸ்வாமிகளிடம் ஒருமுறை சிலர், "நீங்கள் எப்பொழுது பார்த்தாலும் பணத்தைப் பழித்துப் பேசுகிறீர்களே, அதனால்தான் உங்களிடம் பணம் வருவதில்லை. மற்ற உபன்யாசகர்களுக்கு எல்லாம் பணம் கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது" என்றார்கள். அதற்கு ஸ்வாமிகள், "கொட்டுகிறவர்கள் பொறுக்கிக் கொள்ளட்டும், எனக்குப் படிப்பதற்கே நேரம் சரியாக இருக்கிறது" என்றார். அந்தப் பணத்தைச் சேர்ப்பதற்கும், எண்ணுவதற்கும், பத்திரப்படுத்துவதற்குமே நாம் நம் ஆயுளின் பெரும் பகுதியைச் செலவிடுகிறோம். பக்தி மார்க்கத்தில் செல்ல நினைப்பவர்கள் பணத்தில் ஆசை வைக்கக் கூடாது. "காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே" என்று பட்டினத்தாருக்குப் பகவானே குழந்தையாக வந்து சொல்லி உணர்த்தினார் அல்லவா?

அடுத்து 93வது தசகம் 7வது ஶ்லோகம்:

**वर्तेय त्यक्तमानः सुखम्, अतिशिशुवत्, निस्सहायश्चरेयं,**
**कन्याया एकशेषो वलय इव, विभो वर्जितान्योन्य घोषः ।**
**त्वच्चित्तो नाववबुध्यै परं, इषुकृदिव क्ष्माभृदायानघोषं**
**गेहेषु अन्यप्रणीतेषु, अहिरिव निवसानि, उन्दुरोर्मन्दिरेषु ॥**

### 19.அதிசிசு (அபிமானமின்மை)

**வர்தேய த்யக்தமாந: ஸுக²ம், அதிஶிஶுவத்** - ஒரு மிகச் சிறிய குழந்தையும், எல்லாவற்றையும் துறந்த ஒரு ஞானியும் தான் இந்த உலகத்தில் உண்மையான ஆனந்தத்தில் இருக்கிறார்கள். பச்சிளம் குழந்தைக்கு எந்தவிதமான மானாபிமானமும் கிடையாது. பிடித்தவன், பிடிக்காதவன், இந்த மாமி என்னை கொஞ்சினாள், அவள் என் தூளியை இடித்தாள் என்ற எந்தப் பாகுபாடும் அதற்குத் தெரியாது. 'தெய்வமும் குழந்தையும் ஒன்று' என்பார்களே, அதைப் போல எப்போதும் புன்னகையோடு ஆனந்தமாக இருக்க வேண்டும் என்பதை அந்தக் குழந்தையிடமிருந்து கற்றுக் கொண்டேன்.

## 20.வளையல் அணிந்த பெண் (தனிமையின் சிறப்பு)

**நிஸ்ஸஹாயஸ்சரேயம், கன்யாயா ஏகஸேஷோ வலய இவ விபோ$^{4}$, வர்ஜிதாந்யோந்ய கோ$^{4}$ஷ:** - ஒரு பத்து வயதுச் சிறுமி இருந்தாள். அவளைப் பெண் பார்ப்பதற்காக மாப்பிள்ளை பக்ஷத்திலிருந்து ஒரு ஏழு எட்டு பேர் வந்திருந்தார்கள். அச்சமயம் க்ருஹத்தில் அவளுடைய அம்மா இல்லை. வந்தவர்களுக்கு ஏதேனும் சமைத்துக் கொடுக்கலாம் என்று அவள் சமையலறைக்குச் சென்றாள். அங்கே அரிசி இல்லை, நெல் தான் இருந்தது. அவள் நெல்லை உரலில் போட்டு குத்தத் தொடங்கினாள்.

அவள் கைகளில் நிறைய வளையல்கள் அணிந்திருந்ததால், நெல் குத்தும்போது பெரிய சத்தம் உண்டானது. 'நம் க்ருஹத்தில் அரிசி கூட இல்லை, நெல் குத்துகிறோம் என்பதை வந்தவர்கள் அறிந்து கொண்டால் நம் வறுமை வெளிப்பட்டு விடுமே' என்று நினைத்து, கைகளில் இரண்டிரண்டு வளையல்களை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவற்றைக் கழற்றி வைத்தாள். ஆனாலும் அந்த இரண்டு வளையல்களும் ஒன்றோடொன்று மோதி சத்தம் எழுப்பின. உடனே சாஸ்த்ரப்படி பெண்கள் வெறும் கையாக இருக்கக் கூடாது என்பதால், ஒரு வளையலை மணிக்கட்டிலும், மற்றொரு வளையலை முழங்கைக்கு மேலேயும் தள்ளி வைத்துக் கொண்டு சத்தமில்லாமல் நெல் குத்தினாள். (பாகவதத்தில் ஒரே ஒரு வளையல் மட்டும் அணிந்து கொண்டாள் என்று வருகிறது, சாஸ்த்ரத்திற்காக அவள் அதை அப்படித் தள்ளி அணிந்து கொண்டாள் என்று மாயவரம் பெரியவா சொல்லுவாராம்).

இதன் மூலம் நாம் அறிவது என்னவென்றால், பல பேர் கூடினால் அங்கே கலகம் உண்டாகும்; இரண்டு பேர் இருந்தாலோ தேவையற்ற வீண் பேச்சுக்களில் பொழுது போகும். எனவே, தனிமையில் இருந்து கொண்டு பகவானை பஜனம் செய்வதும் தான் உசிதமானது.

## 21.இஷுக்ருத் - அம்பு செய்பவர் (ஏகாக்ரசித்தம்)

**த்வச்சித்தோ நாவபு$^{3}$த்$^{4}$யை பரம், இஷுக்ருதி$^{3}$வ க்ஷமாப்$^{4}$ருதா$^{3}$யாந கோ$^{4}$ஷம்** - அம்பு தயாரிக்கும் ஒருவன், தன் முழு கவனத்தையும் செலுத்தி அம்பைக் கூர்மைப் படுத்திக் கொண்டிருந்தான். அந்தச் சமயம் அந்த நாட்டின் ராஜா, வாத்தியங்கள் மற்றும் வாணவேடிக்கைகளுடன் அந்த வீதி வழியே பவனியாகச் சென்றார். ராஜா சென்ற பிறகு அங்கிருந்தவர்கள் அவனிடம், "இவ்வளவு கோலாகலமாக ராஜா போனாரே, பார்த்தாயா?" என்று கேட்டார்கள். அதற்கு அவன், "நான்

கவனிக்கவே இல்லையே, என் கவனம் முழுவதும் இந்த அம்பை கூர் செய்வதில் மட்டும் தான் இருந்தது" என்றான்.

ஸ்வாமிகள் கூறுவார்: "இந்தக் காலத்தில் ஆன்மீக வழியில் பிழைக்க வேண்டும் என்றால், இந்த அம்பு செய்பவனைப் போலத் தான் இருக்க வேண்டும். அவ்வளவு ஒரு மனதாக நம்முடைய பஜனத்தையும் பாராயணத்தையும் செய்ய வேண்டும்."

ஒருமுறை ஸ்வாமிகளிடம் ஒருவர், "அபு$^3$த்$^3$த்$^4$யாபி முகுந்த$^3$கீர்தநம்" (அறியாமல் முகுந்தனின் நாமத்தைச் சொன்னாலும் புண்ணியம்) என்ற கருத்தைச் சொல்ல வந்தார். அதற்கு ஸ்வாமிகள், "நீங்கள் நன்றாகப் படித்தவர், ஸம்ஸ்கிருதம் தெரிந்தவர். நீங்கள் ஏன் அப்படி நினைக்க வேண்டும்? நீங்கள் முழு மனதைச் செலுத்திப் படிக்க வேண்டும். இன்று ராமாயணத்தில் பாதுகா பட்டாபிஷேகம் வரப் போகிறது என்றால், காத்திருந்து அந்தப் பகுதி வரும் போது மனம் ஒன்றிப் படித்து மகிழ வேண்டும். அதை விடுத்து, அனசூயை சரித்ரம் வந்த பிறகு தான், 'ஓ... பாதுகா பட்டாபிஷேகம் முடிந்து விட்டதா?' என்று நினைக்கக் கூடாது." என்று அறிவுறுத்தினார்.

நான் ஓரளவு இந்த அறிவுரையைக் கடைப்பிடித்து வருகிறேன். நாராயணீயம் போன்ற ஸ்தோத்ரங்களைப் படிக்கும் போது, கதையின் போக்கையும், கவிதையின் நயத்தையும் கொண்டே மனதை அதில் நிறுத்தலாம். "மூக பஞ்சஶதீ" படிக்கும் போது, ஒவ்வொரு பத்து ஶ்லோகத்திற்கும் ஒரு ஶ்லோகத்தை அடையாளமாக வைத்துக் கொள்வேன். 41 முதல் 50-க்குள் "குண்டலி குமாரி குடிலே" என்றும், 51 முதல் 60-க்குள் "மூகோபி" என்றும், 61 முதல் 70-க்குள் "கிம் வா பலதி" என்றும் வரும். பாராயணம் செய்யும் போது இந்த ஶ்லோகங்கள் மனதில் ஆழமாகப் பதியாமல் கடந்து விட்டால், நான் மீண்டும் அந்த 10 ஶ்லோகங்களைப் படிப்பேன். வெறுமனே வாயால் சொன்னாலும் புண்ணியம் கிடைக்கும் தான், ஆனால் அது போதாது அல்லவா? அந்த பத்தில் ஒரு ஶ்லோகத்தை அவ்வப்போது மாற்றிக் கொள்ளலாம். 500 ஶ்லோகங்களையும் மனம் வைத்து படிக்க வேண்டும் என்பதல்லவா நம் நோக்கம்! ஒவ்வொரு ஶ்லோகமும் ரத்னம் அல்லவா?

எனக்குச் சில ஶ்லோகங்கள் மிகவும் பிடிக்கும், அவற்றை மீண்டும் மீண்டும் படிப்பேன். "மந்தஸ்மித சதகத்தில்" 31, 32, 33 "சேதஶ்ஶீதலயந்து ந:", "கர்மௌகா$^4$க்$^2$ய", "குர்யுர்ந: குலஶைலராஜதநயே" என்று தொடங்கும் மூன்று ஶ்லோகங்கள்... இந்த ஶ்லோகங்கள் குடும்பத்தில் நிம்மதியைத்

தரும் என்று எண்ணி இவற்றை இரண்டு முறை படிப்பேன். இதே போல், ஸ்துதி சதகத்தில் 52 முதல் 56 வரையிலான ஶ்லோகங்களை மனதில் பயம் நீங்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடு இரண்டு மூன்று முறை படிப்பேன். கடாக்ஷ சதகம் 15 முதல் 18 அர்த்த புஷ்டிக்காக 2 தடவைகள் படிப்பேன். இது போல பல இடங்கள்.

### 22.பாம்பு (அகப்பற்றின்மை)

**கே³ஹேஷு அந்யப்ரணீதேஷு, அஹிரிவ நிவஸாநி, உந்து³ரோர்மந்தி³ரேஷு -** பாம்பு தனக்கென்று சொந்தமாக க்ருஹம் கட்டுவதில்லை; அது எலி தோண்டிய வளைக்குள் சென்று தங்கிவிடுகிறது. அதைப் போல, நாம் 'சொந்த வீடு' என்ற ப்ராஜெக்ட்டில் நம்முடைய அதிக நேரத்தையும் உழைப்பையும் வீணடித்துக் கொண்டிருக்கக் கூடாது. இந்தக் காலத்தில் பிளாட் கட்டிக் கொடுத்து விடுகிறார்கள். ஆனால் சிலர், வாழ்நாள் முழுவதும் அதை அழகுபடுத்துவது, மேம்படுத்துவது என்றும் அடிக்கடி ரிப்பேர் செய்து கொண்டே இருப்பார்கள். இருப்பதற்கு ஒரு இடம், அவ்வளவு தானே என்று நாம் திருப்தி அடைய வேண்டும்.

இதற்குப் பொருத்தமாக "மூக பஞ்சஶதீ" பாதாரவிந்த சதகத்தில் 48வது ஶ்லோகம் நினைவுக்கு வருகிறது:

"நகா²ங்கூரஸ்மேரத்³யுதிவிமலக³ங்கா³ம்ப⁴ஸி ஸுக²ம்
க்ருதஸ்நாநம் ஜ்ஞாநாம்ருதமமலமாஸ்வாத்³ய நியதம் ।
உத³ஞ்சந்மஞ்ஜீரஸ்பு²ரணமணிதீ³பே மம மநோ
மநோஜ்ஞே காமாக்ஷ்யாஶ்சரணமணிஹர்ம்யே விஹரதாம் ॥"

(காமாக்ஷி! உன்னுடைய கால் நகங்களிலிருந்து வெளிப்படும் வெண்ணிற ஒளி, தூய்மையான கங்கா ஜலம் போன்றது. அதில் நான் தினமும் நன்னீராடி மகிழ்கிறேன். உன் பாதங்களில் இருந்து பெருகும் ஞான அமுதத்தை வயிறார உண்பேன். உன்னுடைய சிலம்பில் இருக்கும் மாணிக்கக் கற்கள் இந்த மாளிகையின் சிவப்பு விளக்குகள் போலப் பிரகாசிக்கின்றன. இத்தகைய உன்னுடைய திருவடிகள் என்ற ரத்தின மாளிகையில் என் மனம் எப்போதும் குடியிருக்கட்டும்.)

ஸ்வாமிகள் இந்த ஶ்லோகம் வரும்போதெல்லாம் என்னிடம், "நீ எந்த பிளாட்டில் குடியிருந்தாலும், உன் மனது எப்போதும் அம்பாளின் சரணாரவிந்தத்தில் இருக்கட்டும்" என்பார். அவர் வாக்கில் அன்று 'பிளாட்' என்ற வார்த்தை வந்ததாலோ என்னவோ, என் வாழ்நாள் முழுவதும் நான்

அப்பார்ட்மெண்டில் தான் இருந்து வருகிறேன். மகான்களின் விளையாட்டுப் பேச்சு கூட எவ்வளவு ஸத்யமாகிவிடுகிறது பாருங்கள்!

அடுத்து 93வது தசகம் 8வது ஶ்லோகம்:

**त्वय्येव त्वत्कृतं त्वं क्षपयसि जगदिति, ऊर्णनाभात् प्रतीयां,**
**त्वच्चिन्ता त्वत्स्वरूपं कुरुते, इति दृढं शिक्षये, पेशकारात् ।**
**विड्भस्मात्मा च देहो भवति, गुरुवरो यो विवेकं विरक्तिं**
**धत्ते, सञ्चिन्त्यमानो मम तु, बहुरुजापीडितोऽयं विशेषात् ॥**

### 23.சிலந்தி (பகவானின் சிருஷ்டி ரகசியம்)

**த்வய்யேவ த்வத்க்ருதம் த்வம் க்ஷபயஸி ஜக³தி³தி, ஊர்ணநாபா⁴த் ப்ரதீயாம்** - சிலந்தியானது தன் வாயிலிருந்தே திரவத்தைச் சுரந்து ஒரு கூட்டை அழகாகக் கட்டுகிறது. அதில் விளையாடிவிட்டு, பின்னர் தன் கூட்டினைத் தானே விழுங்கிவிடுகிறது. அதைப் போல, பகவான் தன்னிடம் இருக்கும் பொருட்களைக் கொண்டே இந்த உலகைப் படைக்கிறான் (சிருஷ்டி), காக்கிறான் (ஸ்திதி), பின்னர் தன்னுடனேயே ஒடுக்கிக் கொள்கிறான் (லயமாக்குகிறான்).

இதையே கம்பர் தன் இராமாயணத்தின் முதல் கடவுள் வாழ்த்துப் பாடலில் அழகாகப் பாடியுள்ளார்:

"உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே."

இந்தச் சிருஷ்டியின் அழகையும், அதில் உள்ள ஆச்சரியங்களையும் நாம் ரசிக்க வேண்டும். மொட்டை மாடியில் படுத்துக் கொண்டு ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலே மனம் விரிவடையும். பௌர்ணமி நிலவை நாம் தவற விடவே கூடாது. அமாவாசை இரவும் ஒரு தனி அழகு தான், அன்றைய தினம் நக்ஷத்திரங்கள் அத்தனை பிரகாசமாகத் தெரியும். இந்த பிரபஞ்சம் தான் எவ்வளவு பெரியது! பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டு, சூரியனையும் சுற்றுகிறது; நாமும் அதன் மேல் இருக்கிறோம். பூமி அவ்வளவு வேகமாகச் சுற்றினாலும் நாம் கீழே விழுந்து விடுவதில்லை, என்ன ஒரு ஆச்சரியம்! சூரியனிடமிருந்து பூமி இருக்கும் தூரம் எவ்வளவு துல்லியமானது! ஒரு சில சதவிகிதம் முன்னால் போனால் எரிந்து சாம்பலாகிவிடுவோம், ஒரு சில சதவிகிதம் பின்னால் போனால்

பனியாக உறைந்துவிடுவோம். அவ்வளவு சரியாக அந்த ஒரே புள்ளியில் பூமி அமைந்திருக்கிறது. இதற்குள் எத்தனை மலைகள், நதிகள், ஆச்சரியங்கள்! பாரதியார் பாடியது போல "எத்தனை கோடி இன்பம் வைத்தாய்" என்ற பகவானின் வியத்தகு சிருஷ்டி இது.

இந்த இடத்தில் அவருடைய இன்னொரு அழகான பாடல் நினைவுக்கு வருகிறது:

"பக்தியுடையார் காரியத்தில் பதறார் மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்கும் தன்மை போல் மெல்லச் செய்து பயனடைவார்
சக்தி தொழிலே அனைத்துமெனில் சார்ந்த நமக்கு சஞ்சலமேன்
வித்தைக்கிறைவா கணநாதா மேன்மைத் தொழிலில் பணியெனையே"

## 24.குளவி (தியானத்தின் சக்தி)

**த்வச்சிந்தா த்வத்ஸ்வரூபம் குருதே, இதி த்³ருட⁴ம் ஶிக்ஷயே, பேஶகாராத்** - ஒரு புழுவானது குளவியின் கூட்டிற்குள் இருக்கும். குளவி அதை அவ்வப்போது வந்து கொட்டிக் கொண்டே இருக்கும். அந்தப் புழு, 'ஐயோ! குளவி வந்து நம்மைக் கொட்டப் போகிறதே' என்று பயந்து, நாளடைவில், குளவியையே நினைத்துக் கொண்டிருந்த அந்தப் புழு, உருமாறித் தானே குளவியாக மாறி விடுகிறது.

இதிலிருந்து, "யத்பாவம் தத்பவதி" நாம் எதை எப்போதும் சிந்தித்துக் கொண்டு இருக்கிறோமோ, அதுவாகவே மாறி விடுவோம் என்பதை அறியலாம். எனவே, நாம் எப்போதும் பகவானையே சிந்தித்துக் கொண்டிருந்தால், பகவானாகவே மாறி விடலாம்.

இதைப் பற்றி மஹா பெரியவா பேசும்போது, திருக்குறளின் "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்ற குறளை மேற்கோள் காட்டி, 'பற்றில்லாத பகவானிடம் நாம் பற்று வைத்தால் உலகப் பற்றுகள் எல்லாம் நம்மை விட்டு நீங்கி விடும்' என்பார். எனக்கு என்ன தோன்றும் என்றால், நமக்கு பகவானை நேரடியாகத் தெரியாது; ஆனால் பற்றற்று வாழும் மகான்களை நாம் உலகில் காண்கிறோம். எனவே, அந்த மகான்களிடம் நாம் பற்று வைத்தால், நமக்குள்ளும் பக்தி, வைராக்யம் அனைத்தும் தானாக வந்து சேரும்.

ஸ்வாமிகள் மகான்களின் சரித்ரங்களைப் பல முறை படித்துக் கொண்டே இருப்பார். ஸ்ரீராமக்ருஷ்ண பரமஹம்ஸர், ரமணரைப் பற்றி கி.வா.ஜ எழுதிய புத்தகம், வள்ளிமலை ஸ்வாமிகள் சரித்ரம், போன்ற புத்தகங்களை பல முறை வாசிப்பார். சேஷாத்ரி ஸ்வாமிகளைப் பற்றி

குழுமணி நாராயண சாஸ்த்ரிகள் எழுதிய புத்தகம் ஒன்றை நான் திருவல்லிக்கேணி தெருவோரக் கடையில் இருபது ரூபாய்க்கு வாங்கி அவரிடம் கொடுத்தேன். அந்தப் புத்தகத்தை ஸ்வாமிகள் நூறு தடவை படித்திருப்பார். "இந்த சரித்ரத்தைப் படித்ததால் தான் எனக்கு ஸந்நியாசமே கிடைத்தது" என்று உருக்கமாகக் கூறுவார். அந்த அளவிற்கு மகான்களின் சரித்ரங்களை மீண்டும் மீண்டும் படிப்பார். அது போன்ற  மகான்களின் சரித்ரங்களை நாமும் அடிக்கடி படித்தால், நாமும் பக்தி நெறியில் சிறக்கலாம்.

மலைப்பாம்பைப் போல உணவுக்குக் கவலைப்படாமல் இருக்க வேண்டும் என்று பார்த்தோம். க்ருஹத்தில் மூன்று வேளையும் சுவையான உணவு கிடைத்துவிடுகிறது. இன்றைய காலத்தில் யாத்திரை செல்ல வேண்டும் என்றால், "நம் வீட்டு காபி போல அங்கே நல்ல காபி தருவார்களா?" என்று தெரிந்து கொண்டு டிராவல்ஸ் மூலம் சொகுசாகப் போகிறோம். ஆனால் அன்றைய காலத்தில் காசி யாத்திரை செல்வதோ, அல்லது வடநாட்டவர் ராமேஸ்வரம் வருவதோ, பெரிய தபஸாக இருந்திருக்கிறது. பசியைப் பொருட்படுத்தாத வைராக்யம் இருந்தால் ஒழிய அதைச் செய்ய முடியாது. இந்த 24 குருமார்கள் கற்றுத் தந்த பல நெறிகளைப் பின்பற்றத் தயாராக இருக்க வேண்டும். அந்த தவமே அது ஒரு நிஷ்காம கர்மாவாகவும், மேலான பக்தியாகவும் மாறி "வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்று தாயுமானவர் பாடியது போல, உயர்ந்த நற்பலனைத் தந்தது. அன்றைய யாத்திரையின் நோக்கம் இறை தரிசனம், தீர்த்த ஸ்நானம் மட்டுமே என்பதாக இருந்தது. இன்றும் கூட நர்மதை நதியை வலம் வரும் 'நர்மதா பரிக்ரமா' போன்ற பல யாத்திரைகள் ஒரு தவமாக இருக்கிறது.

**25வது குரு நம் உடம்பு**

**விட்³ப⁴ஸ்மாத்மா ச தே³ஹோ ப⁴வதி கு³ருவரோ, யோ விவேகம் விரக்திம் த⁴த்தே** - இறுதியாக, தத்தாத்ரேயர் 24 குருமார்களைப் பற்றிக் கூறிவிட்டு, "என்னுடைய இந்த உடம்பே ஒரு குரு தான்" என்கிறார். இந்த உடம்பு இறுதியில் சாம்பலாகப் போகக் கூடியது. அல்லது மண்ணில் புதைத்தால் புழுக்களுக்கு இரையாகி மலமாகப் போகக் கூடியது. இந்த உடம்பை 'நான்' என்றும், 'என்னுடையது' என்றும் நாம் மமதை கொள்கிறோம். ஆனால், இந்த உடம்பிற்காகப் பல பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பெற்றெடுத்த தாய், தந்தை, வேலை வாங்கும் முதலாளி, என அனைவரும் உரிமை கொண்டாடுகிறார்கள்; இறுதியில் எரியூட்டும் நெருப்பும் காத்துக் கொண்டிருக்கிறது.

இதைச் சிந்தித்தால் நமக்குள் வைராக்யம் பிறக்கும். நாம் தினமும் நெற்றியில் விபூதி இட்டுக் கொள்ளும் போது, 'இறுதியில் இந்த உடம்பு சாம்பலாகப் போகக்கூடியது' என்பதை நினைவூட்டவே 'சிவாய நம:' என்று கூறி விபூதி தரித்துக் கொள்கிறோம்.

**ஸஞ்சிந்த்யமாநோ மம து, ப³ஹுருஜாபீடி³தோ(அ)யம், விஶேஷாத்** - நாராயணீயத்தில் பட்டத்ரி கூறுவார்: "இறந்த பின்னர் தான் என்றில்லை. எனக்கு இந்த உடம்பு உயிரோடு இருக்கும் போதே வாத நோயினால் எவ்வளவோ வலியையும் துன்பத்தையும் தந்து, பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது." இக்காலத்திலும் ஒவ்வொருவருக்கும் உடலில் ஏதேனும் ஒரு உபாதை இருந்து கொண்டு இருக்கிறது. எனவே, உடம்பே நமக்கு ஒரு சிறந்த குரு.

### தேஹ மோஹம் போக பட்டத்ரியின் உருக்கமான ப்ரார்த்தனை

"க்ருஷ்ணா! இந்த உடம்பின் மேல் இருக்கும் பற்றை நான் விட வேண்டும், அதற்கு நீ தான் அருள் புரிய வேண்டும்" என்று பட்டத்ரி கடைசி இரண்டு ஶ்லோகங்களில் மிக உருக்கமாகப் பிரார்த்தனை செய்கிறார். 93வது தசகம் 9வது ஶ்லோகம்

**ही ही मे देहमोहं त्यज, पवनपुराधीश, यत्प्रेमहेतोः,**
**गेहे वित्ते कलत्रादिषु च विवशिताः, त्वत्पदं विस्मरन्ति ।**
**सोऽयं वह्नेश्शुनो वा, परमिह परतः साम्प्रतञ्च, अक्षिकर्ण-**
**त्वग्जिह्वाद्या विकर्षन्ति, अवशं अत इतः, कोऽपि न त्वत्पदाब्जे ॥**

**ஹீ ஹீ மே தே³ஹமோஹம்’ த்யஜ, பவநபுராதீ⁴ஶ, யத்ப்ரேமஹேதோ:,**
**கே³ஹே வித்தே களத்ராதி³ஷு ச விவஶிதா: த்வத்பத³ம்’ விஸ்மரந்தி ।**
**ஸோ(அ)யம் வஹ்நேஶ்ஶுநோ வா, பரமிஹ பரத: ஸாம்ப்ரதஞ்ச, அக்ஷிகர்ண-த்வக்³ஜிஹ்வாத்³யா விகர்ஷந்தி, அவஶம்’, அத இத:, கோ(அ)பி ந, த்வத்பதா³ப்³ஜே ॥**

ஏ குருவாயூரப்பா! இந்த உடம்பின் மேல் எனக்கு இருக்கும் மோஹத்தையும், இதைச் சார்ந்ததெல்லாம் 'என்னுடையது' என்கிற அந்த மதிமயக்கத்தையும் நீக்கி அருள வேண்டும். அந்தப் பிரமை இருப்பதனால் தான் மனிதர்கள் க்ருஹத்தின் மேலும், பணத்தின் மேலும், மனைவியின் மேலும் பரவசமாகி உன்னுடைய பாதங்களை மறந்து விடுகிறார்கள். இந்த உடல் இறந்த பின்னே தீக்கோ அல்லது நாய்க்கோ தான் சொந்தமாகப் போகிறது. ஆனால், உயிருடன் இருக்கும் போதோ

என்னுடைய கண், காது, மூக்கு, நாக்கு ஆகிய ஐந்து புலன்களில் எதுவுமே உன்னுடைய பாதத்தை நோக்கி என்னை இழுக்க மாட்டேன்கிறதே! என்னை எங்கெங்கோ இழுத்துக் கொண்டு போகிறதே, நான் என்ன செய்வேன்? 'அந்தோ!' (ஹீ ஹீ) என்னை எப்படியாவது காப்பாற்று" என்று வேண்டிக் கொள்கிறார்.

எந்த புலனும் உள்ளே இருக்கும் பகவானைத் தேட மாட்டேன் என்கிறது. ஒரு சத்தம் கேட்டால் உடனே காதுக்கு அதில் ஆர்வம் வந்து விடுகிறது; ஒரு வாசனை வந்தால் உடனே மூக்கின் அங்கே கவனம் போய்விடுகிறது. இப்படி நம்முடைய ஐந்து புலன்களும் எப்போதும் வெளிப் பார்வையுடனேயே இருக்கின்றன. பிரம்மா படைக்கும் போதே நம்மை அப்படித் தான் படைத்து வைத்திருக்கிறார். அருணகிரிநாதர்,

“கோடாத வேதனுக்கு யான் செய்த குற்றம் என்? குன்று எறிந்த
தாடாளனே தென் தணிகைக் குமர! நின் தண்டை அம் தாள்
சூடாத சென்னியும் நாடாத கண்ணும் தொழாத கையும்
பாடாத நாவும் எனக்கே தெரிந்து படைத்தனனே”
என்று முருகப் பெருமானிடமே முறையிடுகிறார்.

அந்த தேஹ மோஹத்தால் நான், என் குடும்பம், என்னோட சொத்து, என்னோட க்ருஹம் என்கிற இந்த எண்ணங்கள் நம்மை மிகக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கின்றன. அதற்குப் பிறகு நாம் அதற்கு முற்றிலும் வசமாகி விடுகிறோம். உதாரணமாக, குழந்தை ஏதாவது வாங்கி வரச் சொல்லி, அதை நாம் மறந்து விட்டோம் என்றால் அது அழத் தொடங்குகிறது. அதைப் பார்த்த உடனே நமக்குத் தாங்குவதில்லை. எப்படியாவது அதை வரவழைத்துக் கொடுத்து விடுகிறோம்; உடனே அது சிரித்துச் சந்தோஷப்படுகிறது. இப்படி நாம் நினைத்ததை நடத்திக் கொள்ள வேண்டும் என்றால் அதற்குப் பணம் தேவைப்படுகிறது. அதற்காகப் பணம் சம்பாதிக்கிறோம். பணத்தைக் கொண்டு நினைத்ததை எல்லாம் நடத்திக் கொள்ள முடியாவிட்டால் கூட, இந்த பணம் சம்பாதிப்பதில் இருக்கும் வேகம் நமக்குள் ஜாஸ்தியாகிக் கொண்டே போகிறது. "குருவாயூரப்பா! இந்த மோஹத்தை போக்கி, எனக்கு உன்னிடத்தில் பக்தியை அனுக்ரஹம் செய்" என்று வேண்டுகிறார்.

93வது தசகம் 10வது ஶ்லோகம்:

**दुर्वारो देहमोहो यदि पुनः, अधुना तर्हि निश्शेषरोगान्**
**हृत्वा, भक्तिं द्रढिष्ठां कुरु तव पदपङ्केरुहे पङ्कजाक्ष ।**
**नूनं नानाभवान्ते, समधिगतमिमं मुक्तिदं विप्रदेहं,**
**क्षुद्रे हा हन्त, मा मा क्षिप विषयरसे, पाहि मां मारुतेश ॥**

**து³ர்வாரோ தே³ஹமோஹோ யதி³ புந:, அது⁴நா தர்ஹி நிஶ்ஶேஷரோகா³ன் ஹ்ரு'த்வா** அப்படிப்பட்ட உயர்ந்த ஞானத்தை உடனடியாக அடைவதற்கு எனக்கு இப்போது தகுதி இல்லை என்றாலும், என்னுடைய வியாதிகள் எல்லாவற்றையும் போக்கி, **ப⁴க்திம் த்³ரடி⁴ஷ்டா²ம் குரு தவ பத³பங்கேருஹே பங்கஜாக்ஷ** - தாமரைக் கண்ணா, உன்னுடைய பாதத் தாமரைகளில் என்னுடைய பக்தியை உறுதிப்படுத்திக் கொடு. **நூநம் நாநாப⁴வாந்தே** - எத்தனையோ ஜன்மங்களின் முடிவில், **ஸமதி⁴க³தமிமம் முக்தித³ம் விப்ரதே³ஹம்** ஏதோ புண்ணிய விசேஷத்தினால் அடையப்பட்ட, முக்திக்குக் காரணமாக அமைந்திருக்கும் இந்த ப்ராஹ்மண உடலை அடைந்தும் கூட, **க்ஷுத்³ரே ஹா ஹந்த, மா மா க்ஷிப விஷயரஸே** - அற்பமான இந்த உலக விஷய இன்பங்களில் என்னை தள்ளிவிடாதே. **பாஹி மாம் மாருதேஶ** - என்னை நீ தான் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டுகிறார்.

இந்த ப்ராஹ்மண உடம்பில் புத்தி சக்தியும் அதிகமாக இருக்கிறது; புலன்களும் கூர்மையாக இருக்கின்றன. அதனாலேயே, இது இரண்டு பக்கமும் போவதற்குக் வாய்ப்புகள் அதிகம். சம்பாதிக்க வேண்டும் என்று நினைத்தால் சம்பாதிக்கலாம், உலக இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று நினைத்தால் அனுபவிக்கலாம். ஆனால், அதே புத்தியைக் கொண்டுதான் பகவானிடம் நம் புலன்களைத் திருப்பவும் முடியும். இதையே அருணகிரிநாதர், "புத்தியை வாங்கி நின் பதாம்புயத்தில் புகட்டி அன்பாய் முக்தியை வாங்க அறிகின்றிலேன்" என்கிறார். அதாவது, நம்முடைய மனதையும் புலன்களையும் பகவானிடம் திருப்பி பக்தி செய்வதற்காகத் தான் நமக்கு அப்படிப்பட்ட நல்ல புத்தியைக் கொடுத்திருக்கிறார். "அதனால் எனக்கு உறுதியான பக்தியைக் கொடு" என்று பட்டத்ரி வேண்டுகிறார்.

**பக்தியினாலேயே ஸத்கதி**

ஸ்வாமிகளிடம் விச்வநாத ஐயர் என்று ஒருவர் வருவார், அவர் ராமாயணத்தின் மேல் மிகுந்த பக்தியோடு இருந்தார் என்று சொன்னேன். அவர் கொச்சியில் ஒரு புதிய ப்ராஜெக்ட் ஆரம்பித்து, அரசாங்கத்திடமிருந்து ஐந்து கோடி ரூபாய் வர வேண்டியிருந்தது. ஆனால் அது வரவில்லை, தாமதமாகிக் கொண்டே போனது. தன் வீட்டையும், எல்லா நகைகளையும் அடகு வைத்துத் தான் அவர் அதைச் செய்து கொண்டிருந்தார்.

அவர் ஒருநாள் ஸ்வாமிகளுடைய பாகவத உபன்யாசத்தைக் கேட்கும் போது, "பணம் கொடுத்துப் படுக்கை வாங்கலாம், ஆனால் தூக்கத்தை வாங்க முடியாது. நிம்மதி என்கிற ஒன்றை பகவானால் மட்டும் தான் கொடுக்க முடியும்" என்று ஸ்வாமிகள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டார். உடனே அவர் ஸ்வாமிகளிடம் வந்து நமஸ்கரித்து, "நான் இந்த மாதிரி ஒரு பெரிய இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறேன், எனக்குத் தூக்கமே வரமாட்டேன்கிறது. நீங்கள் எனக்குத் தயவு செய்ய வேண்டும்" என்று வேண்டினார். அதற்கு ஸ்வாமிகள், "சுந்தர காண்டம் படித்தால் தீராத கஷ்டங்களும் தீரும்” என்றார். அவர் ஸ்வாமிகளிடம், “நீங்கள் என்னோடு வாருங்கள், எனக்காக சுந்தர காண்டம் படியுங்கள். உங்கள் குடும்பத்திற்கு என்னால் முடிந்ததைச் செய்கிறேன்" என்று கூறி அவரை அழைத்துச் சென்றார்.

கொச்சியில் ஒரு அறையில், தினமும் காலையில் ஸ்வாமிகள் ஒரே நாளில் சுந்தர காண்டம் முழுவதையும் பாராயணம் (ஏகதின பாராயணம்) செய்வார். விச்வநாத ஐயர் சமைத்து வைத்துவிட்டு வேலைக்குப் போய் விடுவார். மதியம் வந்து ஸ்வாமிகளுக்குப் பரிமாறி விட்டுத் தானும் சாப்பிடுவார். திரும்பவும் தன் வேலைக்குச் சென்று விடுவார். ஸ்வாமிகள் வேறு ஏதாவது படித்துக் கொண்டு கொஞ்சம் ஓய்வு எடுப்பார். மாலை நேரத்தில் விச்வநாத ஐயர் வந்ததும் அவருக்கு ஆன்மீக விஷயங்களைச் சொல்வார். இப்படி பத்து மாதங்கள் அங்கேயே தங்கி, தினமும் சுந்தர காண்டம் படித்தார். அதன் பலனாக, அவருக்கு வரவேண்டிய ஐந்து கோடி ரூபாய், எட்டு கோடியாக வந்து சேர்ந்தது! அவர் தன் கஷ்டங்களிலிருந்து மீண்டு விட்டார். அதற்குப் பிறகு 'மதுரம் பில்டர்ஸ்' என்று சென்னையில் பிளாட் ப்ரமோஷன் தொழில் செய்து பெரிய செல்வந்தர் ஆகிவிட்டார்.

அவரும், ஹைதராபாத்தில் இருந்த மாருதிதாஸர் என்பவரும் சேர்ந்து—மாருதிதாஸர் தன் வீட்டு வாசலிலேயே ஒரு ஹனுமார் கோயில் கட்டியிருந்தார். அங்கேயும் ஸ்வாமிகள் போய் 68 நாட்கள், 68 ஆவர்த்தி சுந்தரகாண்ட பாராயணம் செய்தார். விச்வநாத ஐயரும் மாருதிதாஸரும் சேர்ந்து, ஸ்வாமிகளின் பணக் கஷ்டத்திற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று முடிவு செய்தார்கள். அதற்காக 'மாருதி டிரஸ்ட்' என்று ஒன்றை ஆரம்பித்து, ஒரு பெரிய தொகையைச் சேர்க்க எண்ணி, அதற்கான பத்திரங்களை எல்லாம் எழுதி, வி.ஜே.ஆர் மாமாவையும் வைத்துக் கொண்டு ஸ்வாமிகளிடம் பேச வந்தார்கள்.

அப்போது ஸ்வாமிகள், "எனக்கு டிரஸ்ட் எல்லாம் வேண்டாம். ஐ டிரஸ்ட் மாருதி (நான் மாருதியை நம்புகிறேன்). அன்றாட வாழ்க்கைக்கு பகவானை நம்பி இருக்க வேண்டும், அது தான் உண்மையான ப்ராஹ்மண தர்மம்" என்று கூறி அதை மறுத்து விட்டார்.

ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸருக்கு மதுர் பாபு இருந்தது போல, ஸ்வாமிகளுக்கு இந்த விச்வநாத ஐயர் இருந்தார். விச்வநாத ஐயர் மிகச் சிறந்த புத்திசாலியாக விளங்கினார். பள்ளி, கல்லூரி எல்லாவற்றிலுமே அவர் மாநில அளவில் முதலிடம் பெற்றவர். அவர் தன் ஐம்பது வயதிற்கு மேல் ஸம்ஸ்கிருத வியாகரணம் கற்றுக் கொண்டார். ஸ்வாமிகளும் அவருமாய் நாராயணீயம் படிக்கும் போது, அதில் இருக்கும் இலக்கண நயங்களை எல்லாம் ஸ்வாமிகள் எடுத்து காண்பிப்பார்; அவர் அதை மிகவும் ரசித்து கேட்பார். அவர்கள் இருவரும் சேர்ந்து நாராயணீயம் படிப்பதைப் பார்ப்பதே ருசிகரமாக இருக்கும். அப்படி ஸ்வாமிகளின் ஸத்ஸங்கம் அவருக்குக் கிடைத்தது.

விச்வநாத ஐயருக்கு வயதான காலத்தில், "தினமும் 21 ஆவர்த்தி விஷ்ணு சகஸ்ரநாமம் பண்ணுங்கள்" என்று ஸ்வாமிகள் சொல்லியிருந்தார்; அவரும் அதைச் செய்து கொண்டிருந்தார். அவர் வடக்கில் யாத்திரை சென்றிருந்த போது, அங்கே ஒரு குகையில் ஒரு பாபாவை (சித்த புருஷரை) தரிசித்தார். எல்லாரும் செல்கிறார்கள் என்று இவரும் போய் நமஸ்கரித்து, "ஆசீர்வாதம் வேண்டும்" என்று கேட்டார். அதற்கு அந்தச் சித்தர் வேறொன்றும் சொல்லவில்லை, இவரைப் பார்த்து, "நீ தான் தினமும் 21 ஆவர்த்தி விஷ்ணு சகஸ்ரநாமம் செய்து கொண்டிருக்கிறாயே, உனக்கு என்ன கவலை?" என்று கேட்டாராம். அது எவ்வளவு பெரிய பாக்கியம்!

அவர் மிகவும் தள்ளாத வயதிலும் ஸ்வாமிகளின் க்ருஹத்தில் மாடிப்படி ஏறி வந்து அவரை தரிசிப்பார். ஸ்வாமிகள் அவரிடம், "நீங்கள் தான் இவ்வளவு காலம் ராமாயணம், பாகவதம் எல்லாம் கேட்டு விட்டீர்களே, நீங்களும் படித்துக் கொண்டு இருக்கிறீர்கள். அப்புறம் ஏன் உடம்பு முடியாமல் இப்படிச் சிரமப்பட்டு வருகிறீர்கள்?" என்று கேட்பார். அதற்கு அவர், "உங்களுக்கு பாராயணம் பண்ணுவதில் இருக்கும் அந்த ஆர்வம், (zeal) அதைப் பார்ப்பதற்காகவும், அதிலிருந்து நான் ஒரு உத்வேகம் (inspiration) பெறுவதற்காகத் தான் வருகிறேன்" என்று சொல்வார்.

அவரிடம் ஸ்வாமிகளே சொல்லி, பழூரில் இப்போது ஸ்வாமிகளுடைய அதிஷ்டானம் இருக்கிற இடத்தை, விச்வநாத ஐயர் தான் வாங்கி வைத்திருந்தார். ஆனால் அவர் முன்பே சொல்லி விட்டார், "நான் பகவானிடம் போகப் போகிறேன், ஸ்வாமிகள் இன்னும் ரொம்ப நாள் இருக்க வேண்டும், எல்லாருக்கும் அனுக்ரஹம் பண்ண வேண்டும்" என்று. ஸ்வாமிகள் சித்தியான பின், விச்வநாத ஐயர் வாங்கியிருந்த அந்த இடத்தில் தான் அதிஷ்டானம் அமைந்தது. பின்னர், அவருடைய பிள்ளைகளும் மற்ற பக்தர்களும் சேர்ந்து இன்று அந்த அதிஷ்டானத்தை பெரிய கோயிலாகக் கட்டி இருக்கிறார்கள். பழூர் அக்ரஹாரம் திருச்சி-கரூர் பாதையில் திருச்சியில் இருந்து பத்து கி.மீ. தூரத்தில் காவிரிக் கரையில் அமைந்துள்ளது.

மஹாத்மாக்களுடைய ஜீவ சமாதி என்பது, திரி இல்லாமல் எண்ணெய் இல்லாமல் எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் ஒரு தீபம் என்று சொல்வார்கள். அங்கே போனால் வரங்கள் கிடைக்கும், நம் மனத் தாபங்கள் எல்லாம் நீங்கும். அங்கே போய் உட்கார்ந்து பாராயணம் செய்து பார்த்தால் அதன் பெருமை நமக்கே புரியும். மணிக்கணக்காகப் பாராயணம் செய்தாலும், ஸ்வாமிகள் சந்நிதியில் இருக்கும் போது எப்படி நமக்குச் சிரமமே தெரியாதோ, அதே போல அங்கே நேரம் போவதே தெரியாது. பாராயணம் முடிந்து விடும். அப்படி ஒரு புண்ணிய க்ஷேத்திரமாக அந்த இடம் ஆகி விட்டது. அந்த ஊர் மக்களும் மிகவும் ப்ரியமாக "இந்த மஹானின் வரவால் நம் ஊருக்குப் பெரிய க்ஷேமம் ஏற்பட்டிருக்கிறது" என்று எண்ணி அவரைக் கொண்டாடுகிறார்கள். ஸ்வாமிகளுடைய ஆராதனையின் போது, வரும் பக்தர்களுக்கு அவ்வளவு அழகாக உபசாரம் செய்கிறார்கள்; ஸ்வாமி புறப்பாட்டின் போது ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ஆரத்தி எடுத்து வரவேற்கிறார்கள்.

இந்த விச்வநாத ஐயர் விஷயத்தை நான் எதற்காகச் சொன்னேன் என்றால், அவர் லௌகீக வாழ்க்கையில் இருந்தவர், தன் கஷ்டத்தைத் தீர்த்துக் கொள்வதற்காகத் தான் ஸ்வாமிகளிடம் வந்தார். ஆனால் அந்த ஸத்ஸங்கம், பட்டத்ரி இந்த இரண்டு ஶ்லோகங்களில் பிரார்த்தனை செய்வது போல, அவருக்கு ஒரு திடமான பக்தியைக் கொடுத்து, நல்ல கதியையும் கொடுத்து விட்டது.

நம்முடைய இந்த உடலில் 'நான்' என்கிற எண்ணத்தை அவ்வளவு சுலபமாக நம்மால் விட்டுவிட முடிவதில்லை. நம்மால் அனுபவிக்க முடியாத வயதில் கூட, நம்முடைய பிள்ளைகள், பேரன்கள் மூலம் இன்னும் அனுபவிப்பதற்கு ஆசைப்படுகிறோம். நமக்குப் பற்கள் போய் விட்டதால் சாப்பிட முடியாவிட்டாலும் கூட, அவர்களுக்கு அதைச் செய்து கொடுத்து, அவர்கள் சாப்பிடுவதைப் பார்த்து நாம் சந்தோஷப்படுகிறோம். அப்படி நமக்குள்ளே இருக்கும் ஆசைகள் அவ்வளவு சுலபமாக நம்மை விட்டுப் போவதில்லை. அது போவதற்கு பகவானிடம் திடமான பக்தி வேண்டும் என்பது தான் இந்தப் ப்ரார்த்தனையின் நோக்கம்.

விச்வநாத ஐயர் ஒரு உதாரணம். இதே போலப் பலரும் ஸ்வாமிகளுடன் பழகி, அவர் காட்டிய வழியில் நடந்து, உயர்ந்த பக்தி வைராக்யத்தை அடைந்திருக்கிறார்கள். அவர்கள் பார்க்கச் சாதாரண குடும்பஸ்தர்களைப் போலத் தான் இருப்பார்கள், ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களிடம் பக்தி விருத்தியாவதை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

**ॐ तत्सदिति श्रीमन्नारायणीये त्रिनवतितमं दशकं समाप्तम् |**
**श्री हरये नमः | रमा रमण गोविन्द गोविन्द | श्रीकृष्णार्पणमस्तु |**

**ஓம் தத்ஸதி³தி ஶ்ரீமந்நாராயணீயே த்ரிநவதிதமம் த³ஶகம் ஸமாப்தம் | ஶ்ரீ ஹரயே நம: | ரமா ரமண கோ³விந்த³, கோ³விந்த³ | ஶ்ரீக்ரு’ஷ்ணார்பணமஸ்து |**

**94வது தசகம்: தத்துவ ஞானமும் பக்தியும்**

அடுத்தது 94வது தசகம். இதில் உபநிஷத்துகளில் சொல்லப்பட்டிருக்கும் தத்துவ ஞானத்தைப் பற்றியும், அதை நாம் எப்படி அடைய முடியும் என்பதைப் பற்றியும் விளக்கி முடிக்கிறார். க்ருஷ்ண பகவான் உத்தவருக்குச் சொல்கிறார். 94வது தசகம் முதல் ஶ்லோகம்:

**शुद्धाः निष्कामधर्मैः, प्रवरगुरुगिरा, तत्स्वरूपं परं ते,**
**शुद्धं देहेन्द्रियादिव्यपगतं, अखिलव्याप्तं आवेदयन्ते ।**
**नानात्वस्थौल्यकार्श्यादि तु, गुणजवपुस्सङ्गतोऽध्यासितं ते,**
**वह्नेः दारुप्रभेदेष्विव, महदणुतादीप्तता, शान्ततादि ॥**

**ஶுத்³தா⁴: நிஷ்காமத⁴ர்மை:** உலகத்தில் அவரவர் தங்களுடைய ஸ்வதர்மம், மூர்த்தி, தலம், தீர்த்தம் போன்ற புண்ய கார்யங்கள் மூலம், எல்லாவற்றையும் 'நிஷ்காமமாக' (எந்தவொரு பலனையும் எதிர்பார்க்காமல்) செய்ய வேண்டும். 'ஶுத்தா: — அதனாலே சித்த சுத்தி அடைந்தவர்கள், **ப்ரவரகு³ருகி³ரா** ஒரு உத்தம குருவிடம் செல்ல வேண்டும். அவர் வேதாந்தத்தைப் படித்தவர் மட்டுமல்ல, அதைத் தன் அனுபவமாக ஆக்கிக் கொண்ட ஒரு குருவாக இருக்க வேண்டும். அவரிடம், **தத்ஸ்வரூபம் பரம் தே** உன்னுடைய மேலான தத்துவ ரூபத்தைப் பற்றி, அதாவது நிஷ்கல பிரம்ம ஸ்வரூபத்தைப் பற்றி அறிந்து கொள்கிறார்கள். **ஶுத்³த⁴ம், தே³ஹேந்த்³ரியாதி³வ்யபக³தம்** அந்த நிர்குண பிரம்மம் மிகவும் சுத்தமானது; அது உடல், இந்திரியங்கள் போன்றவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டது. **அகி²லவ்யாப்தம் ஆவேத³யந்தே** எங்கும் நிறைந்திருப்பது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்கிறார்கள்.

**நாநாத்வ ஸ்தௌ²ல்ய கார்ஶ்யாதி³ து, கு³ணஜவபு: ஸங்க³தோ(அ)த்⁴யாஸிதம் தே, வஹ்நே: தா³ருப்ரபே⁴தே³ஷ்விவ, மஹத³ணுதா தீ³ப்ததா, ஶாந்ததாதி³**

இந்த உலகத்தில் நாம் பார்க்கும் எல்லாமே பரம்பொருள் தான். ஆனால், இவ்வளவு விதவிதமாகத் தெரிவதற்குக் காரணம் 'மாயை'. எல்லோருக்குள்ளும் பகவான் தான் இருக்கிறான். ஆனால், ஒருவர் குண்டாக இருக்கிறார், ஒருவர் ஒல்லியாக இருக்கிறார், ஒருவர் புத்திசாலியாக இருக்கிறார், மற்றொருவர் மந்தமாக இருக்கிறார் என்றெல்லாம் நமக்குத் தோன்றுகிறது. அது எப்படி என்றால்—நெருப்பில்

ஒரு பெரிய உருட்டுக் கட்டை எரிந்து கொண்டிருந்தால், அது ஒரு பெரிய நெருப்புப் போலத் தெரியும். ஒரு சிறிய சுள்ளி எரிந்து கொண்டிருந்தால், அது சிறிய நெருப்புப் போலத் தெரியும். ஒரு நெருப்பு நன்றாகக் கொழுந்துவிட்டு எரிந்தால் அது பளிச்சென்று இருக்கும்; அதுவே அணைந்துபோகும் நிலையில் இருந்தால் மந்தமான நெருப்புப் போலத் தெரியும். உண்மையில் நெருப்புக்கு மந்தமான நெருப்பு, குண்டான நெருப்பு என்றெல்லாம் வித்தியாசம் உண்டா? இல்லை. அதுபோலத் தான் ஆத்மா என்பதும் அந்த நெருப்பைப் போன்றது. கட்டைகளின் வடிவத்திற்கேற்ப நெருப்பு வெவ்வேறு ரூபத்தில் தெரிவதைப் போலத் தான், இந்த உலகத்தில் ஆத்மா பலவிதமான ரூபங்களாகவும் குணங்களாகவும் நமக்குத் தோன்றுகிறது.

94வது தசகம் 2வது ஶ்லோகம்

**आचार्याख्य-अधरस्थारणि, समनुमिलच्छिष्यरूप-उत्तरारणि-**
**आवेधोद्भासितेन, स्फुटतर, परिबोधाग्निना दह्यमाने ।**
**कर्मालीवासनातत्कृत, तनुभुवनभ्रान्तिकान्तारपूरे,**
**दाह्याभावेन, विद्याशिखिनि च विरते, त्वन्मयी खलु अवस्था ॥**

**ஆசார்யாக்²ய அத⁴ரஸ்தா²ரணி, ஸமநுமிலச்சி²ஷ்யரூப உத்தராரணி ஆவேதோ⁴த்³பா⁴ஸிதேந, ஸ்பு²டதர, பரிபோ³தா⁴க்³நிநா**

'அரணிக்கட்டை' என்று ஒன்று உண்டு. அதில் 'கீழ் அரணி', 'மேல் அரணி' என்று இரண்டு பகுதிகள் உண்டு. அதை ஒன்றோடு ஒன்று வைத்துக் கடைந்தால் நெருப்பு உண்டாகும். இதைப் போல, 'ஆசார்யன்' என்கிற கீழ் அரணியோடு, 'சிஷ்யன்' என்கிற மேல் அரணி இணைவதனால் (அவர் செய்யும் உபதேசத்தினால்), பிரகாசிக்கும் மிகத் தெளிவான 'ஞானாக்னி' ஏற்படுகிறது.

வேதாந்தப் பார்வையில் அந்த உபதேசம் 'தத்-த்வமஸி', 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' போன்ற மஹா வாக்யங்கள். பக்தி மார்க்கத்தில் அந்த வார்த்தை எங்கிருந்து வேண்டுமானாலும் வரலாம். அதன் மனனத்தால், தெளிவான ஞானாக்னி ஏற்பட்டு, அது **த³ஹ்யமாநே கர்மாலீவாஸநா தத்க்ருத, தநுபு⁴வந ப்⁴ராந்திகாந்தாரபூரே** நம் மனதிற்குள் இருக்கும் வாசனை மூட்டைகளையும், அதனால் உண்டான உடல், உலகம் என்கிற இந்த 'பிராந்தி வனம்' (மாயைக் காடு) முழுவதையும் எரித்து சாம்பலாக்கி விடுகிறது.

**தா³ஹ்யாபா⁴வேந, வித்³யாஶிகி²நி ச விரதே** அதற்குப் பிறகு எரிக்க வேறு ஒன்றுமே இல்லை என்றானதும், அந்த ஞான அக்னியும் தானாகவே அணைந்து போய் விடுகிறது. **த்வந்மயீ க²லு, அவஸ்தா²** இறுதியில் எஞ்சி நிற்பது அந்தப் பரப்பிரம்மம் ஒன்று மட்டும் தான். அது தான் உன்னுடைய உண்மையான நிலைமை; அதாவது நிர்குண பிரம்மமான நீயே தான் அதுவாக அறியப் படுகிறாய்.

இப்படி ஞானத்தினால் மட்டும் தான் எல்லாத் துக்கங்களையும் போக்கிக் கொள்ள முடியும். ஆதிசங்கரர் பஜ கோவிந்தத்தில், "ஞானவிஹீந: கர்மஶதேந முக்திம் ப⁴ஜதி ந ஜன்மஶதேந" என்கிறார். அதாவது, நீ எத்தனை கர்மாக்கள் செய்தாலும், ஞானம் அடைந்தால் மட்டும் தான் முக்தி அடைய முடியும். இந்த ஞானத்தை அடைய வேண்டும் என்கிற தாபம் பக்குவப்பட்ட ஜீவன்களுக்கு மட்டும் தான் அதிகமாக இருக்கும். அவர்கள் மட்டும் தான் இதை தீவிரமாகத் தேடுவார்கள்.

**வள்ளிமலை ஸச்சிதானந்த ஸ்வாமிகளின் சரித்ரம்**

இதற்குச் சிறந்த உதாரணம், வள்ளிமலை ஸச்சிதானந்த ஸ்வாமிகள். இவரைத் 'திருப்புகழ் ஸச்சிதானந்த ஸ்வாமிகள்' என்றும் சொல்வார்கள். இவரால் தான் இன்று உலகம் முழுவதும் உள்ள மக்கள் திருப்புகழைப் படித்து வருகிறார்கள். பிறக்கும் போது அவருக்கு 'அர்த்தநாரி' என்று பெயர். மிகவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தாலும், நல்ல புத்திசாலியாக இருந்தார்; ஆனால் படிப்பதற்கு வசதி இல்லை. அதனால் மைசூரில் தன் மாமாவுடன் சேர்ந்து சமையல் கலையைக் கற்றுக் கொண்டார்.

அவர் மைசூர் மஹாராஜாவுக்கே திருப்தி ஏற்படும் அளவுக்கு அருமையாகச் சமைப்பார். நல்ல பயில்வானாகவும் இருந்ததால் மல்யுத்தம் எல்லாம் செய்வார். இப்படிப் புத்திமானாகவும் சக்திமானாகவும் இருந்த அவருக்கு, பக்திமானாக மாறுவதற்குக் காலம் ஒரு வழியைக் காட்டியது. அவருடைய நாற்பதாவது வயதில், அவருடைய மனைவியும், ஒரே மகளும் காலமானார்கள். அதற்கு மேல் அவருக்குக் கடுமையான வயிற்று வலி ஏற்பட்டது.

அப்போது ஒருவர் அவரிடம், "நீ பழனி மலைக்குச் சென்று முருகனுக்குக் கைங்கரியம் செய்" என்று கூறினார். அந்த காலத்தில் இப்போது இருப்பது போல ரோப் கார் போன்ற வசதிகள் கிடையாது. கீழே இருந்துதான் காவடி கட்டித் தண்ணீர், பூக்கள் எல்லாவற்றையும் மேலே கொண்டு

போக வேண்டும். இவரும் தினமும் கீழே இருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு மலை ஏறி, பகவானின் அபிஷேகத்திற்கு கொடுத்துக் கைங்கரியம் செய்துவந்தார். ஆச்சரியப்படும் விதமாக, அவருடைய வயிற்று வலி முற்றிலும் குணமாகிவிட்டது! அதனால் பழனி முருகன் மேல் அவருக்கு அசாத்திய பக்தி உண்டானது.

இப்படி முருக பக்தி அதிகமாகிக் கொண்டே இருக்கும் போது, ஒருநாள் ஒரு நாட்டியக்காரி அந்தக் கோயிலில் நடனம் ஆடிக் கொண்டிருந்தார். அவர், "சிங்கார ரூப மயில்வாகன நமோ நமென... கந்தா குமார சிவ தேசிக நமோ நமென..." என்ற வரிகளுக்கு ஆடினார். (வங்கார மார்பிலணி எனத் தொடங்கும் பாடல்) இந்த வரிகள் அர்த்தநாரியின் மனதை மிகவும் கவர்ந்துவிட்டன. "இது யார் எழுதியது?" என்று கேட்டார். "இது அருணகிரிநாதர் எழுதிய திருப்புகழ்" என்று சொன்னதும், "இந்தப் பாட்டை எனக்கு எழுதிக் கொடுங்கள்" என்று வாங்கி வைத்துக் கொண்டார்.

அவருக்கு எழுத்தறிவோ, படிப்பறிவோ கிடையாது. அதனால் கோயிலுக்கு வருபவர்களிடம் அந்தத் தாளைக் கொடுத்து, "இதை கொஞ்சம் படித்துக் காட்டுங்கள்" என்று கேட்டு, அதைக் கேட்டுக் கொண்டே அந்தப் பாடலை மனப்பாடம் செய்து விட்டார். அதற்குப் பிறகு, சென்னையில் வ.த.சுப்பிரமணிய பிள்ளை என்பவர் திருப்புகழை அச்சுப் புத்தகமாகப் போட்டிருக்கிறார் என்று தெரிந்து கொண்டார். ஒரு சிறிய பையனிடம் ஸ்லேட்டும் பலப்பமும் வாங்கிக் கொண்டு 'அ, ஆ, இ, ஈ' கற்றுக் கொண்டு, அந்தப் புத்தகத்தை வைத்துத் திருப்புகழ் முழுவதையும் படிக்கத் தொடங்கினார். அதன் மேல் அவருக்கு அளவற்ற ப்ரியம் ஏற்பட்டது.

அதற்குப் பின் அவருக்கு இன்னொரு கல்யாணம் நடந்தது, ஆனால் அந்த மனைவியும் காலமானார். பின்னர் அவர் நிறைய யாத்திரைகள் செய்தார். வட நாட்டில் ஒரு மஹாத்மா அவருக்குத் தீக்ஷை கொடுத்து, 'ஸச்சிதானந்தா' என்கிற திருநாமத்தையும் வழங்கினார். ஆனாலும், தனக்குப் பூரண ஞானம் ஏற்படவில்லையே என்று அவர் வருந்திக் கொண்டிருந்த போது, பழனி முருகன் அவர் கனவில் வந்து, "நீ திருவண்ணாமலைக்குப் போ" என்று உத்தரவிட்டார்.

திருவண்ணாமலைக்கு வந்தார்; அங்கே ரமண பகவானை தரிசித்தார். ஒரு கோவணாண்டி வடிவில் தன் பழனி முருகனையே நேரில் பார்த்தது போலச் சந்தோஷப்பட்டு, அவருக்குக் கைங்கரியம் செய்யத் தொடங்கினார். ஸ்கந்தாஸ்ரமத்தில் பகவானுடனேயே தங்கியிருந்தார்.

ஒருநாள் ரமண பகவான் திடீரென்று எழுந்து, "ஓடு, ஓடு! கீழே போ!" என்றார். "பகவான் ஏன் இப்படிச் சொல்கிறார்?" என்று நினைத்துக் கொண்டே இவர் கீழே வந்தார். அங்கே எதிரே ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் வந்து கொண்டிருந்தார். சேஷாத்ரி ஸ்வாமிகள் இவரைப் பிடித்து நிறுத்தி, அணைத்துக் கொண்டு, "உனக்குத் திருப்புகழ் தானே மந்திரம்?" என்று கேட்டார். இவருக்கு ஒரே ஆச்சரியம்! "ஆமாம் ஸ்வாமி" என்றதும், சேஷாத்ரி ஸ்வாமிகள், 'ஆத்மாத்வம் கிரிஜாமதி:' என்கிற ஶ்லோகத்தைச் சொல்லி, "இதுபோல எங்கேயாவது திருப்புகழில் இருக்கிறதா?" என்று கேட்டார். அப்போது வள்ளிமலை ஸ்வாமிகள், அமலவாயு என்று தொடங்கும் பாடலில் இருந்து "எனது யானும் வேறாகி எவரும் யாதும் யானாகும் இதய பாவனாதீதம் அருள்வாயே" என்ற வரிகளைச் சொன்னார். அதாவது—இந்த உடம்பில் 'நான், எனது' என்கிற எண்ணம் போய், 'எவரும் யாதும் யானாகும்' (எல்லாருமே, எல்லாப் பொருட்களுமே நான் தான், எல்லாமே ஆத்மாதான்) என்கிற, மனதால் புரிந்து கொள்ள முடியாத அந்தப் 'பாவனாதீத நிலையை' எனக்கு அருள்வாய் என்பது இதன் பொருள்.

இதைக் கேட்டதும் சேஷாத்ரி ஸ்வாமிகள் மிகவும் சந்தோஷப்பட்டு, "உனக்குத் திருப்புகழே மந்திரம். நீ வள்ளிமலைக்குப் போ" என்று ஆசீர்வதித்து அனுப்பினார். இவரும் வள்ளிமலைக்கு வந்து, மலை மேலே இருந்த ஒரு குகையைக் கைகளால் மண்ணை அள்ளி அள்ளிப் போட்டுப் பெரிது படுத்தினார். அப்போது அங்கே மூன்று எலும்புக்கூடுகள் கிடைத்தன. அவற்றை மூன்று சமாதிகளாக கட்டிவிட்டு, அந்தப் புனித குகையிலேயே அமர்ந்து திருப்புகழையே மந்திரமாக ஜெபித்து வந்தார். யாராவது அங்கிருக்கும் குறவர்கள் வந்து கஞ்சி கொடுத்தால் அதைச் சாப்பிடுவார். அப்படி சாப்பாட்டைப் பற்றிக் கூடக் கவலைப் படாமல் பன்னிரண்டு ஆண்டுகள் கடுமையான தவம் செய்தார்.

அப்போது அவருக்கு வள்ளியம்மையின் தரிசனமும், அதன் மூலமாக முருகப் பெருமானின் தரிசனமும் கிடைத்தது. அவருக்கு இசை இலக்கணம் தெரியாது, ஆனால் பின்னாளில் ராக தாளத்தோடு அவ்வளவு

அழகாகப் பாடுவார். திருப்புகழைக் கொண்டே முருகப் பெருமானுக்கு பூஜை செய்ய ஒரு அழகான பத்ததியை (வழி முறையை) உருவாக்கிக் கொடுத்தார். அதன் பின் அவர் சென்னைக்கு வந்து, முருகப் பெருமானுடைய பன்னிரண்டு கைகளில் உள்ள, பன்னிரண்டு ஆயுதங்களின் பெயரால் பன்னிரண்டு சபைகளை நிறுவினார். அதன் மூலமாகத் தான் இன்று உலகம் முழுவதும் எல்லாரும் திருப்புகழைப் பாடுகிறார்கள். இப்படி ஒரு நல்ல ஆசார்யன் (குரு) சொல்லும் ஒரே ஒரு வார்த்தை, அவர்களுக்குள் ஞானாக்னியை எரியச் செய்து, இந்த உடல், உலகம் என்கிற பிராந்தியைப் போக்கி, சமாதி என்கிற உன்னத நிலைக்குக் கொண்டு போய் விடுகிறது.

**நம் ஸ்வாமிகளின் பாகவத நிஷ்டை**

நம் ஸ்வாமிகளும் அப்படித் தான். மூக பஞ்சஶதீ பாதாரவிந்த சதகம் 35வது ஶ்லோகத்தில்

வஷட்குர்வன்மாஞ்ஜீரஜகலகலை꞉ கர்மலஹரீ-
ஹவீம்'ஷி ப்ரோத்³த³ண்ட³ம்' ஜ்வலதி பரமஜ்ஞானத³ஹனே |
மஹீயான்காமாக்ஷி ஸ்பு²டமஹஸி ஜோஹோதி ஸுதி⁴யாம்'
மனோவேத்³யாம்' மாதஸ்தவ சரணயஜ்வா கி³ரிஸுதே ||

அம்பாளுடைய சரணங்கள் என்ற யஜ்வா (யாகம் செய்பவர்), தன் பக்தர்களின் கர்ம வினைகளை எல்லாம் ஞானாக்னியில் போட்டு எரித்து விடுகிறார் என்று இந்த ஶ்லோகம் சொல்கிறது. அந்த மாதிரி, மஹா பெரியவா "அவர் பாகவதத்தையே படித்துக் கொண்டிருக்கிறார், அவருக்கு ஞானம் வந்து விடும், ஜன்மா ஸார்த்தகமாகும்" என்று சொன்ன அன்றிலிருந்து, ஸ்வாமிகள் பாகவதத்தையே உறுதியாகப் பிடித்துக் கொண்டு, அதை ஆயிரக் கணக்காண ஆவர்த்திகள் பாராயணம் செய்து, அந்த ஞானாக்னியை வைத்தே தன் கர்ம வினைகள் எல்லாவற்றையும் போக்கிக் கொண்டார்.

**துக்க கலப்பில்லாத ஆனந்தம் ஞானத்தினால் மட்டுமே**

94வது தசகம் 3வது ஶ்லோகம்

**एवं त्वत्प्राप्तितः, अन्यो नहि खलु निखिलक्लेशहानेरुपायः,**
**नैकान्तात्यन्तिकास्ते कृषिवत्, अगदषाड्गुण्यषट्कर्म योगाः ।**

**दुर्वैकल्यैरकल्या अपि निगमपथाः, तत्फलान्यप्यवाप्ताः,**
**मत्ताः त्वां विस्मरन्तः, प्रसजति पतने, यान्त्यनन्तान् विषादान्॥**

**ஏவம் த்வத்ப்ராப்தித:, அந்யோ நஹி க²லு நிகி²ல க்லேஶஹாநேருபாய:** இப்படி மாயைகளிலிருந்து விடுபட்டு ஞானத்தினால் உன்னை அடைவதைத் தவிர, எல்லாத் துன்பங்களையும் (க்லேஶங்களையும்) போக்கிக் கொள்வதற்கு, வேறு வழியே கிடையாது.
**நைகாந்தாத்யந்திகாஸ்தே க்ருஷிவத், அக³த³ ஷாட்³கு³ண்ய ஷட்கர்ம,யோகா³:** நாம் விவசாயம் செய்கிறோம். அதற்கு நிலத்தை உழ வேண்டும், பயிர் செய்ய வேண்டும், தண்ணீர் பாய்ச்ச வேண்டும், பூச்சிகள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும், ஆடு மாடுகள் மேயாமல் வேலி போட வேண்டும். இவ்வளவு செய்த பிறகுதான் பயிர் கிடைக்கிறது. அப்புறம் அந்த உணவைச் சாப்பிட்டு முடிக்கிறோம்; மீண்டும் பசி எடுக்கிறது, திரும்பவும் இதையே செய்கிறோம். வீட்டில் தோட்டம் இருப்பவர்களுக்கே இது புரியுமே!

இதைப் போலத் தான் மற்ற உலகியல் உபாயங்களும், ஷட்கர்மங்களும், ஷாட்குண்யங்களும் ஆகும். இவை நம் துக்கத்தை அடியோடு போக்குவதில்லை; மீண்டும் அந்த துக்கம் வராது என்றும் சொல்ல முடியாது. இது ஒரு மருந்து சாப்பிடுவதைப் போன்றது தான். இப்போது இருக்கும் அலோபதி மருத்துவ முறைக்கு இந்த உதாரணம் மிகவும் பொருந்தும். மருந்து சாப்பிட்டால் வியாதி அடியோடு போகுமா என்று தெரியவில்லை, ஆனால் அதற்குப் பல பக்கவிளைவுகள் இருக்கின்றன. கடுமையான மருந்துகளைக் கொடுக்கிறார்கள்; அதில் கிடைக்கும் நிம்மதி மிகவும் குறைவு தான். அதைப் போல, வேறு எந்தப் பிராயச்சித்தம் செய்தாலும் அது அடியோடு துக்கத்தைப் போக்காது. துக்கம் கலந்த சுகம் மட்டும் தான் எஞ்சும் என்று இந்த ஶ்லோகத்தில் சொல்லப்படுகிறது.

மஹா பெரியவா இதை ஒரு எளிமையான உதாரணத்தின் மூலம் அருமையாக புரிய வைத்து இருக்கிறார்கள். இருட்டில், படியில் கிடக்கும் ஒரு கயிற்றை பாம்பு என்று நினைத்து, ஒருவன் இறங்கி போக பயப்படுகிறான். மணி அடித்து பார்க்கிறான். கருட மந்திரம் ஜெபித்து பார்க்கிறான். அந்த பாம்பு விலகி ஓடுமோ? அது பாம்பாய் இருந்தால் தானே விலகி ஓடும். அது கயிறு அல்லவா? வெளிச்சம் வந்து அது பாம்பு இல்லை என்று தெரிந்தால் தான், அந்த பயம் விலகி இவனால் படியைக்

கடந்து போக முடியும். அது போல ஞான வெளிச்சத்தினால் தான் துக்கத்தைத் தாண்ட முடியும். பரிகாரங்களால் முடியாது.

**து³ர்வைகல்யைரகல்யா அபி, நிக³மபதா²:, தத்ப²லாந்யப்யவாப்தா:**
வேதத்தில் சொல்லியிருக்கும் இஷ்டி போன்ற புண்ணிய காரியங்களையோ செய்வோம் என்று நினைத்தால்—இந்தக் காலத்தில் அதற்கான தூய்மையான த்ரவ்யங்கள், அதற்குத் தேவையான இடம், தூய்மையான கர்த்தா, சரியான நேரம் இதெல்லாம் கூடி வருவதே கஷ்டம். அப்படி எப்படியோ கஷ்டப்பட்டுச் செய்து, அதன் பலனாக ஒரு உலகியல் சுகத்தை அடைந்தால், **மத்தா: த்வாம் விஸ்மரந்த: ப்ரஸஜதி பதநே, யாந்த்யநந்தான் விஷாதா³ந்** அகந்தை வந்து விடுகிறது, பகவானை மறந்து விடுகிறார்கள். மேலும் அந்தப் புண்ணியம் தீர்ந்த உடனே, மீண்டும் பழைய நிலைக்கே வந்து விடுகிறார்கள்; அப்போது மீண்டும் துக்கம் ஏற்படுகிறது. ஸந்த்யா வந்தனம், தர்ப்பணம் ச்ராத்தம், 40 சம்ஸ்காரங்கள் — இவை தான் நாம் அவசியம் செய்ய வேண்டியவை. பகவானை அடைய, நம் மனதை உலக விஷயங்களிலில் இருந்து திருப்ப வேண்டும் என்கிற போது, வைதீக கர்மாக்களை கொண்டு மேலும் மேலும் உலகத்தில் சுகமடைய வேண்டும் என்று முயற்சி செய்தால், எப்படி ஞானம் அடைய முடியும்?

வெளிநாட்டு வாழ்க்கை, புண்யம் செய்தவர்கள் அடைந்த ஒரு போக பூமியாகத் தெரிகிறது; அங்கே இருப்பவர்கள் சொர்க்கத்தைப் போல வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள் என்று தோன்றுகிறது. ஆனால், அது துக்கக் கலப்பில்லாத ஆனந்தம் என்று சொல்ல முடியுமா? அல்லது அது அப்படியே நிலைத்திருக்கும் என்று சொல்ல முடியுமா? இல்லை. அவர்களுக்கு செல்வத்தைப் பற்றிய ஒரு மதம் (அகந்தை) இருக்கிறது; தங்கள் சுகத்திற்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்கிற பயமும், பல வித கவலைகளும் இருக்கத் தான் இருக்கிறது.அந்த வகையில், ஞானத்தைத் தவிர வேறு எதுவானாலும் அது துக்கம் கலந்த ஆனந்தமாகத் தான் இருக்கும்.

பாதாரவிந்த சதகத்தில் 66வது ம்லோகத்தில்,
அஶோகோல்லாஸம் ந: ப்ரசுரயது காமாக்ஷி சரண:
விகாஸீ வாஸந்தஸ்ஸமய இவ தே ஶர்வத³யிதே ॥
"அம்பாளின் சரணங்கள் ஒரு வசந்த காலம் போன்றது; அது எனக்கு 'அஷோகோல்லாஸத்தை' தரட்டும்; அதாவது அசோக மரங்களை மலரச்

செய்யட்டும்" என்று வரும். இதற்கு உண்மையான அர்த்தம் —"சோகமே இல்லாத சந்தோஷத்தைக் கொடுக்கட்டும்". ஸ்வாமிகள், "அது ஞானம் தான்" என்று விளக்குவார்.

அடுத்த ஶ்லோகத்தில், நாம் எங்கே போனாலும் பயம் இருக்கிறது என்பதைச் சொல்கிறார்: 94வது தசகம் 4வது ஶ்லோகம்:

**त्वल्लोकादन्यलोकः क्वनु भयरहितो, यत् परार्धद्वयान्ते,**
**त्वद्भीतस्सत्यलोकेऽपि, न सुखवसतिः पद्मभूः, पद्मनाभ ।**
**एवं भावे तु, अधर्मार्जितबहुतमसां का कथा, नारकाणां**
**तन्मे त्वं छिन्धि बन्धं वरद, कृपणबन्धो, कृपापूर सिन्धो ॥**

**த்வல்லோகாத$^3$ந்யலோக: க்வநு ப$^4$யரஹிதோ, யத் பரார்த$^4$த்$^3$வயாந்தே, த்வத்$^3$பீ$^4$தஸ்ஸத்யலோகே(அ)பி, ந ஸுக$^2$வஸதி: பத்$^3$மபூ$^4$:, பத்$^3$மநாப$^4$**
"பத்மநாபா! தாமரையில் பிறந்த பிரம்மா கூட (இந்த உலகத்தில் மனிதர்களின் ஆனந்தத்திற்கு மேலே தேவர்களின் ஆனந்தம், கந்தர்வர்களின் ஆனந்தம் என்று பல நிலைகள் கடந்து பிரம்மானந்தம் என்று ஒன்று இருக்கிறது). எல்லாரையும் சிருஷ்டி செய்யும் அந்தப் பிரம்மாவுக்கே கூட, 'எனக்கு ஐம்பத்தியொரு வயது ஆகிவிட்டதே' (தன் ஆயுள் முடிந்துவிடுமோ) என்கிற கவலை இருக்கிறதாம்!" அப்படிப் பார்த்தால், இந்த உலகத்தில் பயமில்லாத மனிதர்கள் யாருமே கிடையாது; நீ ஒருவன் தான் பயமற்றவன்.
**ஏவம் பா$^4$வே து, அத$^4$ர்மார்ஜிதப$^3$ஹுதமஸாம் கா கதா$^2$, நாரகாணாம்** புண்ணியசாலிகள் ஏதோ ஒரு சுகத்தை அனுபவிக்கும் போது கூட, அதில் துக்கம் கலந்திருக்கிறது எனும் போது, பல பாவங்களைச் செய்து நரகத்தில் கஷ்டப்படுபவர்களைப் பற்றிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? அதனால், இந்த உடம்பினால் துக்கம்தான் மிஞ்சும்; இதிலிருந்து உண்மையான சுகம் வரப்போகிறது என்று நினைக்க முடியாது.
**தந்மே த்வம் சி$^2$ந்தி$^4$ ப$^3$ந்த$^4$ம், வரத$^3$, க்ருபணப$^3$ந்தோ$^4$, க்ருபாபூர,ஸிந்தோ$^4$** "கருணைக் கடலே! ஏழைகளின் பந்துவே! வரமளிப்பவனே! எனக்கு இந்த கர்ம பந்தங்களை நீக்கி, உடம்பில் இருக்கும் 'நான்' என்கிற எண்ணத்தைப் போக்கி ஞானத்தை அருள வேண்டும்."

**ஜீவன் முக்தி வெறும் பாடம் அல்ல**

அடுத்த ஶ்லோகம்: 94வது தசகம் 5வது ஶ்லோகம்

**याथार्थ्यात्त्वन्मयस्यैव हि मम न विभो, वस्तुतो बन्धमोक्षौ,**
**मायाविद्यातनुभ्यां, तव तु विरचितौ, स्वप्नबोधोपमौ तौ ।**
**बद्धे जीवद्विमुक्तिं गतवति च भिदा, तावती तावदेको**
**भुङ्क्ते, देहद्रुमस्थो विषयफलरसान्, नापरो निर्व्यथात्मा ॥**

**யாதா²ர்த்²யாத்த்வந்மயஸ்யைவ ஹி மம ந விபோ⁴, வஸ்துதோ ப³ந்த⁴மோக்ஷௌ, மாயாவித்³யாதநுப்⁴யாம், தவ து விரசிதௌ, ஸ்வப்நபோ³தோ⁴பமௌ தௌ** இது உபநிஷத்துகளில் அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் அத்வைத ஞானத்திற்கான சிறந்த உதாரணம். ஜீவனும் பிரம்மமும் ஒன்று என்றால், உண்மையில் எனக்குப் பந்தமும் இல்லை, மோக்ஷமும் இல்லை. மாயையினால் பந்தமும், ஞானத்தினால் மோக்ஷமும் ஏற்படுகிறது. இது கனவுக்கும் விழிப்பு நிலைக்கும் ஒப்பானது. கனவில் நாம் என்னென்னவோ பார்க்கிறோம்; ஆனால் விழித்து எழுந்ததும் அங்கே எதுவுமே இல்லை.

**ப³த்³தே⁴ ஜீவத்³விமுக்திம் க³தவதி ச பி⁴தா³ தாவதீ, தாவதே³கோ பு⁴ங்க்தே, தே³ஹத்³ருமஸ்தோ² விஷயப²லரஸான், நாபரோ நிர்வ்யதா²த்மா** அதைப் போல, இந்த உலகத்தையே நாம் ஒரு கனவு, மாயை காட்டும் தோற்றம் என்று உணர்ந்து விட்டால், அது தான் 'ஞான விழிப்பு' (கனவிலிருந்து விழித்துக் கொள்வதைப் போல). பந்தப் பட்டவனுக்கும் மோக்ஷம் அடைந்தவனுக்கும் இவ்வளவு தான் வித்தியாசம். ஒருவன் உடலாகிய மரத்தில் அமர்ந்து கொண்டு, உலக விஷயங்கள் என்கிற பழங்களை (புண்ணிய பாவங்களை) அனுபவிக்கிறான்; மற்றொருவனோ சாட்சி மாத்திரமாய் இருந்து, அவற்றை அனுபவிப்பதில்லை. இதெல்லாம் உபநிஷத்தில் வரும் கதைகள். ஆனால், "இப்படி 'ஜீவன் முக்தி' என்றால் இதுதான்" என்று பாடம் படித்தால், வெறும் தியரியாகத் தெரிந்தால் என்ன பிரயோஜனம்? அது மட்டும் போதாது என்கிறார் பட்டத்ரி.

94வது தசகம் 6வது ஶ்லோகம்

**जीवन्मुक्तत्वं, एवंविधमिति वचसा किं फलं, दूरदूरे,**

**तन्नाम अशुद्धबुद्धेः, न च लघु मनसश्शोधनं, भक्तितोऽन्यत् ।**
**तन्मे विष्णो कृषीष्ठाः, त्वयि कृतसकलप्रार्पणं भक्तिभारं,**
**येन स्यां मङ्क्षु, किञ्चिद् गुरुवचनमिलत्त्वत्प्रबोधः, त्वदात्मा ॥**

**ஜீவந்முக்தத்வம், ஏவம்வித⁴மிதி வசஸா கிம் ப²லம், தூ³ரதூ³ரே, தந்நாம அஶுத்³த⁴பு³த்³தே⁴:, ந ச லகு⁴ மநஸஶ்ஶோத⁴நம், ப⁴க்திதோ(அ)ந்யத்** "இந்த ஜீவன் முக்தி என்பதைப் பற்றி வெறும் வார்த்தையினால் மட்டும் பேசுவதில் என்ன பயன் இருக்கப்போகிறது? அஶுத்³த⁴பு³த்³தே⁴: — நம் புத்தி சுத்தமடையவில்லை என்றால், சித்த சுத்தி ஏற்படவில்லை என்றால், அந்த நிலை நமக்கு வெகு தூரத்தில் இருக்கிறது என்று தான் அர்த்தம். அதனால் மனதை தூய்மைப் படுத்த வேண்டும். அந்த மனத் தூய்மைக்கு பக்தியைத் தவிர வேறு வழியே கிடையாது!"

பகவானிடத்தில் செய்யும் பக்தி மூலமாக  மட்டும் தான் மனதைத் தூய்மைப் படுத்திக் கொள்ள முடியும். **தந்மே விஷ்ணோ க்ருஷீஷ்டா²:, த்வயி க்ருதஸகலப்ரார்பணம் ப⁴க்திபா⁴ரம்** அதனால், நான் செய்யும் செயல்கள் எல்லாவற்றையும் உன்னிடத்திலேயே சமர்ப்பணம் செய்கிறேன். எனக்கு அப்படிப்பட்ட உயர்ந்த பக்தியை அளிப்பாயாக.

**யேந ஸ்யாம் மங்க்ஷு, கிஞ்சித்³ கு³ருவசநமிலத்த்வத்ப்ரபோ³த⁴:, த்வதா³த்மா** அப்படி உயர்ந்த பக்தி நமக்கு ஏற்பட்டுவிட்டது என்றால், குரு செய்யும் ஒரே ஒரு உபதேசத்தினாலேயே நமக்கு 'ஞான விழிப்பு' ஏற்பட்டு, நாம் ஸாரூப்ய முக்தியை அடைந்து விடுவோம். எப்படிப் பழனி முருகனிடம் இருந்த பக்தியினால் தான், வள்ளிமலை ஸ்வாமிகளுக்கு ஶ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் அந்த ஒரே ஒரு வார்த்தை கிடைத்து, அந்த ஜன்மத்திலேயே முக்தி பெற முடிந்ததோ, அதைப் போல!

இந்த ஞான நூல்களைப் படித்தால் மட்டும் போதாது. பக்தியினால் அகந்தையைப் போக்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் பிரம்மவித்தை அனுபவமாகும் என்பதை ஸ்வாமிகள் மிக அழகான ஒரு உதாரணத்தின் மூலம் விளக்குவார்.

“தெய்வ நங்கையான யசோதையின் கர்ப்பத்தில், பிரம்ம வித்யா ஸ்வரூபிணியான அம்பிகை, கர்ப்ப வாஸமிருந்து பூமியில் அவதரித்தாள்.

பகவானின் ஆணைப்படி வசுதேவர் குழந்தை க்ருஷ்ணனைக் கொண்டு போய் யசோதையின் அருகில் விட்டுவிட்டு, அந்தப் பெண் குழந்தையை எடுத்துக் கொண்டு வருகிறார். யசோதை மயக்கத்திலும் தூக்கத்திலும் இருந்ததால், அந்த குழந்தையின் லிங்கத்தை, அதாவது அது ஆணா, பெண்ணா என்ற அடையாளத்தை அறியவில்லை. அவள் விழித்துக் கொண்டவுடன் அருகில் இருந்த க்ருஷ்ணனை அள்ளி அணைத்துக் கொஞ்சி, பாலூட்டி, சீராட்டி மகிழ்ந்தாள்."

இதைக் கொண்டு ஸ்வாமிகள் சொல்வார்: "பிரம்ம வித்தை அவளிடம் இருந்தது; ஆனால், அதன் அடையாளமே அவளிடம் தெரியவில்லை. அது போல கீதை படிக்க வேண்டும். ஆனால், "நான் பல பேரிடம் வேதாந்த பாடம் கேட்டிருக்கிறேன்", "கீதையின் பல பாஷ்யங்களை படித்திருக்கிறேன்" என்ற அகந்தை இருந்தால், அவர்களுக்கு ஒரு நாளும் அந்த வேதாந்த ஞானம் அனுபவமாக ஆகாது. "நான் ஏதோ சில புத்தகங்கள் கூடப் படித்திருக்கிறேன்; ஆனால், எல்லோரையும் போல ஆசாபாசங்களில் அல்லல் பட்டுக் கொண்டு தானே இருக்கிறேன்" என்ற எண்ணத்தில் பணிவாக இருந்து கொண்டு பக்தி செய்தால் தான் அந்த அனுபவம் கிடைக்கும். இதைப் புரிந்து கொள்வது கஷ்டம். "வேதாந்தத்தைப் படித்தறிய வேண்டும்; ஆனால், "நான் படித்தேன்" என்ற எண்ணம் கூட இல்லாமல் இருந்தால், யசோதைக்கு க்ருஷ்ணாநுபவம் கிடைத்தைப் போல, அந்த ஞானானுபவம் கிடைக்கும்" என்று சொல்வார்.

**லாடு மஹராஜின் கதையும் குருவருளும்**

இதற்கு இன்னொரு உதாரணம், ஶ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸரின் சீடரான லாடு மஹராஜ் (அத்புதானந்தர்). அவர் பீகாரில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஒரு ஏழைப் பையன். பிழைப்பிற்காகப் பெங்காலுக்கு வருகிறான். அங்கே ராமக்ருஷ்ண பரமஹம்ஸரின் பக்தர் ஒருவருடைய க்ருஹத்தில் வேலைக்காரனாகச் சேருகிறான். அந்தப் பக்தர், இவனிடம் பழங்களைக் கொடுத்து "இதை ராமக்ருஷ்ணரிடம் கொடுத்துவிட்டு வா" என்று அனுப்புகிறார்.

அவன் ஒருமுறை வருகிறான், இரண்டாவது முறையும் வருகிறான். அப்புறம் அவன், "நான் திரும்பப் போக மாட்டேன், நான் ராமக்ருஷ்ணரிடமே தான் இருப்பேன்" என்று பிடிவாதம் பிடிக்கிறான். அவனுடைய பக்தியைப் பார்த்து, "சரி, இருக்கட்டுமே, மஹாத்மாவுக்கு சேவை செய்து கொண்டிருக்கட்டும்" என்று அவர்களும் விட்டு

விடுகிறார்கள். இவன் தன் எஜமானரிடம், "கோவிலில் எனக்கு சாப்பாடு தந்து விடுவார்கள். நீங்கள் எனக்கு வருஷத்திற்கு இரண்டு வேஷ்டி தர மாட்டீர்களா? அது கொடுத்தால் போதும்" என்று சொல்லி பரமஹம்ஸரோடு தங்கி அவருக்கு சேவை செய்கிறான்.

அவன் கிராமத்துப் பையன் என்பதால் கொஞ்சம் முரட்டுத்தனமாக இருப்பான்; அங்கே வரும் பக்தர்களைச் சில சமயம் அதட்டுவான். அப்போது ராமக்ருஷ்ணர் அவனைக் கூப்பிட்டு, "உனக்கு இரண்டு விஷயங்களைச் சொல்லித் தருகிறேன். முதலாவது—யாரையும் புண்படுத்தும்படியாக ஒரு வார்த்தை கூடப் பேசக்கூடாது; அப்படிப் பேசினால் பகவான் கிடைக்க மாட்டார். இரண்டாவது—தினமும் ஒரு லக்ஷம் ராம நாம ஜெபம் செய். இரவில் கொசுவலைக்குள் உட்கார்ந்து கொண்டு யாருக்கும் தெரியாமல் செய்" என்று சொல்லிக் கொடுக்கிறார். அதை அப்படியே செய்த அவனுக்கு உயர்ந்த பக்தியும் ஞானமும் வந்து விடுகிறது! பின்னாளில் விவேகானந்தர் முதலில் பதினாறு பேருக்கு நேரடியாக ஸந்நியாசம் கொடுத்து ராமக்ருஷ்ண மடத்தை ஆரம்பித்த போது, அந்தப் பதினாறு பேர்களில் இந்த லாடூ மஹராஜும் ஒருவர்!

அவர் அந்த மடத்தில் இருக்கும் போது, "மடத்தில் மணி அடித்தால் தான் சாப்பாடு என்றெல்லாம் விதிமுறை வைத்தால் நான் இங்கே இருக்க மாட்டேன்; என்னால் விதிகளை எல்லாம் பின்பற்ற முடியாது" என்று சொல்கிறார். அதற்கு விவேகானந்தர், "இல்லை இல்லை, நீ இங்கே இருந்தாலே போதும். உன்னுடைய ஸ்பரிசமும், தரிசனமுமே எங்களுக்குப் பெரிய பாக்கியம்" என்று அவரைப் பிடித்து வைத்துக் கொண்டார். சில வருடங்களுக்குப் பிறகு அவர் காசிக்குச் சென்று விட்டார். இப்படி ஒரு எழுத்துக் கூடத் தெரியாத, படிப்பறிவே இல்லாத ஒரு சாதாரணப் பையனை மிகப்பெரிய ஞானியாக மாற்றி விட்டாரே பரமஹம்ஸர் என்று வியந்து, விவேகானந்தர் அவருக்கு 'அத்புதானந்தா' என்றே பெயர் வைத்தார்.

அப்படி உண்மையான குருவின் அனுக்ரஹமும் இருந்து, அந்த ஒரு வார்த்தையும் கிடைத்து, குரு பக்தியும் தெய்வ பக்தியும் ஒன்றாக இணைந்தால், மனிதனுக்கு அந்த ஜன்மத்திலேயே முக்தி கிடைத்துவிடும் என்பதில் ஐயமில்லை.

உபநிஷத்துகளில் சொல்லப்பட்ட நிர்குண பரப்பிரம்ம தத்துவங்கள், ஜீவன்முக்தி நிலை ஆகியவற்றைப் பற்றியெல்லாம் விளக்கிவிட்டு, "இவற்றையெல்லாம் வெறும் வார்த்தைகளால் மட்டும் தெரிந்து கொள்வதில் என்ன பிரயோஜனம்? சித்த சுத்தி (மனத்தூய்மை) ஏற்படவில்லை என்றால், இந்த ஞானம் எட்டாக்கனியாக, மிகத் தூரத்திலல்லவா இருக்கும்! அந்த மனது சுத்தமடைவது பக்தியினால் மட்டும் தான் சாத்தியம்" என்று நாராயணீயம் உணர்த்துகிறது.

இந்தத் தசகத்தின் 6வது ஸ்லோகத்தில், "ஹே க்ருஷ்ணா! எனக்கு அசைக்க முடியாத பக்தியைக் கொடு. எல்லாவற்றையும் உன்னிடமே அர்ப்பணிக்கும் நல்ல புத்தியைக் கொடு. அந்த பக்தி மேலோங்கும் போது, குருநாதர் உபதேசிக்கும் வார்த்தைகளின் உண்மைப் பொருள் விளங்கி, உன்னைப் பற்றிய தத்துவ ஞானம் எனக்குச் சித்தி ஆகிவிடும்; நான் நீயாகவே ஆகிவிடுவேன்" என்று பட்டத்ரி பிரார்த்திக்கிறார்.

**க்ருஹஸ்தர்கள் வேதாந்தம் படித்தால் பயன் உண்டா?**

இங்கே எனக்கு ஒரு சுவையான நிகழ்வு நினைவுக்கு வருகிறது. சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளிடம் சில ஸந்நியாசிகள் பிரம்மசூத்ர பாஷ்யம் பாடம் கேட்டு வந்தார்கள். அவர்களுடன் சேர்ந்து சில கிருஹஸ்தர்களும் பல நாட்களாக மிகுந்த ஸ்ரத்தையோடு அந்தப் பாடத்தைக் கேட்டு வந்தனர்.

ஒருநாள், அந்தக் கிருஹஸ்தர்களில் ஒருவர் ஆசார்யாளிடம் ஒரு சந்தேகத்தைக் கேட்டார்: "ஸ்வாமி, 'பிரம்மசூத்ர பாஷ்யம் படிப்பதற்கு ஸந்நியாசிகளுக்குத் தான் தகுதி (யோக்யதை) இருக்கிறது' என்று ஆதிசங்கர பகவத்பாதர் சொல்கிறாரே, அது அப்படித் தானா?" அதற்கு சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள், "ஆசார்யாள் சொன்னதை அது அப்படித் தானா என்றா கேட்கிறாய்? அதற்கு மேல் மறுவார்த்தை ஏது? அவர் சொன்னது அப்படியே தான்" என்றார்.

உடனே அந்த கிருஹஸ்தர், "க்ஷமிக்க வேண்டும் ஸ்வாமி, நான் அந்த அர்த்தத்தில் கேட்கவில்லை. நாங்களும் இவ்வளவு நாளாக உங்களிடம் மிகுந்த ஸ்ரத்தையோடு பாடம் கேட்கிறோமே, இதனால் எங்களுக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லையா?" என்று ஆதங்கத்தோடு கேட்டார்.

அதற்கு ஆசார்யாள் மிகவும் அழகாக பதிலளித்தார்: "ஆதிசங்கரர் சொன்னபடி, இந்த ஞானம் ஸந்நியாசிகளுக்குத் தான் உடனடியாகப் பயன்படப் போகிறது என்பதில் மாற்றமில்லை. ஆனால், நீங்கள் இப்போது பாடம் கேட்பது வீணாகாது. ஏதோ ஒரு ஜன்மத்தில் நீங்கள் காட்டும் இந்த பக்தியின் மூலமாக உங்களுக்குச் சித்த சுத்தி ஏற்பட்டு, ஆத்ம குணங்கள் யாவும் கைவரப் பெற்று, நீங்கள் ஸந்நியாசம் வாங்கிக் கொள்ளும் போது, இந்த ஜன்மத்தில் கேட்ட பாடம் உங்களுக்கு ஒரு பூர்வ ஜன்ம வாசனையாக துணை நிற்கும். அன்று நீங்கள் வேதாந்தத்தைக் கேட்கும் போது, இவையெல்லாம் மிக எளிதாக, நன்றாகப் புரிந்துவிடும்" என்று அருளினார்.

இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், ஜீவன்முக்தியைப் பற்றியும் வேதாந்தத்தைப் பற்றியும் நாம் தெரிந்து கொள்ளலாம்; ஆனால், அதிலேயே எல்லா நேரத்தையும் செலவழித்து விடக் கூடாது. பக்தி ஏற்படுவதற்கு என்னென்ன வழிகளோ, அத்தகைய காரியங்களில் ஈடுபட்டு பகவானுக்குச் சேவை செய்ய வேண்டும். "யத்³யத் கர்ம கரோமி தத்த³த³கிலம் சம்போ⁴ தவாராத⁴னம்" என்கிறபடி, நாம் செய்கிற அனைத்தையும் பகவானுக்கு அர்ப்பணித்து, நம் பக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது புரிகிறது.

### வேதமோதுவதோடு பக்தியும் பண்ண வேண்டும்

அடுத்த 94வது தசகத்தில் 7வது ஶ்லோகம்:

**शब्दब्रह्मण्यपीह प्रयतितमनसः, त्वां न जानन्ति केचित्,**
**कष्टं, वन्ध्यश्रमास्ते चिरतरमिह गां बिभ्रते, निष्प्रसूतिम् ।**
**यस्यां विश्वाभिरामाः, सकलमलहराः, दिव्यलीलावताराः,**
**सच्चित्सान्द्रं च रूपं, तव न निगदितं, तां न वाचं भ्रियासम् ॥**

**ஶப்³த்³ப்³ரஹ்மண்யபீஹ ப்ரயதிதமநஸ:, த்வாம் ந ஜாநந்தி கேசித், கஷ்டம், வந்த்⁴யஶ்ரமாஸ்தே சிரதரமிஹ கா³ம் பி³ப்⁴ரதே, நிஷ்ப்ரஸூதிம்** வேதம் என்பது 'ஶப்த பிரம்மம்'. அதனால், இந்த ஶ்லோகத்தில் வேதத்தைக் குறைத்து மதிப்பிடுவதாக யாரும் நினைத்துவிடக் கூடாது. நாலு வேதங்களும் ஆறு அங்கங்களும் இறைவனின் வடிவமே என்று தேவார திவ்ய ப்ரபந்தங்களில் பல இடங்களில் வருகிறது. ஸ்வாமிகள், வேதத்தில் ஒவ்வொரு பதமும்

பகவந்நாமா தான் என்று சொல்வார். ஆனால், சிலர் வேதத்தின் சப்தத்தை மட்டும் பிடித்துக் கொண்டு, வேத ப்ரதிபாத்யமான. (வேதத்தால் காட்டிக் கொடுக்கப்படும்) உன்னிடத்தில் பக்தியோடு இருப்பதில்லை; உன்னைப் பற்றிய இனிமையான கதைகளை அவர்கள் காது கொடுத்துக் கேட்பதுமில்லை. அப்படி பக்தி இல்லாமல் வேதம் மட்டும் ஓதுவதை பட்டத்ரி "வந்த்யச்ரமஹ" (வீணான உழைப்பு) என்கிறார். சினை பிடிக்காத ஒரு மாட்டுக்கு எவ்வளவு தான் தீனி வைத்தாலும் அதிலிருந்து பால் கிடைக்காது அல்லவா?

அதே நேரத்தில், **யஸ்யாம் விஶ்வாபி⁴ராமா:** உலகத்தையே மகிழ்விக்கும், **ஸகலமலஹரா:** எல்லாப் பாவங்களையும் போக்கக்கூடிய **தி³வ்யலீலாவதாரா:** உன்னுடைய திவ்ய லீலைகள் (க்ருஷ்ண அவதாரம், ராம அவதாரம் போன்ற அவதாரச் சிறப்புகள்), **ஸச்சித்ஸாந்த்³ரம் ச ரூபம்** உன்னுடைய ஸச்சிதானந்த மயமான திருவுருவம் **தவ ந நிக³தி³தம், தாம் ந வாசம் ப்⁴ரியாஸம்** அவற்றைப் பேசாத வாக்கை நான் தாங்க விரும்பவில்லை. அதாவது, உன்னுடைய திவ்ய லீலைகளையும், திருவுருவத்தையும் நான் நாவாரப் பேச வேண்டும் என்று பட்டத்ரி வேண்டுகிறார்.

ஸ்வாமிகள், வைதீகம் பண்ணுகிறவர்களிடம், "நீங்கள் பிறருக்கு வைதீகம் பண்ணி வைக்கிறீர்கள். அதோடு நிறுத்திக் கொள்ளாமல், உங்களுடைய ஆத்ம லாபத்திற்காக ஒரு சிவ பூஜையோ, ஒரு சுந்தரகாண்ட பாராயணமோ தினமும் பண்ணுங்கள்" என்று சொல்வார்.

அந்த காலத்தில் வாழ்க்கை முறையே அப்படித் தான் இருந்தது அல்லவா? என்னுடைய மாப்பிள்ளை அல்லூர் வேத பாடசாலையில் வேதம் படித்தார். நான் பழுவூருக்கு ஸ்வாமிகள் அதிஷ்டானம் தரிசனம் செய்ய போகும் போது, அதன் பக்கத்தில் இருக்கும் அல்லூருக்கு சென்று, அங்கு ஶ்ரீ சேஷாத்ரி கனபாடிகளைச் சந்தித்து நமஸ்காரம் செய்வேன். ஒரு நாள் அவர், தன்னுடைய தந்தை யக்ஞேச கனபாடிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். பெரியவாளின் ஆக்ஞைப்படி, யக்ஞேச கனபாடிகள் தன் பிள்ளைகளோடு இன்னும் சில சிறுவர்களைச் சேர்த்துக் கொண்டு அந்த ஊரிலேயே வேத பாடசாலை நடத்தி வந்தார்.

அவர் வேத பாடசாலை நடத்தினாலும், மிக அழகாகப் 'பாகவத ஸப்தாஹம்', 'ராமாயண நவாஹம்' பிரவசனங்கள் செய்வாராம். அப்படி

அக்கம் பக்கத்து ஊர்களுக்கு நவாஹம் செய்யப் போகும்போது, பாடசாலை பிள்ளைகளையும் கூடவே கூட்டிச் சென்று, அங்கும் அவர்களுக்கு வேத பாடம் நடத்துவாராம். வேதம் படித்து, அதை சொல்லிக் தருபவர்களாக இருந்தாலும், வைதீகம் செய்பவர்களாக இருந்தாலும், அன்றாடம் காவிரியில் ஸ்நானம் செய்வது, ஊரிலிருக்கும் சிவன் கோயில், பெருமாள் கோயில்களுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்வது, க்ருஹத்துக்கு திரும்ப வந்து ஆத்மார்த்தமாகப் பூஜை செய்வது, போன்ற நியமங்களை பலரும் பின்பற்றுகிறார்கள் அல்லவா?

இன்றைய காலத்தில் வைதீக நெறியில் இருக்கும் அத்தனை பேருக்கும், வேதம் படிப்பதற்கு மஹா பெரியவா தான் மிக முக்கியமான தூண்டுகோல். அதனால் எல்லாரும் பெரியவாளிடம் மிகுந்த பக்தி கொண்டிருக்கிறார்கள். பெரியவாளின் திருநாமத்தால் தான் இன்றைக்கும் எத்தனையோ வைதீக காரியங்களும், பாராயணங்களும் மிகச் சிறப்பாக நடந்து வருகின்றன. அதுவே போதுமே! பெரியவாளைத் தியானம் செய்வதே ஒரு பெரிய புண்ணியம்.

எனவே, வேதம் படித்தவர்கள், ராம, க்ருஷ்ண கதைகளைக் கேட்டு பக்தியையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று உத்தவருக்குக் க்ருஷ்ணர் உபதேசித்ததை பட்டத்ரி இங்கே அழகான பிரார்த்தனையாக மாற்றித் தருகிறார்.

**வெறும் மூட பக்தி என்று நினைக்கக் கூடாது**

அடுத்ததாகக் க்ருஷ்ணர் சொல்கிறார், "நிறைய சாஸ்த்ர ஞானத்தோடு பக்தி செய்தால் தான் நான் சந்தோஷப் படுவேன் என்பதில்லை. ஒன்றும் தெரியாவிட்டாலும், என்னிடத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையோடு பக்தி செய்தால், அவனும் என் சிறந்த பக்தனே" என்கிறார். 94வது தசகம் 8வது ஶ்லோகம்;

**यो यावान् यादृशो वा त्वमिति किमपि, नैवावगच्छामि भूमन्,**
**एवं च, अनन्यभावस्त्वदनुभजनमेव, आद्रिये, चैद्यवैरिन् ।**
**त्वल्लिङ्गानां त्वदङ्घ्रिप्रियजनसदसां, दर्शनस्पर्शनादिः,**
**भूयान्मे, त्वत्प्रपूजानतिनुतिगुणकर्मानुकीर्त्यादरोऽपि ॥**

**யோ யாவான் யாத்³ருஶோ வா த்வமிதி கிமபி, நைவாவக³ச்சா²மி பூ⁴மன், ஏவம் ச, அநந்யபா⁴வஸ்த்வத³நுப⁴ஜநமேவ, ஆத்³ரியே,**

**சைத்³யவைரின்** "சிசுபாலனின் எதிரியே (க்ருஷ்ணா)! நீ எவ்வளவு பெரியவன், எப்படிப்பட்டவன் என்றெல்லாம் எனக்கு ஆராயத் தெரியாது. ஆனால், உன்னிடத்தில் அனன்ய பாவத்தோடு (வேறு சிந்தனையின்றி) உன்னுடைய பஜனத்தை மட்டும் நான் தொடர்ந்து செய்வேன்" என்று வேண்டுகிறார்.

சபரி அன்னை பக்தி செய்யவில்லையா? ராமாயணத்தில் வால்மீகி, "சபர்யா பூஜிதஹ ஸம்யக்" என்று எழுதுகிறார். அதாவது, சபரியால் நன்றாகப் பூஜிக்கப்பட்ட ராமர், அதன் பிறகுதான் ஹனுமாரைச் சந்தித்தார் என்று வருகிறது. சபரி அப்படி என்ன விசேஷமாகப் பூஜை செய்து விட்டாள் என்றால், ராமரின் பரம பக்தர்களான மதங்க மகரிஷிக்கும், அவருடைய சீடர்களுக்கும் இத்தனை வருடங்கள் அவள் செய்த கைங்கரியமே ராமருக்குச் செய்த சிறந்த பூஜையாக அமைந்தது என்று பெரியவர்கள் விளக்குவார்கள்.

அதே போலத் தான் கண்ணப்ப நாயனார். அவர் என்ன சாஸ்த்ரமா படித்தார்? ஆதிசங்கரர் தன் 'சிவானந்த லஹரி'யில் கண்ணப்பரின் பக்தியை வியந்து பாடுகிறார்:

மார்கா³வர்திதபாது³கா, பஶுபதேரங்க³ஸ்ய கூர்சாயதே,
க³ண்டூ³ஷாம்பு³நிஷேசநம், புரரிபோர்தி³வ்யாபி⁴ஷேகாயதே ।
கிஞ்சித்³ப⁴க்ஷிதமாம்ஸஶேஷகப³லம், நவ்யோபஹாராயதே,
ப⁴க்தி: கிம் ந கரோதி, அஹோ, வநசர: ப⁴க்தாவதம்ஸாயதே ॥

அவன் காலில் அணிந்து நடந்து வந்த செருப்பு, ஈசனின் திருமுடியில் வைக்கும் கூர்ச்சம் (புனித புல் வடிவம்) போல ஆகிறது. அவன் வாயில் சுமந்து வந்து உமிழ்ந்த நீர், கங்கையைக் கொண்டு முனிவர்கள் செய்யும் திவ்ய அபிஷேகம் போல ஈசனால் ஏற்றுக் கொள்ளப் படுகிறது. அவன் சுவைத்துப் பார்த்து "இது நன்றாக இருக்கிறது" என்று கொடுத்த மாமிசம், தூய்மையான நைவேத்தியமாக மாறுகிறது. "ப⁴க்தி: கிம் ந கரோதி, அஹோ, வநசர: ப⁴க்தாவதம்ஸாயதே" – பக்தி எதைத் தான் செய்யாது! காட்டில் திரிந்த ஒரு வேடன், பக்தர்களுள் தலை சிறந்தவனாக ஆகி விட்டானே!

எனவே, எல்லாம் தெரிந்தவன் தான் பக்தன் என்று இல்லை. சாஸ்த்ர நெறிகள் அறியாதவர்களின் பக்தியை 'மூட பக்தி' என்று நாம் எளிதாகப்

புறந்தள்ளிவிடக் கூடாது. எந்தப் புற்றில் எந்தப் பாம்போ, யார் செய்த புண்ணியம் எப்படியோ! பக்தி என்பது சில சமயம் நீறு பூத்த நெருப்பு போல வெளிப்படையாகத் தெரியாமல், உள்ளுக்குள் கனன்று கொண்டிருக்கக் கூடும்.

நம் தேசத்தில் எத்தனையோ பக்தர்களைப் பார்க்கிறோம். திருவண்ணாமலையில் பௌர்ணமி அன்று லட்சக்கணக்கான மக்கள் கிரிவலம் வருகிறார்கள். திருப்பதியில் லட்சக்கணக்கான ஜனங்கள் படியேறிச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்கிறார்கள்; தங்களுக்கு இருக்கும் சொற்பப் பணத்தையும் பகவானுக்குக் காணிக்கையாக அர்ப்பணிக்கிறார்கள். புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்வதில் தான் மக்களுக்கு எவ்வளவு அசைக்க முடியாத நம்பிக்கை! எத்தனையோ சிரமங்களைத் தாங்கிக் கொண்டு அந்த ஸ்நானத்தை முடித்து வருகிறார்கள்.

கைலாச யாத்திரை போகிறார்கள்; அங்கே கடும் குளிர், மூச்சுத் திணறும் அளவுக்கு ஆக்சிஜன் குறைவு. ஆனாலும், அங்கே போய் அந்த கைலாச மலையையே வலம் வருகிறார்கள். உடல் நிலை ஒத்துழைப்பவர்கள் நடந்து வலம் வருகிறார்கள்; வேறு சிலர் கோவேறு கழுதையில் ஏறிப் போகிறார்கள்; சில பக்தர்களோ அங்கப் பிரதக்ஷிணம் (ஒரு நமஸ்காரம் செய்து எழுந்து, மறுபடி நமஸ்காரம் செய்து) மூலமாகவே கைலாசத்தை வலம் வருகிறார்கள். இப்படிப் பட்ட சாமான்ய மக்களின் அசைக்க முடியாத பக்தியினாலும், தெய்வானுக்ரஹம் பெற்ற மஹான்களின் வழிகாட்டுதலாலும் தான் நம்முடைய சநாதன தர்மம் இன்றைக்கும் அழியாமல் நிலைத்து நிற்கிறது.

திருப்பதி மலை படியேறிப் போவதைப் பற்றிப் பேசும்போது, மஹா பெரியவா சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்வு நினைவுக்கு வருகிறது. பெரியவா ஒருமுறை திருப்பதி மலையை நடந்தே படியேறிச் சென்று கொண்டிருக்கிறார். அங்கே கொஞ்ச தூரம் சமதளமாக நடக்கும்படி இருக்கும், அப்புறம் சில படிகள் வரும், மறுபடி சமதளம் வரும்.

பெரியவா தன் கூட வருபவரிடம், "படி வரும்போதெல்லாம் எனக்குச் சொல்" என்று சொல்லியிருந்தார். பெரியவா பெருமாளின் தியானத்திலேயே நடந்து வர, படி வரும்போதெல்லாம் கூட வந்தவர் "படி, படி" என்று சொல்லிக் கொண்டே வந்தார். கொஞ்ச தூரம் போனதும்

பெரியவா, "எனக்கோ வயதாகி விட்டது. இனிமேல் நான் என்ன படிப்பைப் படித்து, என்ன மனதில் ஏறப்போகிறது? அதனால் 'படி படி' என்று சொல்லாதே, 'கோவிந்தா' என்று சொல்" என்றார்.

அடுத்த முறை படி வந்தபோது அவர் "கோவிந்தா!" என்று சத்தமாக சொன்னார். பெரியவா சிரித்துக் கொண்டே, "இல்லை, அப்படிச் சொல்லாதே. 'கோவிந்த கோவிந்த கோவிந்தா... என்று இனிமையாகச் சொல்" என்றார். ஸ்வாமிகள் சாப்பிடும் போது, ஒரு அன்பர். அவர் ரொம்ப நன்றாகப் பாடுவார். அவர் ஸ்வாமிகள் பிக்ஷை செய்யும் அந்த அரை மணி நேரமும், இதே போல "கோவிந்த கோவிந்த கோவிந்தா... கோவிந்த கோவிந்த கோவிந்தா... கோவிந்த கோவிந்த கோவிந்தா..." என்று நாமாவளியைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருப்பார்.

**சாது ஸங்கமும் ஆன்மீக அனுபவங்களும்**

அடுத்த வரி

**த்வல்லிங்கா³நாம் த்வத³ங்க்⁴ரி ப்ரியஜநஸத³ஸாம், த³ர்ஶநஸ்பர்ஶநாதி³: பூ⁴யாந்மே, த்வத்ப்ரபூஜாநதிநுதிகு³ணகர்மாநு கீர்த்யாத³ரோ(அ)பி**

“உன்னுடைய அர்ச்சா மூர்த்திகளிலும், உன்னுடைய திருவடிகளிலும் பக்தி செய்யும் பக்தர்களின் ஸங்கம் எனக்குக் கிடைக்க வேண்டும். அவர்களின் தரிசனமும், அவர்களின் பாதங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொள்ளுவது போன்ற ஸ்பரிசனமும், எனக்கு அடிக்கடி கிடைக்கட்டும். உன்னை மனமாரப் பூஜை செய்வது, நமஸ்கரிப்பது (நதி), ஸ்தோத்திரம் செய்வது (நுதி), உன்னுடைய குணங்களையும் லீலைகளையும் கீர்த்தனம் செய்வதில் எனக்கு எப்போதும் பேரார்வம் இருக்க வேண்டும்" என்று வேண்டுகிறார்.

நாங்கள் இப்போது திருவல்லிக்கேணியில் இருக்கிறோம். இங்கே பார்த்தசாரதி பெருமாள் புறப்பாடு அடிக்கடி நடக்கும். அவருக்கு நித்திய கல்யாண உற்சவம் தான். நிறைய பேர் சென்னைக்கு வந்திருப்பதால், இப்போது ஸ்ரீரங்கத்தைக் காட்டிலும், திருவல்லிக்கேணியில் 'நாலாயிர திவ்ய பிரபந்தம்' கோஷ்டி பெரியதாக இருக்கிறது. அவ்வளவு பேரும் சேர்ந்து திவ்ய பிரபந்தம் பாடிக் கொண்டு போவார்கள். அவர்களை தரிசிப்பதே ஒரு பெரிய பாக்கியம்.

ஸ்வாமிகள் சொல்வார்: "ஆரம்பக் காலத்தில் இளம் பிராயத்தில் ஏதோ வேடிக்கை பார்த்துக் கொண்டு, திவ்ய பிரபந்தம் சொல்லிக் கொண்டு போயிருக்கலாம். ஆனால், 30, 40 வருடங்கள் தொடர்ந்து அந்த அமிர்தமயமான வாக்கை தினமும் ஸ்வாமியோடே சேர்ந்து சொல்லிக் கொண்டே போகும் போது, வயது முதிர்ந்த காலத்தில் அவர்களிடம் ஏற்படும் அந்த உருக்கமும், தெய்வீக ஒளியும், அந்த அமிர்த வாக்குக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்பதை நிரூபிக்கும். அவர்களைப் பார்த்தாலே அது தெரியும்" என்பார். அவர்களை நமஸ்கரிப்பார்.

**ஸ்தோத்திரங்களை மனம் வைத்து படித்தல்**
இந்த ஸ்தோத்திரங்களை நாம் கொஞ்சம் மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டால், எங்கும் எப்போதும் சொல்லலாம். கோயில்களுக்குப் போகும்போது, அந்தந்த சந்நிதியில் அந்தந்த ஸ்வாமிக்குரிய ஸ்தோத்திரங்களைச் சொல்லலாம். "மூக பஞ்சஶதீ படிக்கும் போது, பத்து ஶ்லோகங்களில், ஒரு ஶ்லோகத்தையாவது நன்றாகக் கவனித்து, அது மனதில் பதியும்படிச் சொல்ல வேண்டும்; இல்லை என்றால், திரும்பவும் பத்தையும் சொல்ல வேண்டும்" என்று சொல்லிக் கொண்டிருந்தேன் அல்லவா?

அதே போல, 'மூக பஞ்சஶதீ'யில் எங்கெங்கெல்லாம் நமஸ்காரம் வருகிறதோ, அந்த ஶ்லோகங்களை எல்லாம் குறித்து செய்து வைத்துக் கொண்டு, பாராயணத்தின் போது அந்த ஶ்லோகம் வரும்போது நமஸ்காரம் செய்ய முடிந்தால் செய்யலாம்; அல்லது மனதாரக் கை கூப்பலாம். பொருளுக்கு தகுந்தபடி வேறு அபிநயங்கள பண்ணலாம்.

கோவிந்த தாமோதர ஸ்வாமிகள், இந்த ஸ்தோத்திரங்களை எல்லாம் தன் சொந்த வாழ்க்கையோடு தொடர்பு படுத்திக் கொள்வார். எனக்கு அவர் 500 முறைக்கும் மேல் மூக பஞ்சஶதீ படித்திருக்கிறார். ஒவ்வொரு முறையும் சில குறிப்பிட்ட ஶ்லோகங்கள் வரும் போது, உருக்கத்தோடு அதன் பின்னணியைச் சொல்வார். நானும் அவர் எப்போது அதைச் சொல்வார் என்று காத்துக் கொண்டிருப்பேன்.
மூக பஞ்சஶதீ கடாக்ஷ சதகம் 18வது ஶ்லோகம்:
குண்டீ²கரோது விபத³ம் மம குஞ்சிதப்⁴ரூ-
சாபாஞ்சித: ஶ்ரிதவிதே³ஹப⁴வாநுராக³: ।
ரக்ஷோபகாரமநிஶம் ஜநயஞ்ஜக³த்யாம்
காமாக்ஷி ராம இவ தே கருணாகடாக்ஷ: ॥

ஸ்வாமிகளுக்கு 10 வயதாக இருக்கும்போது, மூக பஞ்சஶதீ புத்தகத்தை வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருக்கிறார். இந்த ஶ்லோகம் வந்த உடனே, தன் அப்பாவிடம் ஓடி வந்து, "அப்பா, இந்த அம்பாள் புத்தகத்திலேயும் நம்ம ராமரைப் பத்தி வர்றதுப்பா!" என்று சந்தோஷமாகக் காட்டியிருக்கிறார். (இந்த ஶ்லோகத்தில் காமாக்ஷியின் கருணை கடாக்ஷம், ராமபிரானைப் போல ஜகத்தைக் காக்கிறது என்று வரும்).

அப்போது அங்கே இருந்த ஒரு பெரியவர், புறப்படும் போது, "கல்யாணம், இங்கே வா" என்று ஸ்வாமிகளை பக்கத்திலிருந்த அம்மன் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கே வைத்து, "இந்த மூக பஞ்சஶதீயையே உனக்கு அம்மாவாக நினைத்துக் கொள். ஒருநாளும் தவறாமல் இதைப் படி. தாய் இல்லாத பிள்ளையான உன்னை காமாக்ஷி தாயாகக் காப்பாற்றுவாள். (ஸ்வாமிகள் மூன்று வயதிலேயே தன் தாயை இழந்து விட்டார்), இதையே கெட்டியாகப் பிடித்துக் கொள்" என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்.

ஸ்வாமிகள் என்னிடம் சொல்வார்: "எனக்கு நாராயணீயம் 25 வயதில் தான் கிடைத்தது; சில ஶ்லோகங்கள் மட்டும் தான் தெரியும். முழு நாராயணீயமும் 25 வயதில் தான் தெரிந்து கொண்டேன். ஆனால், இந்த மூக பஞ்சஶதீயை சின்ன வயதிலிருந்தே நான் படித்து வருகிறேன்".

மூக பஞ்சஶதீ ஸ்துதி சதகம் 45வது ஶ்லோகம்:

க்ருபாதா⁴ராத்³ரோணீ க்ருபணதி⁴ஷணாநாம் ப்ரணமதாம்
நிஹந்த்ரீ ஸந்தாபம் நிக³மமுகுடோத்தம்ஸகலிகா ।
பரா காஞ்சீலீலாபரிசயவதீ பர்வதஸுதா
கி³ராம் நீவீ தே³வீ கி³ரிஶபரதந்த்ரா விஜயதே ॥

இந்த ஶ்லோகத்தில் "நிஹந்த்ரீ ஸந்தாபம்" (தாபங்களை போக்குபவள்) என்று வருகிறது. ஸ்வாமிகள் சொல்வார்: "யாராவது என் மனதை காயப் படுத்தி விட்டால, ஊரில் ஒரு அரசமரம் இருக்கும். அரச மரத்தடியில் இரவில் உட்காரக் கூடாது என்றெல்லாம் எனக்குத் தெரியாது. அங்கே போய் உட்கார்ந்து கொண்டு, இந்த 'க்ருபாதா⁴ராத்³ரோணீ' ஶ்லோகத்தை ஊருக்கே கேட்கிற மாதிரி சத்தமாகப் பாடுவேன்.

அந்த இடத்தைப் படிக்கும் போதெல்லாம் என் அம்மாவின் நினைவு வரும். நான் குழந்தையாக இருந்தபோது, எனக்கு 'மாந்தம்' என்ற நோய் இருந்ததால் உடம்பு விறைத்துப் போய், அம்மாவிடம் பால் குடிக்கும்போது மார்பைக் கடித்து விடுவேனாம்; ரத்தம் கொட்டுமாம். அம்மாவின் வலியைக் குறைக்க என் சித்திப் பாட்டி என் தொடையைக் கிள்ளுவாளாம். அப்போது என் அம்மா, 'கிள்ளாதே, கிள்ளாதே பாட்டி... சிவந்து போகிறது, குழந்தை அழுகிறான்' என்று பதறுவாள். இந்த உலகத்திலேயே, நீ அழக் கூடாது என்று நினைத்த ஒரே ஜீவன் உன் அம்மா தான்டா!' என்று பிற்காலத்தில் என் சித்தி பாட்டி என்னிடம் சொல்லுவாள். இந்த ஸ்லோகத்தைச் சொல்லும் போதெல்லாம் ஸ்வாமிகள் தன் அம்மாவை நினைத்து அழுவார்.

ஒருமுறை ஸ்வாமிகள் எனக்கு மூக பஞ்சஶதீ படித்துக் கொண்டு இருந்தார். கடாக்ஷ ஶதகம் 51வது ஸ்லோகம், "காமாக்ஷி தாவக கடாக்ஷ யதீஶ்வரோஸௌ" என்ற வரியை வாசித்து முடித்தார். அதற்கு "காமாக்ஷியின் கடாக்ஷம் ஒரு யதீஶ்வரரைப் போல (துறவிகளின் வேந்தனைப் போல) மிளிர்கிறது" என்று பொருள்.

சரியாக அந்த சமயத்தில் ஶ்ரீ நாராயண ஐயர் உள்ளே வந்தார். அவர் ஸ்வாமிகளை நமஸ்கரித்து "நான் இப்போது தான் சிவன் சாரை தரிசித்து விட்டு வருகிறேன். சார், 'ஸ்வாமிகளை வெறும் ஸந்நியாஸி என்று சொல்லக் கூடாது; யதீந்திராள் என்று குறிப்பிட வேண்டும்' என்று சொன்னதைப் பகிர்ந்தார். ஸ்வாமிகள் வாசித்துக் கொண்டிருந்த ஸ்லோகத்தின் வரியும், நாராயண ஐயர் கூறிய வார்த்தைகளும் அத்தனை கச்சிதமாகப் பொருந்தியிருந்தன. இப்படி பல ஸ்லோகங்களுக்கும் ஸ்வாமிகள் வாழ்வுக்கும் ஒரு ஆத்மார்த்தமான தொடர்பு இருந்தது.

நாராயணீயத்தில் காளிய மர்தனம் கதையில், காளியனின் விஷக் காற்றினால் யமுனைக் கரையில் இருந்த மரங்களெல்லாம் பொசுங்கிப் போகின்றன. ஒரு முறை பசுக்களும் கோபாலச் சிறுவர்களும் அந்த விஷ ஜலத்தைக் குடித்ததால் மடிந்து விழுகிறார்கள். க்ருஷ்ணர் தன் கருணை பொழியும் கடாக்ஷத்தினால் ("ஶ்ரீகடாக்ஷைஹி" என்கிறார் பட்டத்ரி) அவர்களை மீண்டும் உயிர்ப்பிக்கிறார். பிறகு, கரையில் இருந்த ஒரு கடம்ப மரத்தின் மேலேறி அந்த மடுவுக்குள் குதிக்கிறார் என்று வரும்.

அங்கே ஒரு கேள்வி எழுகிறது: "எல்லா மரங்களும் விஷக் காற்றால் பொசுங்கிப் போயின என்றால், அந்த ஒரு மரம் மட்டும் எப்படிப் பொசுங்காமல் பச்சையாக இருந்தது?" இதற்குப் பெரியவர்கள் பல விதமாக வியாக்கியானம் சொல்லியிருக்கிறார்கள். "கருடன் அமிர்தத்தைக் கொண்டு போகும்போது, ஒரு சொட்டு அமிர்தம் அந்த மரத்தின் மேல் விழுந்தது, அதனால் அது பொசுங்கவில்லை" என்பது ஒரு விளக்கம். ஆனால் ஸ்ரீதர வியாக்கியானத்தில், "பகவானுடைய திருவடி அதன் மேல் பட வேண்டும் என்று விதி இருக்கும் போது, அந்த மரம் எப்படிப் பொசுங்கும்?" என்று எழுதப்பட்டு இருக்கிறது.

நம் ஸ்வாமிகள் சொல்லுவார்: "நான் ஆசார்யாளுக்குப் பாகவதம் சொல்ல வேண்டும் என்று பாக்கியம் இருந்ததால், என் வாழ்க்கையிலும் விஷக்காற்று போல எத்தனையோ கஷ்டங்கள் வந்தும், நான் இன்னும் உயிரோடு இருந்து கொண்டிருக்கிறேன். அதனால் எனக்கு இந்த ஸ்ரீதர வியாக்கியானம் தான் ரொம்பப் பிடிக்கும்" என்பார். இப்படி ராமாயணம், பாகவதம் என்று எதைப் படித்தாலும், அதைத் தன் வாழ்வோடு தொடர்பு படுத்திக் கொண்டு மகிழ்வார்.

இப்படி ஸ்தோத்திரங்கள் மூலமாகவே நாம் நம்முடைய பக்தியை வளர்த்துக் கொள்ளலாம்.

### கபடம் இல்லாமல் பக்தி பண்ண வேண்டும்

அடுத்தது 94வது தசகம் 9வது ஶ்லோகம்:

**यद्यल्लभ्येत तत्तत्तव समुपहृतं देव, दासोऽस्मि तेऽहं,**
**त्वद्गेहोन्मार्जनाद्यं भवतु मम मुहुः, कर्म निर्मायमेव ।**
**सूर्याग्निब्राह्मणात्मादिषु, लसितचतुर्बाहुमाराधये त्वां,**
**त्वत्प्रेमार्द्रत्वरूपो, मम सततमभिष्यन्दतां, भक्तियोगः ॥**

**யத்³யல்லப்⁴யேத தத்தத்தவ ஸமுபஹ்ருதம் தே³வ, தா³ஸோ(அ)ஸ்மி தே(அ)ஹம், த்வத்³கே³ஹோந்மார்ஜநாத்³யம் ப⁴வது மம முஹு:, கர்ம நிர்மாயமேவ** உயர்ந்த சாதுக்களின் குணங்களைக் க்ருஷ்ணர் உத்தவருக்குச் சொல்லிக் கொண்டு வருகிறார். "தனக்கு எது கிடைத்தாலும், அதை முதலில் பகவானுக்கு அர்ப்பணிப்பவனே சாது. க்ருஷ்ணா, நானும் உன்னுடைய அடிமை (தாஸன்). உன்னுடைய

ஆலயத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்தல் போன்ற எளிய கைங்கரியங்கள் எனக்கு வஞ்சனை இல்லாமல், எப்போதும் கிடைக்க அருள்செய்" என்று வேண்டுகிறார்.

நாமும் கபடம் இல்லாமல் பக்தி செய்ய வேண்டும். படம் (ஃபோட்டோ) எடுத்துக் கொண்டு, வாட்ஸ்அப்பில் ஷேர் செய்வதற்காகவோ மட்டும் பக்தி செய்யக் கூடாது. ஸ்வாமிகள் சொல்வார்: "பூஜை பண்ணுவது சுலபம்; நான் பூஜை பண்ணுகிறேன் என்று உலகத்துக்குத் தெரியப் படுத்துவது தான் கஷ்டம். பூஜையை மானசீகமாகக் கூடப் பண்ணலாம்" என்பார். மஹா பெரியவா அப்படித் தான் வாழ்ந்து காட்டினார். உலகமே அவரைக் கொண்டாடிய போது, அவர் மடத்தை விட்டுப் புறப்பட்டு விட்டார்; "என்னோடு இரண்டு பேர் மட்டும் தான் வர வேண்டும்" என்று சொல்லி விடுவார். காடுகளிலும் கிராமங்களிலும் தங்கினார். தினமும் சந்திரமௌலீஸ்வர பூஜையை மானசீகமாக செய்வார்.

உத்தம பக்தன் எப்படி இருப்பான் என்பதற்குப் பாகவதத்தில் ஒரு அழகான ஶ்லோகம் வருகிறது:

நிரபேக்ஷம் முநிம் ஶாந்தம் நிர்வைரம் ஸமத³ர்ஶநம் ।
அநுவ்ரஜாம்யஹம் நித்யம் பூயேயேத்யங்க்⁴ரிரேணுபி⁴: ॥
"எதையும் எதிர்பார்க்காமல் (நிரபேக்ஷம்), ஆசைகள் அற்று, மௌனமாக (முனிம்), சாந்தமாக, யாரிடமும் பகை இல்லாமல் (நிர்வைரம்), உலகத்தில் எல்லாவற்றிலும் பகவானையே பார்க்கும் சமநோக்கு உடைய (ஸமத³ர்ஶநம்) ஒரு பக்தனின் (அநுவ்ரஜாம்யஹம் நித்யம்) பின்னாடியே நான் ஓடுகிறேன். ஏன் தெரியுமா? அவனுடைய பாதத் தூளி (அங்க்ரிரேணு) என் தலையில் பட்டால், (பூயேயேத் இதி) எனக்குள் இருக்கும் எல்லா உலகங்களும் தூய்மை அடையும் என்பதற்காகத் தான்" என்று க்ருஷ்ண பரமாத்மாவே சொல்கிறார்.

அப்படிப்பட்ட உத்தம பக்தர், உண்மையான துறவி மஹா பெரியவா. அவர் பரிவ்ராஜக ஸந்நியாசியாக ஸஞ்சாரம் கொண்டே இருந்தார். அவர் மட்டுமல்ல, அவருடைய அணுக்கத் தொண்டர்களும் எதிலும் ஆசை இல்லாமல் இருந்தால் தான் அவரோடு போக முடியும். பெரியவா தினமும் கொஞ்சம் பொரி மட்டும் தான் சாப்பிடுவார். அவர் ஒரு கிராமத்திற்குச் சென்றால், எப்படியோ விஷயம் தெரிந்து கொண்டு நூற்றுக்கணக்கான பாக்கியசாலிகள் வந்து நமஸ்காரம் செய்வார்கள். அவர்கள் எவ்வளவு

ஏழைகளாக இருந்தாலும், பெரியவாளுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என்று தோன்றி, தங்கள் நிலத்தில் விளைந்த பழங்களையோ, தானியங்களையோ கொண்டு வந்து கொடுப்பார்கள்.

பெரியவா அதை அங்கேயே எல்லாருக்கும் விநியோகம் செய்துவிடுவார். அப்படி ஏதாவது மீதி இருந்தால் கூட, "அடுத்த ஊருக்குப் போனால் என்ன கிடைக்குமோ தெரியாது, இரண்டு பழங்களை எடுத்து வைத்துக் கொள்ளலாம்" என்று கூட இருப்பவர்கள் எடுத்து வைக்கக் கூடாது. அன்று என்ன கிடைக்கிறதோ அது தான் உணவு. அடுத்த நாள் அந்த ஊரில் ஒன்றும் கிடைக்காவிட்டால், பக்கத்தில் எங்காவது பிச்சை எடுத்துத் தான் சாப்பிட வேண்டும். இப்படிப்பட்ட கடுமையான நியமங்களோடு தான் ஸ்ரீகண்டன் மாமா, பாலு மாமா, வேதபுரி மாமா, சந்திரமௌலி மாமா போன்ற தொண்டர்கள் பெரியவாளைத் தொடர்ந்து சென்றார்கள்; அதனால் தான் பிற்காலத்தில் அவர்களில் பலரும் ஸந்நியாசிகளாக மாறினார்கள். பெரியவாளோடு இருக்கும் போது பசி, தாகம் கூட மறந்து போகும்படியும் பலருக்கு அனுக்ரஹம் செய்திருக்கிறார்.

அடுத்த வரி:
**ஸூர்யாக்³நிப்³ராஹ்மணாத்மாதி³ஷு, லஸிதசதுர்பா³ஹும் ஆராத⁴யே த்வாம், த்வத்ப்ரேமார்த்³ரத்வரூபோ, மம ஸததமபி⁴ஷ்யந்த³தாம், ப⁴க்தியோக³:**
சூரியன், அக்னி, ப்ராஹ்மணன் என (பகவான் பாகவதத்தில் குறிப்பிடும்) பல இடங்களில் உன்னுடைய நான்கு கரங்கள் கொண்ட திவ்ய ரூபத்தை நான் ஆராதனை செய்கிறேன். உன்னிடத்தில் வைக்கும் பிரேம பக்தியினால் என் உள்ளம் கசிந்து உருகும் பக்தி யோகம் எனக்குள் எப்போதும் பெருகி வளர வேண்டும் என்று வேண்டுகிறார்.

இதையேதான் 'கந்தர் அனுபூதி'யில் அருணகிரிநாதரும் அடிக்கடி வேண்டுகிறார்:
"குமரன் முருகன் குகனென்று மொழிந்து
உருகும் செயல்தந்து உணர்வென்றருள்வாய்
பொருபுங்கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே"
என்று, உன் நாமங்களைச் சொல்லி என் மனது உருகும் செயலை எனக்குத் தா என்று கேட்கிறார்.

"ஆடும்பரி வேலணி சேவலெனப்
பாடும்பணியே பணியாயருள்வாய்
தேடுங்கயமா முகனைச்செருவில்
சாடுந்தனியானை சகோதரனே"
என்று, உன்னை எப்போதும் பாடிக் கொண்டே இருக்கிற பணியை எனக்குக் கொடு, பக்தி வளர வேண்டும் என்று பாடுகிறார்.

"மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறும் மொழிந்து மொழிந்திலனே
அகம் மாடை மடந்தையரென்றயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே" என்று ஏங்குகிறார்.

**கோபிகைகளின் உத்தமோத்தம பக்தி**

அடுத்த ஶ்லோகம்: 94வது தசகம் 10வது ஶ்லோகம்

**ऐक्यं ते, दानहोमव्रतनियम तपस्सांख्ययोगैर्दुरापं,**
**त्वत्सङ्गेनैव गोप्यः किल, सुकृतितमा प्रापुः, आनन्दसान्द्रम् ।**
**भक्तेषु अन्येषु भूयस्स्वपि, बहुमनुषे, भक्तिमेव त्वमासां**
**तन्मे त्वद्भक्तिमेव द्रढय, हर गदान्, कृष्ण वातालयेश ॥**

**ஐக்யம்’ தே, தா³நஹோமவ்ரதநியம தபஸ்ஸாங்க்²யயோகை³: து³ராபம்’, த்வத்ஸங்கே³நைவ கோ³ப்ய: கில, ஸுக்ரு’திதமா ப்ராபு:, ஆநந்த³ஸாந்த்³ரம்** பேரானந்த வடிவமான உன்னோடு ஐக்கியம் (ஒன்றிக் கலப்பது) என்பது தானம், ஹோமம், விரதம், நியமம், தவம், சாங்கியம், யோகம் போன்றவற்றால் அடைவதற்குக் மிகக் கடினமானது. ஆனால், கோபிகைகளோ உன்னோடு பழகிய அந்த நெருக்கத்தினாலேயே அந்த உன்னதமான ஐக்கிய நிலையை மிக எளிதாக அடைந்து விட்டார்கள் அல்லவா?

க்ருஷ்ணனே சொல்கிறான்: "அவர்கள் என்னையே நினைத்து, என்னோடே கலந்து விட்டார்கள்" என்று. நாராயணீயத்தில் பட்டத்ரி கோபிகைகளின் அறிமுகத்தில் தொடங்கி, குழந்தையாகக் க்ருஷ்ணரை கொஞ்சுவது, காத்யாயினி பூஜை, ராஸக்ரீடை என்று ஒவ்வொரு படியாக அழகாக விவரிப்பார். உத்தவர் பிருந்தாவனத்திற்குச் சென்று கோபிகைகளின் பக்தியைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போகிறார்;

அவர்களுக்குச் சமாதானம் சொல்கிறார். "பிரிவில் கூட உங்களுக்குக் க்ருஷ்ணனின் ஞாபகமே இருப்பதால் அதுவும் ஒரு லாபம் தான், சீக்கிரமே க்ருஷ்ணனைப் பார்க்கலாம்" என்று தேற்றுகிறார்.

பிறகு 84வது தசகத்தில் குருக்ஷேத்திரத்தில் கோபிகைகள் க்ருஷ்ணரைச் சந்தித்த போது, "நான் சச்சிதானந்த பரம்பொருள் என்ற ஞானம் உங்கள் மனதில் உதிக்கட்டும்" என்று க்ருஷ்ணர் உபதேசம் செய்த உடன், அவர்கள் ஞானம் அடைந்து விடுகிறார்கள். அதன் பிறகு அவர்களுக்குப் அவனுடைய பிரிவோ, சேர்க்கையோ எல்லாம் ஒன்றாகவே ஆகிவிடுகிறது; அவர்கள் பகவானோடு ஒன்றாகக் கலந்து விடுகிறார்கள்.

**ப⁴க்தேஷு அந்யேஷு பூ⁴யஸ்ஸ்வபி, ப³ஹுமநுஷே, ப⁴க்திமேவ த்வமாஸாம்** உனக்கு எவ்வளவோ பக்தர்கள் இருந்தாலும், ஹே க்ருஷ்ணா, இந்த கோபிகைகளின் பக்தியைத் தான் பெரிதாகக் கொண்டாடுகிறாய். எனவே, எனக்கும் அந்த கோபிகைகளைப் போன்ற அசைக்க முடியாத பக்தியைக் கொடு " என்று உத்தவர் வேண்டுகிறார்.

பாகவதத்தில் கோபிகைகளைப் பற்றிச் சொல்லும்போது, "கோ³பீநாம் ஸ கு³ருர்-கதி:" என்று வரும். அதை வைத்துக் கொண்டு ஸ்வாமிகள் அழகாகச் சொல்வார்: "கோபிகைகளுக்குப் பகவானே தான் குருவாகவும் இருந்தார்; பகவானையே தான் அவர்கள் அடைந்தார்கள். அதனால் சில பேருக்குப் பகவானே நேரிடையாகக் குருவாக வருவார். 'குரு இல்லாமல் பகவானை அடைய முடியாது' என்று சிலர் சொல்வார்கள்; ஆனால் சில மஹாத்மாக்களுக்குப் பகவானே குருவாக அமைகிறார். அருணகிரிநாதருக்குப் முருக பகவானே நேரில் வந்து 'சும்மா இரு, சொல் அற' என்று உபதேசம் செய்து அனுபூதி அருளினார் அல்லவா?

கோபிகைகளின் பக்தியின் விசேஷம் என்னவென்றால், நாமெல்லாம் சாப்பாடு, பத்னி, புத்திரர்கள் என்று எல்லா கவலைகளையும் பட்டுக் கொண்டு, கூடவே பகவானையும் தியானம் பண்ணுகிறோம். ஆனால் அவர்களோ, "க்ருஷ்ணனை மறக்க முடியவில்லையே!" என்று ஒரு க்ஷணம் கூட விடாமல் பகவானையே தியானம் செய்து கொண்டே இருந்தார்கள். அதனால் அவர்கள் எளிதாக பகவானோடு கலந்து விட்டார்கள். நதிகள் ஓடிச் சென்று கடலில் கலப்பதைப் போலத் தான் இதுவும். முதலில் க்ருஷ்ணா, கோதாவரி, காவேரி என்று வெவ்வேறாகப் பெயர்கள் இருக்கும்; அவற்றிற்குத் தனித்தனி ரூபமும், ருசியும் இருக்கும்.

ஆனால், வங்காள விரிகுடாவில் போய்க் கலந்து விட்ட பிறகு எல்லாமே உப்பு ஜலம் தான்; எல்லாம் கடல் ஜலமாக மாறி விடுகிறது. அதுபோலத் தான் கோபிகைகளும் பகவானோடு ஒன்றாகி விட்டார்கள். அதனால்தான் நாரத முனிவர் கூடத் தன் 'நாரத பக்தி சூத்ரத்தில்', பக்தியின் உச்சநிலைக்கு உவமையாக "யதா வ்ரஜகோபிகானாம்" (பிருந்தாவனக் கோபிகைகளைப் போல) என்று குறிப்பிடுகிறார். "அத்தகைய உன்னத பக்தி நமக்கும் வர வேண்டும் என்று நாம் வேண்டிக் கொள்வோம்" என்று ஸ்வாமிகள் அடிக்கடி கூறுவார்.

கோபிகைகள் என்ன தான, ஹோம, வ்ரத நியமங்களை பண்ணினார்களா? தபஸ் பண்ணினார்களா? இல்லை யோகம் தான் பழகினார்களா? எதுவுமே இல்லை! ஆனா, அக்ரூரர் வந்து மதுரைக்கு க்ருஷ்ணனை அழைத்துக் கொண்டு போன பின், அவர்கள் ஒரு க்ஷணம் கூட அவனை மறக்காமல், எப்போதும் க்ருஷ்ண த்யானமாவே இருந்து, அவனோடு தன்மயமாகி விட்டர்கள். அதற்குத் தான் 'பராபக்தி' என்று பெயர். நம்ம ஸ்வாமிகள் அந்த மாதிரி நிலையில் தான் இருந்தார்.

**தந்மே த்வத்³ப⁴க்திமேவ த்³ரட⁴ய, ஹர க³தா³ன், க்ரு'ஷ்ண வாதாலயேஶ** "ஹே க்ருஷ்ணா! வாதாலயேசா! குருவாயூரப்பா! என்னுடைய பக்தியைத் திடப்படுத்து; என் வியாதிகளையெல்லாம் போக்கி அருள்செய்!" என்று பிரார்த்தித்துப் பட்டத்ரி இந்தத் தசகத்தை நிறைவு செய்கிறார்.

**ॐ तत्सदिति श्रीमन्नारायणीये चतुर्नवतितमं दशकं समाप्तम् |**
**श्री हरये नमः | रमा रमण गोविन्द गोविन्द | श्रीकृष्णार्पणमस्तु |**
**ஓம் தத்ஸதி³தி ஶ்ரீமந்நாராயணீயே சதுர்நவதிதமம் த³ஶகம் ஸமாப்தம் | ஶ்ரீ ஹரயே நம: | ரமா ரமண கோ³விந்த³, கோ³விந்த³ | ஶ்ரீக்ரு'ஷ்ணார்பணமஸ்து |**

**95வது தசகம்: சித்த ஶுத்தியும் ஈஶ்வர ஸ்வரூப த்யானமும்**

அடுத்தது 95வது தசகம், முதல் ஶ்லோகம்:

**आदौ हैरण्यगर्भीं तनुं, अविकलजीवात्मिकामास्थितस्त्वं,**
**जीवत्वं प्राप्य, मायागुणगणखचितो, वर्तसे विश्वयोने ।**
**तत्रोद्वृद्धेन सत्वेन तु गुणयुगलं, भक्तिभावं गतेन**
**छित्वा, सत्वं च हित्वा पुनः, अनुपहितो वर्तिताहे, त्वमेव ॥**

**ஆதௌ³ ஹைரண்யக³ர்பீ⁴ம் தநும், அவிகலஜீவாத்மிகாம் ஆஸ்தி²தஸ்த்வம், ஜீவத்வம் ப்ராப்ய, மாயாகு³ணக³ணக²சிதோ, வர்தஸே விஶ்வயோநே**

பகவானை இங்கே 'விச்வயோனி' என்கிறார். விச்வத்திற்கே அம்மா, ஜகதம்பா, விஷ்ணு பகவான் தான். சக்தி / சிவம், புருஷன் / ப்ரக்ருதி அந்த மாதிரி பகவான் தான் இதுக்கெல்லாம் வெளியில பரப்ரம்மமாக இருக்கார். ஆனால் அவரே தன் மாயையினால் இத்தனையாகவும் காட்சி அளிக்கிறார். "நீங்க ஹிரண்ய கர்ப்பம் ரூபமான உடம்பை ஏற்றுக் கொண்டு ஸமஷ்டி ஜீவாத்மகமாகவும், பிறகு வ்யஷ்டி ஜீவாத்மக தன்மையை அடைந்து மாயா குண கணங்களுடன் கூடி விளங்குகின்றீர்" என்று சொல்கிறார்.

இது புரிந்து கொள்ள கொஞ்சம் கடினமாக இருக்கிறது அல்லவா? நாராயணீயத்துல 5, 6, 7வது தசகங்கள்ல இதை ரொம்ப விவரமாகச் சொல்லி இருக்கிறார். நம்முடைய புராணங்களில் இந்த உலகத்தோட ஸ்ருஷ்டியைப் பற்றிச் சொல்லியிருப்பது அவ்வளவு அறிவு பூர்வமாக, ஆச்சர்யமாக இருக்கும். மற்ற மதங்களில் சொல்லப்பட்டிருக்கிற ஜெனிசிஸ் (Genesis) கதைகளை எல்லாம் இதோடு ஒப்பிட்டுப் பார்த்தால், ரொம்பக் குழந்தைத்தனமாக இருக்கும். நம் ரிஷிகள் யோகத்தினால் இதையெல்லாம் தெரிந்து கொண்டு சொல்லி இருக்கிறார்கள்.

இந்த ஶ்லோகத்தை சுலபமா புரிந்து கொள்வதானால், “பகவானே! நீங்கள் தான் பிரம்மாவாக ஆவிர்பவித்து, அவர் மூலமாக மாயையினால் ஸத்வம், ரஜஸ், தமஸ் அதெல்லாம் கூடின உலகங்களை ஸ்ருஷ்டி செய்தீர்கள். நானும் அதில் ஒரு ஜீவன் தான், அதனால் என்னிடமும் அந்த ஸத்வம், ரஜஸ், தமஸ் எல்லாம் இருக்கு.

**தத்ரோத்3வ்ரு’த்3தே4ந ஸத்வேந து, கு3ணயுக3ளம் ப4க்திபா4வம் க3தேந, சி2த்வா** பகவானிடத்தில் பக்தி பண்ணி நாம் ஸத்வ குணத்தை வளர்த்துக் கொண்டே வந்தால், அதுவே மற்ற இரண்டு குணங்களையும் வெட்டி வீழ்த்தி விடும். **ஸத்வம் ச ஹித்வா புந:** அதற்குப்பின் அந்த ஸத்வ குணத்தையும் கூட விட்டுவிட்டு, **அநுபஹிதோ வர்திதாஹே, த்வமேவ** குணங்களால் மறைக்கப் படாத உன்னுடைய வடிவமாகவே நான் ஆகப் போகிறேன் என்கிறார்.

இதெல்லாம் உத்தவருக்கு க்ருஷ்ணர் சொன்ன உபதேசம். "பக்தியினால் முதலில் ஸத்வ குணத்தை வளர்த்துக் கொள். அதன் மூலமாகவே ரஜஸ், தமஸ் குணங்களைப் போக்கிக் கொள்ளலாம். அதற்குப் பிறகு அந்த ஸத்வத்தையும் கைவிட்டு, என்னுடைய ரூபத்தோடு கலந்துவிடுவாய்” என்று பகவான் சொல்கிறார். அதைத்தான் பட்டத்ரி இங்கே அழகாக ஒரு பிரார்த்தனையாகச் வைக்கிறார்.

இதை புரிந்து கொள்ள ஶ்ரீ ரமண பகவான் ஒரு உதாரணம் சொல்லி இருக்கிறார். பிணத்தை எரிப்பவர் ஒரு மரக்கோலால் அதை கிளறி விட்டுக் கொண்டே இருப்பார். அந்தக் கோலும் கொஞ்சம் கொஞ்சமாக எரிந்து சின்னாதாகிக் கொண்டே வரும். பிணம் எரிந்து முடியும் போது அந்த கோலையும் அவர் அதில் போட்டு விடுவார். அது போல முடிவில் மஹான்கள் ஸத்வ குணமும் மறைந்து பகவானுடன் கலப்பார்கள்.

### ஹம்ஸோபாக்யானம்: குணங்களின் பிடியிலிருந்து விடுதலை

அடுத்த ஶ்லோகம் 'ஹம்ஸோபாக்யானம்' என்ற பகுதியைச் சொல்கிறது. அதாவது பகவான் ஹம்ஸரூபியாக (அன்னப் பறவை) வந்து, பிரம்மாவுக்கும் அவருடைய மானஸ புத்திரர்களான ஸனகாதிகளுக்கும் உபதேசம் பண்ணின கதை.

ஸனகாதியர்கள் தன்னுடைய அப்பாவான பிரம்மாவிடம் ஒரு கேள்வி கேட்கிறார்கள் "இந்த மனது புலன்களை உலக விஷயங்கள்ல ஏவுகிறது; விஷயங்களில் ஈடுபட்ட புலன்கள் அதை திரும்பவும் மனது கிட்ட கொண்டு வந்து வாசனையாக ஏற்றுகிறது – இப்படி இது இரண்டுமே ஒன்றுக்கு ஒன்று மாற்றி மாற்றி தீனி போட்டுக் கொண்டே இருக்கிறதே! மோக்ஷத்தை அடைய விரும்புபவன் (முமுக்ஷு) இதிலிருந்து எப்படி வெளியில் வருவது?" என்று கேட்கிறார்கள்.

அப்போது பிரம்மாவுக்கே இதுக்கு உடனே பதில் தெரியவில்லை. ஏனென்றால், அவரே ஸ்ருஷ்டி கர்த்தாவாக, காரிய உலகத்தில் இருக்கார். அதனால அவர் பகவானை த்யானம் பண்றார். க்ருஷ்ணர் சொல்கிறார், "அப்போது அவர் என்னை த்யானம் செய்தார். உடனே, நான் ஹம்ஸரூபியாக அங்கே தோன்றினேன்." இந்த ஹம்ஸ பக்ஷிக்கு ஒரு குணம் உண்டு, அது நீரையும் பாலையும் பிரித்து பாலை மட்டும் குடிக்கக் கூடிய சக்தி வாய்ந்தது. அது போல எது ஸத் (உண்மை), எது அஸத் (பொய்) என்று பிரிக்கத் தெரிஞ்ச ஞானிகளை 'பரமஹம்ஸர்கள்' என்று சொல்லுவா. அந்த மாதிரி ஹம்ஸ ரூபியாக பகவான் காட்சி கொடுத்தார். அப்போது பகவானை நமஸ்காரம் பண்ணி அவர்கள் இந்த கேள்வியைக் கேட்டார்கள். 95வது தசகம் இரண்டாவது ம்லோகத்துல அந்த கேள்வியையும் பதிலையும் தான் விளக்கி இருக்கிறார்.

**सत्वोन्मेषात् कदाचित् खलु विषयरसे, दोषबोधेऽपि भूमन्,**
**भूयोऽप्येषु प्रवृत्तिः, सतमसि रजसि प्रोद्धते. दुर्निवारा ।**
**चित्तं तावद्गुणाश्च ग्रथितं, इह मिथः, तानि सर्वाणि रोद्धुं,**
**तुर्ये त्वय्येकभक्तिश्शरणमिति भवान्, हंसरूपी न्यगादीत् ॥**

**ஸத்வோந்மேஷாத் கதா³சித் க²லு விஷயரஸே, தோ³ஷபோ³தே⁴(அ)பி பூ⁴மன், பூ⁴யோ(அ)ப்யேஷு ப்ரவ்ரு'த்தி:, ஸதமஸி ரஜஸி ப்ரோத்³த⁴தே, து³ர்நிவாரா**

நமக்கு ஸத்வ குணம் ஜாஸ்தியாகும் போது, சில சமயம் இந்த உலக விஷயங்கள்ல இருக்குற தோஷம் (குறை) நமக்குத் தெரியறது. ஆனா அது வெறும் அறிவு பூர்வமாகத் தான் தெரிகிறது. இந்த ரஜஸும் தமஸும் மனதோடயே, அந்த சித்தத்தோடயே கலந்து இருக்கறதுனால, அவை நம்மை இழுக்கும் போது திரும்பவும் விழுந்து விடுகிறோம். ஏனென்றால் பூர்வ ஜன்ம பாப புண்ணியங்களால், அந்த வாசனைகள் எல்லாம் மனதிற்குள் ஏறி இருக்கிறது, அது நம்மை திரும்பவும் உலக காரியங்களில் இழுத்து விட்டுவிடுகிறது. அது 'துர்நிவாரா'– அதைத் தடுக்க முடியாம, மீள முடியாததாக இருக்கிறதே, இது தான் அந்த ஸனகாதிகர்கள் கேட்ட கேள்வி.

நம்முடைய ஸ்வாமிகள் இதுக்கு ஒரு உதாரணம் சொல்லுவார்: ஒருத்தன் 40 வயது வரைக்கும் ரொம்ப ஸாத்விகமா இருப்பான், நல்லவனா இருப்பான், ஆஸ்திகனா இருப்பான். அப்புறம் திடீர்னு நாஸ்திகனா போயிடுவான். அதே மாதிரி ஒருத்தர் ரொம்ப நாளா வ்ராத்தியனா

இருந்தா கூட, அப்புறம் திடீர்னு பக்தி வந்து, எல்லாம் தெரிஞ்சுண்டு பகவான் கிட்ட ரொம்ப ஈடுபடுவார். இதெல்லாம் எங்கேயிருந்து வருகிறது? உள்ளுக்குள்ள இருக்கும் அந்த பூர்வ ஸம்ஸ்காரங்களால் தான்.

எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், 30 வருஷம், 40 வருஷம் எல்லாம் போக வேண்டாம்; நமக்கு கார்த்தால்ல சில நாள் ஏதோ கொஞ்சம் பாராயணம் பண்ணிணா ஒரு 'ஸத்வோன்மேஷம்' (ஸத்வ குண எழுச்சி) ஏற்படறது, ஆனா சாயங்காலத்துக்குள்ள அதெல்லாம் மாறி போயிடுறது! சாயங்காலம் ஏதாவது நல்ல விஷயங்கள், ஸ்வாமிகளோட பாகவத உபன்யாசம் கேட்டா எல்லாம் புரிஞ்ச மாதிரி இருக்கு. அடுத்த நாள் காத்தால்ல விடிஞ்சா வேற ஏதோ உலக காரியத்துக்கு ஓடிண்டு இருப்போம். இப்படி பகல்ல ஒரு மாதிரி, ராத்திரி ஒரு மாதிரி, ஆஸ்திகமும் நாஸ்திகமும் மாறி மாறி வந்துண்டு இருக்கு, அதுக்கெல்லாம் இந்த உள்ளுக்குள்ள இருக்குற வாசனைகள் தான் காரணம். அதிலிருந்து எப்படி மீள்வது என்று கேட்ட போது பகவான் சொன்னார்:

**சித்தம்’ தாவத்³கு³ணாஶ்ச க்³ரதி²தம்’, இஹ மித²:, தாநி ஸர்வாணி ரோத்³து⁴ம்’, துர்யே த்வய்யேகப⁴க்திஶ்ஶரணமிதி ப⁴வான், ஹம்’ஸரூபீ ந்யகா³தீ³த்**

அந்த சித்தமும், குணங்களும், அதனால புலன்களும் ஒன்றோடு ஒன்று அப்படி பிணைஞ்சிருக்கு. ஒண்ணுக்கு ஒண்ணு எஸ்கேப் ஆக முடியாத மாதிரி லாக் ஆகியிருக்கு. அதையெல்லாம் தடுத்து நிறுத்தணும்னா, இந்த மூணு குணங்களுக்கும் (ஸத்வம், ரஜஸ், தமஸ்) வேறான, நாலாவதான 'துரிய' நிலையில் இருக்கிற பகவான்– அதாவது பகவான் குணாதீதன் அப்படிங்குறதை புரிஞ்சுண்டு, அவன்கிட்ட பக்தி பண்ணினால் மட்டும் தான் நாம் இதிலிருந்து மீளலாம் என்று ஹம்ஸ ரூபியான நீங்கள் சொல்லிக் கொடுத்தீர்கள்னு பட்டத்ரி சொல்கிறார்.

இதை படிக்கும் போது எனக்கு ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது. ராமக்ருஷ்ண பரமஹம்ஸரோட சிஷ்யர் துரியானந்தர் எழுதின கடிதங்கள் என்ற ஒரு புத்தகம் படிச்சேன். அதில் ஒரு பக்தன் ஸ்வாமிஜிக்கு ஒரு கடிதம் எழுதி கேட்கிறான்: "நீங்கள் சொன்ன மந்த்ரங்களை நான் தினமும் சொல்லிக் கொண்டு இருக்கேன். ஆனாலும் என் மனது ரொம்ப அலை பாய்ந்து கொண்டே இருக்கிறது, என்ன

செய்வது?" என்று கேட்டதுக்கு, அந்த ஸ்வாமிஜி பதில் எழுதியிருக்கார்: "உன்னோட மனது ஸத்வம், ரஜஸ், தமஸ் அப்படிங்கற குணங்களால் ஆனது. ஆனா நான் உனக்குச் சொன்ன அந்த மந்த்ரம் இருக்கே, அது பகவானின் வடிவம். அவர் இந்த மூணு குணங்களுக்கும் அப்பாற்பட்டவர். அதனால நீ அந்த மந்த்ரத்தை சொல்லும் போது, நீ நேரடியாக பகவானோடே இருக்கிறாய். அதனால மனது அலையறதைப் பற்றி கவலைப் படாம அதை ஜபம் பண்ணிண்டே இரு, நீ கண்டிப்பா இதிலிருந்து மீண்டு விடுவாய்" என்று எழுதியிருந்தார்.

எனக்கு அதை படித்த போது 'ஆஹா! நாம் வழிபடும் அந்த பகவான், இந்த மூணு குணங்களுக்கும் அப்பாற்பட்டவர், மேலானவர். ஸ்வாமிகள் சொன்ன பாராயணத்தின் மூலம் செய்யும் பகவத் த்யானம் தான் நம்மை இந்த மனதோட பிடியில இருந்து மீட்கும்' என்று நன்றாக புரிந்தது. தண்ணீருக்குள் மூழ்குபவன், தண்ணீருக்கு வெளியே இருக்கும் ஒரு பொருளை பிடித்துக் கொண்டு தானே தப்பிக்க முடியும்?

### ஸ்வாமிகளின் வழிகாட்டுதலும் பஜனத்தின் உயர்வும்

அடுத்த ஶ்லோகத்துக்குப் போவதற்கு முன்னாடி ஸ்வாமிகளைப் பற்றி ஒரு விஷயம் சொல்லணும். ஸ்வாமிகள் கிட்ட பழகும்போது, ரொம்ப நாள் பழகி, "இவன் நம்மையே நம்பி இருக்கிறான்" என்று அவருக்கு ஒரு சின்சியாரிட்டி தெரிஞ்ச பின்னால் தான் யாருக்கும் ஏதாவது தனிப்பட்ட கைடன்ஸ் (வழிகாட்டுதல்) கொடுப்பார். அப்படி கொடுக்கும் போது, அவரிடம் போய் "இதை பண்ணலாமா?" என்று கேட்டா, அது சாஸ்த்ர சம்மதமா இருந்தா "பண்ணுங்கோ"ன்னு சொல்லுவார். அப்படி இல்லாம சாஸ்த்ர விரோதமாக தாமஸத்தை வளர்ப்பதாக இருந்தா "அது வேண்டாம்"னு சொல்லி விடுவார். மத்த ராஜஸமான காரியங்களாக இருந்தா, "அவா அவா உலகத்துல ஏதோ பண்ணிண்டு இருக்கா" என்று விட்டுவிடுவார். ஆனா அவர் மனசார "ஆஹா! ரொம்ப நல்ல காரியம், அவசியம் பண்ணு!" என்று கொண்டாடுறது எதை என்றால், ஸத்வ குணத்தை வளர்க்கக் கூடிய, ஆடம்பரம் இல்லாத நல்ல காரியங்களைத் தான். அதுவும் முக்கியமாக பகவத் பஜனத்தைத் தான்! ஏனென்றால் அது தான் பக்தி வளர்வதற்கு உண்மையான ஸஹாயமா இருக்கும்.

ஸத்வமான விஷயங்கள், பகவானோட நேரடியாக சம்பந்தப்பட்டது – உதாரணத்துக்கு "நான் ராமாயணம் படிக்கிறேன்" என்று யாராவது சொன்னா, ரொம்ப கொண்டாடி "ஆஹா பண்ணு!" என்று ரொம்ப

ஊக்குவிப்பார். அப்படி பஜனத்தைத் தான் அவர் ரொம்ப கொண்டாடுவதை நான் பார்த்து இருக்கிறேன். மத்தபடி யாராவது லௌகீக கஷ்டத்துக்காக சாஸ்த்ர சம்பந்தமான காரியம், "ஒரு சாந்தி ஹோமம் பண்றேன்" அப்படின்னா, "சரி, அந்த வைதீகாளுக்குப் போற தக்ஷிணையை நாம் தடுப்பானேன்" என்று சொல்லி விட்டு விடுவார். ஆனால் அதே சமயம், "இந்த தோஷ நிவர்த்திக்கு என்ன பண்ணனும்?" என்று கேட்டால், அவர் "துர்கா சந்திரகலா ஸ்துதி தினமும் 21 தடவை 48 நாட்களுக்கு படி" என்பது போன்ற, பஜன மார்கத்தில் சுலபமாக ஒரு வழியைக் சொல்லிக் கொடுப்பார். அது கைமேல் பலன் தரும்.

### பக்தியின் நிகரற்ற ஆனந்தம்

அடுத்தது 95வது தசகம் மூணாவது ஶ்லோகம்:

**सन्ति श्रेयांसि भूयांसि, अपि रुचिभिदया, कर्मिणां निर्मितानि,**
**क्षुद्रानन्दाश्च सान्ताः, बहुविधगतयः कृष्ण, तेभ्यो भवेयुः ।**
**त्वं चाचख्याथ सख्ये, ननु महिततमां श्रेयसां, भक्तिमेकां,**
**त्वद्भक्त्यानन्दतुल्यः खलु विषयजुषां, सम्मदः केन वा स्यात् ॥**

**ஸந்தி ஶ்ரேயாம்ஸி பூ$^{4}$யாம்ஸி, அபி ருசிபி$^{4}$த$^{3}$யா, கர்மிணாம் நிர்மிதாநி** கர்மா பண்றவா "இது நல்ல காரியம், அது நல்ல காரியம்" என்று மனுஷாளோட ருசி பேதத்திற்கு ஏத்த மாதிரி பல கார்யங்களை சொல்லித் தரா. அதோட பலன் எப்படி இருக்கும்னா **க்ஷுத்$^{3}$ராநந்தா$^{3}$ஶ்ச** அதாவது ரொம்ப அல்பமான ஆனந்தம் தான் அதிலிருந்து கிடைக்கும். **ஸாந்தா:** அதுவும் சீக்கிரமே முடிவுக்கு வந்துடும்.
**ப$^{3}$ஹுவித$^{4}$க$^{3}$தய: க்ரு'ஷ்ண, தேப்$^{4}$யோ ப$^{4}$வேயு:, த்வம்' சாசக்$^{2}$யாத$^{2}$ ஸக்$^{2}$யே, நநு மஹிததமாம்' ஶ்ரேயஸாம்', ப$^{4}$க்திமேகாம்** "க்ருஷ்ணா! அதெல்லாம் பல விதமா இருக்கட்டும், ஆனா நீ உன்னுடைய ஸகாவான உத்தவருக்குச் சொல்லிக் கொடுத்தது என்ன?" பக்தி தான் "மஹிததமாம்" எல்லாவற்றுக்கும் மேலானது, உசத்தியானது என்று சொல்லிக் கொடுத்து இருக்கிறாய். அதனால எனக்கு அந்த பக்தி தான் வேண்டும். **த்வத்$^{3}$ப$^{4}$க்த்யாநந்த$^{3}$துல்ய: க$^{2}$லு விஷயஜுஷாம்', ஸம்மத$^{3}$: கேந வா ஸ்யாத்** உன்னுடைய பக்தியிலிருந்து கிடைக்கிற ஆனந்தம், உலக விஷயங்களில் இருந்து கிடைக்கிற ஆனந்தத்துக்கு எங்கேயாவது சமமாக முடியுமா? முடியாது! அப்படி பஜனத்துலேயே ஒரு தனி ஆனந்தம் இருக்கு. அது ரொம்ப நாள் பழகி வர்ற ஒரு 'டெவலப்டு டேஸ்ட்' (developed

taste) மாதிரி. அது பழகிடுத்துனா, ஒரு நாள் பஜனம் பண்ணவில்லை என்றால் கூட ஏதோ பெரிய குறையாகத் தெரியும். அப்போது தான் நமக்கு கொஞ்சம் பக்தி வந்திருக்கிறது என்று அர்த்தம்.

இங்க டி.கே. சுந்தரேச ஐயர் என்பவருடைய கதை ஞாபகம் வருது. அவர் சின்ன வயசுல "ஸ்கந்தாஶ்ரமத்துல ஒரு மகான் இருக்கார்" என்று கேள்விப்பட்ட உடனே, போய் ரமண மகரிஷியைப் பார்க்கிறார், நமஸ்காரம் பண்ணிணார். அங்க எல்லாரும் உட்கார்ந்து தேவாரம் படிச்சுண்டு இருக்கா. ரமணர் இவரைப் பார்த்து "உனக்கு ஏதாவது தேவாரம் தெரியுமா?" என்று கேட்ட போது, அவர் "மற்றுப் பற்றின்றி நின் திருப்பாதமே… நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே" என்ற சுந்தரர் தேவாரத்தைப் பாடினார். இதைச் சொன்ன உடனே ரமணர், "போதுமே! இது ஒண்ணு போதுமே!" என்று சொல்லி இருக்கிறார். அதாவது, நாக்கு பகவானோட நாமத்தை சொல்லிக் கொண்டு இருந்தால் அதுவே ஒரு தவம் தான் என்று உணர்த்தினார்.

அவருக்கு அந்த மகானை தரிசனம் பண்ணது ரொம்ப சந்தோஷமா இருந்தது. தினமும் மலை ஏறி போய் ரமணரை தரிசனம் பண்ணிண்டு இருந்தார். ஆனா கொஞ்ச நாள் போனதும் அவருக்கு, "என்னடா இது, தினமும் போறோம், நமக்கு இதனால ஒண்ணும் லாபம் இருக்கற மாதிரி தெரியலையே" என்று தோன்றி, போவதை நிறுத்தி விடுகிறார். ஆனால் அவர் ரமணரின் பிரிவைத் தாங்க முடியாமல் தவிக்கிறார். தலகாணி எல்லாம் நனைகிற மாதிரி ஒரு நாளைக்கு ராத்திரி அவருக்கு அழுகை வருகிறது. உடனே விடிஞ்சதும் மலைக்கு ஓடிப் போகிறார்.

அப்போது "என்ன ஆச்சு? ஏன் இத்தனை நாளாக வரவில்லை?" என்று ரமணர் கேட்டவுடன், இவர் "இதனால எனக்கு லாபம் ஒண்ணும் இல்லையேன்னு நினைச்சு நின்னுட்டேன்" என்கிறார். அதுக்கு ரமணர், "லாபம் இருந்தா என்ன, இல்லைன்னா என்ன? பார்க்கவில்லை என்றால் ஒரு குறையாக இருந்ததல்லவா? அதனால வந்துண்டு இரு" அப்படிங்கறார். "நீ வராம இருந்து 100 நாள் ஆச்சு" என்று ரமணர் கணக்கு வெச்சுண்டு சொல்லி இருக்கார்! அதுக்கப்புறம் சுந்தரேச ஐயர் நிறைய ராமாயணம், பாகவதம் எல்லாம் பாராயணம் செய்கிறார். ரமணரிடத்திலேயே ராமரையும், க்ருஷ்ணரையும் தரிசனம் பண்ணுகிறார். முடிவில் பெரிய ஞானியா ஆகி விடுகிறார். அது போல

பக்தியிலேயே ஒரு ஆனந்தம் இருக்கு, ஸத்ஸங்கத்திலேயே ஒரு ஆனந்தம் இருக்கு. அதை நம் மனது பழகிக்கணும்.

**பக்தனின் நிறைவான நிலை**

அடுத்த 95வது தசகம் 4வது ப்லோகம்:

**त्वत्भक्त्या तुष्टबुद्धेः, सुखमिह चरतो विच्युताशस्य च, आशाः,**
**सर्वाः स्युः सौख्यमय्यः, सलिलकुहरगस्येव तोयैकमय्यः ।**
**सोऽयं खलु, इन्द्रलोकं, कमलजभवनं, योगसिद्धीश्च हृद्याः,**
**नाकाङ्क्षत्येतदास्तां, स्वयमनुपतिते मोक्षसौख्येपि अनीहः ॥**

**த்வத்ப⁴க்த்யா துஷ்டபு³த்³தே⁴:, ஸுக²மிஹ சரதோ விச்யுதாஶஸ்ய ச, ஆஶா:, ஸர்வா: ஸ்யு: ஸௌக்²யமய்ய:, ஸலிலகுஹரக³ஸ்யேவ, தோயைகமய்ய:** இப்படி பக்தியிலேயே திருப்தி அடைந்து, சுகமாக ஸஞ்சரிக்கும் அவனுக்கு, மத்த உலக ஆசைகள் எல்லாம் தானாவே விடுபட்டு விடும். ஜலத்துக்குள்ள முழுகின ஒருத்தனுக்கு எல்லா பக்கமும் ஜலம் மட்டுமே தெரியற மாதிரி, இந்த பக்தனுக்கு உலகத்தில் எல்லாமே சுகமாவே, பகவான் மயமாவே இருக்கும்!

**ஸோ(அ)யம்’ க²லு, இந்த்³ரலோகம்’ கமலஜப⁴வநம், யோக³ஸித்³தீ⁴ஶ்ச ஹ்ரு’த்³யா: நாகாங்க்ஷத்யேததா³ஸ்தாம்’, ஸ்வயமநுபதிதே மோக்ஷஸௌக்²யேபி, அநீஹ:** அவனுக்குப் "இந்திரலோகம் தருகிறேன், அல்லது பிரம்மலோகம் தருகிறேன், அல்லது அணிமாதி அஷ்ட சித்திகள் எல்லாம் தருகிறேன்" என்று சொன்னால் கூட அவன் அதற்கெல்லாம் ஆசைப்பட மாட்டான். அதெல்லாம் இருக்கட்டும், அவன் விரும்பாமலேயே தானே அவன் மடியில் 'மோக்ஷ ஸௌக்யம்' வந்து விழுந்தால் கூட, அதில் கூட அவனுக்கு ஆசை இருக்காது! ஏனென்றால், அவனுக்கு இந்த பஜனானந்தம், மோக்ஷானந்தத்தை காட்டிலும் பெரிதாகப் போய்விடும்.

அடுத்து 95வது தசகம் 5வது ப்லோகம்

**त्वद्भक्तो बाध्यमानोऽपि च, विषयरसैः, इन्द्रियाशान्तिहेतोः,**
**भक्त्यैव आक्रम्यमाणैः पुनरपि खलु तैः, दुर्बलैः, नाभिजय्यः ।**
**सप्तार्चिः, दीपितार्चिर्दहति किल यथा भूरिदारुप्रपञ्चं,**

**त्वद्भक्त्योघे तथैव प्रदहति दुरितं, दुर्मदः क्वेन्द्रियाणाम् ॥**

**த்வத்³ப⁴க்தோ பா³த்⁴யமாநோ(அ)பி ச, விஷயரஸை:, இந்த்³ரியாஶாந்திஹேதோ:, ப⁴க்த்யைவ, ஆக்ரம்யமாணை: புநரபி க²லு தை:, து³ர்ப³லை:, நாபி⁴ஜய்ய:**
இந்திரியங்களுடைய அசாந்திக்கு காரணமான உலக விஷயங்கள், உன்னுடைய பக்தனை ஆரம்ப காலத்துல கொஞ்சம் பாதித்தாலும், போகப் போக அந்த பக்தி வளர வளர, பக்தியினாலேயே அவன் ஆட்கொள்ளப்பட்டு, பலமிழந்த அந்த விஷயரஸங்களால் அவன் வெல்ல முடியாதவனாக ஆகி விடுகிறான் அல்லவா! எது போலவென்றால்
**ஸப்தார்சி:, தீ³பிதார்சிர்த³ஹதி கில யதா² பூ⁴ரிதா³ருப்ரபஞ்சம்', த்வத்³ப⁴க்த்யோகே⁴ ததை²வ ப்ரத³ஹதி து³ரிதம்**
கொழுந்துவிட்டு எரியுற பெரிய அக்னியானது எப்படி எவ்வளவு பெரிய விறகு குவியலாக இருந்தாலும் அதை எரிச்சு சாம்பலாக்கிடுறதோ, அப்படி உன்னுடைய பக்திப் பெருக்கு ஜாஸ்தி ஆகி விட்டதென்றால், அது அவனுடைய எல்லா பாபங்களையும், வாசனைகளையும் முழுமையாக போக்கி விடுகிறது. **து³ர்மத³: க்வேந்த்³ரியாணாம்** அதுக்கப்புறம் இந்த இந்திரியங்களுடைய திமிர் எல்லாம் அவன் கிட்ட ஒண்ணும் பலிக்காது! அது தானாவே அடங்கிடும்.

**தூய பக்தியின் லக்ஷணம்**

அடுத்து 95வது தசகம் 6வது ஶ்லோகம்

**चित्तार्द्रीभावं, उच्चैर्वपुषि च पुलकं, हर्षबाष्पं च हित्वा,**
**चित्तं शुद्ध्येत्कथं वा, किमु बहुतपसा, विद्यया वीतभक्तेः ।**
**त्वद्गाथास्वादसिद्धाञ्जन, सततमरीमृज्यमानोऽयमात्मा,**
**चक्षुर्वत्तत्वसूक्ष्मं भजति, न तु तथा, अभ्यस्तया तर्ककोट्या ॥**

**சித்தார்த்³ரீபா⁴வம், உச்சைர்வபுஷி ச புலகம், ஹர்ஷபா³ஷ்பம் ச ஹித்வா, சித்தம் ஶுத்³த்⁴யேத்கத²ம் வா, கிமு ப³ஹுதபஸா, வித்³யயா வீதப⁴க்தே:** பக்தி பண்ணும் போது மனது உருகணும், கண்ணுல ஜலம் வரணும், உடம்புல புளகாங்கிதம் ஏற்படணும். இப்படி பக்தி பண்ணிணா தான் மனது சுத்தமாகும். அதை விட்டுட்டு வேற எந்த விதத்துல மனதை சுத்தம் பண்ணிக்க முடியும்? இது ஒண்ணு தான் வழி!

பக்தி இல்லாமல் நிறைய தபஸ் பண்ணுவதாலோ அல்லது பல வித்யைகளை அறிவதாலோ ஒரு பிரயோஜனமும் இல்லை.

**த்வத்³கா³தா²ஸ்வாத³ஸித்³தா⁴ஞ்ஜந,**
**ஸததமரீம்ரு’ஜ்யமானோ(அ)யமாத்மா, சக்ஷுர்வத் தத்வஸூக்ஷ்மம்’ ப⁴ஜதி, ந து ததா², அப்⁴யஸ்தயா, தர்ககோட்யா**

'அஞ்ஜனம்' என்றால் கண் மை. 'ஸித்தாஞ்ஜனம்' என்பது ஒரு மந்திர மை. அதை கண்ணில் போட்டுக் கொண்டால் புதையல் இருக்கும் இடம் கண்ணுக்குத் தெரியும் என்பது நம்பிக்கை. அது போல ரஸமான உன்னுடைய கதைகள் என்கிற மந்திர மையை எவன் மனதில் போட்டுக் கொள்கிறானோ, உன்னுடைய புண்ய கதைகளில் மூழ்கியிருக்கும் அவனுடைய மனதுக்கு, புதையல் போன்ற உன் 'தத்துவ சூக்ஷ்மம்' தானாகவே தெளிவாக விளங்கும்! இதை விட்டுவிட்டு, கோடி தர்க்கங்களை அப்யாஸம் பண்ணினாலும், அந்த பகவானுடைய தத்துவத்தை புரிந்து கொள்ள முடியாது. மனது உருகி, கண் ஜலத்துடன், தொண்டை தழுதழுக்க அவனுடைய நாமங்களைப் பாடி, அவனுடைய புண்ய கதைகளைக் கேட்டால், தத்துவ ஞானம் தானாக விளங்கும் என்று பட்டத்ரி சொல்கிறார்.

### திருப்புகழ் மேற்கோள்: பணிந்து உருகும் நேசம்

இதைச் சொல்லும்போது எனக்கு அருணகிரிநாதரின் திருப்புகழில் ஒரு பழனி பாட்டு ஞாபகம் வருகிறது: "இத்தாரணிக்குள்..." என்று தொடங்கும். அதில்,

சட்டா நவப்பறைகள் கொட்டா வரிச்சுடலையேகிச்
சடம்பெரிது வேகப் புடஞ்சமைய இட்டே
அனற்குளெரி பட்டா ரெனத்தழுவிநீரிற் படிந்துவிடு பாசத் தகன்று

அதாவது, இந்த உலகத்தில் ஒருவன் பிறந்து, இறந்த பின், பறையடிக்க சுடுகாட்டுக்குக் கொண்டு போய் எரிக்கிறார்கள். அப்புறம் எரித்த பின் உடனே போய் குளிச்சிட்டு, அடுத்த காரியத்துக்குப் போய் விடுகிறார்கள். அந்த பாசம் அதோட முடிஞ்சு போயிடுறது. இந்தத் திரும்பத் திரும்பப் பிறக்க வைக்கும் உலக பாசத்திலிருந்து அகன்று,

“உனது சற்போதக பதுமமுற்றே தமிழ்க் கவிதை பேசிப் பணிந்துருகு நேசத்தை இன்று தர இனி வரவேணும்!”
“உன்னுடைய பாதத் தாமரைகளைப் பற்றிக் கொண்டு, உன்னுடைய தமிழ்க் கவிதைகளைப் பேசி, பணிந்து உருகும் நேசத்தை– அந்த அன்பை

நீ தான் எனக்குத் தரணும், இன்றைக்கே வந்து எனக்கு அதைத் தரவேண்டும்" என்று அழகான ஒரு ப்ரார்த்தனை அது.

இந்த பாடலின் பிற்பகுதியில,
“ஏதத்து இலங்கையினில் ஆதிக்கமுண்டதொரு
முட்டாளரக்கர் தலையிற்றே விழக்
கணைகளே தொட்ட கொண்டல் உருவாகி…”
குற்றங்கள் பொருந்திய இலங்கையை ஆட்சி செய்த முட்டாளான ராவணனுடைய தலைகள் அறுந்து விழும்படி அம்புகளை ஏவிய மேக நிறத்தை உடையவரும்,
“சுமந்ததிக மட்டார் மலர்க்கமலமுற்றாசனத்திருவை
மார்பில் புணர்ந்த ரகுராமமற்கும் அன்புடைய மருமகனாகி…”
மிகுந்த வாசனையுடைய தாமரை மலரை ஆசனமாகக் கொண்ட, ஜனகன் மகளாகிய சீதையை மார்பில் அணைத்த ரகுராமனுக்கு அன்புடைய மருமகனான முருகப் பெருமானே! என்று கொண்டு போய் முடிக்கிறார். அது போல, இந்த ஒரே பாடலிலேயே "உனைப் பேசிப் பணிந்துருகு நேசத்தை இன்று தர இனி வரவேணும்" அப்படிங்கற வேண்டுதலும் இருக்கிறது. ராமருடைய கதையும் வருகிறது. பகவானுடைய கதைகளைப் படித்து மனதில் வாங்கிக் கொண்டால், அந்த பக்தியினாலேயே தத்துவம் விளங்கும் என்பதும் இருக்கிறது.

### பகவானின் ரூப த்யானம்

அடுத்த மூன்று ஶ்லோகங்ளில் பகவானோட ரூப த்யானம் எப்படி பண்ண வேண்டும் என்று உத்தவருக்குக் க்ருஷ்ணர் சொல்லிக் கொடுத்ததை பட்டத்ரி விளக்குகிறார்:

95வது தசகம் 7வது ஶ்லோகம்

**ध्यानं ते शीलयेयं, समतनुसुखबद्धासनो, नासिकाग्र-
न्यस्ताक्षः, पूरकाद्यैः जितपवनपथः, चित्तपद्मं तु अवाञ्चम् ।
ऊर्ध्वाग्रं भावयित्वा, रविविधुशिखिनः, संविचिन्त्य, उपरिष्टात्
तत्रस्थं भावये त्वां, सजलजलधरश्यामलं कोमलाङ्गम् ॥**

**த்⁴யாநம் தே ஶீலயேயம்’, ஸமதநுஸுக²ப³த்³தா⁴ஸநோ, நாஸிகாக்³ர-**

**ந்யஸ்தாக்ஷ:, பூரகாத்³யை: ஜிதபவநபத²:, சித்தபத்³மம்’ து அவாஞ்சம் ।**
**ஊர்த்⁴வாக்³ரம் பா⁴வயித்வா, ரவிவிது⁴ஶிகி²ந:, ஸம்’விசிந்த்ய, உபரிஷ்டாத் தத்ரஸ்த²ம் பா⁴வயே த்வாம், ஸஜலஜலத⁴ரஶ்யாமளம், கோமளாங்க³ம் ॥**

இதில் த்யானம் செய்வதற்கான முறையான யோக நெறிகளை சொல்கிறார். சுகமான ஆஸனத்தில் அமர்ந்து, உடம்பைச் சமமாக நிமிர்ந்து வைத்துக் கொண்டு, மூக்கு நுனியில பார்வையை நிலைநிறுத்தி, கும்பகம், ரேசகம், பூரகம் ஆகிய பிராணாயாம முறைகளால் மூச்சை ஒழுங்குபடுத்தி, கீழ்நோக்கி இருக்கும் ஹ்ருதய கமலத்தை த்யான பலத்தால் மேல் நோக்கி மலரச் செய்து, அதுக்கு மேல சூர்ய மண்டலம், சந்த்ர மண்டலம், அக்னி மண்டலம் ஆகியவற்றை த்யானித்து, அதன் நடுவில் நீருண்ட மேகம் போல ச்யாமள வர்ணமான, அழகிய திருமேனி படைத்த உம்மை பாவனை செய்து, உன்னுடைய த்யானத்தை நான் அப்யாஸம் செய்வேனாக என்று வேண்டுகிறார்.

இந்த பகவானோட ரூப த்யானத்தைப் பத்தி நம்ம ஸ்வாமிகள் அடிக்கடி சொல்லுவார். அவர் எந்த கதை சொன்னாலும், க்ருஷ்ணன் கதைன்னா பாலமுகுந்தனா வர்ணிப்பார்; அதுக்கப்புறம் ருக்மிணி கல்யாணத்துல ருக்மிணியையும் க்ருஷ்ணனையும் வர்ணிப்பார். அதே மாதிரி ராமர் கதைன்னா பால ராமனைச் சொல்லுவார், விஶ்வாமித்திரரோடு கிளம்பின ராமரை அழகா வர்ணிப்பார், கல்யாண ராமனை தலையிலிருந்து கால் வரைக்கும் வர்ணிப்பார், தபஸ்வி வேஷத்துல காட்டுக்கு போன ராமரை வர்ணிப்பார், பட்டாபிஷேக கோலத்தில் ராமனை வர்ணிப்பார்– இப்படி ரூப வர்ணனை வந்துண்டே இருக்கும்.

அவர் இந்த ஶ்லோகத்துக்கு வரும் போது சொல்லுவார்: "நான் உங்களுக்கெல்லாம் போர் (bore) அடிக்கிற மாதிரி திரும்பத் திரும்ப சந்திரன் போன்ற நெற்றி, வளைந்த புருவம், தாமரை இதழ் போன்ற கண்கள், கருணை பொழியும் கடாக்ஷம், உன்னத நாஸிகை, பிம்பாதரம், அதுல ஸுந்தர மந்தஹாஸம், சங்கு போன்ற கண்டம் அப்படின்னு சொல்லிண்டே இருக்கேனேன்னு நினைக்கலாம். இப்படி நிறைய வாட்டி கேட்டா, ஏதோ ஒரு வாட்டி அது மனதுல போய் ஆழமா பதியாதா? அதுக்காகத் தான் திரும்பத் திரும்பச் சொல்றேன்" என்பார். அந்த மாதிரி அந்த ரூப த்யானத்துனால பகவானே நேரடியா கிடைப்பார் என்று

பின்னாடி ஸ்லோகத்துல வருகிறது. ஸ்வாமிகள் அதை அநுபவிச்சு உணர்ந்து இருக்கிறதுனால தான் நமக்கும் அதைச் சொல்கிறார்.

நமக்கு எந்த ஸ்வாமியிடம் இஷ்டம் இருந்தாலும், அந்த ஸ்வாமியோட ரூப த்யானம் பண்ணலாம். பிள்ளையார் பிடிக்குமா? விநாயகர் அகவலில் ஔவையார் அழகாக ரூப த்யானம் சொல்கிறார். முருகரைப் பிடிக்குமா?

திருப்புகழில் நிறைய இடங்களில் முருகனின் ரூப த்யானம் வரும்.
சீரான கோலகால நவமணி மாலாபிஷேக பாரவெகுவித
தேவாதிதேவர் சேவைசெய்யுமுக மலராறும்
சீராடு வீர மாதுமருவிய ஈராறு தோளும் நீளும் வரியளி
சீராக மோது நீப பரிமள இருதாளும்
ஆராத காதல் வேடர் மடமகள் ஜீமூதமூர் வலாரி மடமகள்
ஆதாரபூதமாக வலமிட முறைவாழும்
ஆராயு நீதி வேலுமயிலும் மெய்ஞ்ஞான அபிராம தாப வடிவமும்
ஆபாதனேனும் நாளும் நினைவது பெறவேண்டும்!
என்று அருணகிரிநாதர் கேட்கிறார். எவ்வளவு அழகா இருக்கு பாருங்கள்! வள்ளியம்மையோடும் தெய்வயானையோடும், ஆறு முகங்களோடும் விளங்கும் அந்த 'ஞானாபிராம தாப வடிவம்'– தலையிலிருந்து கால் வரைக்கும் அழகா எல்லாவற்றையும் வர்ணித்து, "ஆபாதனேனும் நாளும் நினைவது பெறவேண்டும்"– உங்களுடைய தலையிலிருந்து பாதம் வரைக்கும் இருக்கிற இந்த ரூபத்தை நான் தினமும் என் மனதில் தியானிக்க வேண்டும், இந்த காட்சி எனக்குக் கிடைக்க வேண்டும்" என்றூ வேண்டிக் கொள்கிறார். இப்படி அவர் அவர்களுடைய இஷ்ட தெய்வத்தை தியானம் பண்ணலாம்.

### நாராயணீயத்தின் உன்னத ரூப த்யானம்

ஸ்ரீக்ருஷ்ணனுடைய ரூப த்யானம் இரண்டாவது தசகம் நாராயணீயத்துல உள்ள இரண்டு ஶ்லோகஙளில் அவ்வளவு அழகாக வந்திருக்கும். நாராயணீயத்திலேயும் நிறைய இடத்துல ரூப த்யானம் வருகிறது என்றாலும், இந்த இரண்டு ஶ்லோகங்கள்ல இருப்பது போல இவ்வளவு முழுமையாக, இவ்வளவு சுருக்கமாக வேறெங்கும் இல்லை. அதனால் இவை எனக்கு மிகவும் பிடிக்கும்.

ஸூர்யஸ்பர்தி⁴கிரீடம், ஊர்த்⁴வதிலகப்ரோத்³பா⁴ஸி,பா²லாந்தரம்,
காருண்யாகுலநேத்ரம், ஆர்த்³ரஹஸிதோல்லாஸம், ஸுநாஸாபுடம் |

க³ண்டோ³த்³யந்மகராப⁴ குண்ட³லயுக³ம், கண்டோ²ஜ்வலத் கௌஸ்துப⁴ம்
த்வத்³ரூபம் வநமால்யஹாரபடல, ஶ்ரீவத்ஸதீ³ப்ரம், ப⁴ஜே ||

கேயூராங்க³த³, கங்கணோத்தம, மஹாரத்நாங்கு³லீயாங்கித,-
ஶ்ரீமத்³பா³ஹுசதுஷ்க, ஸங்க³த, க³தா³,ஶங்கா²ரி, பங்கேருஹாம் ।
காஞ்சித் காஞ்சநகாஞ்சி, லாஞ்ச்சி²தலஸத், பீதாம்ப³ராளம்பி³நீம்,
ஆலம்பே³, விமலாம்பு³ஜத்³யுதிபதா³ம், மூர்திம் தவ, ஆர்திச்சி²த³ம் ॥

(சூரியனைவிடப் பிரகாசமான கிரீடம், ஊர்த்வ திலகம் விளங்கும் நெற்றிப் ப்ரதேசம், கருணை பெருகும் கண்கள், கசிவுடைய புன்னகையின் உல்லாசம், அழகிய மூக்கு, கன்னங்களில் பிரகாசிக்கும் மகர குண்டலங்கள், கழுத்தில் ஒளிரும் கௌஸ்துப மணி, வனமாலையும் முத்துமாலையும் ஶ்ரீவத்ஸமும் உடைய மார்பு—இப்படி உமது ரூபத்தைத் தியானிக்கின்றேன்.

கேயுரம், அங்கதம், கங்கணம், உத்தம ரத்னம் இழைத்த மோதிரம் விளங்கும் நான்கு கைகளில் கதை, சங்கு, சக்கரம், தாமரை, தங்க அரை ஞாணுடன் பிரகாசிக்கின்ற பீதாம்பரம், தன்னை அண்டி வந்தவர்களின் துயரங்கள் போக்கும் பகவானின் அந்த தூய தாமரை பாதங்களை நான் சரணடைகிறேன்.)

இதற்கு முந்தின தசகத்துல, உன்னுடைய அழகை "நேத்ரைஹி ஸ்ரோத்ரைஸ்ச பீத்வா"– என்று வரும். அதாவது, "கண்களாலும் காதுகளாலும் உன்னுடைய அழகைப் பருகிற பாக்கியம் இந்த பூலோகத்துல வந்து பிறந்தாலே கிடைக்கும். பல கஷ்டங்கள் இருந்தாலும் இந்த மனுஷ ஜன்மா நல்லது தான், ஏனென்றால் அப்பதானே உன்னுடைய இந்த ஞான வடிவத்தை கண்களாலும் காதுகளாலும் பருக முடியும்" அப்படிங்கறார்.

கண்களால ரூபத்தைப் பருகுவது என்பது நமக்கு எளிதாக புரியறது. ஆனா காதுகளால எப்படி ரூபத்தைப் பருக முடியும் என்று நான் யோசித்தேன். இந்த ஸ்லோகங்களை நாம படிக்கும் போது, கேட்கும் போது, நமக்கே அறியாமல் அந்த ரூபம் நம் மனதில் ஒரு சித்திரமாக வருகிறது இல்லையா? அப்படி காதுகளால இந்த ரூபத்தை நாம் பருகலாம்.

யத், த்ரைலோக்யமஹீயஸோ(அ)பி, மஹிதம், ஸம்மோஹநம் மோஹநாத், காந்தம், காந்திநிதா⁴நதோ(அ)பி, மது⁴ரம், மாது⁴ர்ய,து⁴ர்யாத³பி । ஸௌந்த³ர்யோத்தரதோ(அ)பி, ஸுந்த³ரதரம், த்வத்³ரூபம், ஆஶ்சர்யதோபி, ஆஶ்சர்யம் பு⁴வநே, ந கஸ்ய குதுகம், புஷ்ணாதி, விஷ்ணோ, விபோ⁴ ॥

யாராவது ஒருத்தர் ஏதோ ஒரு பொருளைப் பார்த்து "அது அவ்வளவு மனதைக் கவரும்படியாக இருந்தது" என்று மயங்கிப் போய் சொன்னால், அதைக் காட்டிலும் என்னுடைய க்ருஷ்ணன் அழகு! "இந்த ஸ்வீட் அவ்வளவு ருசியாக இருந்தது" என்று சொன்னா, அதை விட என்னுடைய க்ருஷ்ணன் மதுரமானவர்! "நான் ஒரு பெண்ணைப் பார்த்தேன், அவ்வளவு அழகு" அப்படின்னா, அதை விட என்னுடைய க்ருஷ்ணன் சுந்தரமானவர்! யாராவது "நான் நயாகரா ஃபால்ஸ் பார்த்தேன், என்ன ஆச்சரியம்!" என்று சொன்னா, அதைவிட ஆச்சரியமானவன் என்னுடைய க்ருஷ்ணன்! இப்படி இந்த புவனத்துல உள்ள எல்லாத்தையும் விட அழகும், காந்தியும் மிகுந்தவன் பகவான். அவனுடைய இந்த ரூபம் யாருக்குத் தான் ஆனந்தத்தைப் பெருக்காது என்று கேக்கறார்.

### ரூப த்யானத்தின் மூலமே அத்வைத லயம்

அடுத்த இரண்டு ஶ்லோகத்துல, விஷ்ணு பகவானோட ரூபத்தை மேலும் வர்ணனை பண்றார். 95வது தசகம் 8வது ஶ்லோகம்

**आनीलश्लक्ष्णकेशं, ज्वलितमकरसत्कुण्डलं, मन्दहास-**
**स्यन्दार्द्रं, कौस्तुभश्रीपरिगत, वनमालोरु हाराभिरामम् ।**
**श्रीवत्साङ्कं सुबाहुं, मृदुलसदुदरं, काञ्चनच्छायचेलं,**
**चारुस्निग्धोरुं, अम्भोरुहललितपदं, भावयेऽहं भवन्तम् ॥**

**ஆநீலஶ்லக்ஷ்ணகேஶம், ஜ்வலிதமகரஸத்குண்ட³லம், மந்த³ஹாஸ-ஸ்யந்தா³ர்த்³ரம், கௌஸ்துப⁴ஶ்ரீபரிக³த, வநமாலோரு ஹாராபி⁴ராமம் । ஶ்ரீவத்ஸாங்கம் ஸுபா³ஹும், ம்ரு’து³ளஸது³த³ரம், காஞ்சநச்சா²யசேலம், சாருஸ்நிக்³தோ⁴ரும், அம்போ⁴ருஹ லலிதபத³ம், பா⁴வயே(அ)ஹம்’ ப⁴வந்தம் ॥**

நன்றாக கறுத்த மினு மினுப்பான கேசமும், பிரகாசிக்கும் மகர குண்டலங்களும், புன்னகையால் உள்ளம் கசிந்த முகமும், கௌஸ்துப

மணியின் காந்தியால் சூழப் பெற்ற வனமாலைகள் அணிந்த மார்பும், நீண்ட திருக்கைகளும், மென்மையாக விளங்கும் வயிறும், பொன் மஞ்சள் பட்டாடை உடுத்திய இடையும், புஷ்டியான தொடைகளும், தாமரை போன்ற அழகிய பாதங்களும் உடைய உன்னை நான் தியானிப்பேனாக.

95வது தசகம் 9வது ஶ்லோகம்

**सर्वाङ्गेषु, अङ्ग रङ्गत्कुतुकं, इति मुहुर्धारयन्, ईश चित्तं**
**तत्रापि एकत्र युञ्जे, वदनसरसिजे, सुन्दरे मन्दहासे ।**
**तत्रालीनं तु चेतः, परमसुखचिदद्वैतरूपे, वितन्वन्,**
**अन्यन्नो चिन्तयेयं, मुहुरिति समुपारूढयोगो भवेयम् ॥**

**ஸர்வாங்கே³ஷு, அங்க³ ரங்க³த்குதுகம், இதி முஹுர்தா⁴ரயன், ஈஶ சித்தம் தத்ராபி ஏகத்ர யுஞ்ஜே, வத³நஸரஸிஜே, ஸுந்த³ரே மந்த³ஹாஸே | தத்ராலீநம் து சேத:, பரமஸுக²சித³த்³வைதரூபே, விதந்வன், அந்யந்நோ சிந்தயேயம், முஹுரிதி ஸமுபாரூட⁴யோகோ³, ப⁴வேயம் ॥**

இப்படி உன்னுடைய ரூபத்தை தலையில் இருந்து கால், காலில் இருந்து தலை என்று மீண்டும் மீண்டும் தியானம் செய்து, அதில் என்னுடைய மனதை தாரணையாக நிறுத்தி, கடைசியில அழகு மிக்க உன்னுடைய புன்முறுவல் பூத்த அந்த முகத்தில் என்னுடைய மனதை நிலைநிறுத்துவேன். அப்படி தியானம் செய்து கொண்டு இருக்கும் போது, என்னுடைய மனது உன்னுடைய ஸச்சிதானந்த அத்வைத ரூபத்தில் கரைந்து, வேறொன்றைப் பற்றிய சிந்தனையே இல்லாதபடி ஆகி விடுவேன். இப்படி மீண்டும் மீண்டும் தியானம் செய்து நான் சித்தி அடைய அருள் புரிய வேண்டும்.

**சித்திகளைத் துறந்து பகவானை அடைதல்**

95வது தசகம் 10வது ஶ்லோகம்:

**इत्थं त्वद्ध्यानयोगे सति पुनः, अणिमाद्यष्टसंसिद्धयस्ताः,**
**दूरश्रुत्यादयोऽपि हि, अहमहमिकया सम्पतेयुः मुरारे ।**
**त्वत्सम्प्राप्तौ विलम्बावहं, अखिलमिदं नाद्रिये, कामयेऽहं**

**त्वामेव, आनन्दपूर्णं, पवनपुरपते पाहि मां सर्वतापात् ॥**

**இத்த²ம்’ த்வத்³த்⁴யாநயோகே³ ஸதி புந:, அணிமாத்³யஷ்டஸம்’ஸித்³த⁴யஸ்தா:, தூ³ரஶ்ருத்யாத³யோ(அ)பி ஹி, அஹமஹமிகயா ஸம்பதேயு:, முராரே ।**
**த்வத்ஸம்ப்ராப்தௌ விலம்பா³வஹம், அகி²லமித³ம் நாத்³ரியே, காமயே(அ)ஹம் த்வாமேவ, ஆநந்த³பூர்ணம், பவநபுரபதே பாஹி மாம் ஸர்வதாபாத் ॥**
இப்படி தியானம் செய்யும் போது, அணிமாதி அஷ்ட சித்திகள், எங்கேயோ தூரத்தில் பேசுவதை இங்கே காதுகளில் கேட்பது போன்ற சித்திகள் எல்லாம் "நான் முந்தி, நீ முந்தி" என்று போட்டி போட்டுக் கொண்டு நம்மிடம் வரும். ஆனால், "பகவானே! நான் உன்னை அடைவதற்கு அதெல்லாம் பெரிய தடையாக இருக்கும், தாமதத்தை ஏற்படுத்தும் என்பதால், அவற்றை நான் மதிக்கவும் மாட்டேன், விரும்பவும் மாட்டேன்! ஆனந்தபூர்ணமான உன்னையே தான் நான் அடைய விரும்புகிறேன். ஹே குருவாயூரப்பா! என் உள்ளொளிரும் நாதனே! என் எல்லா துன்பங்களையும் போக்கி என்னை எப்போதும் காத்தருள வேண்டும்" என்று இந்த 95வது தசகத்துல தியான யோகம் என்பதை பட்டத்ரி அழகாக சொல்லிக் கொடுக்கிறார்.

ஸ்வாமிகளிடம் பல சித்திகள் இருந்ததை நாங்கள் பார்த்து இருக்கிறோம். கால சக்கரத்தை கையில் வைத்திருந்தார். ஆனால் அவரிடம் ஏதாவது வேண்டினால், ‘நான் இருக்கேன். நான் உனக்கு இதை முடித்துத் தருகிறேன்’ என்றெல்லாம் சொல்லவே மாட்டார். ‘எனக்கு எந்த சக்தியும் கிடையாது. அவனுடைய அருளுக்கு பாத்திரம் ஆவதற்கு, இந்த பாராயணத்தை செய்வோம். ஆனால் இது வ்யாபாரம் போல கொடுக்கல் வாங்கல் கிடையாது. அவன் கருணை இருந்தால், நம் வேண்டுதல் பலிக்கும்’ என்றே சொல்வார்.

**ॐ तत्सदिति श्रीमन्नारायणीये पञ्चनवतितमं दशकं समाप्तम् |**
**श्री हरये नमः | रमा रमण गोविन्द गोविन्द | श्रीकृष्णार्पणमस्तु |**
**ஓம் தத்ஸதி³தி ஶ்ரீமந்நாராயணீயே பஞ்சநவதிதமம் த³ஶகம் ஸமாப்தம் | ஶ்ரீ ஹரயே நம: | ரமா ரமண கோ³விந்த³, கோ³விந்த³ | ஶ்ரீக்ரு’ஷ்ணார்பணமஸ்து |**

**பகவானுடைய திருநாமங்கள், பகவானுடைய திவ்ய ரூபம், அவனுடைய திவ்ய சரித்ரம்**

ஸ்ரீமந் நாராயணீயம் 95வது தசகத்தில் தியான யோகத்தைப் பற்றிப் பார்த்தோம். கடைசி நான்கு ஶ்லோகங்களில் பகவானுடைய திவ்ய மங்கள ரூபத்தை தியானம் பண்ணினால், அதுவே அத்வைத சித்தியைக் கொடுக்கும் என்று பட்டத்ரி நமக்குச் சொல்லிக் கொடுத்தார்.

அதற்கு முந்தைய ஶ்லோகத்தில், ஸித்தாஞ்ஜனம் இட்டுக் கொண்டால் எப்படி புதையல் கண்ணுக்குத் தெரியுமோ, அந்த மாதிரி பகவானுடைய கதைகளைக் கேட்டாலே ப்ரம்ம தத்துவம் மிக எளிதாக விளங்கும் என்று சொன்னார். இன்னும் சில ஸ்லோகங்களுக்கு முன்னால், "க்ஷேமாணி நாமானி" என்று பகவானுடைய திருநாமங்களே நம்மை உய்யக் கொண்டு உயர்வற உயர் நலத்தைத் தரும் என்றும் சொல்லியிருக்கிறார்.

இப்படி பகவானுடைய திருநாமங்கள், பகவானுடைய திவ்ய ரூபம், அவனுடைய கதைகள்—இதுதான் பாகவதத்தில் பக்தி ஏற்படுவதற்கும், அது நாளுக்கு நாள் வளர்வதற்கும் உன்னதமான வழிகளாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதை பட்டத்ரி ஆரம்பத்திலிருந்து கடைசி வரை விடாமல் அழகாகச் சொல்லிக் கொண்டே வருகிறார். மூன்றாவது தசகத்தின் முதல் ஶ்லோகத்தில் கூட அவர் என்ன சொல்கிறார் தெரியுமா?

பட$^{2}$ந்தோ நாமாநி, ப்ரமத$^{3}$ப$^{4}$ரஸிந்தௌ$^{4}$ நிபதிதா:,
ஸ்மரந்தோ ரூபம் தே, வரத$^{3}$, கத$^{2}$யந்தோ, கு$^{3}$ணகதா$^{2}$: ।
சரந்தோ, யே ப$^{4}$க்தா:, த்வயி க$^{2}$லு, ரமந்தே, பரமமூன்,
அஹம், த$^{4}$ந்யான் மந்யே, ஸமதி$^{4}$க$^{3}$த, ஸர்வாபி$^{4}$லஷிதான் ॥

"ஹே வரதனே! உன்னுடைய திருநாமங்களைப் பாடிக் கொண்டும், உன்னுடைய ரூபத்தை எப்போதும் தியானித்துக் கொண்டும், உன்னுடைய கல்யாண குணங்களைப் பேசிப் பரவிக் கொண்டும், ஆனந்தக் கடலில் மூழ்கி இந்த உலகத்தில் சஞ்சரிக்கும் உன்னுடைய பக்தர்கள் இருக்கிறார்களே, அவர்கள் தான் உலகத்திலேயே மிகப்பெரிய பாக்கியசாலிகள். எல்லா விருப்பங்களையும் அடைந்தவர்களாக அவர்களைத் தான் நான் கருதுகிறேன்" என்கிறார்.

**96வது தசகம்: விபூதி யோகம்**

உத்தவர் க்ருஷ்ணனிடம், "பகவானே! உன்னுடைய அளவற்ற விபூதிகளை (மகிமைகளை) கேட்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது" என்று கேட்கும் போது, க்ருஷ்ணர் புன்னகைத்து, "உத்தவா! மகாபாரத யுத்த களத்தில் அர்ஜுனனும் இதே போலத் தான் என்னிடம் கேட்டான். அதே கேள்வியை இன்று நீயும் கேட்கிறாய்" என்று கூறித் தன் விபூதிகளைச் சொல்லத் தொடங்குகிறார். அதனால் இந்த தசகத்திற்கு "விபூதி யோகம்" என்று பெயர்.

பட்டத்ரி இதனை பகவானுடைய ஸ்தோத்திரமாக நமக்கு வழங்குகிறார்: 96வது தசகம் முதல் ஶ்லோகம்:

**त्वं हि ब्रह्मैव साक्षात् परं, उरुमहिमन्, अक्षराणामकारः,**
**तारो मन्त्रेषु राज्ञां मनुरसि, मुनिषु त्वं भृगुः नारदोऽपि ।**
**प्रह्लादो दानवानां, पशुषु च सुरभिः, पक्षिणां वैनतेयः,**
**नागानां अस्यनन्तः, सुरसरिदपि च स्रोतसां विश्वमूर्ते ॥**

**த்வம் ஹி ப்³ரஹ்மைவ ஸாக்ஷாத் பரம்** ஹே க்ருஷ்ணா, நீ தான் ஸாக்ஷாத் பிரம்மம், நீ தான் பரம்பொருள். **உருமஹிமன்** அளவற்ற மகிமை பொருந்தியவன் நீ. உன்னை உன்னி க்ருஷ்ணனாக, ஒரு சின்னக் குழந்தையாக நாங்கள் கொஞ்சுகிறோம்; ஆனால் நீயோ 'அணோரணியான் மஹதோ மஹீயான்' (அணுவிற்கும் அணுவாய், பெருமைக்கும் பெருமையாய்) விளங்குபவன். உன்னுடைய மகிமைக்கு எல்லையே இல்லை.

இதைச் சொல்லும்போது எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. ஒருமுறை நான் சிவன் சாரிடம் மஹா பெரியவாளைப் பற்றி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தேன். அப்பொழுது சார் என்னை பார்த்து, "பெரியவா நீ நினைக்கிறதெல்லாம் காட்டிலும் பெரியவா!" என்றார். அந்த "உரு மஹிமன்" என்ற வார்த்தைக்கு மிகச் சரியான அர்த்தம் அதுதான். நமது கற்பனைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட பெருமை அது.

**அக்ஷராணாமகார:** அக்ஷரங்களுக்குள் (எழுத்துக்களுக்குள்) நீ 'அ' காரமாய் இருக்கிறாய். **தாரோ மந்த்ரேஷு** மந்திரங்களுக்குள் பிரணவமாய் நீ (ஓம்காரமாய்) இருக்கிறாய். **ராஜ்ஞாம் மனுரஸி**

ராஜாக்களுக்குள் நீ மனுவாய் இருக்கிறாய். **முநிஷூ த்வம் ப்⁴ருகு³:, நாரதோ³(அ)பி** முனிவர்களுக்குள் பிருகுவாகவும், நாரதராகவும் விளங்குகிறாய்.

**ப்ரஹ்லாதோ³ தா³நவாநாம்** தானவர்களுக்குள் பிரகலாதனாய் இருக்கிறாய். **பஶூஷு ச ஸுரபி⁴:** பசுக்களில் நீ காமதேனுவாய் இருக்கிறாய். **பக்ஷிணாம் வைநதேய:** பக்ஷிகளுக்குள் கருட பகவானாக இருக்கிறாய். **நாகா³நாம், அஸ்யநந்த:** நாகர்களுக்குள் அனந்தனாய் (ஆதிசேஷனாய்) இருக்கிறாய். அந்த ஆதிசேஷன் பகவானுக்கு எவ்வளவு சேவைகளைச் செய்கிறார் அல்லவா! படுக்கையாக இருக்கிறார், குடையாக இருக்கிறார், நடக்கும் போது பாதுகையாக இருக்கிறார்! இந்த ஶ்லோகத்தில் ஒரு ஆச்சரியமான வேடிக்கை என்னவென்றால், நிஜ உலகத்தில் கருடனும் பாம்பும் பக்கத்தில் இருக்க மாட்டார்கள். ஆனால் பகவானுடைய விபூதி ஶ்லோகத்தில் கருடனும் அனந்தனும் அடுத்தடுத்து வருகிறார்கள்! **ஸுரஸரித³பி ச ஸ்ரோதஸாம், விஶ்வமூர்தே** ஓ விஶ்வமூர்த்தியே! ஓடும் நதிகளுக்குள் நீ கங்கையாக இருக்கிறாய். இந்த ஒட்டுமொத்த விஶ்வமுமே உன்னுடைய திருவுருவம் தான்.

96வது தசகம் 2வது ஶ்லோகம்

**ब्रह्मण्यानां बलिस्त्वं, क्रतुषु च जपयज्ञोऽसि, वीरेषु पार्थः,**
**भक्तानामुद्धवस्त्वं, बलमसि बलिनां, धाम तेजस्विनां त्वम् ।**
**नास्त्यन्तस्त्वद्विभूतेः, विकसदतिशयं वस्तु सर्वं त्वमेव,**
**त्वं जीवस्त्वं प्रधानं, यदिह भवदृते तन्न किञ्चित् प्रपञ्चे ॥**

**ப்³ரஹ்மண்யாநாம் ப³லிஸ்த்வம்** ப்ராஹ்மண பக்தர்களுக்குள் மகாபலி சக்கரவர்த்தியாக விளங்குகிறாய். **க்ரதுஷு ச ஜபயஜ்ஞோ(அ)ஸி** யக்ஞங்களுக்குள் நீ ஜப யக்ஞமாய் இருக்கிறாய்.

**ஜப யக்ஞத்தின் பெருமை**

இந்த இடத்தை படிக்கும் போது, ஆதிசங்கரர் விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் ஜபத்தைப் பற்றி விசேஷமாகச் சொல்லியிருப்பது நினைவுக்கு வருகிறது.

ஏஷ மே ஸர்வத⁴ர்மாணாம் த⁴ர்மோ(அ)தி⁴கதமோ மத:।

யத்³ப⁴க்த்யா புண்ட³ரீகாக்ஷம் ஸ்தவைரர்சேந்நர꞉ ஸதா³॥
"நம் ஹிருதய புண்டரீகத்தில் (இதயத் தாமரையில்) வீற்றிருக்கும் புண்டரீகாக்ஷனான க்ருஷ்ண பகவானை ஸ்தோத்திரங்களால் எப்போதும் அர்ச்சனை செய்வதுதான், என்னைப் பொறுத்தவரை எல்லா தர்மங்களுக்கும் மேலான தர்மம்" என்று பீஷ்ம பிதாமகர் யுதிஷ்டிரருக்கு உபதேசம் செய்கிறார்.

இதற்கு ஆசார்யாள் பாஷ்யம் எழுதும் போது ஒரு கேள்வி எழுப்புகிறார்: "அஸ்ய ஸ்துதிலக்ஷணஸ்ய அர்சநஸ்ய ஆதி⁴க்யே கிம் காரணம்?" அதாவது, இப்படி ஸ்தோத்திரங்ளைப் பாடி பகவானை அர்ச்சனை செய்வதற்கும் இவ்வளவு ஏற்றத்தைக் கொடுக்கிறாரே, அதற்கு என்ன காரணம்?

அதற்கு அவரே பதிலும் சொல்கிறார்: " ஹிம்ஸாதி³ புருஷாந்தர த்³ரவ்யாந்தர தே³ஶ-காலாதி³ நியமாநபேக்ஷிதத்வம் ஆதி⁴க்யே காரணம்" மற்ற யக்ஞங்களை எடுத்துக் கொண்டால் அதில் ஏதேனும் ஒரு வகையில் ஹிம்ஸை இருக்கலாம், அதற்குப் பல த்ரவ்யங்களை சேர்க்க வேண்டியிருக்கும், துணைக்கு நிறைய மனிதர்கள் தேவைப்படுவார்கள், அதோடு தேச கால நியமங்கள் எல்லாம் பார்க்க வேண்டும் (இந்த க்ஷேத்திரத்தில் தான் பண்ண வேண்டும், இந்த சுப முகூர்த்தத்தில் தான் பண்ண வேண்டும் என்றெல்லாம் விதிகள் உண்டு). ஆனால், ஜப யக்ஞத்திற்கு இந்த எந்த நியமங்களின் எதிர்பார்ப்பும் கிடையாது! இதுதான் இதனுடைய பெருமைக்குக் காரணம். நம்மிடம் நாக்கு இருக்கிறது, பகவானுடைய நாமம் இருக்கிறது; எங்கே வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் சொல்லலாமே! இதற்கு ஆதாரமாக ஆசார்யாள் மற்றொரு ஶ்லோகத்தையும் மேற்கோள் காட்டுகிறார்:

ஜப்யேநைவ து ஸம்ஸித்³த்⁴யேத்³ப்³ராஹ்மணோ நாத்ர ஸம்ஶய꞉।
குர்யாத³ந்யந்ந வா குர்யாந்மைத்ரோ ப்³ராஹ்மண உச்யதே॥
ஒரு ப்ராஹ்மணன் மற்ற கர்மாக்களைச் செய்கிறானோ இல்லையோ, வெறும் ஜபத்தின் மூலமாகவே முழுமையான சித்தியை அடைந்துவிடுவான், இதில் சந்தேகமே இல்லை.

அப்படிப்பட்ட மேலான ஜப யக்ஞமாக நீ விளங்குகிறாய்.

**வீரேஷு பார்த²:** வீரர்களுக்குள் நீ அர்ஜுனனாய் இருக்கிறாய். **ப⁴க்தாநாமுத்³த⁴வஸ்த்வம்** உன்னுடைய பக்தர்களுக்குள் நீ உத்தவராக இருக்கிறாய். **ப³லமஸி ப³லிநாம்** பலம் பொருந்தியவர்களிடம் இருக்கும் பலமாக நீ இருக்கிறாய். **தா⁴ம தேஜஸ்விநாம் த்வம்** ஒளியோடு விளங்குபவர்களிடம் இருக்கும் தேஜஸாக நீ இருக்கிறாய். **நாஸ்த்யந்த: த்வத்³விபூ⁴தே:** இப்படி உன்னுடைய மகிமைகளுக்கு எல்லையே இல்லை. **விகஸத³திஶயம் வஸ்து ஸர்வம் த்வமேவ** இந்த உலகத்தில் ஏதேனும் ஒரு வஸ்து மிக அதிசயமானதாகக் காணப்பட்டால், அது உன்னுடைய விபூதி தான் என்று அறிய வேண்டும். அப்படியென்றால், அதிசய வஸ்துக்கள் மட்டும் தான் பகவானா? இல்லை, எல்லாமே பகவான்தான். அவர் விஶ்வமூர்த்தி! **த்வம் ஜீவஸ்த்வம் ப்ரதா⁴நம்** நீ தான் ஜீவன்; நீ தான் அதற்கு ஆதாரமான மூலப் பிரகிருதியும். **யதி³ஹ ப⁴வத்³ருதே, தந்ந கிஞ்சித், ப்ரபஞ்சே** இந்த பிரபஞ்சத்தில் உன்னைத் தவிர வேறு எதுவுமே கிடையாது!

### வர்ணாஶ்ரம தர்மமும் படிப்படியான பக்தியும்

அடுத்ததாக உத்தவர், "பகவானே, எனக்கு வர்ணாஶ்ரம தர்மங்களைப் பற்றிச் சொல்ல வேண்டும்" என்று கேட்கிறார். க்ருஷ்ணரும் இரண்டு அத்யாயங்கள் எடுத்துக் கொண்டு, நான்கு வர்ணங்களின் கடமைகள் என்ன, நான்கு ஆஶ்ரமங்களின் விதிகள் என்ன என்பதை மிகவும் விஸ்தாரமாகச் சொல்கிறார். பாகவதத்திலும் அது கொண்டாடப் படுகிறது என்று அறிய வேண்டும்.

96வது தசகம் 3வது ஶ்லோகம்

**धर्मं वर्णाश्रमाणां श्रुतिपथविहितं, त्वत्परत्वेन भक्त्या,**
**कुर्वन्तः अन्तर्विरागे विकसति शनकैः, सन्त्यजन्तो लभन्ते ।**
**सत्तास्फूर्तिप्रियत्वात्मकं, अखिलपदार्थेषु भिन्नेष्वभिन्नं,**
**निर्मूलं विश्वमूलं, परममहमिति, त्वद्विबोधं विशुद्धम् ॥**

**த⁴ர்மம் வர்ணாஶ்ரமாணாம், ஶ்ருதிபத²விஹிதம்** ச்ருதியில் (வேதத்தில்) சொல்லப்பட்ட வர்ணாஶ்ரம தர்மங்களை முறைப்படி அனுஷ்டித்து, **த்வத்பரத்வேந ப⁴க்த்யா** அவற்றை பக்தியோடு உனக்கு அர்ப்பணமாகச் செய்து கொண்டே வந்தால், **குர்வந்த: அந்தர்விராகே³ விகஸதி, ஶநகை: ஸந்த்யஜந்தோ, லப⁴ந்தே** அவர்களுக்குள் மெதுவாக வைராக்யம் மலர்கிறது. வைராக்யம் வந்த பின், அவர்கள்

மெதுமெதுவாகத் தங்களின் வர்ணாஶ்ரம கடமைகளைத் துறந்து, உத்தம பக்தியை அடைந்து ஞானத்தைப் பெறுகிறார்கள் என்று பட்டத்ரி கொண்டு போகிறார்.

என் அனுபவத்தில் நான் பார்த்திருக்கிறேன்; ஸ்வாமிகள் யாரையுமே புரட்சிகரமாக எதையும் செய்ய விடமாட்டார். "பக்தி மார்க்கம் என்பது எவொலூஷன் (evolution - படிப்படியான வளர்ச்சி) தான், அது ரெவொலூஷன் (revolution - புரட்சி) கிடையாது" என்பார். எவொலூஷன் என்றால் கொஞ்சம் கொஞ்சமாக, படிப்படியாக மேலே போவது. சில ஆன்மீக அமைப்புகளில் சேர்ந்தவுடன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஒரேடியாக ஸந்நியாசியாகப் போய்விடுகிறார்கள்; பிறகு சில காலம் கழித்துத் தாங்க முடியாமல் மீண்டும் பழைய உலக வாழ்க்கைக்கே வந்து விடுகிறார்கள். அதுபோன்ற தவறுகளை ஸ்வாமிகளிடம் பழகியவர்கள் செய்வதற்கு அவர் அனுமதிக்கவே மாட்டார்.

**இல்லற வாழ்க்கை உத்தம பக்தி ஏற்படுவதற்கு தடையல்ல**

முன்னமே நான் சொன்னது போல, ஶ்ரீராமக்ருஷ்ண பரமஹம்ஸரின் ஜாதகம் போன்றது தான் ஸ்வாமிகளின் ஜாதகமும்—கும்ப ராசி, கும்ப லக்னம், நான்காம் இடத்தில் குரு பகவான் ஸ்வச்சமாக அமர்ந்து பத்தாம் இடத்தைப் பார்க்கிறார். அதனால் தான் அவர் உத்தம குருவாக விளங்கி, மஹா பெரியவாளுக்கே பாகவதத்தை படித்து, அவர் ஆக்ஞைப்படியே பலருக்கு நல்வழி காட்டினார்; வாழ்க்கை முழுக்க பாகவதத்தையும், ராமாயணத்தையும் மூக பஞ்சஶதீ, நாராயணீயம், படித்துக் கொண்டு, பிறருக்கும் அதைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டு இருந்தார். பன்னிரண்டாம் இடத்தில் செவ்வாய் உச்சத்தில் இருந்ததால் அவருக்கு அசாத்தியமான வைராக்யமும் மோக்ஷ பாக்கியமும் இருந்தது.

அதே சமயம், லக்னத்தில் சூரியனும் சுக்கிரனும் இருந்தார்கள். ஏழாம் இடத்துக்குடைய சூரியன் ஏழாம் இடத்தைப் பார்க்கிறார், சுக்கிரனும் ஏழாம் இடத்தைப் பார்க்கிறார். அதனால் ஸ்வாமிகளுக்குத் திருமணம் நடந்தது, குழந்தைகளும் இருந்தார்கள். "இல்லற வாழ்க்கை என்பது உத்தம பக்தி ஏற்படுவதற்கு தடையாக இருக்காது" என்பதைக் காட்டுவதற்காகவே அவர் இந்த அவதாரத்தில் அப்படி வாழ்ந்து காட்டினார் என்று எனக்குத் தோன்றும்.

ஸ்வாமிகள் ஸந்நியாசம் மேற்கொண்டு விட்டபின், அவருடைய பூர்வாஶ்ரம தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி பேசவேண்டுமா என்று சிலர் என்னிடம் கேட்கிறார்கள். ஆனால், ஸ்வாமிகளுடைய பூர்வாஶ்ரம வாழ்க்கை, திருமணத்திற்குள் இருந்து கொண்டும் எப்படி பக்தியை வளர்த்துக் கொள்ளலாம் என்பதற்கு நமக்கு ஒரு பாடமாக இருக்கிறது. அதனால், அதையும் பேச வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

ஸ்வாமிகளுடைய தர்மபத்னி வைதிக குடும்பத்திலிருந்து வந்தவர். திருமணமாகி ஐந்து வருடங்கள் வரை அவர், எப்போதும் மடிசார் அணிந்து கொண்டு, ஸ்வாமிகளுடைய பூஜைக்கு எடுத்து வைப்பது, இப்படி பல விதங்களில் அவருக்கு அனுசரணையாக இருந்து வந்தார்கள். ஆனால் அதன் பின் ஏதோ ஒரு பூர்வ வினையால் அவருடைய மனநிலை பாதிக்கப்பட்டது. சத்தம் போடுவது, பொருட்களைத் தூக்கிப் போடுவது, போன்ற நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. ஆனால் நாங்கள் அவரை பார்க்கும் போது அப்படி எந்த கோப செயலையும் பார்த்ததில்லை. மிகவும் இனிமையாக அனைவரையும் வரவேற்று ‘ஏதாவது சாப்பிடுகிறாயா? குடிக்கிறாயா?’ என்று உபசரிப்பார்கள்.

ஒருமுறை ஸ்வாமிகள் எனக்கு மூக பஞ்சஶதீ படிக்கும் போது,
க்ஷணாத்தே காமாக்ஷி ப்⁴ரமரஸுஷமாஶிக்ஷணகு³ரு:
கடாக்ஷவ்யாக்ஷேபோ மம ப⁴வது மோக்ஷாய விபதா³ம் ।
நரீநர்து ஸ்வைரம் வசநலஹரீ நிர்ஜரபுரீ-
ஸரித்³வீசீநீசீகரணபடுராஸ்யே மம ஸதா³ ॥ (ஸ்துதி சதகம் 49)

என்ற ஶ்லோகத்தைப் படித்தார். இதில் முதல் வரிக்கு “ஹே காமாக்ஷி உன்னுடைய கடாக்ஷம் ஒரு க்ஷணத்தில் எனக்கு வரும் ஆபத்துகளைப் போக்க வேண்டும்”, என்று பொருள். அப்போது ஸ்வாமிகள் சொன்னார், ‘ஒருமுறை என்னுடைய மனைவி ஹிஸ்டீரியா பிடியில் இருந்த போது ஒரு பெரிய தாம்பாளத்தைத் தூக்கி என் பக்கமாக வீசினாள். அதன் முனை அவ்வளவு கூர்மையாக இருந்தது. அது என் காலுக்கு அருகில் விழுந்தது, என் காலின் மேல் விழுந்திருந்தால் காலைத் துண்டித்திருக்கும். நான் இந்த ஶ்லோகத்தை படித்துக் கொண்டிருந்தேன். காமாக்ஷி கடாக்ஷம் அன்று என்னை அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றியது’ என்று சொன்னார்.

இப்பேற்ப்பட்ட மனைவியோடு அவர் முப்பது வருடங்கள் குடித்தனம் நடத்தி, எட்டு குழந்தைகளைப் பெற்றுக் கொண்டார். அதற்கு காரணம்,

வைத்தியர்கள் “நீங்கள் உங்களுடைய மனைவிக்கு அனுசரணையாக நடந்து கொண்டால், அவருடைய அந்த ஹிஸ்டீரியாவின் தாக்கம் குறைவாக இருக்கும்” என்று சொன்னதாலும், அவருடைய மனைவிக்கு இல்லற இன்பத்தில் அதிகமாக ஈடுபாடு இருந்ததாலும், ஸ்வாமிகளுக்குக் கருத்தடை செய்து கொள்வது தர்ம விரோதம் என்ற நம்பிக்கை இருந்ததாலும், பல குழந்தைகள் பிறந்தார்கள். “அவருக்கு வந்து பிறந்த குழந்தைகள் எல்லாருமே மோக்ஷமடைவதற்காக வந்திருக்கிறார்கள்” என்று மஹா பெரியவா சொல்லியிருக்கிறார்.

இது போன்ற மனைவியோடு ஸ்வாமிகள் குடித்தனம் நடத்தியது அவருடைய அபார பொறுமையையும், ஏகபத்னி விரதத்தில் அவருக்கு உள்ள நம்பிக்கையும் காண்பிக்கிறது.

இதை விட ஆச்சரியம் என்னவென்றால், அவருக்கு ஒரு அறுபது வயது இருக்கும் போது, நான் அவருக்கு விருப்பமான ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் சரித்ரத்தை அவரிடம் படித்துக் கொண்டிருந்தேன். அவரும் ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அதில் “ஒரு நாள் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் தர்மபத்னி அவரை வந்து வணங்கி, ‘தர்ம ஸம்வர்த்தனி அம்மா என்னை கூப்பிடுகிறாள், இந்த ஜன்மத்தில் உங்களுக்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் கிடைத்தது. நான் விடை பெற்றுக் கொள்கிறேன்’ என்று சொல்லி விட்டு அன்றிரவு அம்பாளின் திருவடிகளை அடைந்தார்கள்” என்பதைப் படித்தேன்.

அப்போது ஸ்வாமிகள் சொன்னார், கீழே இருக்கும் ஜீவனின், (அவருடைய மனைவி) வியாதி கஷ்டமும், அதனால் பிறருக்கு ஏற்பட்ட சிரமமும் தான் உலகத்திற்குத் தெரியும். ஆனால், அவளுக்கு என் மேலுள்ள அன்பும், நான் செய்யும் காரியத்தின் மேலுள்ள மதிப்பும் எனக்குத் தான் தெரியும் என்று சொன்னார். நான் வியந்து போய் விட்டேன். முருக பக்தையான அந்த மாமியும், ஒரு ஆடி கிருத்திகை அன்று ஸ்கந்த சாயுஜ்யம் அடைந்தார்கள்.

நம்முடைய வாழ்க்கைத் துணை நமக்கு பிடித்த விதத்தில் நடந்து கொள்ளவில்லை, என்னை புரிந்து கொள்ளவில்லை, என்னை மதிக்கவில்லை, போன்ற எண்ணங்களில் நாம் எத்தனை மணி நேரங்கள் செலவிடுகிறோம்? அந்த நேரத்தையெல்லாம் ஸ்வாமிகள் பகவானின் த்யானத்தில் செலவிட்டதால், அவருக்குத் தான் கடந்து வந்த இல்லற வாழ்க்கையின் கஷ்டங்களே ஞாபகமில்லை. இப்படித் தன்னுடைய

மனைவி தன்னிடம் காட்டிய அன்பை மட்டும் நினைவு கூர்கிறார். அமைதிக்குத் தேவை, அமைதியான சூழ்நிலைகள் அல்ல; மாறாக பக்தியின் மூலம் அகந்தையை போக்கிக் கொண்டு, இறைவனின் சித்தத்தை எந்தக் குறையும் சொல்லாமல் ஏற்றுக் கொள்ளுதல், என்பதை ஸ்வாமிகள் மீண்டும் மீண்டும் நிரூபித்தார்.

ஒரு கட்டத்திற்குப் பின், அவர் மனைவி, இரவில் மாடிக்கு வருவது நின்று விட்டது. அதன் பின் பத்து வருடங்கள், கனவிலும் நனவிலும் தன் மனத்திலோ உடலிலோ காமம் எழவில்லை என்பதை பரிசோதித்து, பின்னர் சிவன் சாரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு ஸ்வாமிகள் 63 வயதில் ஸந்நியாசம் ஏற்றுக் கொண்டார்.

அதே நேரத்தில், அவரிடம் வருபவர்களின் பக்குவம் அவருக்கு முழுமையாகத் தெரியும் என்பதால், அவரவர் தங்களின் கடமைகளைத் தவறாமல் ஆற்றிக் கொண்டே, கிடைக்கும் நேரத்தில் பக்தி செய்து, பின்னர் பக்குவம் வர வர அதைத் தீவிரப்படுத்தும் முறையில் தான் எல்லோரையும் வழி நடத்தினார்.

மஹா பெரியவாளும் அப்படியே தான் பக்தர்களைக் கையாண்டார். இதற்கு உதாரணம் சொல்கிறேன். மஹா பெரியவா ஒரு முறை பாகவத ஸப்தாஹத்தின் போது, வி.ஜே.ஆர் மாமாவின் தம்பி சீதாராமனிடம், "உன் அண்ணா வந்திருக்காரா? உன் அண்ணா வந்திருக்காரா?" என்று கேட்டுக் கொண்டே இருந்தாராம். பெரியவா அவரைத் கேட்பதை அறிந்த ஸ்வாமிகள், மறு தினம் காலையில் மாமாவிடம், "இன்று காலையில் இங்கே இருக்கும் காரியங்களை உன் தம்பி கவனித்துக் கொள்ளட்டும், நீ போய் பெரியவாளைப் பார்" என்று கூறி அனுப்பினார். பெரியவா அன்று வி.ஜே.ஆர் மாமாவிடம் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டு இருந்தாராம். "சுபாச்ரயம்! புரிகிறதா? நீ பிடித்தது புளியங் கொம்பாகப் பிடித்திருக்கிறாய், (இந்த உன் குரு உனக்கு உன்னதமான பிடிப்பாக, துணையாக இருப்பர்) என்று அருளினார். அதோடு, "பாகவதம் கேட்க வந்த உங்களை எல்லாம் பார்ப்பதே எங்களுக்குப் புண்ணியம்" என்றெல்லாம் ரொம்ப நேரம் பேசினாராம்.

முடிவில் வி.ஜே.ஆர் மாமா பெரியவாளிடம், "நான் என் ரயில்வே வேலையை விட்டுவிடலாமா என்று பார்க்கிறேன் பெரியவா" என்று கேட்டாராம். அதற்குப் பெரியவா, "அது பாட்டிற்கு இருந்து விட்டுப்

போகட்டும்" என்று சொல்லி விட்டாராம். அந்த ரயில்வே வேலையில் அவருடைய மேலதிகாரி அனுகூலமாக இருந்ததால், அவரால் ஸ்வாமிகளுக்குச் சிறந்த கைங்கர்யம் செய்ய முடிந்தது. பின்னாளில் பென்ஷனும் வந்தது. பெரியவா தரிசனத்திற்கு யார் கேட்டாலும் டிக்கெட் வாங்கிக் கொடுத்து உதவுவார். வேலையில் இருந்ததால் இந்த மாதிரி கைங்கர்யங்களை அவரால் செய்ய முடிந்தது!

**என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கி ஆண்ட வள்ளல்**

மகான்களின் அனுக்ரஹம் இருந்தால் வாழ்க்கையில் எவ்வளவு ஆச்சரியமான விஷயங்கள் நடக்கும் என்பதற்கு என் அனுபவங்களையே சொல்கிறேன். நான் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்து ஆறு வருடங்கள், ஒரு நாள் கூடத் தவறாமல் தினமும் ஸ்வாமிகளிடம் சென்று விடுவேன். நான் ஐடி (IT) துறையில், தாம்பரத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். மாலை ஐந்தேகாலுக்கு எல்லாம் வேலையை முடித்துக் கிளம்பி விடுவேன். அந்த வருடங்களுக்குள் தான் எனக்குத் திருமணமானது, குழந்தைகள் பிறந்தார்கள்; ஆனாலும் ஸ்வாமிகளிடம் போவதை நான் நிறுத்தவில்லை, அதற்குப் பகவான் வழிவகை செய்தார். மகான்கள் நினைத்தால் நம்மால் நிச்சயம் பஜனம் பண்ண முடியும்.

ஒரு முறை 23 வயதில் நான் ஸ்வாமிகளிடம், "நான் வேலையை விட்டுவிட்டு உங்களைப் போலவே எப்போதும் படித்துக் கொண்டு இருக்கலாம் என்று ஆசைப் படுகிறேன்" என்றேன். அதற்கு அவர் "இல்லை" என்று மறுத்து விட்டார். ஸ்வாமிகள் ஒரு ஜோசியரைக் கொண்டு என் ஜாதகத்தைப் பார்த்தார். சிம்ம லக்னம், அதில் சூரியன், இரண்டில் குரு, புதன். புதன் உச்சத்தில் இருக்கிறார், நான்கில் செவ்வாய், ஐந்தில் சந்திரன். பூர்வ புண்ணியம் இருந்ததால் தான் எனக்கு அதிக சிரமமின்றி மகான்களின் தரிசனம் கிடைத்திருக்கிறது. பதினொன்றில் சுக்ரன். ஸ்வாமிகள் “நீ விச்வநாத ஐயரைப் போலப் பெரிய பணக்காரனாக இருப்பாய் என்று ஜோசியர் சொல்கிறார்’ என்றார். நான் ஸ்வாமிகளின் திருவடிகளை நமஸ்கரித்து, "பெரியவா, நான் என்னவோ ஆன்மீகம் என்ற இந்த எக்ஸ்ட்ரீமில் பேசிக் கொண்டிருக்கிறேன்; நீங்கள் என்னை அந்த (உலகாயத) எக்ஸ்ட்ரீமிற்குத் தள்ளி விட்டுவிடாதீர்கள்! என்னை நீங்கள் என்றும் கைவிடக் கூடாது" என்று வேண்டிக் கொண்டேன்.

அவருடைய அனுக்ரஹத்தால் தான் அவ்வளவு நான் அந்தப் பக்கமாகப் போகவில்லை. நான் அமெரிக்காவிலிருந்து வேலையை விட்டுட்டு வந்தபோது, ஸ்வாமிகள் எல்லாரிடமும் சந்தோஷத்தோடு, "இவன் நான் சொன்ன உடனே அமெரிக்காவை விட்டுட்டு வந்து விட்டான், இது எட்டாவது உலக அதிசயம் இல்லையா?" என்று சொல்லுவார். ஒரு முறை நான் ஸ்வாமிகள் முன்னிலையில் யாரோ ஒருவரிடம், "நான் அமெரிக்காவை விட்டு வந்துவிட்டேன்" என்று கொஞ்சம் பெருமையாகச் சொன்னேன். வந்தவர் போன உடனே ஸ்வாமிகள் என்னைத் தனியாகக் கூப்பிட்டுச் சொன்னார்: "நீ அந்த மாதிரி உன்னைப் பற்றிப் பெருமையாகப் பேசக் கூடாது. நீ அங்கிருந்த போது, 'நான் இங்கே இருந்தால் வீணாய்ப் போய்விடுவேன் பகவானே; இங்கே இருந்தால் கண்ணையும் காதையும் மூடிக் கொண்டு வெறும் பணத்தை மட்டும் சம்பாதிக்க முடியாது; இந்த உலகக் கவர்ச்சிகள் எல்லாம் என் மனதைக் கெடுத்து விடும், அதனால் என்னைக் காப்பாற்றுங்கள்"' என்று நீ வேண்டிக் கொண்டதால் தானே அம்பாள் உன்னை இங்கே வரவழைத்தாள்!" என்றார்.

நான் முதன் முதலில் 15 வயதில் ஸ்வாமிகளைப் பார்த்த போது, இனிமையான பேச்சும் வர வேண்டும் என்ற ப்ரார்த்தனைக்கு அவர் எனக்கு (மூக பஞ்சஞ்சதீ பாதாரவிந்தம் 100வது ஶ்லோகம்)

மனீஷாம்’ மாஹேந்த்³ரீம்’ ககுப⁴மிவ தே காமபி த³ஶாம்’
ப்ரத⁴த்தே காமாக்ஷ்யா: சரணதருணாதி³த்யகிரணஃ |
யதீ³யே ஸம்பர்கே த்⁴ரு’தரஸமரந்தா³ கவயதாம்’
பரீபாகம்’ த⁴த்தே பரிமலவதீ ஸூக்திநலினீ ||
என்ற ஒரு அழகான ஶ்லோகத்தைச் சொல்லிக் கொடுத்தார். அதன் பிற்பகுதியில், "அம்பாளுடைய சரணாரவிந்தம் என்ற சூரியன் நம் மனதில் உதித்தால், தேன் சொட்டும் தாமரை மலர்வது போல நம் வாயிலிருந்து நல்ல வாக்கு பிறக்கும்" என்று வரும். நான் இன்றும் எங்காவது ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்ற வேண்டும் என்றால், இந்த ஶ்லோகத்தைச் சொல்லிவிட்டுத் தான் தொடங்குவேன்.

ஸ்வாமிகள் அன்று முப்பது வயதில் நான் திரும்ப வந்தபின் அந்தப் பழைய சம்பவத்தை நினைவு கூர்ந்து சொன்னார்: "நீ பதினைந்து வயதில் வந்த போது ஒரு ஶ்லோகம் கற்றுக் கொண்டாயே, அதன் முதல் பகுதியில், 'மனதில் அம்பாளின் பாதம் என்ற சூரியன் உதித்தால், கிழக்கு

வெளுப்பது போலப் புத்தியில் ஒரு பக்குவம் ஏற்படும்' என்று இருக்கிறது. அந்தப் பக்குவத்தை உனக்குக் கொடுத்து, அமெரிக்காவை விட்டுட்டு இங்கே வருவதற்கு அம்பாள் தான் அனுக்ரஹம் பண்ணியிருக்கிறாள். அதனால் நீ உன்னுடைய பெருமையாக இதைப் பேசக் கூடாது. அதாவது, 'உன் நல்வினைகளையும் குறைத்து உன்னை மீட்டுக் கொண்டு வந்திருக்கிறேன்' என்பதை ஸூக்ஷ்மமாக உணர்த்தினார்.

அன்றிலிருந்து நான் கவனமாகி விட்டேன். நாம் எப்போதும் அடக்கத்தோடு பக்தி செய்து கொண்டே போக வேண்டும்; எந்த இடத்திலும் பெருமை பேசக் கூடாது என்று புரிந்து கொண்டேன்.

மெதுமெதுவாக பகவத் பஜனம் செய்து அவரை அடைய வேண்டும் என்று பார்த்தோம் அல்லவா? அந்த ஶ்லோகத்தின் இறுதியில் பட்டத்ரி அழகாக முடிக்கிறார். **ஸத்தாஸ்பூ²ர்திப்ரியத்வாத்மகம்:** ஸச்சிதானந்த சொரூபமாய் விளங்குவதும், **அகி²லபதா³ர்தே²ஷு பி⁴ந்நேஷ்வபி⁴ந்நம்:** அத்தனை உலகப் பொருட்களாகவும் வெவ்வேறாகக் காணப்பட்டாலும், உண்மையில் அவற்றுள் பிரிவின்றி ஒன்றாகவே இருப்பது நீ தான். **நிர்மூலம் விஶ்வமூலம், பரமமஹமிதி, த்வத்³விபோ³த⁴ம், விஶூத்³த⁴ம்** தனக்கு ஒரு காரணம் இல்லாத தனிமுதலாய், இந்த விச்வத்திற்கே காரணமாய் விளங்கும் அந்தப் பரப்பிரம்மம் தான் நான், என்கிற தூய்மையான சொரூப ஞானத்தை அவர்கள் அடைகிறார்கள்.

### அவரவருக்கு உகந்த வழியை தேர்ந்து கொள்ளலாம்

96வது தசகம் 4வது ஶ்லோகம்:

**ज्ञानं कर्मापि भक्तिः, त्रितयमिह भवत्प्रापकं, तत्र तावत्**
**निर्विण्णानां अशेषे विषये, इह भवेत् ज्ञानयोगे अधिकारः ।**
**सक्तानां कर्मयोगः, त्वयि हि विनिहितः. ये तु नात्यन्तसक्ताः,**
**नापि अत्यन्तं विरक्ताः, त्वयि च धृतरसाः भक्तियोगो हि अमीषाम् ॥**

**ஜ்ஞாநம் கர்மாபி ப⁴க்தி:, த்ரிதயமிஹ ப⁴வத்ப்ராபகம்** "பகவானே! உன்னை அடைவதற்கு ஞானம், கர்மா, பக்தி என்று மூன்று வழிகளை நீ கீதையில் சொல்லி இருக்கிறாய்."
**தத்ர தாவத், நிர்விண்ணாநாம், அஶேஷே விஷயே, இஹ ப⁴வேத் ஜ்ஞாநயோகே³ அதி⁴கார:** அவற்றுள், உலக விஷயங்கள்

எல்லாவற்றிலிருந்தும் முற்றிலுமாக மனதை எடுத்து, பற்றற்ற நிலையை அடைந்தவர்களுக்கு மட்டும் தான் 'ஞான யோகத்தில்' அதிகாரம் உண்டு. மனதில் லேசான பொருளாசையோ உலக ஆசையோ இருந்தால் கூட ஞானப் பாதையில் இடமில்லை.

**ஸக்தானாம் கர்மயோக³:** உலக விஷயங்களில் இன்னும் பற்று இருப்பவர்களுக்குக் 'கர்ம யோகம்' சொல்லப்பட்டிருக்கிறது. கடமைகளைப் பகவானுக்கு அர்ப்பணமாகச் செய்ய வேண்டும்.
**த்வயி ஹி விநிஹித:, யே து நாத்யந்தஸக்தா:, நாபி அத்யந்தம்' விரக்தா:, த்வயி ச த்⁴ரு'தரஸா:, ப⁴க்தியோகோ³ ஹி, அமீஷாம்** ஆனால், உன்னிடத்தில் மிகுந்த அன்பு வைத்து, உலகப்பற்று அவ்வளவு ஆழமாக இல்லாமல் ('காசுதான் கடவுள்' என்று அலையாமல்), அதே சமயம் முற்றிலுமாக விரக்தியும் அடையாமல், உன்னிடம் ப்ரியம் வைத்திருக்கிறார்களே, அவர்களுக்குரியது தான் இந்த 'பக்தி யோகம்'.

நமக்கு இந்த பக்தி யோகம் தான் உகந்தது! ஸ்வாமிகள் வேதம் படித்தவர். பிரம்மயக்ஞம் செய்வார். அப்படி எல்லா கடமைகளையும் தப்பாமல் செய்து, பக்தியால் ஞானம் அடைந்து ப்ரகாசித்த அவரே, பெரியவா முன்னாடி போய் நமஸ்கரிக்கும் போது

விதி³தா ந மயா விஶதை³ககலா
ந ச கிஞ்சந காஞ்சநமஸ்தி கு³ரோ ।
த்³ருதமேவ விதே⁴ஹி க்ருபாம் ஸஹஜாம்
ப⁴வ ஶங்கர தே³ஶிக மே ஶரணம் ॥
(எனக்கு எந்த சாஸ்த்ரமும் தெரியாது, என்னிடம் செல்வமும் இல்லை, சங்கர குருவே, நீங்கள் தான் எனக்குக் கிருபை புரிய வேண்டும்) என்று சொல்லும் போது, நாம் எம்மத்திரம். நமக்கு பக்தி யோகமே தஞ்சம்.

அடுத்து, 96வது தசகத்தில் 5வது ஶ்லோகம்

**ज्ञानं त्वद्भक्ततां वा लघु, सुकृतवशान्मर्त्यलोके लभन्ते,**
**तस्मात्तत्रैव जन्म स्पृहयति भगवन्, नाकगो नारको वा ।**
**आविष्टं मां तु दैवात्, भवजलनिधिपोतायिते मर्त्यदेहे,**
**त्वं कृत्वा कर्णधारं गुरुं, अनुगुणवातायितः, तारयेथाः ॥**

**ஜ்ஞாநம் த்வத்³ப⁴க்ததாம் வா லகு⁴, ஸுக்ருதவஶாந்மர்த்யலோகே லப⁴ந்தே** இந்த பூவுலகில் (மர்த்ய லோகத்தில்) வந்து பிறந்தவர்களுக்கு, பூர்வ புண்ணியத்தின் காரணமாக ஞானமும் பக்தியும் மிக எளிதாக, சிறிய முயற்சியிலேயே கிடைத்து விடுகிறது. அதனால் தான், **தஸ்மாத்தத்ரைவ ஜந்ம ஸ்ப்ருஹயதி ப⁴க³வன், நாககோ³ நாரகோ வா** சொர்க்க லோகத்தில் இருப்பவர்களும், நரகத்தில் அவதிப்படுபவர்களும் கூட, 'மறுபடி இந்த பூமியில் போய் பிறக்க மாட்டோமா' என்று ஆசைப்படுகிறார்கள்.

நான் வெளிநாட்டில் (US) இருந்திருக்கிறேன். அங்கு வாழ்க்கை வசதியாக, இருக்கும். வங்கியில் பணம் இருக்கும், அத்தனை நவீன வசதிகளும் இருக்கும். ஆனால், அங்கே உழைப்பும் அழுத்தமும் மிக அதிகம். காரின் மேல் பனி கொட்டினால், காலையில் எழுந்து அதைச் சுரண்டி, காரை வெளியில் எடுப்பதற்கே இரண்டு மணி நேரம் ஆகும். வார இறுதி நாட்களில் ஓடி ஓடிப் போய் அத்தனை பொருட்களையும் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும், கார் இல்லாவிட்டால் அங்கே ஒரு அடியும் எடுத்து வைக்க முடியாது. இப்படி அந்த வாழ்க்கை தங்கக் கூண்டு போல எனக்கு தோன்றும். சில புண்ணியசாலிகள் அங்கிருந்து கொண்டே சனாதன தர்மத்திற்கு எவ்வளவோ தொண்டுகள் செய்கிறார்கள், அது ஒரு பாக்யம். ஆனால், பொதுவாக மிக உசத்தியான சொகுசு வாழ்க்கையாக இருந்தாலும் சரி, அல்லது மிகக் கடுமையான வறுமையாக இருந்தாலும் சரி, அந்தந்த கவலைகள் மனிதனை அரித்துக் கொண்டே தான் இருக்கும். இவை இரண்டுமே இல்லாமல், பகவானை அமைதியாகப் பஜனம் செய்வதற்கு சௌகரியமான இடம், இந்த புண்ணிய பூமியான பாரதம் தான்.

இந்த பூமியில் பிறப்பது பெரும் பேறு என்பதை மாணிக்கவாசகரும் பாடுகிறார்:

புவனியில் போய் பிறவாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்த பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந்துறையுறை வாய் திருமாலாம்
அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே

பிரம்மா, விஷ்ணு போன்ற தேவர்கள் கூட, "நாமெல்லாம் இந்தத் தேவலோகத்தில் மாட்டித் தவிக்கிறோமே; பூலோகத்தில், திருப்பெருந்துறையில் போய் மனிதனாகப் பிறந்திருந்தால் சிவபெருமான் நம்மை எளிதாக ஆட்கொண்டிருப்பாரே!" என்று ஏங்குகிறார்களாம். அந்த அளவிற்கு இந்த பூமியில் பிறந்து பக்தி செய்வதே உசத்தியானது.

### படகு, மாலுமி, அனுக்ரஹக் காற்று - மூன்றும் வேண்டும்

**ஆவிஷ்டம் மாம் து தை³வாத், ப⁴வஜலநிதி⁴போதாயிதே, மர்த்யதே³ஹே** ஏதோ தெய்வாதீனமாக, பூர்வ புண்ணியத்தால் நான் இந்த பூமியில் வந்து பிறந்திருக்கிறேன். இந்த சம்ஸாரக் கடலைக் கடப்பதற்குக் கைகொடுக்கும் ஒரு படகு போல இந்த மனித உடல் எனக்குக் கிடைத்திருக்கிறது. **த்வம், க்ருத்வா கர்ணதா⁴ரம் கு³ரும், அநுகு³ணவாதாயித:, தாரயேதா²:** நீயே இந்த ஓடத்தைச் செலுத்துவதற்கு மிகச் சிறந்த படகோட்டியாக ஒரு ஸத்குருவையும் எனக்குக் காட்டியருளி, உன் அனுக்ரஹம் என்ற அனுகூலமான காற்றையும் வீசச் செய்து, என்னை இந்த பவக் கடலிலிருந்து பத்திரமாகக் கரையேற்ற வேண்டும்!

ஸ்ரீ சுந்தர்குமார் அண்ணா ஸ்வாமிகளின் ஒவ்வொரு ஆராதனையின் போதும் ஸ்வாமிகளைப் பற்றி பத்து, பதினைந்து நிமிடங்கள் பேசுவார். நான் ஒவ்வொரு முறையும் அதைக் கேட்டிருக்கிறேன்; அதில் நாலைந்து முறையாவது இந்த ஶ்லோகத்தை மேற்கோள் காட்டியுள்ளார். "நமக்கு ஒரு உன்னதமான குரு கிடைத்திருக்கிறார், இந்த மனிதப் பிறவியும் கிடைத்திருக்கிறது. பகவான் நம்மை எப்படியாவது கரையேற்ற வேண்டும் என்று வேண்டிக் கொள்வோம்" என்பார்.

நமக்கு நல்ல உடம்பும், உன்னதமான குருநாதரும் கிடைத்து விட்டால் மட்டும் போதாது; பகவானுடைய அனுக்ரஹம் என்ற அனுகூலக் காற்று வீசினால் தான் நாம் கரையேற முடியும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். தெய்வீகத்தில் முன்னேற குரு பக்தி மட்டுமே கூட போதும் என்றாலும், தெய்வங்களை நாம் ஒருபோதும் குறைத்து பேசிவிடக் கூடாது. இதற்கு விளக்கமாக மூக பஞ்சஶதீயில் ஒரு அழகான ஶ்லோகம் இருக்கிறது. ஆர்யா சதகம் 97வது ஶ்லோகம்

ஸத்க்ருததே³ஶிகசரணா: ஸபீ³ஜநிர்பீ³ஜயோக³நிஶ்ரேண்யா ।

அபவர்க³ஸௌத⁴வளபீ⁴மாரோஹந்தி அம்ப³ கே(அ)பி தவ க்ருபயா ॥
இதை ஸ்வாமிகள்
“அம்ப³ கே(அ)பி தவ க்ருபயா ஸத்க்ருத தே³ஸிகசரணாஹா
அம்ப³ கே(அ)பி தவ க்ருபயா ஸபீ³ஜநிர்பீ³ஜயோக³நிஶ்ரேண்யா
அம்ப³ கே(அ)பி தவ க்ருபயா அபவர்க³ஸௌத⁴வளபீ⁴மாரோஹந்தி
அம்ப³ கே(அ)பி தவக்ருபயா” என்று படிக்க வேண்டும் என்று சொல்லித் தந்தார். "அம்பா! உன்னுடைய அளவற்ற கிருபை இருந்தால்தான் ஒருவருக்கு நல்ல குரு கிடைப்பார்; அந்த குருவின் திருவடிகளுக்குக் கைங்கர்யம் செய்ய வேண்டும் என்ற புத்தியும் பிறக்கும். உன்னுடைய அளவற்ற கிருபை இருந்தால்தான் அவர் காட்டிய வழியில் சகுண, நிர்க்குண உபாசனைகள் என்ற படிகளில், வழுக்கி விழுந்துவிடாமல் கவனமாக ஏற முடியும். முடிவில் மோக்ஷம் என்ற மாளிகையின் உப்பரிகையை அடையும் வரை, உன்னுடைய கிருபை என்ற காற்று வீச வேண்டும்" என்பது இதன் அர்த்தம்.

மஹா பெரியவாளிடம் நாற்பது வருடங்களுக்கும் மேலாகக் கைங்கர்யம் செய்த 'காசி கண்ணன்' என்று ஒருவர் இருந்தார்; மிகச் சிறந்த அறிவாளி. அவர் தன் பெரியவா அனுபவங்களை பகிர்ந்த ஆடியோக்களில் ஒன்றில், "மஹா பெரியவா எனக்கு இந்த மூக பஞ்சஶதீ ஶ்லோகத்தை இப்படி மாற்றி படிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார்" என்று குறிப்பிட்டிருந்தார். அதைக் கேட்டவுடன் எனக்கு மிகவும் சந்தோஷமாகி விட்டது; பெரியவா தான் நம் ஸ்வாமிகளுக்கும் இந்த ரகசியத்தைச் சொல்லிக் கொடுத்திருப்பார் என்று நான் உணர்ந்து கொண்டேன். எனவே, பகவானின் அனுக்ரஹக் காற்று வீச நாம் என்றும் அடக்கத்தோடு அவனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். சில பேர் பெரிய மகான்களுக்குச் சிஷ்யர்களாக இருந்தும் கூட, பின்னாளில் வழித்தவறி போவதைப் பார்க்கிறோம்; அதற்கு அவர்களுக்கு அந்த அனுக்ரஹக் காற்று கிடைக்கவில்லை என்று தான் அர்த்தம்.

96வது தசகம் 6வது ஶ்லோகம்:

**अव्यक्तं मार्गयन्तः, श्रुतिभिरपि नयैः, केवलज्ञानलुब्धाः**
**क्लिश्यन्ते अतीव, सिद्धिं बहुतरजनुषां अन्त एव आप्नुवन्ति ।**
**दूरस्थः कर्मयोगोऽपि च परं अफले, नन्वयं भक्तियोगस्तु**
**आमूलादेव हृद्यः, त्वरितं अयि भवत्प्रापको, वर्धतां मे ॥**

**அவ்யக்தம் மார்க³யந்த:, ஶ்ருதிபி⁴ரபி நயை:, கேவலஜ்ஞாநலுப்³தா⁴:** சில பேர் வெறும் ஞானத்தை மட்டும் தேடி, உபநிஷத்துகளைப் படித்து, நியாய சாஸ்த்ரங்களையும் மீமாம்ஸையையும் ஆராய்ந்து, கண்ணுக்குத் தெரியாத அந்த 'அவ்யக்தமான' பரம்பொருளைத் தேடி அலைகிறார்கள். **க்லிஶ்யந்தே அதீவ** ஆனால், அவர்கள் அடையும் துன்பமும் உழைப்பும் மிக அதிகம் **ஸித்³தி⁴ம் ப³ஹுதரஜநுஷாம் அந்த ஏவ ஆப்நுவந்தி** அவர்கள் எத்தனையோ பிறவிகளின் முடிவில் தான், உன்னை வந்து அடைகிறார்கள்.

**வேதாந்தம் படித்தது போதும்; திருவாசகம் படியுங்கள்**

ஸ்வாமிகள் ஒரு விஷயம் சொல்வார்: "நாம் ஞானத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும், ஆன்மீக விஷயங்களில் நாம் அறிவற்றவர்களாக இருந்துவிடக் கூடாது." அதற்காகவே, விஜயதசமி அன்று வேதாந்தம் கேட்க வேண்டும் என்ற பெரியவாளின் ஆக்ஞைப்படி, ஸ்வாமிகள் ஒரு சிறந்த பண்டிதரை வரவழைத்து ஒரு மணி நேரம் சங்கர பாஷ்யமோ அல்லது வேதாந்த பரமாக வேறு ஏதாவது படிக்கச் சொல்லித் தானும் அமர்ந்து கேட்பார். நாமும் தெரிந்து கொள்ள வேண்டும்; ஆனால், எப்போதும் வெறும் வேதாந்த லெக்சர்களை மட்டும் கேட்டால் போதாது.

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் பாடுகிறார்:
"உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன் கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்..." எனக்குக் குற்றாலத்தில் இருக்கும் உன்னுடைய திருவடிகளில், கன்றை நினைத்துக் கசிந்துருகும் பசுவைப் போல என் மனது உருக வேண்டும், அது மட்டும் போதும்; என் படிப்பெல்லாம் இத்தோடு முடியட்டும், இனிமேல் கற்பதற்கும் என்ன இருக்கிறது" என்கிறார்.

இரண்டு மணி நேரம் வேதாந்த லெக்சர் கேட்பதை விட, முழு மனதோடு திருவாசக முற்றோதல் செய்தால், அது எப்பேர்ப்பட்ட கல் நெஞ்சத்தையும் அப்படியே கரைத்து உருக வைத்து விடும். தமிழ் புரியவில்லை என்றால் ஒருமுறை அதன் அர்த்தத்தையும் சேர்த்துப் பாருங்கள்; நம் மனதையே பிழிந்து எடுத்துவிடும்! அதைத் தான் பட்டத்ரி இந்த ஶ்லோகத்தில் சொல்கிறார்.

ஆனால், புத்திஜீவிகளாக இருப்பவர்கள், "சும்மா ராத்திரியெல்லாம் பஜனை என்ற பெயரில் குதித்துக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா?" என்று கேட்பார்கள். இக்காலத்தில் பஜனை என்பது கொஞ்சம் பொழுது போக்காக மாறி விட்டதால் அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள். ஆனால், நம் ஸ்வாமிகளைப் போலப் பகவத் பஜனம் செய்து, அதன் மூலமாகவே உயர்ந்த ஞானத்தையும் வைராக்யத்தையும் அடைந்தவர்களை நேரில் பார்த்தால்தான் அதன் உண்மையான பெருமை புரியும்.

இந்த ராத்திரி முழுக்க பஜனை செய்வதை நம் ஸ்வாமிகள் கூட ஆதரிக்கவில்லை; “ஸத்குரு ஸ்வாமிகளும் அப்படிச் சொல்லவில்லை. மாலையில் ஆரம்பித்து, இரவுக்குள் பஜனையை முடித்துவிட்டுப் பகவானைத் தூங்க வைக்க வேண்டும். அதிகாலை நாலு மணிக்கு நாமும் எழுந்து கொள்ள வேண்டும்; அதை விடுத்து விடிய விடிய பஜனை செய்து விட்டு, காலை நாலு மணிக்கு பகவானை எழுப்ப வேண்டிய நேரத்தில் போய் அவரை தூங்க வைக்கக் கூடாது" என்று ஸ்வாமிகள் சொல்வார்.

**தூ³ரஸ்த²: கர்மயோகோ³(அ)பி ச பரம் அப²லே, நந்வயம் ப⁴க்தியோக³ஸ்து ஆமூலாதே³வ ஹ்ருத்³ய:** கர்ம யோகத்தின் பலன் என்பது சொர்க்காதி போகங்கள் தான்; அதன் மூலம் பரம்பொருளை அடைவது என்பது மிகவும் தூரத்திலுள்ளது. ஆனால், பக்தி யோகம் என்பது (ஆமூலாதே³வ) ஆரம்பிக்கும் இடத்திலிருந்தே (ஹ்ருத்³ய:) மனதிற்கு இன்பத்தைத் தரக்கூடியது. நாம் ராமாயண புத்தகத்தைத் திறந்து படிக்க ஆரம்பித்த விநாடியிலிருந்தே மனதில் ஆனந்தம் பொங்குகிறதல்லவா? **த்வரிதம் அயி ப⁴வத்ப்ராபகோ, வர்த⁴தாம் மே** அத்தகைய, விரைவில் உன்னை அடையச் செய்யும் மேலான பக்தி எனக்குள் நாளுக்கு நாள் வளரட்டும்!

96வது தசகம் 7வது ஶ்லோகம்:

**ज्ञानायैवातियत्नं मुनिः अपवदते, ब्रह्मतत्वं तु शृण्वन्,**
**गाढं त्वत्पादभक्तिं शरणमयति यः, तस्य मुक्तिः कराग्रे ।**
**त्वद्ध्यानेऽपीह तुल्या पुनः, असुकरता चित्तचाञ्चल्यहेतोः,**
**अभ्यासात् आशु शक्यं तदपि वशयितुं, त्वत्कृपा चारुताभ्याम् ॥**

**ஜ்ஞானாயைவாதியத்நம் முநி: அபவத³தே, ப்³ரஹ்மதத்வம் து ஶ்ருண்வன்** ஞானயோகத்தைப் பற்றிச் சொல்லும் போது, பக்தி

இல்லாமல் வெறும் ஞானத்தில் மட்டுமே அதிக முயற்சி பண்ணிக் கொண்டிருப்பதை வியாஸ பகவான் கொண்டாடவில்லை. பகவானுடைய பிரம்ம தத்துவத்தைக் கேட்டுவிட்டு, **கா³ட⁴ம் த்வத்பாத³ப⁴க்திம் ஶரணமயதி ய:, தஸ்ய முக்தி: கராக்³ரே** உன்னுடைய பக்தியைப் பண்ணினால் அவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல முக்தி மிக எளிதாகக் கிடைத்து விடுமே என்று சொல்கிறார்.

**பக்தி செய்தால் முக்தி கிடைக்கும் என்பதற்கு எது ஆதாரம்?**

இதற்கு பகவத் கீதையிலேயே ஆதாரம் இருக்கிறது.

மச்சித்தா மத்³க³தப்ராணா: போ³த⁴யந்த: பரஸ்பரம் ।
கத²யந்தஶ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச ॥
தேஷாம் ஸததயுக்தாநாம் ப⁴ஜதாம் ப்ரீதிபூர்வகம் ।
த³தா³மி பு³த்³தி⁴யோக³ம் தம் யேந மாமுபயாந்தி தே ॥
தேஷாமேவாநுகம்பார்த²ம் அஹமஜ்ஞாநஜம் தம: ।
நாஶயாம்யாத்மபா⁴வஸ்தோ² ஜ்ஞாநதீ³பேந பா⁴ஸ்வதா ॥
என்ற ஒரு 3 ஶ்லோகங்கள் 10வது அத்தியாத்துல வருகிறது.

இந்த ஶ்லோகங்களுடைய அர்த்தம் என்னவென்றால்,
மச்சித்தா: - என்னிடத்தில் மனதை வைத்தவர்கள்
மத்³க³தப்ராணா: - தன்னுடைய புலன்கள், உயிர் எல்லாமே எனக்காகவே வாழ்பவர்கள்
போ³த⁴யந்த: பரஸ்பரம் - என்னுடைய விஷயத்தையே ஒருத்தருக்கு ஒருத்தர் பேசிக் கொண்டு,
கத²யந்தஶ்ச மாம் நித்யம் – மத்த உலக விஷயங்களை பேசாமல் என்னையே பேசிக் கொண்டு,
துஷ்யந்திச்ச ரமந்தி ச – இதிலேயே திருப்திபட்டு கொண்டு இதுலேயே சந்தோஷப் பட்டு கொண்டு,
தேஷாம் ஸததயுக்தானாம் - ”ஆடும் பரிவேல் அணிசேவலென பாடும் பணியே பணியாய் அருள்வாய்” அன்று அந்த பணியை,
ப⁴ஜதாம் ப்ரீதிபூர்வகம் - பக்தியோடு என்னோட பஜனத்தை எந்த பக்கதர்கள் செய்கிறார்களோ
த³தா³மி பு³த்³தி⁴யோக³ம் தம் யேந மாமுபயாந்தி தே – அவர்களுக்கு என்னை வந்து அடையும்படியான ஒரு புத்தி யோகத்தை நான் அளிக்கறேன்.
தேஷாமேவாநுகம்பார்த²ம் - அவர்களுக்கு மட்டுமே கருணையினால்

அஹமஜ்ஞாநஜம் தம: நாஶயாமி - நான் அவர்களுடைய அஞ்ஞான இருளை போக்குகிறேன். எப்படி என்றால்
ஆத்மபா⁴வஸ்த:²- அவர்கள் மனதில் நான் குடியிருந்து,
ஜ்ஞாநதீ³பேந பா⁴ஸ்வதா - ஞான தீபத்தை அவர்கள் மனத்தில் ஏற்றி வைத்து அதனால அந்த அஞ்ஞான இருளை போக்குகிறேன்.

வெறும் ஞானப் பேச்சு மட்டும் பேசிக் கொண்டு பக்தி இல்லாதவர்களை அருணகிரிநாதர் அழகாகக் கேலி செய்கிறார். அவர்கள் எப்படி இருப்பார்கள் தெரியுமா?
"நீர்க் குமிழிக்கு நிகரென்பர் யாக்கை" — இந்த உடம்பு வெறும் நீர்க்குமிழி மாதிரிதான், சீக்கிரமே இதனுடைய ஆயுசு முடிந்துவிடும் என்று உடம்பின் நிலையாமையைப் பற்றிப் பேசுவார்கள்.
"நில்லாது செல்வம் பார்க்கும் இடத்து அந்த மின் போலும் என்பர்" — செல்வமெல்லாம் மின்னல் போல வந்து மறையக்கூடியது என்று தத்துவம் பேசுவார்கள்.
ஆனால், இப்படிப் பேசும் இவர்களுடைய வாசலில் யாராவது வந்து, "அம்மா, தாயே பசிக்கிறது!" என்று கையேந்தி நின்றால், "எங்கேயும் எழுந்திருப்பார்" அதாவது, அவர்களுக்குப் பிச்சை போட மனமில்லாமல் உடனே எழுந்து உள்ளே போய் ஒளிந்து கொள்வார்கள்!

"வேற்குமரற்கு அன்பு இல்லாதவர் ஞானம் மிகவும் நன்றே" என்று அருணகிரிநாதர் இவர்களைப் பார்த்துச் சிரிக்கிறார். பக்தி இல்லாததால் அவர்கள் மனது மிகக் கடினமாக இருக்கிறது. பக்தி பண்ணும் போது தான் மனதிற்குள் ஒரு ஈரம் வரும், வர வேண்டும்.

நம்முடைய ஸ்வாமிகள் அடிக்கடி சொல்வார்: "ராமாயணம் படித்துவிட்டு நெஞ்சில் ஈரம் வரவில்லை என்றால், படித்து என்ன பிரயோஜனம்?" சீதாதேவி ராமபிரானைப் பற்றிச் சொல்லும் போது, “ஆந்ருஸம்ஸ்யம் பரோ தர்ம: த்வத்த ஏவ மயா ச்ருத:” (பிறரிடம் கருணை காட்டுதல் மேலான தர்மம் என்று உன்னிடம் தான் கேட்டேன்) என்கிறாள். நாம் ராமாயணம் படித்தால் நம் மனதில் கருணை, ஈரம் ஆகியவை கண்டிப்பாகக் கசிய வேண்டும் என்று ஸ்வாமிகள் வலியுறுத்துவார்.

**த்வத்³த்⁴யாநே(அ)பீஹ துல்யா புந:, அஸுகரதா சித்தசாஞ்சல்யஹேதோ:, அப்⁴யாஸாத், ஆஶு ஶக்யம் தத³பி வஶயிதும், த்வத்க்ருபா சாருதாப்⁴யாம்** ஆனால், உன்னுடைய

தியானமும் பக்தியும் கூட ஆரம்பத்தில் அவ்வளவு எளிதானதாக இருப்பதில்லை; ஏனெனில் நம் மனது அடிக்கடி சஞ்சலப்பட்டுக் கொண்டே இருக்கிறது. ஆயினும், விடாத பயிற்சியினால் அந்த மனதை நம் வசத்திற்குக் கொண்டு வந்துவிட முடியும். ஏனெனில், இந்த பக்தி மார்க்கத்தில் உன்னுடைய கிருபையும் இருக்கிறது, உன்னுடைய திவ்ய ரூபத்தின் அழகும் இருக்கிறது!
பாகவதத்தில் உள்ளதை வைத்து இதை ஸ்வாமிகள் எப்படி விளக்குவார் தெரியுமா? "பக்தியில் நம்முடைய சொந்த முயற்சி என்பது வெறும் ஒன்-தேர்டு (1/3) தான். அடுத்த ஒன்-தேர்டு பகவானுடைய கிருபை; மீதமுள்ள ஒன்-தேர்டு அவனுடைய லீலைகளும், கதைகளும், திவ்ய ரூபமும் ஆகும். அவை அவ்வளவு அழகாக இருப்பதால், நம்மை அறியாமலேயே நம்மைத் தன்பால் ஈர்த்துக் கொள்ளும். நாம் அந்த முதல் மூன்றில் ஒரு பங்கு முயற்சியைப் போட்டுப் படிக்க ஆரம்பித்து விட்டால், பகவானின் கிருபையும் கதைகளும் சேர்ந்து கொண்டு நம்மை எளிதாகக் கரையேற்றி விடும்" என்பார்.

இதையே அருணகிரிநாதர் திருப்புகழில் அழகாக வேண்டுகிறார்:

"இரவு பகல் பல காலும் இயலிசை முத்தமிழ் கூறித்
திரமதனிற் றெளிவாகத் திருவருளைத் தருவாயே
பரகருணைப் பெருவாழ்வே பரசிவ தத்துவஞான
அரனருள் சற்புதல்வோனே அருணகிரிப் பெருமாளே"

"இரவும் பகலும் எந்நேரமும் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழால் உன்னைப் பாடி, உன்னுடைய திருவருளைப் பெற வேண்டும்" என்கிறார்.

"பக்தியால் யானுனைப் பல காலும் பற்றியே மா திருப்புகழ் பாடி
முத்தனாமாறேனைப் பெருவாழ்வின் முக்தியே சேர்வதற்கருள்வாயே
உத்தமாதான ஸற்குணனேயா ஒப்பிலாமாமணி கிரிவாஸா
வித்தகா ஞானசத்தி நிபாதா வெற்றிவேலாயுத பெருமாளே"

அந்த கான்ஸ்டன்சி (constancy - இடைவிடாத பஜனம்) மிகவும் முக்கியம்.

ஒவ்வொரு நாளும், இரவும் பகலும் பாட வேண்டும். ஸ்வாமிகள் கூறுவார்: "நாம் ஒரு நல்ல பூஜையையோ, ஒரு பாராயணத்தையோ ஆரம்பித்து விட்டால் மட்டும் போதும்; அதன் பிறகு பகவான் நம்மை ஒருபோதும்

கைவிடவே மாட்டார். நாம் ஒரு பத்து நாள் ஏதோ ஒரு சூழ்நிலையால் செய்யாமல் விட்டால் கூட, 'மறுபடி பாராயணம் செய்' என்று உள்ளுக்குள் இருந்து அவரே நம்மைத் தூண்டிக் கொண்டே இருப்பார். அதனால் ஆரம்பிப்பது தான் கஷ்டம்; ஆரம்பித்து விட்டால் பகவான் நம்மைத் வழி நடத்தி ஆட்கொள்வார்" என்பார்.

**பற்றுகளை விட முடியவில்லையே! என்ன செய்வது?**

அடுத்த ஶ்லோகம் நமக்கு ஒரு பெரிய நம்பிக்கையைத் தருகிறது. 96வது தசகத்தில் 8வது ஶ்லோகம்:

**निर्विण्णः कर्ममार्गे खलु, विषमतमे त्वत्कथादौ च, गाढं**
**जातश्रद्धोऽपि, कामान् अयि भुवनपते, नैव शक्नोमि हातुम् ।**
**तद्भूयो निश्चयेन, त्वयि निहितपराः, दोषबुद्ध्या भजन्स्तान्,**
**पुष्णीयां भक्तिमेव, त्वयि हृदयगते, मङ्क्षु नङ्क्ष्यन्ति सङ्गाः ॥**

**நிர்விண்ண: கர்மமார்கே³ க²லு, விஷமதமே த்வத்கதா²தௌ³ ச, கா³ட⁴ம் ஜாதஶ்ரத்³தோ⁴(அ)பி, காமான் அயி பு⁴வநபதே, நைவ ஶக்நோமி ஹாதும்**

"பகவானே! இந்த கர்ம மார்க்கங்கள் கடினமானவை என்று உணர்ந்து, அவற்றிலிருந்து மனதை திருப்பி விட்டேன். உன்னுடைய கதைகளின் மேல் எனக்கு ஆழமான நம்பிக்கையும் பிரியமும் வந்து விட்டது. ஆனாலும், என் மனதில் எழும் உலக ஆசைகளை என்னால் இன்னும் முழுமையாக விட முடியவில்லையே!" என்று வருந்துகிறார் பட்டத்ரி.

**தத்³பூ⁴யோ நிஶ்சயேந, த்வயி நிஹிதபரா:, தோ³ஷபு³த்³த்⁴யா ப⁴ஜன்ஸ்தான், புஷ்ணீயாம் ப⁴க்திமேவ, த்வயி ஹ்ருத³யக³தே, மங்க்ஷு, நங்க்ஷ்யந்தி ஸங்கா³:**

"ஆயினும், நான் சோர்ந்து போகாமல் உன்னிடத்திலேயே என் மனதை வைத்துக் கொண்டு, அந்த உலக போகங்களை அனுபவிக்கும் போதும் 'இது நிலையற்றது, துக்கத்தைத் தருவது' என்ற தோஷ புத்தியோடு அனுபவித்துக் கொண்டு, உன்னுடைய பக்தியை தொடர்ந்து வளர்த்துக் கொண்டே போவேன். நீ என் இதயத்திற்குள் வந்து அமர்ந்து விட்டால், என் அத்தனை ஆசைகளும் பற்றுகளும் விரைவில் ஒழிந்து விடும்!" என்கிறார். நாம் எப்பொழுது ஆன்மீகப் பாதையில் சோர்வடைந்தாலும், இந்த ஶ்லோகத்தைச் சொல்லி மீண்டும் பாராயணத்தில் உற்சாகத்தை வரவழைத்துக் கொள்ளலாம்.

**பிக்ஷு கீதை**

இதற்கடுத்த ஶ்லோகம் "பிக்ஷு கீதை"யின் சுருக்கமாகும். அவந்தி தேசத்தில் ஒரு ப்ராஹ்மணன் இருந்தான்; எவ்வளவோ பாடுபட்டு நிறைய பணம் சம்பாதித்தான், ஆனால் அவனோ மிகப்பெரிய கஞ்சன். ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேல், அவனுடைய பிள்ளைகளும், பந்துக்களும் அவனுடைய பணத்தை எல்லாம் பிடுங்கிக் கொண்டு அவனை வீட்டை விட்டே விரட்டி விடுகிறார்கள். அப்பொழுது அவனுக்குப் பணத்தின் மேல் ஒரு பெரிய வெறுப்பு வருகிறது.

பணம் சம்பாதிப்பதும் கஷ்டம், அதைத் திருடர்களிடமிருந்து காப்பாற்றுவதும் கஷ்டம், அதில் ஏதேனும் நஷ்டம் வந்தால் பெரும் கவலை, அதைச் செலவு செய்வது கூட கஷ்டம்! "செலவு செய்வதில் என்ன கஷ்டம், அது சந்தோஷம்தானே தரும்?" என்று நீங்கள் கேட்கலாம். நாம் ஒரு பொருளை ஆசைப்பட்டு வாங்கின அடுத்த கணமே சந்தையில் அதன் விலை குறைந்துவிடுகிறது; 'அடாடா, அவசரப்பட்டு வாங்கிவிட்டோமே' என்று அங்கும் ஒரு மன உளைச்சல் வந்து விடுகிறது அல்லவா? இப்படிப் பணத்தோடு தொடர்பு வைத்திருந்தாலே ஏதோ ஒரு வகையில் கவலை வந்து விடுகிறது.

அவனுக்கு அந்தப் பணத்தின் மேல் ஒரு வெறுப்பு பிறக்கிறது. இந்த இடத்தில் ஸ்வாமிகள் மிகவும் அழுத்திச் சொல்வார்: "பகவானுடைய பேரனுக்ரஹம் இருந்தாலொழிய ஒருவனுக்குப் பணத்தின் மேல் உண்மையான வெறுப்பும் வைராக்யமும் வரவே வராது" என்பார்.
அப்படி வைராக்யம் வந்த அந்தப் ப்ராஹ்மணன் ஸந்நியாசம் வாங்கிக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்படுகிறான். அப்போதும் ஊர் ஜனங்கள் அவனைப் பித்தன் என்று ஏளனம் செய்து, கல்லால் அடித்து, பலவாறாகத் துன்புறுத்துகிறார்கள். அந்த நிலையிலும் அவன் கலங்காமல் பாடுகிறான். 96வது தசகத்தில் 9வது ஶ்லோகம்:

**कश्चित् क्लेशार्जितार्थक्षयविमलमतिः, नुद्यमानो जनौघैः,**
**प्रागेवं प्राह विप्रः, न खलु मम जनः, कालकर्मग्रहा वा ।**
**चेतो मे दुःखहेतुः, तदिह गुणगणं भावयत्, सर्वकारी-**
**त्युक्त्वा शान्तो गतस्त्वां, मम च कुरु विभो तादृशीं चित्तशान्तिम् ॥**

**கஶ்சித், க்லேஶார்ஜிதார்த2க்ஷயவிமலமதி:, நுத்3யமாநோ ஜநைளகை4:, ப்ராகே3வம் ப்ராஹ விப்ர:** கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணம் அத்தனையும் தொலைந்த பின், பகவானின் கிருபையால் தூய்மையான மனதை அடைந்த அந்த வேதியன், ஜனங்கள் தன்னை அவமானப்படுத்தித் துரத்தும் போதும் இந்த உண்மையை உலகிற்குச் சொன்னான் **ந க2லு மம ஜந:, காலகர்மக்3ரஹா வா, சேதோ மே து3:க2ஹேது:, ததி3ஹ கு3ணக3ணம் பா4வயத், ஸர்வகாரீ-த்யுக்த்வா, ஶாந்தோ க3தஸ்த்வாம்**

"எனக்கு ஏற்படும் இந்தத் துன்பங்களுக்கு இந்த ஜனங்களோ, காலமோ, என்னுடைய கர்மாவோ அல்லது நவக்ரஹங்களோ காரணமல்ல! என் மனது தான் என் அத்தனை துக்கங்களுக்கும் ஒரே காரணம்! மனம் தான் ஆத்மாவிடத்தில் கர்த்ருத்வம் முதலிய குணங்களை கல்பித்து கார்யங்களை செய்விக்கிறது" என்று உணர்ந்து, அந்த மனதை அடக்கி, அமைதியின் வடிவமாக உன்னை வந்து அடைந்தான்.

இதற்கு ஸ்வாமிகள் சில எளிய உதாரணங்களைச் சொல்வார். "ஜனங்களால் நமக்குக் கஷ்டம் இல்லை" என்பதற்கு—ஒரு தாத்தா படுத்துக் கொண்டு தன் பேரனிடம், "டேய், என் காலை நன்றாக மிதித்து விடுடா" என்பார். அவனும் ஏறி மிதிப்பான்; தாத்தாவிற்கு அது மிகுந்த ரிலீஃபாகவும் சந்தோஷமாகவும் இருக்கும். இதே வெளியில் இருக்கும் வேறு யாராவது வந்து, "உன்னை உதைப்பேன்" என்று சொன்னால் தாத்தா சந்தோஷப்படுவாரா? கால் படுவது என்பது ஒன்று தான்; ஆனால் மிதிப்பது பேரன் என்பதால் சுகம், மற்றவன் என்பதால் கோபம். அப்படியென்றால், அதற்கு நம் மனது தானே காரணம்?

அடுத்தது "காலம்" காரணமில்லை என்பதற்கு—இந்த வருடம் 2026 ஒருவருக்கு எல்லா காரியங்களும் நல்லபடியாக நடந்தால், "இது எனக்குப் பொற்காலம்" என்பான். இன்னொருவர் அதே வருடம் கடுமையான நஷ்டமும் சிரமமும் வந்தால், "இது எனக்கு இரும்புக் காலம், சோதனைக் காலம்" என்பான். அந்த வருடமோ அல்லது காலமோ யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யவில்லை; நம் மனநிலை தான் அதை அப்படிப் பார்க்கிறது.

இதற்கு ராமாயணத்திலிருந்து ஸ்வாமிகள் ஒரு அழகான உதாரணம் சொல்வார். ராமருக்குப் பட்டாபிஷேகம் என்று நிச்சயம் செய்த மகிழ்ச்சியில் தசரதர் கைகேயியின் அரண்மனைக்குச் செல்கிறார். அங்கே கைகேயி இரண்டு வரங்களைக் கேட்கிறாள்; தசரதர்

அதிர்ச்சியில் தவித்துப் போகிறார். அன்று இரவு அவருக்குக் 'காலராத்திரியாக' (ஒரு மனிதன் இறப்பதற்கு முந்தைய இரவு போல) மாறி விடுகிறது; அடுத்த நாள் காலையில் அமைச்சர் சுமந்திரர் தசரதரை எழுப்புவதற்காக வந்து, "கதா பகவதீ ராத்ரிஹி"—அதாவது "மங்களகரமான இரவு இனிமையாகக் கழிந்தது!" என்கிறார். சுமந்திரரைப் பொறுத்தவரை மறு நாள் ராம பட்டாபிஷேகம் என்ற மகிழ்ச்சியில் அந்த இரவு மிகவும் இனிமையாகக் கழிந்திருந்தது. இரவு என்பது ஒன்று தான்; ஆனால் தசரதருக்கு அது மரண இரவு, சுமந்திரருக்கோ அது மங்களகரமான இரவு!

இதே போலத் தான் க்ரஹங்களும், கர்ம வினைகளும். எல்லாவற்றிற்கும் நம் மனதுதான் காரணம். அந்த மனதை நாம் கட்டுப்படுத்தி விட்டால், உலகத்து அத்தனை துக்கங்களிலிருந்தும் நாம் எளிதாக மீண்டு விடலாம். **மம ச குரு விபோ⁴, தாத்³ருஶீம், சித்தஶாந்திம்** ஓ குருவாயூரப்பா, எனக்கும் அந்தப் பிக்ஷுவைப் போன்ற உன்னதமான சித்த சாந்தியைத் தந்தருள வேண்டும் என்று பட்டத்ரி வேண்டுகிறார்.

சேதோ மே து³:க²ஹேது: "என்னுடைய துக்கத்திற்குக் காரணம் இந்த ஜனங்களோ, காலமோ, கர்மாவோ, க்ரஹங்களோ கிடையாது; என் மனதுதான் காரணம். என் மனதை வெளி உலகத்திலிருந்து திருப்பி பகவானிடத்தில் / ஆத்மாவில் நிலை நிறுத்தி விட்டால், இந்த உலக விவகாரங்கள் என்னை ஒன்றும் செய்யாது" என்ற இந்த ஶ்லோகத்தைப் படிக்கும் போது எனக்கு நம் அருணகிரிநாதரின் இந்த அருமையான வரிகள் நினைவுக்கு வருகின்றன:
"நாள் என் செய்யும்? வினை தான் என் செய்யும்? எனை நாடி வந்த கோள் என் செய்யும்? கொடுங்கூற்று என் செய்யும்? குமரேசர் இருதாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் ஷண்முகமும் தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே"

அங்கே வடமொழியில் சொல்லப்பட்ட கால, கர்ம, க்ரஹ விஷயங்கள் அப்படியே இங்கேயும் வருகின்றன பாருங்கள்! நல்ல நாள், கெட்ட நாள், நல்வினை, தீவினை அல்லது 'அந்தக் கோள் ஜாதகத்தில் அங்கே இருக்கிறது, இந்தக் கோள் இங்கே இருக்கிறது' என்று சொல்லப்படும் க்ரஹங்கள்... இதெல்லாம் என்னை என்ன செய்ய முடியும்? கொடுமையான எமன் தான் என்னை என்ன செய்ய முடியும்? முருகப் பெருமானின் திருவடிகளும், சிலம்பும், சதங்கையும், தண்டையும்,

அவனுடைய ஆறுமுகங்களும், பன்னிரு தோள்களும், கடம்ப மாலையும் எனக்கு முன்னே வந்து தோன்றிய பின் எனக்கு எந்தக் கவலையும் இல்லை என்கிறார்.

**ஸ்வாமிகளும், நாள் பார்க்கும் தத்துவமும்**

நம்முடைய ஸ்வாமிகள் எதைச் செய்தாலும் நாள், நேரம் பார்த்து தான் செய்வார். தனக்கும் சரி, தன் பக்தர்களுக்கும் சரி, எல்லாவற்றிற்கும் நாள் பார்ப்பார். (ஆனால், ஒரு பாராயணம் முடிந்து அடுத்த நாளே புதிய பாராயணம் ஆரம்பிக்க வேண்டும் என்றால், அதற்கு நாள் பார்க்க வேண்டியதில்லை என்பதால் அவருடைய பாராயணங்கள், இடைவிடாமல் நடந்து கொண்டே இருக்கும்). மற்றபடி ஊருக்குப் போவது போன்ற காரியங்களுக்கும் நாள் பார்ப்பார். இதில் வி.ஜே.ஆர் மாமா ரொம்ப எக்ஸ்பர்ட்.

ஸ்வாமிகள் வேடிக்கையாகச் சொல்வார்: "வி.ஜே.ஆர்-க்கு உடம்பெல்லாம் மூளைப்பா! இவர் ஒரு அமைச்சராக இருந்திருக்க வேண்டியவர், அவ்வளவு புத்திசாலி!" என்று பாராட்டுவார். நான் மனதிற்குள் "நீங்களோ எதீந்திராள் (துறவிகளின் அரசர்); உங்களுக்கு அவர் அமைச்சராக இருக்கும் பாக்கியம் பெற்றதால், அவருக்கு ஜன்ம லாபமே கிடைத்து விட்டது" என்று நினைத்துக் கொள்வேன். வி.ஜே.ஆர் மாமா நாள் குறித்துக் கொடுப்பார், ஸ்வாமிகள் அதற்கு ஒப்புதல் அளிப்பார். அப்படி நாள் பார்த்து காரியங்களைச் செய்வார்கள்.

ஒருமுறை ஸ்வாமிகளிடம், "நாம் ஏன் எல்லாவற்றுக்கும் நாள் நக்ஷத்ரம் பார்க்க வேண்டும்?" என்று கேட்டேன். அதற்கு ஸ்வாமிகள் ஒரு அழகான விளக்கம் கொடுத்தார்: "இந்த நாள் பார்ப்பது என்பது நம் வாழ்க்கையில் ஒரு நிதானத்தைக் (moderation) கொண்டு வரும்."

உதாரணமாக, ஒரு கல்யாணமோ அல்லது ஏதோ ஒரு சுபகாரியமோ செய்ய நினைக்கும் போது, நாள் பார்த்து அதை ஒரு மூன்று மாதம் தள்ளிப் போட்டால், அந்த இடைப்பட்ட காலத்தில் நமக்குக் 'காத்திருப்பதற்கு' ஒரு பழக்கம் ஏற்படுகிறது. அதிலிருந்து வாழ்க்கையில் ஒரு நிதானம் வருகிறது. ஆனால், இந்தக் காலத்தில் எல்லாமே இன்ஸ்டன்ட் கிராட்டிபிகேஷன் (instant gratification) ஆகி விட்டது. பத்து நிமிடத்தில் டெலிவரி செய்கிறேன் என்று சொல்லிவிட்டு, பதினைந்து நிமிடம் ஆகி விட்டால் கூட நமக்குக் கோபம் வந்து விடுகிறது!

எல்லாமே 'இப்பவே வேண்டும்' என்கிறோம். அப்படி உடனே கிடைப்பதில் சுகம் கொஞ்ச நேரம் தான் நீடிக்கிறது, அதற்குப் பிறகு அந்த சுகம் தீர்ந்து விடுகிறது. இப்படித் தான் நாம் ஓடிக் கொண்டிருக்கிறோம். ஆனால், வாழ்க்கையின் முக்கியமான முடிவுகளையெல்லாம் ரொம்பப் பரபரப்பாகச் செய்யாமல், அதற்கான நேரத்தைக் கொடுத்து, நாள் பார்த்து நிதானமாகச் செய்தால் அது க்ஷேமத்தைக் கொடுக்கும். அதற்காகத் தான் பெரியவர்கள் நாள் பார்க்கும் பழக்கத்தை வைத்திருக்கிறார்கள் என்று ஸ்வாமிகள் சொன்னார்.

“நாள் என் செய்யும்” என்று அருணகிரி சொல்கிறாரே என்று சொன்ன போது, ஸ்வாமிகள் சொன்னார்: "அது வாஸ்தவம்தான். அந்தப் பாடலைப் பாடியவர் கூற்றுவனுக்கு கூட பயப்படாத உயர்ந்த ஞானத்தோடு இருக்கிறார்."
"தண்டாயுதமும் திரிசூலமும் விழத் தாக்கி உன்னை திண்டாட வெட்டி விழவிடுவேன், செந்தில் வேலனுக்குத் தொண்டாகிய என் அவிரோத ஞானச் சுடர் வடிவாள் கண்டாய் அடா!"
"என்னிடம் பகவானுடைய பக்தியும், ஞானச் சுடர் வடிவாளும் இருக்கிறது. ஹே அந்தகா (எமனே)! என் பக்கத்தில் சற்றே வந்து தான் பாரேன்!" என்று சவால் விடுகிறார். மேலும் அவர், "செங்கோடைக் குமரனென எங்கே நினைப்பினும் அங்கே என் முன் வந்து எதிர் நிற்பனே" என்று பாடியவர். அவர் எப்போது நினைத்தாலும் ஸ்வாமி அங்கே வந்து தரிசனம் கொடுக்கிறார். அது ரொம்ப உயர்ந்த நிலை. அந்த அளவிற்கு அவருக்கு பக்தியும் ஞான பலமும் இருக்கிறது. அப்படிப்பட்ட உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் "நாள் என் செய்யும்" என்று தாராளமாகச் சொல்லலாம்.

ஆனால், நாம் லௌகீகத்தில் இருக்கும் போது, நாள் பார்த்து தான் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்று ஸ்வாமிகள் பதில் அளித்தார். அப்படி ஸ்வாமிகள் எல்லாவற்றிற்கும் பொருத்தமான பதில்களைச் சொல்லக் கூடிய 'ஸுயுக்தவாதி'.

இது போல தன் பக்தர்கள் மனதில் ஏற்படும் சந்தேகங்களை தயங்காமல் தீர்த்து வைப்பார். வி.ஜே.ஆர் மாமா ஒருமுறை, "ஸந்நியாசம் வாங்கிண்ட அப்புறம் நீங்க தண்ட கமண்டலம் வச்சுக்கலையான்னு சில பேர் கேட்கறா" என்று சொன்ன போது, ஸ்வாமிகள் "யார் சொல்கிறார்கள்?" என்றெல்லாம் எதிர்க் கேள்வி கேட்கவில்லை. "அப்படியா சரி, நீ புதுப்

பெரியவாளிடம் கேள்" என்று சொல்லி விட்டார். “மஹா பெரியவா சித்தி அடைந்து விட்டதால், புதுப் பெரியவா தான் ஸந்நியாசிகளுக்குத் தண்ட கமண்டலம் தருவார். அதனால் அவரிடம் போய் நீ கேள்” என்றவுடனே, வி.ஜே.ஆர் மாமா புதுப் பெரியவாளிடம் போய் இதைக் கேட்டார். அதற்குப் புதுப் பெரியவா, "எனக்கு பாகவதரை முப்பது வருஷங்களுக்கு மேலாகத் தெரியும். நான் பார்த்த நாளில் இருந்தே அவர் ஸந்நியாசி தான். அவர் 'பாகவத ஸந்நியாசி'. அவர் இந்த தண்ட கமண்டலம் எல்லாம் வச்சுண்டு சிரமப்பட வேண்டாம், அவர் எப்போதும் பாகவதம் படிச்சுண்டே இருக்கார், அது போதும்னு நான் சொன்னேன் என்று சொல்லி விடு" என்று கூறினார்.

**ஜல கீதம்**

96வது தசகம் கடைசி ஸ்லோகம் புரூரவஸின் சரித்ரமாகும் (ஜல கீதம்)ः

**ऐलः प्राक्, उर्वशीं प्रति अतिविवशमनाः, सेवमानश्चिरं तां,**
**गाढं निर्विद्य भूयो, युवतिसुखमिदं क्षुद्रमेवेति गायन् ।**
**त्वद्भक्तिं प्राप्य पूर्णः, सुखतरमचरत्, तद्वदुद्धूयसङ्गं,**
**भक्तोत्तंसं क्रिया मां, पवनपुरपते, हन्त मे रुन्धि रोगान् ॥**

**ஜல: ப்ராக், உர்வஶீம் ப்ரதி அதிவிவஶமநா:, ஸேவமாநஶ்சிரம் தாம், கா³ட⁴ம் நிர்வித்³ய பூ⁴யோ, யுவதிஸுக²மித³ம் க்ஷுத்³ரமேவேதி, கா³யன்** புரூரவஸ் (இலனின் மகன்) ஊர்வசி என்ற அப்ஸரஸின் மேல் அளவற்ற மோகம் கொண்டு, பல காலம் அவளுடனேயே வாழ்ந்து வருகிறான். ஒருநாள் அவள் அவனை விட்டுப் பிரிந்து சென்றவுடன், அவனுக்குப் பெரும் விரக்தி உண்டாகிறது. "பெண்களால் கிடைக்கும் இந்தச் சுகம் மிகவும் அற்பமானது, துக்கத்தை விளைவிப்பது" என்று உணர்ந்து தன் மனதை உலக இன்பங்களிலிருந்து திருப்பிக் கொள்கிறான்.

இந்த இடத்தில் ஸ்வாமிகள் மிகவும் அழகாக ஒரு கருத்தைச் சொல்வார்: புரூரவஸ் ஞானம் வந்த பின் சிந்திக்கிறான், “ஊர்வசி என்ன தவறு செய்தாள்? அவளோ ஒரு அப்ஸரஸ்; அவளுடைய இயல்பே தன்னை நாடி வருபவர்களுக்குப் சுகத்தைக் கொடுப்பது தான். அவளை ஒரு போகப் பொருளாக நினைத்து நேரத்தை வீண் போக்கியது என் தவறு தானே? ஒரு கயிற்றைப் பாம்பு என்று நினைத்து ஒருவன் பயந்து நடுங்கினால், அந்த கயிறு என்ன செய்ய முடியும்? தவறு கயிற்றின் மேல் இல்லை;

இவன் மனதில் தான் அதைப் பார்த்தவுடன் பயமோ, காமமோ, கோபமோ வருகிறது. எனவே, அந்த வஸ்துவின் பேரில் தவறு ஒன்றும் இல்லை என்று உணர்ந்து, "அவள் மேல் இருந்த கோபத்தை நான் விட்டேன்" என்கிறான்.

பொதுவாக இந்த காதல் தோல்விகளில் கோபம், வெறி, அல்லது அழுகை வந்து, "நான் தற்கொலை பண்ணிக்கிறேன்" என்றெல்லாம் போவார்கள், அதற்குக் காரணம் அவனுக்குள் இன்னும் அந்த காமம் போகவில்லை என்பது தான். கோபம் என்பதும் காமத்தின் ஒரு மாற்று வெளிப்பாடு தானே?

விஶ்வாமித்திரர் தவம் பண்ணும் போது மேனகை வருகிறாள். அவளோடு பல வருடங்களைப் பத்து நிமிடம் கழிந்தது போலக் கழித்துவிடுகிறார். ஆனால், பிரிய வேண்டிய நேரம் வந்த போது அவள் மேல் கோபித்துக் கொள்ளாமல் அவளை அனுப்பி விடுகிறார். அடுத்ததாக ரம்பை வந்து ஆடத் தொடங்கும் போது, அவர் கோபித்துக் கொண்டு, "கல்லாய்ப் போ!" என்று சாபம் கொடுத்து விடுகிறார். அதற்குப் பிறகு,

"இந்த்$^3$ரியை: அஜிதை: ராம ந லேபே$^4$ ஶாந்திமாத்மன:" — அவர் தன் இந்திரியங்களை இன்னும் முழுமையாக ஜெயிக்காததால் பூரண சாந்தியை அடையவில்லை என்பதை உணர்ந்து, மீண்டும் தீவிரமாகத் தவம் செய்கிறார். எனவே, கோபம் என்பதும் காமத்தின் ஒரு வெளிப்பாடுதான். நமக்கு யாராவது ஒருத்தர் மேல் கோபம் வருகிறது என்றால், நமக்குள் இன்னும் அந்த காமமாகிய தோஷம் இருக்கிறது என்று தெரிந்து கொண்டு, அதைப் போக்குவதற்காகத் தீவிரமாகப் பகவத் பஜனம் செய்ய வேண்டும்.

இந்த இடத்தில் நம் ஸ்வாமிகள் எவ்வளவு நுட்பமானவர் (subtle) என்பதை நினைத்து நான் எப்போதும் வியப்பதுண்டு. ஒரு நாள் ஸ்வாமிகள் சாதாரணமாகப் பேசும் போது சொன்னார்: "இந்த இடத்தில் ஒரு பெரியவர் (அவர் பெயரை நான் சொல்ல விரும்பவில்லை) உபன்யாசம் செய்யும் போது, 'மேனகையிடமாவது ஏதோ கொஞ்சம் சுகம் இருந்தது, ரம்பையிடம் அதுவும் இல்லை' என்று சொல்வார். ஆனால், நான் அப்படிச் சொல்ல மாட்டேன்" என்றார் ஸ்வாமிகள்.

எனக்கு அவ்வளவு ஆச்சரியமாக இருந்தது! ஏனென்றால், ஸ்வாமிகள் எப்படிப்பட்டவர் தெரியுமா? "குமரனை மெய்யன்பினால் மெல்ல மெல்ல

உள்ள அரும்பும் தனிப் பரமானந்தம் தித்தித்து அறிந்த அன்றே கரும்பும் துவர்த்து, செந்தேனும் புளித்து அறக் கைத்ததுவே" என்று அருணகிரிநாதருக்கு அந்த முருகப் பெருமானைத் தியானம் செய்து செய்து, அந்தப் பரமானந்தத்தின் தித்திப்பை அறிந்த அன்றே, அவருக்குக் கரும்பும் துவர்த்துப் போய்விட்டது; செந்தேனும் புளித்து கசந்து போய்விட்டது! அதே மாதிரி நம் ஸ்வாமிகளுக்கு உலக விஷயங்கள் முற்றிலும் கசந்து போய்விட்டன. அதனால், உலக விஷயங்களில் 'ஏதோ கொஞ்சம் சுகம் இருக்கிறது' என்கிற பேச்சு அவருடைய வாயிலிருந்து தவறி கூட வந்துவிடாது. அப்படிப்பட்ட உயர்ந்த வைராக்யத்தோடு இருந்ததால் தான் அவர் ஸந்நியாசம் வாங்கிக் கொண்டார்.

**த்வத்$^3$ப$^4$க்திம் ப்ராப்ய பூர்ண:, ஸுக$^2$தரமசரத், தத்$^3$வது$^3$த்$^3$தூ$^4$யஸங்க$^3$ம்** அதன் பின், உன்னிடத்தில் அசைக்க முடியாத பக்தி பூண்டு, அந்த புரூரவஸ் பூரணத்துவத்தை (நிறைவை) அடைந்தான். முன்பை விட இன்னும் ஆனந்தத்தோடு இந்த பூமியில் சஞ்சரித் தான்.
**ப$^4$க்தோத்தம்ஸம் க்ரியா மாம், பவநபுரபதே, ஹந்த மே ருந்தி$^4$ ரோகா$^3$ன்** அதுபோல, நானும் என் உலகப் பற்றுக்கள் அத்தனையையும் போக்கிக் கொண்டு, உன்னுடைய உத்தம பக்தனாக மாற அருள் புரிய வேண்டும். ஓ பவனபுரபதே! குருவாயூரப்பா! என் உடலில் இருக்கும் வாத நோய்களையும், என் மனதில் இருக்கும் உலக ஆசைகளையும் முற்றிலுமாகப் போக்கி என்னை ஆட்கொள்ள வேண்டும்!

இத்துடன் 96வது தசகம் நிறைவு பெறுகிறது.

**ॐ तत्सदिति श्रीमन्नारायणीये षण्णवतितमं दशकं समाप्तम् |**
**श्री हरये नमः | रमा रमण गोविन्द गोविन्द | श्रीकृष्णार्पणमस्तु |**
**ஓம் தத்ஸதி$^3$தி ஶ்ரீமந்நாராயணீயே ஷண்ணவதிதமம் த$^3$ஶகம் ஸமாப்தம் | ஶ்ரீ ஹரயே நம: | ரமா ரமண கோ$^3$விந்த$^3$, கோ$^3$விந்த$^3$ | ஶ்ரீக்ருஷ்ணார்பணமஸ்து |**

## 97வது தசகம் - நிர்க்குண நிஷ்டையும் மார்க்கண்டேய சரித்ரமும்

அடுத்ததாக 97வது தசகம், முதல் ஸ்லோகம்:

**त्रैगुण्याद्भिन्नरूपं भवति हि भुवने, हीनमध्योत्तमं यत्**
**ज्ञानं श्रद्धा च कर्ता, वसतिरपि सुखं, कर्म च आहारभेदाः ।**
**त्वत्क्षेत्रत्वन्निषेवादि तु यदिह पुनः, त्वत्परं तत्तु सर्वं,**
**प्राहुर्नैर्गुण्यनिष्ठं, तदनुभजनतो मङ्क्षु सिद्धो भवेयम् ॥**

**த்ரைகு³ண்யாத்³பி⁴ந்நரூபம் ப⁴வதி ஹி பு⁴வநே, ஹீநமத்⁴யோத்தமம் யத்** பகவத் கீதையில் மூன்று குணங்களைப் பற்றி அர்ஜுனனுக்கு பகவான் உபதேசம் செய்திருப்பது நம் எல்லோருக்கும் தெரிந்தது தான். அதில் உத்தமம், மத்யமம், அதமம் என்று எல்லாவற்றையும் பிரிக்கலாம் — அதாவது ஸாத்விகம், ராஜஸம், தாமஸம்.

உதாரணத்திற்குச் சாப்பாடு என்று எடுத்துக் கொண்டால்:

எளிதாகத் தயாரித்து, நன்றாக ஜீரணமாகி, உடலுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கக்கூடிய உணவு ஸாத்விகம்.

ரொம்ப சுவையாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டுச் சாப்பிட்டு, அது நம்மை உலகக் காரியங்களில் தள்ளி, காமக் குரோதங்களை ஜாஸ்தியாக்குகிறது என்றால் அது ராஜஸம்.

ரொம்ப அசுத்தமான, ஆரோக்கியமில்லாத சாப்பாடு தாமஸம்.

ஆனால், அர்ஜுனனுக்கு "நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுர்னா" (முக்குணங்களையும் கடந்து நில்) என்று சொன்னதை எப்படி நடைமுறைப் படுத்த வேண்டும் என்று 'உத்தவ கீதை 'யில் பகவான் சொல்கிறார்: "எந்த ஒன்றில் பகவானுடைய சம்பந்தம் ஏற்பட்டு விடுகிறதோ, அது குணங்களைக் கடந்த 'நைர்குண்யம்' (நிர்குணம்) ஆகிவிடுகிறது."

முன்னே சொன்ன அதே சாப்பாட்டை பகவானுக்கு நைவேத்தியம் பண்ணிவிட்டுச் சாப்பிட்டால், அது 'நைர்குண்யம்' ஆகிவிடுகிறது!

இதே போல ஒவ்வொன்றையும் பிரிக்கிறார்:

இடம்: வனம் என்பது ஸாத்விகம்; நாம் வாழும் க்ருஹம் என்பது ராஜஸம்; சூதாட்டக்களம், போன்ற இடங்கள் தாமஸம். ஆனால், பகவானுடைய கோயில் என்பது 'நைர்குண்யம்'.

**ஜ்ஞாநம் ஶ்ரத்³தா⁴ ச கர்தா, வஸதிரபி ஸுக²ம், கர்ம ச ஆஹாரபே⁴தா³:** இப்படி ஞானம், ஸ்ரத்தை, கர்த்தா, இருப்பிடம், சுகம், கர்மா, ஆஹாரம் என ஒவ்வொன்றிலும் இருக்கும் பேதங்களை

பாகவதத்தில் பகவான் விரிவாகச் சொல்லித் தருகிறார். எது ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று விளக்கி, "அந்த நான்காவதான நைர்குண்ய நிலையைப் பிடித்துக் கொள்" என்கிறார்.

புத்தகங்களை எடுத்துக் கொண்டால், நல்ல குணங்களை வளர்க்கும் புத்தகங்கள் ஸாத்விகம்; உலக விவகாரங்களில் எப்படி ஜெயிப்பது என்று சொல்லிக் கொடுக்கும் புத்தகங்கள் ராஜஸம்; மற்றவர்களை எப்படி வீழ்த்துவது என்று சொல்லிக் கொடுக்கும் புத்தகங்கள் தாமஸம்; அதே சமயம் பகவத் குணத்தை பேசும் புத்தகங்கள், ராமாயணம், பாகவதம் 'நைர்குண்யம்'.

இப்படி, **த்வத்க்ஷேத்ரத்வந்நிஷேவாதி³ து யதி³ஹ புந:, த்வத்பரம் தத்து ஸர்வம், ப்ராஹுː நைர்கு³ண்யநிஷ்ட²ம்** உன்னுடைய க்ஷேத்திரம், உன்னுடைய பூஜை என்று உன்னையே பரமாகக் கருதி எதைச் செய்தாலும், அது தான் "நைர்குண்ய நிஷ்டை" என்று பகவான் சொல்கிறார். **தத³நுப⁴ஜநதோ மங்க்ஷுː, ஸித்³தோ⁴ ப⁴வேயம்** "அதைக் கைக்கொண்டு, நான் விரைவில் சித்தி அடைவேன்" என்று பட்டத்ரி கூறுகிறார். நாமும் எல்லாவற்றையும் பகவானுடைய காரியங்களாக மாற்றிக் கொண்டு செய்தால், சித்த புருஷர்களாக ஆகிவிடலாம்.

**எங்கும் பகவானைக் காணும் நிலை**

97வது தசகம், 2வது ஶ்லோகம்:

**त्वय्येव न्यस्तचित्तः, सुखमयि विचरन्, सर्वचेष्टास्त्वदर्थं,**
**त्वद्भक्तैः सेव्यमानान्, अपि चरितचरान्, आश्रयन् पुण्यदेशान् ।**
**दस्यौ विप्रे मृगादिष्वपि च सममतिः, मुच्यमानावमान-**
**स्पर्धासूयादिदोषः, सततमखिलभूतेषु संपूजये त्वाम् ॥**

**த்வய்யேவ ந்யஸ்தசித்த:, ஸுக²மயி விசரன், ஸர்வசேஷ்டாஸ்த்வத³ர்த²ம், த்வத்³ப⁴க்தை: ஸேவ்யமாநான், அபி சரிதசரான், ஆஶ்ரயன் புண்யதே³ஶான்** "மனதை உன்னிடத்திலேயே நிலைநிறுத்தி, ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டு, எல்லா காரியங்களையும் உனக்காகவே செய்து கொண்டு, உன்னுடைய பக்தர்களால் சேவிக்கப்பட்ட புண்ணிய தேசங்களை அடைந்து..."

அதாவது நாயன்மார்களால் பாடல் பெற்ற தலங்கள், ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த இடங்கள், மஹா பெரியவா தங்கியிருந்த இடங்கள், சாதுர்மாஸ்யம் செய்த இடங்களுக்கெல்லாம் நம் ஸ்வாமிகள் சென்று 'பாகவத ஸப்தாஹம்' செய்வார். அதோடு, மகான்கள் எப்படி

நடந்து கொண்டார்களோ, அதே போல நடக்க நாமும் முயற்சி செய்ய வேண்டும்.

**த$^{3}$ஸ்யௌ விப்ரே ம்ருகா$^{3}$தி$^{3}$ஷ்வபி ச, ஸமமதி:, முச்யமாநாவமாந-ஸ்பர்தா$^{4}$ஸூயாதி$^{3}$தோ$^{3}$ஷ:,** திருடன், ப்ராஹ்மணன், மிருகங்கள் என்று எதிலுமே எந்த பேத புத்தியும் இல்லாமல் எல்லாவற்றிலுமே பகவானைப் பார்ப்பது; மான அவமானங்களைப் பொருட்படுத்தாமல், ஸ்பர்தை (மற்றவர்கள் மேல் வெறுப்பு), அசூயை (பொறாமை) போன்ற தோஷங்களை எல்லாம் போக்கிக் கொண்டு, **ஸததமகி$^{2}$லபூ$^{4}$தேஷு ஸம்பூஜயே த்வாம்** "எல்லா பூதங்களிலும் உன்னையே நான் பூஜை செய்வேன்."

97வது தசகம், 3வது ு்லோகம்:

**त्वद्भावो यावदेषु स्फुरति न विशदं, तावदेवं हि उपास्तिं**
**कुर्वन्, ऐकात्म्यबोधे झटिति विकसति, त्वन्मयोऽहं चरेयम् ।**
**त्वद्धर्मस्यास्य तावत् किमपि न भगवन्, प्रस्तुतस्य प्रणाशः,**
**तस्मात् सर्वात्मनैव प्रदिश मम विभो, भक्तिमार्गं मनोज्ञम् ॥**

**த்வத்$^{3}$பா$^{4}$வோ யாவதே$^{3}$ஷு ஸ்பு$^{2}$ரதி ந விஶத$^{3}$ம், தாவதே$^{3}$வம் ஹி, உபாஸ்திம் குர்வன்** "எங்கும் உன்னைக் காணும் அந்த ஞானம் எனக்கு ஏற்படும் வரையில், உன்னுடைய உபாசனைகளை நான் தொடர்ந்து பண்ணிக் கொண்டே இருப்பேன்."

இந்த இடத்தில் பாகவதத்தில், கோயில்கள் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வது, மாத உற்சவங்கள், வருட உற்சவங்கள் நடத்துவது போன்ற தெய்வ பக்தியை வளர்க்கக் கூடிய காரியங்களின் பெருமையை பகவான் எடுத்துக் கூறுகிறார்.

இந்த திருப்பணிகள் போன்றவற்றை நடத்தும் போது, ஒரு தவறு ஏற்படாமல் கவனமாக இருக்க வேண்டும் என்று ஸ்வாமிகள் சொல்வார். எந்த நல்ல காரியம் பண்ண வேண்டுமானாலும், அதற்கும் பணம் தேவைப் படுகிறது. ஆனால், இந்த பணிகளை ஏற்பாடு செய்பவர்கள், பணம் கொடுப்பவர்களை அதிகமாகப் புகழ்ந்து, அவர்களுக்கு கர்வம் வரும்படி செய்து விடக்கூடாது. அப்படிச் செய்தால் அவர்கள் செல்வ செருக்கினால் தவறுகள் செய்வதற்கு இடம் உண்டாகும். இதை

பாகவதத்தில் உள்ள கோவிந்த பட்டாபிஷேகம் கதையில் ஸ்வாமிகள் சொல்வார்.

இந்திரனை அந்தப் பதவியில் அமர்த்தி, உலகிற்கு மழையைத் தரும் காரியத்தில் பணித்ததே பகவான் தான். ஆனால், அவனுக்கு படையல் செய்வதைத் தடுத்த போது, அவன் கடுங்கோபம் கொண்டு ஏழு நாள் ஊழிக்கால மழையைப் பொழிந்து கோகுலத்தையே அழிக்கப் பார்க்கிறான். கிருஷ்ணர் கோவர்த்தன கிரியை குடையாகப் பிடித்து, அந்தப் பசுக்களையும் கோபர்களையும் காப்பாற்றுகிறார். இல்லை என்றால் இந்திரனுக்கு இத்தனை பசுக்ளையும் கோபர்களையும் கொன்ற பாவம் வந்திருக்கும் அல்லவா? கோ மாதாவான காமதேனு நன்றியோடு தன் பாலைச் சொரிந்து க்ருஷ்ணனுக்கு அபிஷேகம் செய்கிறாள். இந்திரனும் கிருஷ்ணனை வணங்கி, மன்னிப்பு கோருகிறான். 'கோவிந்த' நாமத்தைச் சூட்டி, ஐராவதம் கொண்டு வந்த ஆகாச கங்கையினால், பகவானுக்கு பட்டாபிஷேகம் செய்து மகிழ்கிறான்.

இந்திரனிடம் கிருஷ்ணர், "உன் கர்வத்தைப் போக்குவதற்காகத் தான் இந்த லீலையைச் செய்தேன். நீயே இந்திரப் பதவியில் தொடர்ந்து இருக்கலாம், ஆனால் கர்வப் படாதே" என்று சொல்கிறார். அது போல, திருப்பணிகளை ஏற்பாடு செய்பவர்கள், பணமும் முயற்சியும் இருந்தால் கூட, பகவான் நினைத்தால் தான் காரியங்கள் நல்லபடியாக நடக்கும் என்ற நினைவோடு, பணம் பொருள் உதவியவர்களை ஒரேடியாகப் புகழ்ந்து விடக் கூடாது. பங்கெடுத்தவர்களும் அவன் அளித்த செல்வத்தால் அவனுக்கு சேவை செய்ய பகவான் ஒரு வாய்ப்பளித்தார் என்று பணிவோடு இருக்க வேண்டும். ஸ்வாமிகள் இந்த இடத்தில் தன் மனதிலேயே கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்த பூசலார் நாயனாரின் கதையை விரிவாகச் சொல்லி “பகவான் உள்ளத்தைத் தான் பார்க்கிறார். நாமும் உள்ளத்தில் பகவானை நிலை நிறுத்த அதிகம் முயற்சி செய்ய வேண்டும்” என்று சொல்வார்.

**ஐகாத்ம்யபோ³தே⁴ ஜ²டிதி விகஸதி, த்வந்மயோ(அ)ஹம் சரேயம்** "விரைவில் எங்கும் உன்னைப் பார்க்கக்கூடிய அந்த அத்வைத ஞானம் எனக்குள் விளங்கும்; நான் உன் மயமாகவே இந்த உலகில் வலம் வருவேன்."

**த்வத்³த⁴ர்மஸ்யாஸ்ய தாவத் கிமபி ந ப⁴க³வன், ப்ரஸ்துதஸ்ய ப்ரணாஶ:** "ஹே பகவானே! உன்னுடைய இந்த பாகவத தர்மத்தை

ஒருவன் ஆரம்பித்து விட்டான் என்றால், அதற்குப் பிறகு அவனுக்குக் குறைவே கிடையாது, அவன் வீணாகப் போகமாட்டான், அழியமாட்டான்." இதைத் தான் கீதையிலும் ஒரு வரியில்:
“நஹி கல்யாணக்ருத் கஶ்சித் துர்க³திம் தாத க³ச்ச²தி” என்று சொல்கிறார். நல்ல காரியம் செய்கிறவன் ஒரு போதும் துர்கதியை அடைய மாட்டான். **தஸ்மாத் ஸர்வாத்மநைவ ப்ரதி³ஶ மம விபோ⁴, ப⁴க்திமார்க³ம் மநோஜ்ஞம்** "அதனால், மனதிற்கு இனிய அந்த பக்தி மார்க்கத்தில் நான் எப்போதும் முழுமையாக ஈடுபடும்படி எனக்கு அனுக்ரஹம் பண்ணு."

**ஆரோக்கியமும், ஆயுளும் தரும் பஜனம்**

97வது தசகம், 4வது ஶ்லோகம்:

**तं चैनं भक्तियोगं द्रढयितुं, अयि मे साध्यं आरोग्यमायुः,**
**दिष्ट्या तत्रापि सेव्यं, तव चरणमहो, भेषजायेव दुग्धम् ।**
**मार्कण्डेयो हि पूर्वं, गणकनिगदितद्वादशाब्दायुः, उच्चैः**
**सेवित्वा वत्सरं त्वां, तव भटनिवहैः द्रावयामास मृत्युम् ॥**

**தம் சைநம் ப⁴க்தியோக³ம் த்³ரட⁴யிதும், அயி மே ஸாத்⁴யம் ஆரோக்³யமாயு:, தி³ஷ்ட்யா தத்ராபி ஸேவ்யம், தவ சரணமஹோ**
இப்படி பக்தி யோகத்தை திடப்படுத்திக் கொள்வதற்கு, எனக்கு நல்ல ஆரோக்கியமும் ஆயுளும் வேண்டும். ஆனால், நாம் எப்படி அதைச் சம்பாதிக்க முடியும்? அதற்கும் உன்னுடைய பஜனம்தான் வழி!

பொதுவாக, உடம்பு சரியில்லாதவர்கள் "வாழ்க்கையே வெறுத்துவிட்டது" என்று சலித்துக் கொள்வார்கள். ஆனால், இந்த பக்தி மார்க்கத்திற்குள் வந்து இதனுடைய ருசியைத் தெரிந்து கொண்டு விட்டால், நமக்கு இன்னும் ஆயுசு வேண்டும் என்று தோன்றும். ஏன் தெரியுமா? பக்தி செய்து இந்த ஜன்மத்திலேயே பகவானை அடைந்து விட வேண்டும் என்பதற்காகத் தான்! ஆயுசு மட்டும் இருந்தால் போதாது, நல்ல ஆரோக்கியமும் வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்றால், அதற்கும் பகவானுடைய பஜனத்தையே தான் செய்ய வேண்டும்.

அச்யுதாநந்த³ கோ³விந்த³ விஷ்ணோ நாராயணாம்ருத ।
ரோகா³ந்மே நாஶய அஶேஷான் ஆஶு த⁴ந்வந்தரே ஹரே ॥

என்ற ஶ்லோகத்தை ஒரு செம்பு பாத்திரத்தில் தண்ணீர் வைத்துக் கொண்டு, 336 தடவை சொல்லிவிட்டு அந்தத் தண்ணீரைக் குடித்தால் நோய்கள் தீரும்.

அஸ்மின் பராத்மன், நநு பாத்$^{3}$மகல்பே,
த்வமித்த$^{2}$ம் உத்தா$^{2}$பிதபத்$^{3}$மயோநி: ।
அநந்தபூ$^{4}$மா, மம ரோக$^{3}$ராஶிம்,
நிருந்தி$^{4}$, வாதாலயவாஸ விஷ்ணோ ॥

என்று ரொம்ப இனிமையாக பாடுவார். இந்த ஶ்லோகத்தை இடைவிடாமல் சொன்னால் எல்லா வியாதியும் போகும் என்று எழுதிக் கொடுப்பார். என்று இப்படி பல வழிகளில் சொல்லிக் கொடுப்பார். நல்ல ஆரோக்கியம் வருவதற்கு நாராயணீயம் படித்தாலே போதுமே! அது "ஆயுராரோக்ய ஸௌக்யம்" என்றுதானே முடிகிறது.

நாராயணீயத்தின் மேல் ஸ்வாமிகளுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்ததற்கு ஒரு காரணம் இருக்கிறது. சின்ன வயதில் ஸ்வாமிகளுக்குக் கடுமையான வயிற்று வலி வந்தபோது, டாக்டர் பார்த்துவிட்டு, "நாளைக்கு வாங்கோ, உங்களுக்கு ஆபரேஷன் (அறுவை சிகிச்சை) பண்ணனும்" என்று சொல்லி இருக்கிறார். ஸ்வாமிகள் அன்று ராத்திரி முழுக்க நாராயணீயம் படித்துவிட்டு அடுத்த நாள் போயிருக்கிறார். பரிசோதித்துப் பார்த்த டாக்டர் ஆச்சரியப்பட்டு, "நேற்று நான் பார்த்ததற்கான சுவடே இல்லையே! உங்களுக்கு வயிற்று வலியும் குறைந்து விட்டது, ஆபரேஷன் ஒன்றும் வேண்டாம், மருந்திலேயே குணமாக்கி விடலாம். நீங்கள் என்ன செய்தீர்கள்? ரொம்ப அதிசயமாக இருக்கிறதே!" என்று கேட்டிருக்கிறார்.

அதற்கு ஸ்வாமிகள், "நான் ராத்திரி முழுக்க நாராயணீயம் படித்துக் கொண்டிருந்தேன்" என்று சொன்னதும், அந்த டாக்டர் நெகிழ்ந்து போய், தன் மனைவி குழந்தைகளையெல்லாம் கூப்பிட்டு ஸ்வாமிகளை நமஸ்காரம் பண்ணச் சொல்லி, அவருக்கு வெற்றிலை பாக்கு பழமெல்லாம் வைத்துக் கொடுத்து உபசரித்தாராம். அப்படி ஸ்வாமிகள் நாராயணீயத்தை ரொம்ப நம்புவார்.

உன்னுடைய பஜனமே ஆயுளையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும் என்பது எப்படி இருக்கிறது தெரியுமா? **பேஷஜாயைவ துக்தம்** அதாவது, ஒருவனுக்கு உடம்பு சரியில்லை என்று டாக்டரிடம் போகிறான். அவனுக்குப் பால் என்றால் ரொம்பப் பிடிக்கும். அந்த டாக்டர், "நீ நல்ல பாலைச் சுண்டக் காய்ச்சி, அதில் பாதாம் பொடி, குங்குமப்பூ,

பனங்கற்கண்டு போட்டு காலை, மாலை சாப்பிடு" என்று மருந்து போலச் சொன்னால் அவனுக்கு எவ்வளவு குஷியாகி விடும்!

மலையாளத்தில் ஒரு பழமொழி உண்டு - "அச்சன் இச்சிச்சதும் பால், வைத்தியன் கல்பிச்சதும் பால்" (அப்பா ஆசைப்பட்டதும் பால், மருத்துவர் எழுதிக் கொடுத்ததும் பால்). அதைத் தான் பட்டத்ரி இங்கே இப்படிச் சொல்கிறார். உன்னுடைய பஜனமே இனிமையானது, அதுவே தான் ஆரோக்கியத்திற்கும் காரணமாக இருக்கப் போகிறது என்பது நமக்கு ரொம்ப சௌகரியமாகப் போய்விட்டது!

**உத்தவரின் விடைபெறலும், வைகுண்ட ஆரோஹணமும்**

இதற்குப் பிறகு மார்கண்டேய சரித்ரம் வருகிறது. இந்த மார்கண்டேய சரித்ரம் பாகவதத்தில் 12வது ஸ்கந்தத்தில் 10வது அத்யாயத்தில் இருந்து தான் ஆரம்பிக்கிறது. பட்டத்ரி இங்கிருந்து நேராக அங்கே தாவி விடுகிறார். அதற்கு நடுவில் பகவான் வைகுண்ட ஆரோஹணம் செய்வது, பரீக்ஷித்து மோக்ஷம் அடைவது போன்ற சில விஷயங்கள் இருக்கின்றன; அதையெல்லாம் பட்டத்ரி சொல்லவில்லை.

பாகவதத்தின் முதல் கதா பாகம் வராஹ அவதாரத்தில் தொடங்குகிறது, அதை 11, 12, 13 ஆகிய தசகங்களில் சொல்கிறார். கடைசியாக பாகவதத்தில் இருக்கிற கதா பாகம் என்று பார்த்தால் இந்த மார்க்கண்டேய சரித்ரம் தான். அதையும் சொல்லி அவர் கதைப் பகுதியை முடித்து விடுகிறார். முதல் மூன்று தசகமும், கடைசி மூன்று தசகமும் முழுக்க முழுக்க பட்டத்ரியின் சொந்த பங்களிப்பு. இது பாகவதத்தில் எங்கே இருக்கிறது என்று தேடினால் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் அவை இந்த காவியத்தின் பக்தி ரசத்தை மேலும் உயர்த்துகிறது.

உத்தவருக்கு க்ருஷ்ணர் உபதேசம் செய்து முடித்த பின், "நான் சொன்னதெல்லாம் உனக்குப் புரிந்ததா? இன்னும் உனக்கு ஏதாவது கேள்விகள் இருக்கிறதா?" என்று கேட்கிறார். அப்போது உத்தவர் பகவானை நமஸ்கரித்து, "நெருப்பின் பக்கத்தில் இருந்தால் எப்படி இருட்டைப் பற்றியோ, குளிரைப் பற்றியோ கவலை இருக்காதோ, அதுபோல உன்னுடைய தரிசனத்தினாலும், இந்த அமிர்தமயமான உபதேசத்தினாலும் என்னுடைய அஞ்ஞானம் முற்றிலும் நீங்கிவிட்டது. இந்த பந்துக்களிடம் இருந்த சிநேகமும் எனக்குப் போய்விட்டது. அத்தை,

மாமா, சித்தப்பா, பெரியப்பா என்பதெல்லாம் நீ இந்த உலக ஜனத்தொகை ஜாஸ்தி ஆவதற்காகக் ஏற்படுத்திக் கொடுத்த ஒரு பற்று என்று புரிந்து கொண்டேன்.”

“நமோ(அ)ஸ்து தே மஹாயோகி$^3$ன் ப்ரபந்நம் அநுஶாதி$^4$ மாம் ।
யதா$^2$ த்வச்சரணாம்போ$^4$ஜே ரதி: ஸ்யாத$^3$நபாயிநீ ||”

“மகாயோகின்! உன்னை வணங்குகிறேன். உன்னுடைய திருவடிகளில் எனக்கு என்றும் பக்தி நிலைத்திருக்கும் வண்ணம், எனக்கு வழிகாட்டி, என்னைத் அவ்வப்போது திருத்தி ஆட்கொள்ள வேண்டும்." என்று சொல்லி நமஸ்கரித்து, க்ருஷ்ணரின் பாதுகைகளை வாங்கிக் கொள்கிறான். அவன் எத்தனை முறை க்ருஷ்ணனைப் பிரதக்ஷிணம் செய்தான், எத்தனை முறை நமஸ்கரித்தான் என்று சொல்லவே முடியாது.

க்ருஷ்ணர் அவரிடம், "நீ பத்ரிகாஶ்ரமத்திற்குப் போய் நான் சொன்ன இந்த தர்மங்களை எல்லாம் அனுஷ்டித்துக் கொண்டிரு" என்கிறார். உத்தவர், "போயிட்டு வரேன்... போயிட்டு வரேன்..." என்று சொல்லிக் கொண்டே இருக்கிறாரே தவிர, அவருக்குப் போவதற்கு மனமே இல்லை. அப்படி உத்தவர் கிளம்பிப் போன பின்னர் தான், யாதவ குலம் அழிவதும், பகவானின் வைகுண்ட ஆரோஹணமும் நடக்கிறது.

பகவான் அங்கே அமர்ந்திருக்கும் போது, ஜரன் என்ற வேடனின் அம்பு அவர் காலில் படுகிறது. அவருடைய தேர், ஆயுதங்கள் எல்லாம் இங்கே மறைந்து வைகுண்டத்தை அடைகின்றன. அடுத்து அவரும் இங்கிருந்து மறைந்து வைகுண்டத்தை அடைகிறார். இந்த வைகுண்ட ஆரோஹணத்தை பட்டத்ரி ஏன் சொல்லவில்லை என்றால், அவருக்கு பகவான் இன்னும் இங்கே குருவாயூரப்பனாகத் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறான் என்ற தீர்மானம். ‘அவன் வைகுண்டத்திற்கு எல்லாம் போகவில்லை, இதோ இங்கே இருக்கிறானே’ என்கிறார் பட்டத்ரி.

4வது ஸ்லோகம் பிற்பகுதி: **மார்கண்டே$^3$யோ ஹி பூர்வம், க$^3$ணகநிக$^3$தி$^3$தத்$^4$வாத$^3$ஶாப்$^3$தா$^3$யு:** நம்முடைய சிவ புராணங்களில், மார்க்கண்டேயனுக்கு என்றும் 16 வயது என்றும், எமன் வந்து அவன் உயிரைப் பறிக்கப் பார்த்த போது பரமேஸ்வரன் அவனைக் காலாலேயே உதைத்து விரட்டி, மார்க்கண்டேயனை சிரஞ்ஜீவி ஆக்கினார் என்றும் படித்திருக்கிறோம். ஆனால் இங்கே பாகவதத்தில், ஜோசியர்கள்,

இவனுக்கு 12 வயது தான் ஆயுசு என்று சொல்கிறார்கள். **உச்சை: ஸேவித்வா வத்ஸரம் த்வாம், தவ ப⁴டநிவஹை:, த்³ராவயாமாஸ, ம்ருத்யும்** அந்த 12 வருடமும் அவன் பகவத் தியானத்திலேயே இருந்ததால், அது ஆயுள் கணக்கில் வராது என்பது தெரியாமல் எம படர்கள் வருகிறார்கள். அப்போதும் அவன் பகவத் பஜனம் செய்து கொண்டு இருக்கிறான். விஷ்ணு தூதர்கள் அந்த எம தூதர்களை விரட்டி அடித்து விடுகிறார்கள்.

**மார்க்கண்டேயரின் தவமும், இந்திரனின் சோதனையும்**

97வது தசகம், 5வது ஶ்லோகம்:

**मार्कण्डेयश्चिरायुः, स खलु पुनरपि त्वत्परः, पुष्पभद्रा-**
**तीरे निन्ये तपस्यन्, अतुलसुखरतिः षट् तु मन्वन्तराणि ।**
**देवेन्द्रः सप्तमस्तं, सुरयुवतिमरुन्मन्मथैः मोहयिष्यन्,**
**योगोष्मप्लुष्यमाणैः न तु पुनरशकत्, त्वज्जनं निर्जयेत् कः ॥**

**மார்கண்டே³யஶ்சிராயு: ஸ க²லு புநரபி** அதனால் அவர் நீண்ட ஆயுள் பெற்று, **புஷ்பப⁴த்³ராதீரே,** ஹிமாசல பிரதேசத்தில் இருக்கும் புஷ்பபத்ரா நதிக்கரையில், **நிந்யே தபஸ்யன், அதுலஸுக²ரதி:, ஷட் து மந்வந்தராணி** உன்னிடத்திலேயே மனதை வைத்து, பேரானந்தத்தில் திளைத்துத் தவம் செய்து கொண்டிருக்கிறார். இப்படி ஆறு மன்வந்தரங்கள் அவர் தவம் செய்கிறார்! **தே³வேந்த்³ர: ஸப்தமஸ்தம்** ஏழாவது மன்வந்தரத்தில் ஒரு புதிய இந்திரன் வருகிறான். "யார் இவர், தவ வலிமையால் இவ்வளவு காலம் ஜீவித்துக் கொண்டு இருக்கிறாறோ!, நான் அவர் தவத்தைக் கலைக்கிறேன்" என்று சொல்லி,

**ஸுரயுவதிமருந்மந்மதை²: மோஹயிஷ்யன்** அப்ஸரஸ் ஸ்திரீகள், வசந்த ரிது, மன்மதன் எல்லாரையும் அனுப்பி அவரை மோகிக்க வைக்கப் பார்க்கிறான். ஆனால், **யோகோ³ஷ்ம ப்லுஷ்யமாணை: ந து புநரஶகத்** அவருடைய தவக்கனலின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் அவர்கள் பயந்து ஓடிப் போய் விடுகிறார்கள். **த்வஜ்ஜநம் நிர்ஜயேத் க:** உன்னுடைய பக்தர்களை யாரால் ஜெயிக்க முடியும் என்கிறார் பட்டத்ரி.

**மாயைக் காட்சியும், ஆலிலைக் கண்ணனும்**

இது போல மன்மதனை ஜயித்தவர்கள் நர நாராயணர்கள், அவர்கள் தெய்வாம்சம் பொருந்தியவர்கள். ஒரு முனிவர் இப்படி மன்மதனை ஜயித்து விட்டார் என்று தெரிந்ததும், அவர்கள் மார்க்கண்டேயருக்கு தரிசனம் கொடுக்கிறார்கள்.

97வது தசகம், 6வது ஶ்லோகம்:

**प्रीत्या नारायणाख्यस्त्वमथ नरसखः, प्राप्तवानस्य पार्श्वं,**
**तुष्ट्या तोष्टूयमानः, स तु विविधवरैः लोभितो, नानुमेने ।**
**द्रष्टुं मायां त्वदीयां किल पुनः अवृणोत्, भक्तितृप्तान्तरात्मा,**
**मायादुःखानभिज्ञः, तदपि मृगयते, नूनं आश्चर्यहेतोः ॥**

**ப்ரீத்யா நாராயணாக்²யஸ்த்வமத² நரஸக²:, ப்ராப்தவாநஸ்ய பார்ஶ்வம்** அவர்கள் அருகில் வந்த உடனே, **துஷ்ட்யா தோஷ்டூயமாந:** அவர் ரொம்பச் சந்தோஷப்பட்டு அவர்களுக்குப் பூஜை செய்து ஸ்தோத்திரம் பண்ணுகிறார். **ஸ து விவித⁴வரை: லோபி⁴தோ, நாநுமேநே** அவர்கள் பலவிதமான வரங்களைத் தருகிறோம் என்று ஆசை காட்டியும், அவர் எதுவும் வேண்டாம் என்று சொல்லி விடுகிறார். ஏனென்றால், அவர் **ப⁴க்தித்ருப்தாந்தராத்மா** என்ன அழகான பதம் பாருங்கள்! அவர் மனம் பக்தியிலேயே திருப்தியாக இருந்ததால் வரங்களை மறுத்து விடுகிறார்.

ஆனால், **த்³ரஷ்டும் மாயாம் த்வதீ³யாம் கில புந: அவ்ருணோத்** பகவானுடைய மாயையைப் பார்க்க வேண்டும் என்று ஒரு வரம் மட்டும் கேட்கிறார். **மாயாது³:கா²நபி⁴ஜ்ஞ:** மாயை எவ்வளவு துக்கமயமானது என்பது அவருக்குத் தெரியாததால், **தத³பி ம்ருக³யதே, நூநம் ஆஶ்சர்யஹேதோ:** ஒரு ஆர்வத்தில் அதை வரமாகக் கேட்கிறார்.

97வது தசகம், 7வது ஶ்லோகம்:

**याते त्वय्याशु वाताकुल, जलदगलत्तोयपूर्णाति, घूर्णत्-**
**सप्तार्णोराशिमग्ने, जगति स तु जले सम्भ्रमन् वर्षकोटीः ।**
**दीनः, प्रैक्षिष्ट दूरे वटदलशयनं, कञ्चित् आश्चर्यबालं**
**त्वामेव श्यामलाङ्गं, वदनसरसिजन्यस्त पादाङ्गुलीकम् ॥**

**யாதே த்வய்யாஶு வாதாகுல, ஜலத³க³ளத்தோயபூர்ணாதி, கூ⁴ர்ணத்-ஸப்தார்ணோராஶிமக்³நே, ஜக³தி ஸ து ஜலே ஸம்ப்⁴ரமன், வர்ஷகோடீ:** அவர்கள் மறைந்த உடனே, பெரிய காற்று அடிக்கிறது. எங்கும் ஜலம் சூழ்ந்து கொள்கிறது. அவர் கடலுக்குள் ஒரு கோடி வருடங்கள் சுற்றிக் கொண்டிருக்கிறார். **தீ³ந:** ரொம்பத் தைன்யமாக ஆகி விடுகிறார். அப்போது, **ப்ரைக்ஷிஷ்ட தூ³ரே, வடத³ளஶயநம் கஞ்சித் ஆஶ்சர்யபா³லம்** அங்கே தூரத்தில் ஒரு ஆலமரத்தைப் பார்க்கிறார். அதனுடைய ஆலிலையில் ஓர் ஆச்சரியமான குழந்தையைக் காண்கிறார் — ஆலிலைக் கண்ணன்! **த்வாமேவ ஶ்யாமளாங்க³ம், வத³நஸரஸிஜந்யஸ்த பாதா³ங்கு³ளீகம்** சியாமள வர்ணமாக, தன் தாமரை போன்ற வாயில், இடது கால் கட்டை விரலை வைத்துக் கொண்டிருக்கும் குழந்தையைப் பார்க்கிறார்.

கராரவிந்தே³ந பதா³ரவிந்த³ம் முகா²ரவிந்தே³ விநிவேஶயந்தம் ।
வடஸ்ய பத்ரஸ்ய புடே ஶயாநம் பா³லம் முகுந்த³ம் மநஸா ஸ்மராமி ॥
— என்று அழகாக இதை ஶ்லோகமாகச் சொல்லி இருக்கிறார்கள்.

97வது தசகம், 8வது ஶ்லோகம்:

**दृष्ट्वा त्वां हृष्टरोमा त्वरितं ,अभिगतः, स्प्रष्टुकामो मुनीन्द्रः,**
**श्वासेनान्तर्निविष्टः, पुनरिह सकलं दृष्टवान् विष्टपौघम् ।**
**भूयोऽपि श्वासवातैः, बहिरनुपतितो, वीक्षितस्त्वत्कटाक्षैः**
**मोदात् आश्लेष्टुकामः, त्वयि पिहिततनौ, स्वाश्रमे प्राग्वदासीत् ॥**

**த்³ருஷ்ட்வா த்வாம் ஹ்ருஷ்டரோமா த்வரிதம்** குழந்தையைப் பார்த்ததும் முனிவருக்கு புளகாங்கிதம் ஏற்படுகிறது. **அபி⁴க³த:** வேகமாக அதன் பக்கத்தில் போகிறார். **ஸ்ப்ரஷ்டுகாமோ முநீந்த்³ர:** உன்னைத் தொட வேண்டும் என்று பார்க்கிறார். ஆனால், **ஶ்வாஸேநாந்தர்நிவிஷ்ட:** பகவானுடைய மூச்சுக் காற்றோடு அவருக்கு உள்ளே போய்விடுகிறார்! **புநரிஹ ஸகலம் த்³ருஷ்டவான் விஷ்டபௌக⁴ம்** உள்ளே போனால் அங்கே பதினான்கு உலகங்களும் இருப்பதைக் காண்கிறார்.

**பூ$^4$யோ(அ)பி ஶ்வாஸவாதை:, ப$^3$ஹிரநுபதிதோ** அடுத்த மூச்சுக் காற்றில் வெளியே வந்து விடுகிறார். **வீக்ஷிதஸ்த்வத்கடாக்ஷை:** பகவான் தன் குளிர்ந்த கடாக்ஷங்களால் முனிவரைப் பார்த்த போது அவர் பரமானந்தம் அடைகிறார். **மோதா$^3$த் ஆஶ்லேஷ்டுகாம:** இந்தக் குழந்தையை அணைத்துக் கொள்ள வேண்டும் என்று கிட்டே வரும் போது, **த்வயி பிஹிததநௌ, ஸ்வாஶ்ரமே ப்ராக்$^3$வதா$^3$ஸீத்** பகவானுடைய ரூபம் மறைந்து விடுகிறது! மீண்டும் எப்போதும் போலத் தன் ஆசிரமத்தில் உட்கார்ந்திருக்கிறார். அந்த மாயைக் காட்சி முடிந்து விடுகிறது.

இந்தக் காலத்தில் சினிமா திரையில் என்னென்னவோ காட்டுகிறார்களே. மனிதர்களுக்கே இவ்வளவு செய்ய முடியும் என்றால், பகவானுடைய மாயை ஆச்சரியமான விஷயங்களைக் காட்டுவது வியப்பில்லை தானே!

### சிவ-விஷ்ணு அபேதமும், மார்க்கண்டேய புராணமும்

97வது தசகம், 9வது ஶ்லோகம்:

**गौर्या सार्धं तदग्रे, पुरभिदथ गतः, त्वत्प्रियप्रेक्षणार्थी,**
**सिद्धानेवास्य दत्वा, स्वयमयं अजरामृत्युतादीन् गतोऽभूत् ।**
**एवं त्वत्सेवयैव, स्मररिपुरपि स प्रीयते येन तस्मात्,**
**मूर्तित्रय्यात्मकस्त्वं, ननु सकलनियन्तेति सुव्यक्तमासीत् ॥**

அதற்குப் பிறகு, **கௌ$^3$ர்யா ஸார்த$^4$ம் தத$^3$க்$^3$ரே, புரபி$^4$த$^3$த$^2$ க$^3$த:, த்வத்ப்ரியப்ரேக்ஷணார்தீ$^2$** ஆகாயத்தில் ரிஷப வாகனத்தில் அம்பாளும் பரமேஸ்வரனும் வந்து கொண்டிருக்கிறார்கள். அப்போது அம்பாள், "இந்த முனிவருக்கு ஏதாவது வரம் கொடுப்போமே" என்று சொன்ன போது பரமேஸ்வரன் சொல்கிறார்: "அவர் க்ருஷ்ண பக்தியிலேயே மூழ்கி இருக்கிறார், 'பக்தி த்ருப்தாந்தராத்மா', ஒன்றும் கேட்க மாட்டார். இருந்தாலும் இப்படிப்பட்ட ஒரு உத்தம பக்தரைப் பார்ப்பது நமக்கும் பாக்யம்" என்று இருவருமாகப் போய் தரிசனம் கொடுக்கிறார்கள்.

அவர் கண்ணை மூடிக் கொண்டு விஷ்ணு பகவானைத் தியானம் செய்து கொண்டிருந்ததால், தனக்கு எதிரே ஸ்வாமியும் அம்பாளும் வந்திருப்பது தெரியவில்லை. அப்போது விஷ்ணு பகவானே அவர் கண்ணுக்குள்ளே ரிஷபாரூடராகக் காட்சி கொடுக்கிறார். உடனே வியந்து அவர்

கண்ணைத் திறக்கும் போது, எதிரே சிவபெருமானும் அம்பாளும் இருப்பதைப் பார்த்து முறைப்படி பூஜை செய்கிறார்.

பரமேஸ்வரன், "உங்களுக்கு என்ன வரம் வேண்டும் கேளுங்கள்" என்று சொன்ன போது, மார்க்கண்டேயர் சிவ வாக்கியத்தை மீறக் கூடாது என்பதற்காக, "எனக்கு விஷ்ணு பகவானிடத்தில் மாறாத பக்தியும், அவருடைய அடியார்களிடத்தில் மாறாத பக்தியும், உங்களிடத்திலும் அதே போன்ற பக்தியும் எனக்கு அருள வேண்டும்" என்று வேண்டிக் கொள்கிறார்.

அதாவது 'ஸ்ரீ க்ருஷ்ணாய நமஹ, வாசுதேவாய நமஹ, ஸனாதனாய நமஹ' என்று பூஜை செய்யும் போது எனக்கு என்ன சந்தோஷமோ, அதே மாதிரி 'சிவாய நமஹ, மஹேஸ்வராய நமஹ, சம்பவே நமஹ, பினாகினே நமஹ' என்று உன்னை பூஜை செய்யும் போதும் அதே போன்ற சந்தோஷம் எனக்கு இருக்க வேண்டும் என்று வேண்டுகிறார்.

மேலும் **ஸித்$^3$தா$^4$நேவாஸ்ய த$^3$த்வா, ஸ்வயமயம் அஜராம்ருத்யுதாதீ$^3$ன் க$^3$தோ(அ)பூ$^4$த்** சிவபெருமானும் "நானும், விஷ்ணு பகவானும், பிரம்மாவும் ஒரே ரூபம்தான், எங்களிடம் பேதமே கிடையாது" என்று சொல்லி விட்டு "நீங்கள் கேட்டதைக் கொடுத்தேன்" என்று சொல்லி அஷ்டமா சித்திகளையும் கொடுக்கிறார். "நீங்கள் சிரஞ்சீவியாக இருப்பீர்கள், உங்களுக்கு மூப்பு என்பதே வராது. மேலும் எனக்காக நீங்கள் ஒரு புராணத்தை எழுத வேண்டும், புராண ஆசார்யனாக ஆக வேண்டும்" என்று வரமளிக்கிறார். அதனால் தான் 'மார்க்கண்டேய புராணம்' என்ற ஒன்று நமக்கு கிடைத்தது. அதில் தான் 'துர்கா சப்தசதி' (சண்டி பாராயணம்) வருகிறது.

**ஏவம் த்வத்ஸேவயைவ, ஸ்மரரிபுரபி ஸ ப்ரீயதே** "இப்படி உன்னுடைய பக்தர்களிடம் சிவபெருமானும் மிகுந்த திருப்தி அடைகிறார்."
**யேந தஸ்மாத், மூர்தித்ரய்யாத்மகஸ்த்வம், நநு ஸகலநியந்தேதி ஸுவ்யக்தமாஸீத்** "அதனால் நீ தான் த்ரிமூர்த்திகளாகவும், அவர்களுக்கெல்லாம் நியந்தாவாகவும் (இயக்குபவனாகவும்) இருக்கிறாய் என்பது தெளிவாகத் தெரிகிறது" என்று பட்டத்ரி சொல்கிறார். இந்த இடத்தில் நம் ஸ்வாமிகள், "சிவ-விஷ்ணு பேதம் பாராட்டக் கூடாது. எந்த ஒரு தெய்வத்திடமும் துவேஷம் பாராட்டினால் அது மகா பாவம்" என்று பல ஶ்லோகங்களைச் சொல்லி விளக்குவார்.

97வது தசகம், 10வது ஶ்லோகம்:

**त्र्यंशेस्मिन् सत्यलोके, विधिहरिपुरभिन्मन्दिराणि ऊर्ध्वमूर्ध्वं,**
**तेभ्योपि ऊर्ध्वं तु, मायाविकृतिविरहितो भाति, वैकुण्ठलोकः ।**
**तत्र त्वं कारणाम्भसि, अपि पशुपकुले, शुद्धसत्त्वैकरूपी,**
**सच्चिद्ब्रह्माद्वयात्मा, पवनपुरपते, पाहि मां सर्वरोगात् ॥**

**த்ர்யம்’ஶேஸ்மின் ஸத்யலோகே, விதி4ஹரிபுரபி4ந்மந்தி3ராணி ஊர்த்4வமூர்த்4வம்’, தேப்4யோபி ஊர்த்4வம்’ து, மாயாவிக்ரு’தி விரஹிதோ பா4தி, வைகுண்ட2லோக:**
பிரம்மாவின் ஸத்ய லோகம், கைலாசம், விஷ்ணு லோகம் இதற்கெல்லாம் மேலாக, மாயையிலிருந்து முற்றிலும் விலகிய வைகுண்ட லோகம் (பரமபதம்) இருக்கிறது.
**தத்ர த்வம்’ காரணாம்ப4ஸி, அபி பஶுபகுலே**
‘ஹே க்ருஷ்ணா, பவனபுரபதே, குருவாயூரப்பா! நீ தான் அந்த வைகுண்ட லோகத்திலும், காரண ஜலத்திலும், ஆயர்பாடியிலும் சுத்த ஸத்வைக ரூபியாக விளங்குகிறாய்’ என்கிறர். இதை ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையில் அழகாகப் பாடுகிறார்:

"மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்"

என்று அப்படி ஆயர்பாடியில் கண்ணனாக வந்து பிறந்த உன்னை, வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் “போய பிழையும் புகுதருவான் நின்றனவும்" நம்முடைய ஆகாமி, ஸஞ்சித கர்மங்கள் எல்லாம் போய் விடும். பிராரப்த கர்மாவில் எனக்கு நல்ல ஆயுளையும் ஆரோக்கியத்தையும் கொடுத்து, உன்னிடம் பக்தி செய்து உன்னை

வந்தடைய ஒரு வழியையும் பண்ணிக் கொடு, எனக்கு வேறொன்றும் வேண்டாம் என்று வேண்டிக் கொள்வோம்.

மூக பஞ்சஶதியின் கடாக்ஷ சதகத்தில் உள்ள 30-ஆவது ஸ்லோகம் -
உத்³வேல்லிதஸ்தப³கிதைர்லலிதைர்விலாஸைः
உத்தா²ய தே³வி தவ கா³ட⁴கடாக்ஷகுஞ்ஜாத் ।
தூ³ரம் பலாயயது மோஹம்ருகீ³குலம் மே
காமாக்ஷி ஸத்வரமநுக்³ரஹ-கேஸரீந்த்³ரः ॥

"ஹே காமாக்ஷி! உன்னுடைய அனுக்கிரஹம் என்கிற சிங்கராஜா, தன்னுடைய பிடரி மயிரைச் சிலிர்த்துக் கொண்டு, உன்னுடைய அடர்ந்த கடாக்ஷம் எனும் குகையிலிருந்து அழகிய நடையோடு வெளியே வந்து, என்னுடைய மோஹமாகிய மான் கூட்டத்தை வெகு தூரம் விரட்டியடிக்க வேண்டும்" என்று ஒரு அழகான பிரார்த்தனை.

மோஹம் என்பது எது நமக்குத் துன்பத்தைத் தருமோ, அதில் இன்பம் இருப்பதாக எண்ணி ஏமாறும் ஒரு மனமயக்கமாகும். அத்தகைய மோஹம் நம்மிடம் மிகுதியாக உள்ளது. இருக்கட்டும், மான்கள் எவ்வளவு எண்ணிக்கையில் இருந்தாலும், சிம்மம் ஒரு கர்ஜனை செய்தால் போதுமே; நூறு மான்கள் இருந்தாலும் பயந்து ஓடிவிடும் அல்லவா? அதுபோல, காமாக்ஷியின் கருணை எனும் சிம்மம் வெளிப்பட்டு விட்டால், நம்மிடம் உள்ள மோஹங்கள் யாவும் கணத்தில் மறைந்து விடும்.

சிற்றஞ் சிறுகாலே என்ற திருப்பாவைப் பாசுரத்தில் சரணாகதியின் ஸாரமே அமைந்திருக்கிறது என்று வைஷ்ணவர்கள் கொண்டாடுவார்கள்.

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு
உற்றோமே ஆவோம்! உனக்கே நாம் ஆட்செய்வோம்!
என்று வேண்டிக் கொள்பவர்களை ஆட்கொள்வதற்காகவே இறைவன் மகான்கள் வடிவில் எழுந்தருளுகிறான். "உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்று அவர்களுக்குப் பிரியமான கார்யங்களை நாம் செய்தால், "உற்றோமே ஆவோம்" என்னும்படி, நாம் அவர்களைச் சேர்ந்தவர்களாகவே உணர முடியும்.

ஆனால், நாம் அப்படி செய்யவிடாமல் தடுப்பது எதுவென்றால், நம்மிடம் உள்ள மற்றைக் காமங்களே ஆகும். "நாள் முழுவதும் பஜனத்தில் திளைத்திருக்க முடியுமா?" என்று நமக்கு தோன்றுகிறது. ஏதோ ஒரு புண்ணிய பலனால் — ஒரு கோபுர தரிசனம், ஒரு ஜபம், பாராயணம், அல்லது ஒரு மகானின் தரிசனம், கனவில் அவர் தோன்றியது, அல்லது அவரது அருளுரையைக் கேட்டது என ஏதோவொரு கணத்தில் நமக்கு அதில் ஒரு ருசி ஏற்படுகிறது. லௌகீக இன்பங்களில் இல்லாத ஒரு பேரானந்தம் பக்தியில் இருக்கிறது என்பதை உணர்ந்தே நாம் அதை வளர்த்துக் கொள்ள ஆசைப்பட்டு அதில் ஈடுபடுகிறோம்.

மகான்களோ, தாமரை இலைத் தண்ணீர் போல உலகத்தில் ஒட்டாமல், இறை அனுபவத்திலேயே எப்போதும் திளைத்து இருக்கிறார்கள். ஆனால் நம்மால் அவ்வாறு இருக்க முடிவதில்லை. அத்தகைய மகான்களைக் கண்டதாலேயே இப்படி ஒரு நிலை உண்டு என்று நமக்குத் தெளிவாகப் புரிகிறது. நமக்கு இன்பத்தையும் திருப்தியையும் தரும் உணவு, இசை போன்ற புலன் இன்பங்கள் கூட அவர்களுக்கு தேவையில்லாமல் போய் விடுறது. துளசிதாசர்,

நாந்யா ஸ்ப்ருஹா ரகு⁴பதே ஹ்ருத³யே(அ)ஸ்மதீ³யே
ஸத்யம் வதா³மி ச ப⁴வாநகி²லாந்தராத்மா।
ப⁴க்திம் ப்ரயச்ச² ரகு⁴புங்க³வ நிர்ப⁴ராம் மே
காமாதி³தோ³ஷரஹிதம் குரு மாநஸம் ச॥
என்று வேண்டுகிறார் அல்லவா?

மகான்கள் தாங்கள் இறை அனுபவத்தில் நிலைத்த பின்னும், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற எண்ணத்தில் நமக்காக இப்படி வேண்டுகிறார்கள். நாமும் "உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம், மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்" என்று விடாமல் பிரார்த்தனை செய்வோம். குருவருள், இறையருள் கிடைக்கும்.

**ஶுத்³த⁴ஸத்த்வைகரூபீ, ஸச்சித்ப்³ரஹ்மாத்³வயாத்மா** நீ தான் அந்தச் சுத்த சத்துவ ரூபம், ஸச்சிதானந்த பரம்பொருள், அத்வைத பரப்பிரம்மமும் நீயே தான்! **பவநபுரபதே, பாஹி மாம், ஸர்வரோகா³த்** ஹே குருவாயூரப்பா! என்னை எல்லா வியாதிகளில் இருந்தும் காப்பாற்ற வேண்டும்.

**ॐ तत्सदिति श्रीमन्नारायणीये सप्तनवतितमं दशकं समाप्तम् ।**
**श्री हरये नमः । रमा रमण गोविन्द गोविन्द । श्रीकृष्णार्पणमस्तु ।**

**ஓம் தத்ஸதி³தி ஶ்ரீமந்நாராயணீயே ஸப்தநவதிதமம் த³ஶகம் ஸமாப்தம் | ஶ்ரீ ஹரயே நம: | ரமா ரமண கோ³விந்த³, கோ³விந்த³ | ஶ்ரீக்ரு’ஷ்ணார்பணமஸ்து |**

## நிறைவுரை

97வது தசகத்தின் 4வது ஶ்லோகம் வரை தான் உத்தவ கீதை வருகிறது. ஆனால், நம் ஸ்வாமிகள், "இந்த நாராயணீயம் 91 முதல் 97 வரையிலான தசகங்களை தினமும் பாராயணம் பண்ணுங்கள், அர்த்தம் தெரிந்து கொண்டு பண்ணுங்கள்; இல்லை என்றால் வெறும் அர்த்தத்தையாவது படியுங்கள்" என்று வலியுறுத்திச் சொல்வார். அந்த ஸ்லோகங்களைப் படித்து அதில் உள்ள உயர்ந்த தத்துவங்களைத் தெரிந்து கொண்டு மனனம் செய்வதற்கு இந்த புத்தகத்தின் மூலம் நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது ஸ்வாமிகள் அனுக்ரஹம் தான்.

“இந்த புத்தகத்தின் முக்கிய செய்தி என்ன? நான் கார்யத்தில் என்ன பண்ண வேண்டும்?” என்று கேட்டால் என் பதில் “கோவிந்த நாம ஜபம் பண்ணுங்கள்” என்பது தான். ஸ்வாமிகள் உபதேசித்த
கோ³விந்த³ கோ³விந்த³ ஹரே முராரே
கோ³விந்த³ கோ³விந்த³ முகுந்த³ க்ரு’ஷ்ண
கோ³விந்த³ கோ³விந்த³ ரதா²ங்க³பாணே
கோ³விந்த³ தா³மோத³ர மாத⁴வேதி
என்ற ஶ்லோகத்தை 72 முறைகள் தினமும் சொல்லுங்கள். இது ஒரு சுழற்சி (cycle). முடிந்தால், இதையே பல சுழற்சிகள் (cycles) பண்ணுங்கள்.

'கோ³' என்றால் பூமி என்று ஒரு அர்த்தம். இந்த பூமியில் நமக்கு வாழ்வதற்கு வேண்டிய எல்லாவற்றையும் கோவிந்த நாம ஜபம் கொடுக்கும். 'கோ³' என்றால் இந்திரியங்கள் என்று ஒரு அர்த்தம். கோவிந்த நாமத்தை ஜபித்தால் நமது இந்திரியங்கள் நல்ல வழியிலேயே போகும். 'கோ³' என்றால் வாக்கு என்று அர்த்தம். ஒருவன் வேதாந்தம் பயின்று, நல்ல குருவிடமிருந்து மகா வாக்யத்தைக் கேட்டு, அதை மனனம் நிதித்யாஸனம் செய்து, எந்த பிரம்மத்தைக் காண்பானோ, அந்த ஞான அனுபவத்தை, பகவானின் கருணையால், கோவிந்த நாமத்தை ஜபிப்பதன் மூலமாகவே அடைந்து விடலாம். உண்ணும் போது

ஒவ்வொரு கவளத்திலும் கோவிந்த நாமத்தை ஜபித்துக் கொண்டே உண்ணுபவன், ஜீவன் முக்தனாக ஆகி விடுவான்.

ஆசமனத்தில், "அச்யுதானந்த கோவிந்த" என்று முதலிலும் வருகிறது. "கேசவா நாராயணா மாதவா கோவிந்த" என்று திரும்பவும் வருகிறது. திருப்பாவையில் கடைசி பலஶ்ருதி பாட்டுக்கு முந்திய மூன்று பாடல்களிலும் கோவிந்த நாமம் வருகிறது. இவ்வளவு பெருமை இருப்பதால் தான் நம் ஆசார்யாள் ‘பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம்’ என்று கட்டளை இட்டிருக்கிறார்” என்று இப்படி கோவிந்த நாமத்தின் மகிமையை ஸ்வாமிகள் நிறைய சொல்வார்.

### मङ्गल श्लोकाः

श्रीरामचन्द्राश्रितसद्गुरूणां पादारविन्दं भजतां नराणाम् ।
आरोग्यमैश्वर्यमनन्तकीर्तिः अन्ते च विष्णोः पदमस्ति सत्यम् ॥

कायेन वाचा मनसेन्द्रियैर्वा बुद्ध्यात्मना वा प्रकृतेः स्वभावात् ।
करोमि यद्यत्सकलं परस्मै नारायणायेति समर्पयामि ॥

### மங்கள ஶ்லோகங்கள்

ஶ்ரீராமசந்த்³ராஶ்ரிதஸத்³கு³ரூணாம்’
பாதா³ரவிந்த³ம்’ ப⁴ஜதாம்’ நராணாம் |
ஆரோக்³யமைஶ்வர்யமனந்தகீர்திஃ
அந்தே ச விஷ்ணோஃ பத³மஸ்தி ஸத்யம் ||


காயேன வாசா மனஸேந்த்³ரியைர்வா
பு³த்³த்⁴யாத்மனா வா ப்ரக்ரு’தேஃ ஸ்வபா⁴வாத் |
கரோமி யத்³யத்ஸகலம்’ பரஸ்மை
நாராயணாயேதி ஸமர்பயாமி ||


ஜானகீ ஜீவன ஸ்மரணம் ஜய ஜய ராம ராம !
கோபிகா ஜீவன ஸ்மரணம் கோவிந்தா ! கோவிந்தா !
நம: பார்வதீ பதயே, ஹர ஹர மஹாதேவா!
ஸத்குரு ஸ்வாமிந: ஜய் ! ஆஞ்சநேய ஸ்வாமிந: ஜய் !

இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட / தொடர்புள்ள சில இணையதள இணைப்புகளை அதன் QR குறியீட்டோடு கீழே கொடுக்கப்பட்டு உள்ளன. உங்கள் கைப்பேசியில் உள்ள கேமரா அல்லது கூகிள் லென்ஸ் கொண்டு QR குறியீட்டின் மேல் க்ளிக் செய்தால் அந்த இணைப்பைத் திறக்கலாம்.

| **இணையதள இணைப்பு** | **QR குறியீடு** |
|---|---|
| **ஸ்ரீ கோவிந்த தாமோதர ஸ்வாமிகளின் ஸ்ரீமத்பாகவத ப்ரவசனம்** | |
| **ஸ்ரீ கோவிந்த தாமோதர ஸ்வாமிகளின் ஸ்ரீமந் நாராயணீயம் ஒலிப்பதிவு** | |
| **ப்ரஹ்மஸ்ரீ சுந்தர்குமார் அவர்களின் ஸ்ரீமந் நாராயணீயம் ப்ரவசனம்** | |
| **ஸ்ரீ மஹா பெரியவாளின் ‘ஶிவ ஶிவ பஶ்யந்தி ஸமம்’ உபன்யாசம்** | |
| **கடந்த இரண்டு வருடங்களில் நான் செய்த சில முழு நீள உபன்யாசங்கள்** | |
| **கோவிந்த தாமோதர ஸ்வாமிகளைப் பற்றி மேலும் சில மின் புத்தகங்கள்** | |

| | |
|---|---|
| ஸ்ரீ சங்கர சரிதம் (பதினாறு பகுதிகளில்) | |
| ஸ்ரீமத் வால்மீகி ராமாயண தினசரி த்யானம் (Valmiki Ramayana daily ERC) | |
| ஸ்ரீ சிவன் சாரோடு என் அனுபவங்கள் | |
| திருப்புகழ், திருவகுப்புகள், கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், ஸுப்ரமண்ய புஜங்கம் ஒலிப்பதிவு | |
| அருணகிரிநாதர் அருளிய சீர் பாத வகுப்பு பொருளுரை | |
| நாராயணீயம் ஒலிப்பதிவு | |
| மூக பஞ்சஸதீயில் இருந்து குறிப்பிட்ட ஸ்லோகங்களுக்கு விளக்கவுரை | |





காஞ்சி மஹா பெரியவாளின் அளவற்ற அன்பிற்கும்,
ஸ்ரீ சிவன் சாரின் போற்றுதலுக்கும் பாத்திரமான
ஸ்ரீ கோவிந்த தாமோதர ஸ்வாமிகளின் தெய்வீக வாழ்வும்,
உபதேசங்களும் நிறைந்த பக்திக் கருவூலம்

ஸ்ரீமத் பாகவதத்தின் பதினொன்றாவது ஸ்கந்தத்தில் அருளப்பட்ட
'உத்தவ கீதை' மற்றும் 'நவயோகி உபாக்யானத்தின்' சாரத்தைப்
புரிந்து கொண்டு நடைமுறைப்படுத்த ஒரு கையேடு

நிஷ்காம பக்தி மற்றும் இடையறாத பகவத் பஜனத்தின்
அளப்பரிய மகிமையை உணர்த்தும் நூல்

பகவானின் திருநாமங்கள், திவ்ய ரூபம் மற்றும் அவதார
லீலைகளை தியானம் செய்து, பக்தியினால் நிறைவையும்,
ஆனந்தத்தையும் அடைவதற்கான வழிகாட்டி